புது எழுத்து

பனிரெண்டாமாண்டு இதழ் ஆவணி 2011

20

படங்கள் கார்க்கி

முருகபூபதியின் சூர்ப்பணங்கு நாடகக் காட்சிக

புது எழுத்து

12-ம் ஆண்டு சிறப்பிதழ்
மார்கழி-2011

ஆசிரியர் • மனோன்மணி

ISSN 2249-5177

9 772249 517007

அனைத்து தொடர்புகளுக்கும்
புது எழுத்து
2/205, அண்ணா நகர்
காவேரிப்பட்டிணம்-635 112 • கிருஷ்ணகிரி மாவட்டம்
90421 58667 • pudhuezuthu@gmail.com

இரண்டு புத்தகங்கள் ரூ. 100/-

அட்டை ஓவியம் -ரோகிணிமணி
உள் ஓவியங்கள் - ஞானப்பிரகாசம்
அச்சு - எ.எஸ். கனிஷ்க் பிரிண்டர்ஸ், கி.கிரி.
பதிப்பாசிரியர் இரா. சுகவனம்

20
மார்கழி 2011

கவிதைகள்

மனோமோகன், லீனாமணிமேகலை, சபரிநாதன், ராணிதிலக், சம்பு, கொற்றவை, அஜீதா, வசுமித்ரா, தீபச்செல்வன், தூரன் குணா, நிலாரசிகன், இசை, றியாஸ் குரானா

சிறுகதைகள்

குமார் அம்பாயிரம் - **வழக்கு எண். 235/2020** -9
திருமாவளவன் (கனடா) - **பழி** -30
குமாரநந்தன் - **நகரப்பாடகன்** -116

நாடக விமர்சனம்

வடகரை ரவிச்சந்திரன் - சூர்ப்பணங்கு நாடகம் - ஒரு பார்வை -21
அஞ்சலி - பேராசான் - **இளைய அப்துல்லாஹ்** -84

கட்டுரைகள்

இருபதாம் நூற்றாண்டை பேராசிரியர் கா.சிவத்தம்பி எதிர்கொண்ட முறைமை - சில குறிப்புகள் - **வி.அரசு** -88

தமிழ் கல்வெட்டுகள் வெளிச்சமிடும் துரோகிகள் - **க.பன்னீர்செல்வம்** -43
ஜீவித்தலும் வாழ்தலும் - **மா. கணேசன்** -74

பாரதி பரம்பரையும், பெரியார் பரம்பரையும் - **பொதிகை சித்தர்** -102

நூல் மதிப்புரை

உப்பு நீர் முதலை - நரன் ஒரு பார்வை - **குலசேகரன்** -96
விடுதலைபுலிகளுக்கு அப்பால் - **பாஸ்கர்** -99

பட்டாம்பூச்சி மேய்ப்பவன்

பட்டாம்பூச்சி மேய்ப்பவன் வந்து போகிறான்
உடம்பு முழுக்க சூழும் வண்ணத்துப்பூச்சிகளுடனும்
தொடரும் குழந்தைகளுடனும்
வருவோர் போவோர்க்கெல்லாம் கையளிக்கிறான்
விலை பேச இயலாத அவனது பட்டாம்பூச்சிகளை
அவ்வப்போது
பறக்கக் கற்றுக்கொண்ட ஒன்றிரண்டு குழந்தைகளை

அவனிடம் விசேஷமானது
மீன்தொட்டியில் விடுவதற்கென
நேர்த்தியாக நீந்தப் பழகிய வண்ணத்துப்பூச்சி
ஒவ்வொரு வண்ணத்துப்பூச்சியைக் கையளிக்கும்போதும்
ஒவ்வொரு முறை நிகழ்கிறது அவனது மரணம்
பட்டாம்பூச்சியின் மூன்றாம் சிறகசைப்பில்
உயிர்த்தெழும்போது
சிலுவையை மொய்க்கிறது பட்டாம்பூச்சி

கவனிப்பாரற்ற குரோட்டன்களின் நகரில்கூட
வெள்ளி முளைத்த பின்னிரவில்
பட்டாம்பூச்சி மேய்ப்பவன் வருவதுண்டு
அவன் பேசுவதேயில்லை
பட்டாம்பூச்சிகள் மட்டுமே பேசுகின்றன
இறகில் எழுதப்பட்ட வர்ணங்களின் மொழியில்
தனக்கென வண்ணத்துப்பூச்சிகளைத் தவிர ஏதுமற்ற
அவனது பயணம் தொடர்கிறது
வண்ணத்துப்பூச்சியின் மொழியைப் புசித்தபடி

நிறமற்றவனின் கதை

கடல் மணலில் காலாற நடந்து வெகு காலமாகிறது
நமது தற்கொலைக்கு முன்தினம்
இறுதிச் சடங்கின் முன் தயாரிப்பு பற்றி
ஆலோசித்தப்படியே உன்னோடு நடந்தது
அப்பொழுதும் இப்படித்தான் மழை பெய்தது
கரைந்து கொண்டிருந்த நமது மணல் வீட்டுக்காக
அழுதுகொண்டே திரும்பினேன்
நீயும் கரைந்து கொண்டிருந்தாய்
என் போலவே உனக்கும்
மரணத்தின் பின் வாழ்க்கை
யாருமற்றுக் கழிகிறதா
நேற்றைய மழையில் இதே
கடற்கரையில் எதிர்வந்த உன் கணவன்
எனது வெளிர் நீல சாயம்
கரைவதாய் சொல்லிப் போனான்
என் மீது விழுந்தொழுகும் இன்றைய மழை
நிறமின்றி வடிகிறது

வார்த்தை விளையாட்டு

தேர்ந்த கதைசொல்லியான நீ வரலாறெழுதத் திட்டமிடுகிறாய்
நான்காயிரம் வருடமாய் ஆற்றங்கரையில் புதைந்திருந்த எருது
குதிரையாக மாறி கனைக்கத் தொடங்குகிறது
நீயெழுதும் அந்த எருதைப் பற்றிய ஆவணக் குறிப்புகளுக்கு
வெள்ளைக் குதிரையின் கதை எனப் பெயரிடுகிறாய்
எம திசையில் பிணமெரிக்கும் நாகார்ஜுனனை
புத்தனென்றே விளிக்கிறாய்
தியான புத்தனின் பின்னால் சுவரில் பதியும்
நிழலை விநாயகனென்று வழிபடுகிறாய்
வார்த்தையென்பது ஒரு கண்ணாமூச்சி
உனது வார்த்தையை வேடிக்கை பார்க்க வந்த என்னையும்
சொல் விளையாட்டில் சேர்த்துக கொள்கிறாய்
மொழியின் பொருண்மை வெளியில் ஆட்டம் தொடங்குகிறது
தூய்மை விரும்பியான நீ பூனைக்குட்டியாக
மாறி நகம் பதிக்காது நடக்கிறாய்
நான் கொழுத்த பன்றியாகி வார்த்தைகளைக் கிளறுகையில்
மல வாடை வீசுவதாய் முகம் சுழிக்கிறாய்
சினந்த இராணுவ வீரனின் தொனியில்
எனக்கும் நீயே பெயரிடுவதாகக் கூறி
என்னை ஒளியச் சொல்கிறாய்
பிடிமானமற்று சரியும் வார்த்தைகளின் வெளியில்
பதுங்கு குழி தேடிக் களைத்துப் போகிறேன்
எனக்கும் தெரியும்
வார்த்தை விளையாட்டென்பது நிச்சயிக்கப்பட்ட மரணம்
நான் மூச்சு வாங்கும் கணத்தில் நீ கொழுத்த பூனையாக மாறி
முட்டுச்சுவரில் எழுதத் தொடங்குகிறாய்
என் பெயரை சுண்டெலியென

அந்தரக்கன்னி
அந்தரக்கன்னி
வேரிலும் பழுப்பாள்
இலையிலும் பழுப்பாள்
காயிலும் பழுப்பாள்
கொம்பிலும் பழுப்பாள்
வேடராக வரும்போதெல்லாம்
தேனாக விளைய மாட்டாள்
அவள்
கண்ணைக் குத்தி மீன் பிடிப்பது கடினம்
அவள்
குலவையிடும்போது மட்டும தான் மழையறுக்க முடியும்
கையேந்தி நிற்கும் நட்சத்திரங்களுக்காக
மலையேற மறுக்கும்
அவள்
துத்திப்பூ சூடி வந்தால்
கொங்கைகளை பெருக்குவாள்
தாயார் விளக்கில் மிளகு திரிபோட்டு வைத்தால்
முப்போகம் ப்யிரளப்பாள்

லிங்கம்
அவளின்
பதினோராவது விரல்
நாவற்ற அதன் வாய்க்கும்
வெற்றிலை பூசுவாள்
வேண்டும் போது
கோணக் குச்சியாக்கி
உறுமி கொட்டிக் கொள்வாள்

2.

அவள் குத்தியிருக்கும் பச்சையில்
கிளிகள் உறங்குகின்றன
வரகு அவிக்கும்போதெல்லாம்
அவற்றை எழுப்பி
ஊன் தருவாள்
அவைபறக்கும் திசைகள் தோறும்
முளை பாவ நார்கிளம்பும்
அம்மனுக்கு கால் முளைக்கும்
அவள்
தலையில்
பூ மணக்க மணக்க
ஊரேகும் காவடி

3.

தாச்சியும் அவள் தான்
காவலாளியும் அவள் தான்
வெள்ளிமலையில் தீயெரிய
முட்ட முட்ட கடலை தின்பாள்
காலாட்டுமணி கையாட்டுமணி
அத்தலு புத்தலு
மக்கா சுக்கான்
பாலு பரங்கி
நட்டம் சுட்டம்
சீ.. சல்... லே...டு

வெள்ளரிக்காய்

உடைந்த நல்லியில் அதைக் கழுவியபொழுது
உடம்பெல்லாம் சில்லாப்பு பின்
முத்தமிடத்தோன்றும் ஒரு குறுங்கத்தியைக் கொண்டு தொலி சீவினான்
அந்த இடமே பிரகாசித்தது. அதை இரண்டாக
வகிர்ந்தபோது உதடுகளில் மின்னாப்பு
பின் மேலும் வகிர்ந்தான் அது பூத்துக்கொண்டும்
பழுத்துக்கொண்டும் இருக்க
வகிர்ந்து கொண்டே இருந்தான். ஆனந்தத்தில் நாங்கள்
ஒருவரையொருவர் தழுவிக்கொண்டோம்
சிவந்த மிளகாய்ப் பொடியை தூவியபோது அதன் தாளாத அழகில்
எங்கள் ஊரே அழுதது

மூன்றே மூன்று காதல்கள்

1. அப்போது நான் அசைவப் ப்ரியனாக இருந்தேன்
இரண்டு ஜடைப்பின்னல்களுக்கிடையே வானவில்லை
தொங்கவிடும் அவளும்
நானும் சாப்பாட்டு மேஜையில் எதிரெதிரே
அமர்ந்துகொள்வோம்.
எனக்குப் பிடித்தமானவை:
புறாக்குஞ்சு ரோஸ்ட், நெய்யிட்டு வறுத்தெடுத்த ஆட்டு
முன்தொடை,
வதக்கிய வெங்காயம் விரவிய சில்லி சிக்கன், சிகப்புச் சாயம்
பூசிய இதழ்கள்,
கோச்சைக்கறி, புழுக்கள், கைப்பற்றிக் கூட்டிச்சென்ற விரல்கள்
நண்டு வறுவல், நெத்திலிக் கருவாட்டுக் குழம்புடன் பால்
கருவாட்டுப் பொரியல்
பொடிப்பொடியாய் நறுக்கப்பட்ட சிறுமூளைத் துண்டுகள்
ஓரிரவு நான் அவள் காதை சத்தமில்லாமல் வேகவைத்து
ருசித்துக் கொண்டிருந்தேன்
அவள் பார்த்துவிட்டாள்
அதற்குப் பிறகு நானவளைப் பார்க்கவில்லை

2. அவள் தான் எனக்கு கற்றுக் கொடுத்தது
பாசித்திரிகளை ஊதி, கொடியிலைகளை ஒதுக்கிவிட்டு
வழுக்குப் பாறையில் கையூன்றி உடல்கிடத்தி
காட்டுச்சுனையில் நீரருந்த தவிர
அவள் தான் என் மூன்றாவது கண்ணைத் திறந்தாள்
அன்றிலிருந்து என் போஜனப் பட்டியலை நிரப்பியவை
தாளித்த கீரைக்கடையல், கொத்தமல்லித் துவையல்,
கத்திரிக்காய் காரக்குழம்பு
அழுகல் தக்காளி, வாழைக்காய் புட்டு, வறுத்த விதைகள்
காளான் குருமா, ஆரஞ்சுத் தொலிகள், உரிந்துவிழுந்த பட்டைகள்..
துணிமணிகளை மடித்து வைத்த அவள்
ஒருநாள் எங்கள் தோட்டத்தையேக் கூட்டிக்கொண்டு
போய்விட்டாள்
அதற்கு எந்தக் காரணமும் தேவைப்படவில்லை

3. அவள் எந்த வகையிலும் சுவாரசியமானவளில்லை ஆனால்
அவள் தான் எனது நான்காவது கண்ணைத் திறந்து
வைத்தவள்
இப்போது நான்
முட்டையோடுகளையும், துருப்பிடித்த ஆணிகளையும்,
உடையும் காகிதங்களையும்
தின்று கொண்டிருக்கிறேன்.

வழக்கு எண். 235/2020

கொலைக்குற்றம் சாட்டப்பட்டவர்கள் பிணையில் வந்த நாள் அன்றுதான் அது நிகழ்ந்தது. கரை தாண்டி கருகா நத்தைகள் நகர்ந்து வருவதை சிறுவர்களே காவலிருந்து கொள்ளையர் போல மூன்று நாட்களுக்கு முன்பே மரணை கொட்டடியில் சுற்றப்பட்ட பேண்டேஜ் காடா துணியோடு சவப்பெட்டியில் வைத்து கல் உப்பு தூள் அள்ளையிட்டு புதினா இலைகளை வைத்து புதைக்கப்பட்ட பிரேதம் மெல்ல மெல்லெழுந்து மிதப்பதை நகர் சூரண்டப மயான மேடுகளில் தான் பொறுக்கித் திரியும் சிறுவர்களே வந்து சொன்னார்கள். அவர்கள் சொன்னதை நம்பாமல் இரண்டு நாள் தொடர்ந்த பெய்த மழையால் உப்பி பெட்டியோடு மேலே வந்திருக்கலாம் என்று சளைத்தோடு மண்வெட்டியை மட்டும் எடுத்துக்கொண்டு மயானத்திற்கு சிறுவர்களை அழைத்துக் கொண்டு சென்றோம்.

வியப்படைந்த விழிகளோடு எங்களுக்கு முன்னே ஓடிச்சென்று தாங்கள் கண்ட அதிசயம் காணாமல் போய்விடக்கூடாதென்ற கவலையிலும், ஆர்வத்திலும் தூரத்திலேயே காண்பித்தனர். குழிக்கு நேர்மேலே கைக்கெட்டாத கொஞ்ச உயரத்தில் மிதந்து கொண்டிருந்தது காடா துணி சுற்றப்பட்ட வெள்ளைநிற பிணம். இடி விழுந்த பள்ளம் போன்ற இதயத்தோடு கால்கள் பின்னித் தயங்க குழியை நெருங்கினோம். குழி விகாரமாக திறந்து கிடந்தது. சவப்பெட்டி புரட்டப்பட்டு ஒருமுறை மட்டுமே ஆணிகளால் பூட்டப்பட்டும் சவப்பெட்டியின் கதவு இரண்டாக பிளந்து தூவியிருந்த உப்பு சிதறி புதினா இலைகள் கருகிக்கிடந்தன. அந்தரத்தில் தொங்கவிடப்படும் பலூன் விளக்கைப் போல் லேசாக காற்றில் அசைந்த படி மிதந்து நின்றது. பிரேதத்தை அந்தரத்தில் நிறுத்தியிருந்த எங்கள் கண்களுக்கு புலப்படாத நூல் கயிற்றை விளங்க இயலா ஆச்சரியத்திலிருந்தும், பீதியிலிருந்தும் மீண்ட போது துழாவினோம். இன்னாடா பொதக்க எனக் கேட்டு இழுத்து வரப்பட்ட தோட்டி, இது அரைநாள்

ஆறப்போட்ட குழி. கெட்ட காத்து ஏதாவது அடஞ்சிருக்கும். அது வெடிச்சதினால பிளந்திருக்கும். மீண்டும் புதைச்சிடலாம். இந்த பூமி இதுவரை யாரையும் வெளியே துப்பியது இல்லை என்றான். குழிக்கு நேர்மேலே மிதந்ததால் எக்கி பிடிக்க தாவியோர் குழிக்குள் விழுந்தனர். தவறி விழுந்து அலறியபடியே மேலேறியோர் கை கால்களை உதறிக் கொண்டு அப்பால் ஓடி நின்றனர். மதிய வெயிலில் கல் உப்பு பிரேதத்தின் மீது மின்னியது. கூசிய கண்களுக்கு மேலே கைகளை வைத்து நிழல் காப்பு செய்து சூர்யனை மறைத்துப் பார்த்தோம். சிலர் இடுகாட்டிற்கு எப்படியோ அநாதையாக வந்திருந்த உருண்டையான கற்களை குழிக்குள் நிரப்பி எம்பி பிடிக்க முனைந்தனர். அவர்கள் பிடிக்கு எட்டாமல் கொஞ்சம் மேலே உயர்ந்து செல்வது போல் தோன்றியது. என்னமோ ஏதோ என நின்று கூடிய சிலர் பெரிய கயிறைக் கொண்டு வந்து குறுக்கே வீசி கறந்து கீழே இறக்கிவிடலாம் என கயிறை கொண்டு வர ஏவினர் சிலரை. இச்செய்தி அதிகம் வெளியில் பரவாமல் இக்கட்டான மனநிலையில் மீண்டும் எப்படியாவது புதைத்துவிடவே எண்ணினோம். குதித்து குதித்து சோர்வுற்ற நாங்கள் கயிறு வருவதற்காக சமாதிகளின் நிழலில் காத்திருந்தோம். இன்னும் சிலரோடு சற்றே நேரம் குன்றி கயிறோடு வந்தவர்கள், கயிறின் முனையில் ஓர் கல்லைக் கட்டி குறுக்கே அந்தப்பக்கம் வீசிக்கொண்டிருந்தனர். நாங்களும் சப்தமெழுப்பாமல் சுற்றி நின்று முயற்சித்துக் கொண்டிருந்தோம். ஓர் சரியான உயர எறிதலில் கல் கட்டிய கயிறு வயிற்றுப் பகுதியின் குறுக்கே விழ பிரேதத்தை கறந்து பூமிக்கு இழுத்துவிட இருபக்கமும் கயிற்றைப் பிடித்து குஞ்சினோம். என்ன ஒரு பிடிவாதமான சக்தியோடு அந்தரத்திலிருந்து கீழே இறங்காமல் இரட்டை இராட்டினம் போல சற்றே முன்னோக்கி கவிழ்ந்து கயிற்றின் பிடியிலிருந்து நழுவிக்கொண்டு அந்தி சாயும் சூர்யனின் குறுக்கே நகரத் துவங்கி இன்னும் மேலே இன்னும் என கைகளுக்கோ கயிற்றுக்கோ எட்டாத உயரத்தில் உயர்ந்து அப்படியே படுக்கை வாட்டத்தில் நகர்ந்தது. பின்னாலேயே தொடர்ந்து சென்ற நாங்கள் இனிமேல் செல்லமுடியாதென தடுத்து நின்ற சூரை முட்களுக்கும், சுள்ளிச் செடிகளுக்கும் முன்னால் திகைத்து நின்றோம். எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கும் போதே மறைந்துவிடும் சூரியனைப் போல் மிதந்து கொண்டிருந்த வெண்ணிறப் பிரேதம் தூரத்து வானில் மறைந்து போனது.

அவனது சுற்றமும் நட்பும் எட்டாந்துக்கம் கழித்து கசப்பு தழையில் கறிச்சோறு தின்று கண்ணீர் துக்கமாக உறைந்துவிட்ட இந்நாளில், அவன் பிணம் எழுந்தலைவது கேட்டு துக்கம் கண்ணீராக உடைந்து ஒப்பாரியாக தெருவெங்கும் பெருக்கெடுத்தது. புலம்பிக்கொண்டு ஓடும் அவன் குடும்பத்தாரின் சின்னது பெரிசுகளை இழுத்துப் பிடித்து நிறுத்தவே ஓர் இரவு போதவில்லை. மலையிலிருந்து உருண்டு விழுந்த உடைந்து சிதறிய மஞ்சள் நிற கல்லைப் போன்ற உள்ளடங்கிய இச்சிறு நகரத்தில், அவ்வப்போது வானத்தை அன்னாந்து பார்த்தபடி யாவரும் நடந்தனர். சில சமயம் தாழ்வாகவும், சிலபோது ஏதோ கோபம் கொண்டது போல் யாருடைய விருப்பிற்கோ வெறுப்பிற்கோ இல்லாமல் தங்களை தாங்களே உருமாற்றிக் கொண்டே போகும் மேகக் கூட்டங்களின் தூரத்தில் மிதந்தலைந்தது. மிதந்தலையும் பிணத்தைப் பார்த்தவர்களும், பார்க்காதவர்களும் நிமிர முடியா கூனர்களும் தலைமேல் கல்வைத்த சுமையாய் அழுத்துவதாக உணர்ந்தனர். நீ பார்த்தாயா, நீ பார்த்தாயா என புருவங்களால்

கோட்டுக் கொண்டனர். உருகாத அறுபட பேக்டரி ஜன்னல் போல் படுத்த வாக்கில் தூரத்து வானில் பருந்தாக தோன்றியும், மறைந்தும் அலைந்து எல்லா திசைகளிலும் நகர்ந்த பிரேதம் கண்ணாடி கூண்டிற்குள் சிக்கிக் கொண்ட நீர்க்குமிழிபோல் உருகி விடாமலும், உடைந்து போகாமலும் எங்கேயும் முற்றிலும் மறைந்து சென்றுவிடாமல் நகரின் மீது கவிழ்க்கப்பட்ட கண்ணாடி குடுவை போன்ற பிரதிபலிக்கும் வான எல்லைகளுக்குள்ளேயே அலைந்திருந்தது.

அவர்கள் இவ்வளவு சீக்கிரம் பிணையில் வெளியே வருவார்கள் என யாரும் எதிர்பார்க்கவில்லை. இதோடு அவர்கள் கூட்டமாக ஒழிந்தார்கள் என விரமற்ற ஆதங்கம் பட்டுமே கொண்டிருந்த சிலர் பேசிக்கொண்டிருந்தபோது சொல்லாமல் குறையாமல் வெளியே வந்துவிட்டார்கள். வந்துவிட்டவர்கள் கல்லறை பிளந்தெழுந்து பிரேதம் அலைவது கேட்டு கூடுதலான மதுபான புட்டிகளோடு தங்கள் வழக்கமான குடியிடத்தில் கன்னங்களை சாத்தியபடி பதுங்கிக்கொண்டனர்.

நெல் வயல்களுக்கு நடுவே பதுங்கிக்கொண்ட கருங்கல் கட்டிடத்தில் இடி போல் அப்பிசாசம் போய் இறங்கி அவர்களை கொல்லும் என பலரும் எண்ணினர். அதே பயம் கொண்ட அவர்களின் வீட்டினரும் ஆள் மாற்றி ஆள் உணவு கொண்டு வந்து கொடுத்து சென்றவர்களும் எச்சரித்து சென்றனர். இவர்கள் போதையில் சொக்கிக்கொண்ட கண்களால ஜன்னலில் சிக்கிக் கொண்ட வானத்தை துழாவினர்.

ஞாலகத்தின் வட்டப் பரப்பில் எந்தப் பக்கத்தில் நின்று பார்த்தாலும் அவர்களுக்கு அக்கொலையை எப்படி செய்தோம் என்பது தெளிவாகவில்லை, மிக எளிமையான பொருட்களால் நிகழ்த்தப்பட்டது. அந்தப் பிரச்சினை எப்படி நேர்ந்தது. பீர் சிந்தியதாலா, பிராந்தி கொட்டியதாலா, இல்லை அது ஓர் எல்லை தாண்டிய பயங்கரம். எந்த அரசாங்கமும் பிரித்துக் கொடுக்காத இவர்களே வகுத்துக் கொண்ட மனக்கோடுகளால் உருவான இரண்டு எல்லைக்கும் நடுவிலிருந்த மதுபான விடுதியில். உடனே நாம் அலங்கார விளக்குகளையும் வட்ட மேசைகளையும் கற்பனித்துக் கொள்ள வேண்டாம். மின் காற்றாடியொன்று கிறட்டு வேகத்தில் எங்கேயும் போகாமல் அங்கேயே சுற்றிக் கொண்டு நாங்கள் வரும் வரை. ஆகா மிக அழகாக தொடங்கியது அதிகாலையிலேயே கூட்டுக்குடி. தான் உதிர்த்த முட்களுக்கு குடை பிடித்து நிற்கும் கருவேலமரத்தடியில் வட்டமாக அமர்ந்து குடித்தும், தேன்மலை அடிவாரத்து நிழலில் நின்று குடித்தும், ஊமையன் கடை பின்புறத்திலும், மைல் கல் மேலும், ஏரிக்கரையிலும், தாமரைக்குள மேட்டிலும், வெட்டுவானத்திலும், வானத்தின் விளம்பில் நின்றும் அமர்ந்தும் குடித்து வெயிலில் - சூடேறிய பிராந்தியை வட்டப்பாறையில் குடித்த போது ஏறிய உச்ச போதையில் தான் இப்படுகளத்திற்கு பிற்பகல் வந்து சேர்ந்தோம். இருவர் முத்தமிட்டால் உலகம் மாறிவிடுகிறது. ஒருவன் ஒரு பெக் அடித்தாலே உலகம் மாறிவிடும் என்ற வரவேற்பு வாசகங்கள். திடீரென உள்ளே புகுந்த மஞ்சள் ஒளி. இனிமேல் குடிக்கமாட்டேன் என்ற சங்கல்பத்துடன் தனியே குடித்துக் கொண்டிருக்கும் ஒருவன். வேளியே டப் பென்று உடைந்துவிட்ட பீர்பாட்டில், திறக்க முடியாத மூடியின் மீது வந்த கோபம், டேபிளின் முனையில் இடித்து சில துளிகள் சிந்தி ஆடி நின்ற கோப்பைகள், இல்லாத ஒருவனைப் பற்றி இருவரின் குரோதப் பேச்சு, மஞ்சள் கருவின் மீது தூவப்பட்ட காரவண்ணம், முட்டி எலும்புகள்,

சீக்கிரமாக நடமாட இருக்கும் கேட்கும் நாம். தண்டனை போகவிடாமல் தடுத்துக் கொண்டிருக்கும் இருவர். மலினமான மழுப்பல். நங்கிலும், பூனிலும் மூளிக்கிடக்கும் வன்னைடச் சொற்கள். இன்னும் கொஞ்சம் போதையை கெஞ்சி கேட்கும் இளைய மனம். மூட்டு கொடுக்கப்பட்ட ஊனை நாற்காலி. சுழுக்கி நிற்கும் கல்கள், சிவந்த நிறமாக மாறிவிட்ட முகங்கள், ஒப்பனையில் இருந்த முடியா நிலைகள், பிறிட்டு வரும் பித்தம், ஒருமை விசல், எதிலும் கலந்து கொள்ளாமல் மூலையில் அமர்ந்து இருமுவர் காலியான புட்டியில் நிக்குச்சினையக் கிழித்துப் போட்டு எழும்பும் நீல ஜ்வாலை, நீக்க முடியாமல் சிதறிக்கிடக்கும் பீலிங் எறும்புகள். தலை கவிழ்ந்து அமர்ந்திருப்பவனின் முகத்தில் பளிச்சென்று விழுந்த ஓர் அறை. அப்பாவை தெவடியா ஆக்கிய ஒரே சொல். திடீரென எழுந்த தன்னாட்டமான கைகளின் அலை, கண்ணாடி புட்டியை உடைத்து அவன் இடுப்பாரில் ஆழ்ந்த சொருகல். அவனுக்கு எதும் நேர்ந்திருக்குமா? எதையும் தடுக்க முடியா பலவீனமான கைகள் திட்டமிட்ட எங்கள் இதயம், சட்டென்று பீதியாக மாறிவிட்ட போதை, நீண்ட ஒலியோடு எங்கேயோ வளைந்து செல்லும் பேருந்து. மாடியிலிருந்து யாருக்கோ விழுந்து கொண்டிருக்கும் அடியின் பலமான சத்தங்கள், எங்களின் கூட்டுத் தைரியம் சிதைந்துவிட்டது. எங்களுக்கு முன்னே சிலர் ஓடிக்கொண்டிருந்த பிசியில் ஓடிக்கொண்டிருந்தோம். முடிவடையாமல் ஓடிக்கொண்டிருந்த சாலைகளிலிருந்து விலகி எங்களது சந்துகளில் நுழைந்தோம். பீதி பலமாக மாறி, பதட்டமான குரலில் கத்தி அழைத்தோம். சமைக்க இருந்த விறகு கட்டைகள், கம்பிகள், கத்திகள், மாடுகளின் மண்டையைப் பிளக்கும் கற்கள், கூடவிட்ட கூட்டத்தில் கிடைத்துவிட்ட தைரியம், தொலைந்துவிட்ட எனது இடது கால் செருப்பு. என்னை விடாமல் எப்போதும் துரத்திக் கொண்டு வரும் அதன் நினைவு. கலைந்து ஓடியதால் கொல்லப்பட்டவனின் மரணம் அவன் ஆன்மா திருப்தியடையும் வகையில் இரண்டு நாள் நிகழ்த்தப்பட்ட கலவரம்.

நகரின் பெரும்பான்மை மக்கள் வீட்டிற்குள்ளே இருந்து கொண்டு அலை அலையாக கத்திக் கொண்டு ஓடும் குரல்களை ஜன்னலை மட்டும் திறந்து வைத்து கேட்டபடியிருந்தனர். ஒருவரையும் கொல்லாமல், உடையும் பொருட்கள் உடைந்தன. எரியும் பொருட்கள் எரிந்தன. இரண்டு நாள் கலவரக் கொலைகாரர்களை உடனே கும்பலாக கைது செய்ய வைத்தது. அதன்பின் எல் ஞாயிறுக்குப் பிறகான தினங்களைப் போல் எல்லாம் வற்றிவிட்டது. ஆனால் அவனது ஆன்மாவோ, உடலோ எனக்குத் தெரியாது. அது மரணத்திற்குப் பின்பான அமைதியை அடையவில்லை என்றே சொல்கிறார்கள். அவனுக்கு சிறுவயதில் மிகவும் பிடித்த கல்கோனா, தேன்மிட்டாய், நரிஜாம், மயிர்மிட்டாய், ஆட்டுக்கால், பிராந்தி, நீர் கலப்பில்லாத கஞ்சா சாராயம் இவையெல்லாம் அவன் இறந்த இடத்தில் படைக்கும் திருப்தியுறாமல் வெறெங்கும் பிதந்து செல்லாமலும் புயீக்க இறங்கி வந்து தன் குழியில் அடையாமலும், ஜெனட்! நீயென்ற நீயொன் வீட்டு முற்றத்தை மாத்திலே போய் இருந்து கொண்டது. நீயோ தன் கொட்டு கொம்பை வைத்து மாத்திலிருந்து அதை விடுவித்து வான எல்லைக்கே திருப்பி அனுப்பினாலும், தான் அசிக்கும் நிரப்பிற்கும், வழக்கும் நீக்கும், மௌனமாக தனக்கு அளிக்கப்பட்ட அச்செருக்கடியாகவே அதை உணர்ந்தான். இறந்தவன் ஒருவன். கொன்றது பலர் என்ற தன்மையை பிரித்தறிதல் ஒரு நக்கத்திரம் கூட வலிக்காது. என்ன

செய்வது எந்த நகரத்திலும் வசிக்காது என்பது உடனேயே தெரிந்தால் உண்மையான பதிலாயமுதலிலாவது முடிபட்டுமென்று வழக்கை விரைவு நீதிமன்றத்துக்கு மாற்றி தன் மனசாட்சியின் உறுத்தலிலிருந்து தன்னைக் காத்துக் கொண்டார். வழக்கை மாற்றியவுடன் பாலோ லாரி சேர்ன் மீது கட்டப்பட்ட விரைவு நீதிமன்றம், நிறைய கனங்களுக்குச் சென்றதால் தளர்ந்துபோன உடலோடு தள்ளாடியபடி கிளிச் ஒலிகளோடும் பரிதாபத்திற்குரிய அசைவுகளோடும் சுர்சேரி ஆல மரத்தடியில் வந்து நின்றது. வந்து அன்று நீதிபதியும், ஓட்டுநரும், கட்டக்க பெண்மணியும் ஓய்வெடுத்துக் கொண்ட பின் சமர்ப்பிக்கப்பட்ட குற்றப் பத்திரிக்கையின் நகல் மிக நீளமானதாய் இருந்தது. அதில் பதினொரு பேரின் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. உண்மையில் அவன் சாகும்படியான கடைசி அடியை அடித்தவன் பெயர்தான் குற்றவாளிகள் பட்டியலில் கடைசியில் இருந்தது. சம்பவ இடத்தில் இல்லாத ஆனால் கூட்டத்தின் தலைவனாக தன்னைப் பாவித்துக் கொண்டிருந்த பிறரும் அப்படித்தான் பாவித்தனர். அவனின் பெயர் முதலில் இடம் பெற்றிருந்தது. கொலை நிகழ்ந்த போது பாரில் மது அருந்திக் கொண்டிருந்த பெரும்பாலானோர் சாட்சிகளாக சேர்க்கப்பட்டிருந்தனர். சச்சரவின் துவக்கத்திலேயோ, முடிவிலேயோ அங்கிருந்து தப்பி ஓடிய அவனை சார்ந்தவர்கள் சாட்சிகளாக சேர்க்கப்படவில்லை. கொலை நடந்ததிலிருந்து வேறு வேறு பார்களில் இடம் மாறி குடித்துக் கொண்டிருந்த சாட்சிகளை கோர்ட் ஏட்டுக்கள் எப்படியோ உருட்டி மிரட்டி கொத்துக் கொத்தாக பிடித்து வந்து விரைவு நீதிமன்ற வாகனத்தின் உள் போகும் பின் வாசல் முன் வரிசையில் நிற்க வைத்தனர். சாட்சிகளின் வாக்குமூலங்கள் இரையும் டைப்ரைட்டரில் பதிவு செய்யப்பட்டன. அரசு வழக்கறிஞர் சாட்சிகளை ஒன்றன்பின் ஒன்றாக விசாரித்தார். எல்லா சாட்சிகளும் ஒன்றைப் போல பதிலளித்தன. உங்க பேரென்ன? சாமுய்யா. சம்பவம் நடந்தப்ப நீங்க அங்கிருந்திங்களா? என்ன சம்பவம் அய்யா? உங்களுக்கு ஒன்றுமே தெரியாதா? தெரியாது அய்யா. ஒன்றுமே தெரியாது. ஒன்றுமே தெரியாது. ஒன்றுமே தெரியாத ஒரு சாட்சி. உங்க பேரென்ன? தேள் என்கிற செந்தில். சம்பவம் நடந்தப்பத நீங்க எங்க இருந்திங்க. அய்யா நான் எங்கயும் இல்லைங்கய்யா. ஆனா நான் நல்ல போதையில் இருந்தேன். அதனால் நான் எங்க இருந்தேன்னு எனக்கு தெரியாது அய்யா. நீங்க போகலாம். தைரியமாக நடந்ததை நடந்ததைப் போலவே சொல்வேன என சாட்சி சொல்ல தயாராய் இருந்த ஒருவனை சாட்சியாய் கடைசிவரை சேர்க்கவே இல்லை. சீருடைக்கு சலைக் கூலி பெறுபவர்கள். ஏனெனில் நடந்ததை நடந்ததைப் போலவே சொன்னால் குற்றப்பத்திரிக்கையில் எழுதப் பட்டிருப்பதற்கும் நிகழ்ந்த சம்பவத்தின் முரணுக்கும் நீதிக் கூண்டில் பதில் கூறமுடியாமல் தாங்கள் அணிந்திருக்கும் நட்சத்திரத்தில் ஒன்றோ இரண்டோ விழுந்துவிடுமென எண்ணி அந்த தைரியவானை சேர்க்கவில்லை போல, அடுத்து ரஜாக் என்கிற இளங்கோ. இளங்கோ நீங்கதான் ரஜாக் என்கிற இளங்கோவா? ஆமாங்கய்யா. சம்பவம் நடந்தப்ப நீங்க அங்க இருந்திங்களா. என்ன தேதியில சம்பவம் நடந்ததுன்னு ஞாபகம் இருக்கா? தேதி எல்லாம் நான் எப்பவும் ஞாபகம் வச்சிக்கமாட்டேன்யா. சரி நேரம் ஞாபகம் இருக்கா? இருக்குய்யா. என்ன நேரம்? மதிய நேரம் அய்யா. டைம் சொல்லுங்க? அதான் மதியானம் டைம்ங்க. சரி என்ன நடந்தது சொல்லுங்க? நான் ஏற்கனவே கொஞ்சம்

குடிச்சிருந்தய்யா. இன்னும் கொஞ்சம் குடிக்கலாம்னு பாருக்கு பாட்டிலோடு போனேன்யா. நான் கூட ரத்தம் கேட்டன்யா. ஆனா அவங்க கோழிகாலு வறுவலுதான் அய்யா குடுத்தாங்க. அதனால? நான் கொஞ்சம் கோபப்பட்டன்யா. இல்ல உங்களுக்கு கொல்லப்பட்டவர தெரியுமா? தெரியாது அய்யா. சரி அங்க என்ன நடந்தது? அந்த இடத் சரி இல்ல அய்யா. நான் ஏற்கனவே கொஞ்சம் குடிச்சிருந்தேன். அப்புறம் இந்த கோழி காலால நான் கோபத்தில இருந்தேன். என் மனசு சொல்லிச்சு இங்க ஏதோ சரி இல்லைனு. அங்க ஏதோ சண்டை வரப்போகுதுன்னு நான கோபமா இருந்தாலும், சண்டை எதாவது வர்ற மாதிரி தெரிஞ்சதாலும் உடனே நான் அங்கிருந்து போய்டுவேன்யா. என்னா வேறொரு இடத்துல சண்ட வர்ற மாதிரி இருக்கதால நான் நான் அந்த இடத்துக்கே வந்தேன். அந்த இடத்துகது நான் தெரியாம வந்ததால நான் நான் இப்ப இந்த இடத்துல வரவேண்டியதாப்போச்சு அய்யா. அப்ப நீங்க சம்பவம் நடக்கும்போது அங்க இல்ல? அதான் அய்யா அங்க ஒரு சண்டை வரப்போகுதுன்னு தெரிஞ்ச உடனே கொண்டாந்தத குடிச்சிட்டு கோழிகால கூட தின்னாம உடனே அங்கிருந்து வேறொரு இடத்துக்கு போயிட்டன்யா. நீங்க போகலாம். ஆனா திரும்ப கூப்பிடும்போது வரணும். அப்படியே அய்யா. பிராந்தி பாட்டிலாலும், சல்லி காசுகளாலும் முன்பே மிரட்டலாலும் குலைக்கப்பட்ட புட்டம் பருத்த சீருடைக்காரர்களால் பலவீனமாக நிறுத்தப்பட்ட சாட்சிகளிடம் அரசு வக்கீல் வவ்வால் நிற அங்கி பறக்க கேள்விகளை அடுக்கிக் கொண்டிருந்தார். கூண்டில் ஏறி நின்றவர்களிடம் மௌனமே மறுமொழியாக இருந்தது. மௌனமற்று பேசியவர்கள், தெரியாது, ஞாபகமில்லை, நினைவில்லை, நான் அங்கில்லை, சப்தம் ஏதோ கேட்டது, நான் சப்தம் தான் கேட்டேன், அது என்ன சப்தம் என பார்க்கவில்லை. போதையில் மட்டுமே பிறழ்ந்து பேசும் மென்மையான மனம் கொண்ட குடிகாரர்கள் தெளிவில் பிறழ்ந்து பேசிய மன சஞ்சலத்தில் மேலும் மீள முடியா போதையில் தங்களை ஆழ்த்திக் கொண்டார்கள்.

இன்னமும் விசாரிக்கப்பட மீதமிருந்த இரண்டு சாட்சிகளே. பாரின் உரிமையாளனே முதல் சாட்சியாக சேர்க்கப்பட்டிருந்தான். சம்மனில் அவன் கையெழுத்திட்டிருந்தாலும், தொடர்ந்து டிமிக்கி கொடுத்துக்கொண்டு சாட்சி சொல்ல வராமல் பதுங்கித் திரிந்தான். உண்மையான வியாபாரி இல்லையா அவன். அவனுக்கு எல்லா சமுகங்களும் வேண்டும். வியாபாரத்திற்கு பகை ஆகாது என்று அறிந்தவன். வாரண்ட் பிறப்பிக்கப்பட்டு தேடியே அவனை கூண்டோடு விரைவு நீதிமன்றத்துக்கு இழுத்து வந்தார்கள். பிக்கு, பிக்கு அவன் கூண்டி லேறி நின்றபோது கையில் ஒரு கூண்டு நிறைய ரோஸ் நிற கொண்டை கொண்ட வெள்ளை நிற கோழிகள் இருந்தன. எல்லோரும் அவனையும் அந்த கூண்டு நிறைய நெருங்கி நின்ற கோழிகளையும் பார்த்தனர். நீதியரசர் அந்த கூண்டு கோழிகள் எதுக்கு என்றார்? அது இருக்கனும் அய்யா என்றான். நீதியரசர் சாட்சி சொல்ல வராம வாரண்ட் வாங்கி இருக்கிங்க என் என்றார்? அய்யா தொக்கு ஜீவன் பாரு வேது என பரிதாபமாக உரைத்தான். பிக்கு காலையில பார் திறந்ததும் கடையை பெருக்கி, கற்பூரம் ஏற்றி, ஊதுபத்தி கொளுத்தமாட்டான். பதிலாக உதட்டை நன்றாக மூடிக்கொண்டு பல நிமிடங்களுக்கு காற்றை ஊதி கன்னங்களை உப்பிக் கொண்டிருப்பான். கடைசியில் உப்பலில் பிக் என்ற சப்தத்தோடு காற்றை வெளியே விடுவான்.

இதுவே தன் வியாபாரம் பெருகுவதற்கான அதிஷ்டமுள்ள குறுக்கு வழி என எண்ணி உப்பி உப்பி பிக்கென்பான். அரசு வழக்கறிஞர் நீங்க பிக்கு. ஆமாங்கய்யா. நீங்க எத்தனவருசமா பார் நடத்துறிங்க? நான் பொறந்ததே பார்லதாங்கற அளவுக்கு அய்யா. வருசம் மாசம் சொல்லுங்க? அது அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனம் அய்யா. சரி உங்களுக்குக் கொல்லப்பட்டவரைத் தெரியுமா? தெரியாது அய்யா. உங்களோட பார்லதான் கொலை நடந்தது? இல்லங்கய்யா பாருக்கு வெளியிலதான் உடல் கைப்பற்றினதா மறுநாள் தினசரிகள்ல பார்த்து தெரிஞ்சிக்கிட்டேன். அப்போ சம்பவம் நடந்தப்ப நீங்க அங்க இல்லையா? அன்னிக்கு எனக்கு நல்ல ஞாபகம் இருக்கு. நான் அன்னிக்கு பாரே திறக்கல அய்யா. என் மச்சினிச்சி வீட்டு கிரகப்பிரவேசத்துக் போய்ட்டு மதியத்துக்கு மேலதான் நான் என் வீட்டுக்கே வந்தேன். அவனையே சற்று நேரம் கூர்ந்து நோக்கிய வழக்கறிஞர் மன்ற அனுமதியோடு, இரத்தம் சூடாக கேட்டு கோழி காலு பெற்ற ரஜாக் என்கிற இளங்கோவை குறுக்கு சாட்சியாக அழைத்தார். நீங்க இவர் கடையிலதான கோழி காலு வாங்கி அன்னிக்கு பிராந்தி சாப்பிட்டிங்க? அய்யா நான் இரத்தம் கேட்டு போனேன் எனக்கு கோழி காலுதான் கிடைச்சது. அது இவர் கடையிலதானா? ஆமாங்கய்யா. நீங்க இறங்கி நில்லுங்க. பிக்கு இப்ப நீங்க என்ன சொல்றீங்க? என் இரத்தத்தோட சுவை உலகமே அறிஞ்சதுங்க. அவரு மனசுக்குள்ளே இரத்தம் கேட்டு கிளம்பி இருக்காரு. ஆனா அவருக்கு கோழி காலு கிடைக்கிற எடத்துக்கு போய் சேர்ந்திருக்காரு.

நான் கோழி காலு விக்கிறதில்லைங்கிறதையும் உலகமே அறியும். அவரு இரத்தம் கிடைக்கிற இடத்தையும் கோழி காலு விக்கிற இடத்தையும் குழப்பிட்டாரு. அவரு மனசுல கேட்டது ஒன்று வெளியில அவருக்கு கிடைச்சது வேறொன்னு. இந்த விவாதங்களை மௌனமாக கவனித்துக் கொண்டிருந்த நீதியரசர் பிக்குவிடம் நீங்க நீதிமன்றத்தில் பொய் பேசி அது நிரூபிக்கப்பட்டா தண்டிக்கப்படுவிங்கன்றது தெரியுமா என எச்சரிக்கும் தொனியில் கேட்டார். குற்றவாளிகளை விட சாட்சிகள் தண்டிக்கப்படுவார்கள் என்பது சத்தியமாக பிக்குவுக்குத் தெரியாதா என்ன? பிக்கு நான் செய்ற தொழில் மேல சத்தியமாக உண்மையை மட்டும்தான் பேசுறேன். நான் கடை திறக்கலங்கிறத ஆதாரபூர்வமா நிரூபிக்கத்தான் இந்த கோழி கூண்டையே தூக்கி வந்தேன். அய்யா இந்த கூண்டுல இருக்கறது எல்லாம் ஒயிட் லக்கான் கோழிய்யா இதோட வாழ்நாள் எவ்ளோன்னு உங்களுக்கேத் தெரியும். 65 நாள் தான் அய்யா. நான் கடை திறந்து ஆம்லேட், ஆபாயில் போடாததால வாங்குன முட்டையை அழவத்து வச்சேன். மூனே நாள்ள குஞ்சி பொறிச்சது. சம்பவம் நடந்த இன்னிக்கு 45 நாள் ஆவுது. இதுலு மூனு நாளா இந்த கோழிங்க வயது கழிச்சா இதுங்களோடு வயது 42 அப்ப இதுங்கள என்னிக்கு நான் அழவத்துல வச்சேன்ங்கறத இந்த நாட்களை வச்சி கண்டுபிடிக்கலாம். அப்பிடியும் உங்களுக்கு நம்பிக்கை வரலைன்னா இப்பவே இந்த கோழிகளை கொன்னு கார்பன்டேட் டெஸ்டுக்கு அனுப்பிவைங்க. அப்ப நான் கடை திறந்தனா இல்ல என் பார்ல கொலை விழுந்ததான்னு உங்களுக்கு புரிஞ்சிடும் என்றான் துணிவாக. ஒரு வழக்கறிஞரை விட அறிவு பூர்வமாகவும் துல்லியமாகவும் வாதிடும் சாட்சியை மெச்சி இரண்டு கோழிகளை மட்டும் கார்பன்டேட் டெஸ்டுக்கு அனுப்ப உத்தரவிட்டார். மீதி கோழிகள் காக்கி நிற

தொப்பைகளுக்கு கார்பன்டேட்டாகிப் போனது.

போனவன் போய்விட்டான் இனி இருப்பவர்களைத்தான் பார்க்கணும் என பேசிப் பேசி செத்தவன் வீட்டைக் குளிரச் செய்து மறுக்கும் கைகளில் எதை எதையோ திணித்துக் கொண்டிருந்தார்கள் இடை நின்றவர்கள். பசித்தவனின் கைகளில் வைக்கப்பட்ட சூடான மரவள்ளிக் கிழங்கைப் போல் வாங்க முடியாதபடி மனம் மறுத்தாலும் கைகள் ஏனோ நீள்கின்றன. இருந்தாலும் இன்னும் சூடு தணியாத உள்ளிருந்து கேட்கும் ஒரு குரல் போனவன் போய்விட்டான், போய்விட்டான், எங்கே போய்விட்டான்? இங்கே தான் தலைக்கு மேலே மிதந்துகிட்டு இருக்கான். முதியவர் பகை வேண்டாம் பதற வேண்டாம் போய்விடுவான் அது வாதமும் மீதமும் பார்க்க மிதக்கிறது என்றார். வானில் ஒரு துளையை உருவாக்கும் வல்லமை இங்கே யாருக்கும் இல்லையே. முடிவற்ற சாட்சிகளாலும், மௌனங்களாலும் கைகளின் தேய்த்தல்களாலும் தேய்க்கப்பட்ட தேக்குமர கூண்டில் நிர்மௌனமாக நிறுத்தப்பட்ட பிணவறையில் பிரேதத்தை அடையாளம் காட்டி அழுதவள் நின்றாள்.

நீங்கதான் கடைசி. நீங்க பேசணும் உங்க பேரென்ன?

என் பேர் எதுவானால் இனியென்ன. அவன் கதிமோட்சம் போவாமல் அலைவது உங்கள் நீதிக்கோ வெளியே பேசும் பழி வாங்குதலுக்கோ இல்லை. அது எனக்கே எனக்கு மட்டும் தெரிந்த த்தாவோட ஏக்கம். நான் இழந்தது என்ன? அத திருப்பித்தர யாரா முடியும்? இரவெல்லாம் காலை இறுக்கிப்போட்டுத் தூங்கிட்டு, விடிகாலையிலதான் த்தா என்னை எப்போதும் கூப்பிடும். அன்றும் அப்படித்தான். விரைக்க ஆரம்பிச்ச, நான் கொஞ்சி விளையாடி மகிழ்ந்த அவனுடைய எனக்கு மட்டுமே உடைய குஞ்சி. நான் தோட்டத்துக்கு சென்று வருவதாய் ஏனோ நான் உதாசீனப்படுத்திய அந்த நேரம் வாட்டுகிறது என்னை. த்தாவினுள் பொங்கி எனக்குள் மட்டும் யார் கண்ணிலும் படாமல் வாழ்நாளெல்லாம் பாய்ந்திருக்கும் சத்து. இனி எப்போதும் என் கண்கள் காணமுடியாதபடி மறைந்துவிட்ட அம்மணம். எப்போதும் நிமிண்டி கிள்ளி விளையாடும் விரல்கள். வீட்டினுள் நுழையும் முன்னே கொண்டுவரும் மாம்ச பட்சணங்களின் வாசனை. கிள்ளிக்கொடுக்காமல் அள்ளிக்கொடுக்கும் கண்கள். என்னுள் மோகமூர்க்கத்தில் துடிக்கும் உடல். உடைந்துவிடுமோ என நான் அஞ்சும் த்தாவின் எலும்புகள். த்தா எப்போதும் நட்டு படர்ந்திருக்கும் முல்லைக்கொடி. உதட்டோடு மறைந்துபோய் காதுக்குள் மட்டும் கேட்டுக் கொண்டேயிருக்கும் த்தாவின் விசில் ஒலி. நான் மேல் விழுந்து அழுது துடித்தபோது அன்று விடியலில் த்தா அழைத்தபோது இருந்த அதே விரைப்பு நிலை எனக்கு மட்டும் தெரிந்த அந்தரம். எட்டுத் தெரு சுத்தி, ஏழு குடம் தண்ணி எடுத்தாந்து எல்லோரும் ஊத்தினாலும் வெப்பம் தீரலியே. குறுக்கே ஒரு ஆஸ்பத்திரி கட்டு. அத அவுத்து ஆற்ற எனக்கில்லையே ஒரு வழி. த்தா செத்தது யாரால? த்தா செத்தது என்னால. ஐயோ த்தா என்ன தேனட மாதிரி பிச்சி பிச்சி தின்பியே. த்தாவ அவங்க கொல்லல. நான்தான் கொன்னேன். தோட்டம் போயி திரும்பி வந்தா பாதி படுத்துக்கிட்டே என்னைக் கூப்பிட்டு த்தாவை படுக்கையில காணம். இங்கேதான் இருக்கும்னு நெனைச்சி வீட்டை கழுவி, வாசல் தெளிச்சி கோலம் போட்டேன். த்தா திரும்பி வரவேயில்லை. பொணம் போன பின்னாடிதான் வாசல் தெளிச்சி கோலம் போடுவாங்க. நான் என்

த்தாவுக்கு கொலை விழறதுக்கு முன்னாடியே கோலம் போட்டேனே. மரணக் கொட்டடியில் நான் பார்த்து, அடையாளம் சொன்னது என் த்தா இல்ல. அது என் த்தாவே இல்ல. என் த்தாவ கொன்னது அவங்க இல்ல. என் த்தா எனக்குள்ளதான் இருக்கு. செத்தது என் த்தா இல்ல. என் த்தாவ கொன்னது அவங்க இல்ல நான்தான்.

அம்மா நீங்க பேசணும். மௌனமாகவே எவ்வளூ நேரம் இப்படி நிப்பீங்க? கண்களில் கட்டிக் கொண்ட சிந்தாத கண்ணீர் மறைத்தது மன்றத்தை. எங்கேயோ போய்த் திரும்பிய காற்றில் ஆலம் பழங்கள் ஆலங்கட்டிகளைப் போல் விரைவு நீதிமன்றத்தின் கூரையின் மீது விழுந்து இருண்ட மௌனத்தைக் கலைத்தது. எதிர்தரப்பு வழக்கறிஞர். நீதியரசரிடம் குற்றம் சந்தர்ப்ப சாட்சிகளின் மூலம் சரிவர நிரூபிக்கப்படாததாலும், இத்தனை பேரின் எதிர்கால வாழ்க்கையைக் கருத்தில் கொண்டும் வழக்கை தள்ளுபடி செய்து விடுதலை செய்யுமாறு பணிவுடன் கேட்டுக் கொண்டார். வழக்கமான கனத்த மௌனத்துடன் இருந்த நீதியரசர் அழைப்பாளினிடம் நீண்ட நாள் மூடிக்கிடந்த ஜன்னலைத் திறக்கச் சொன்னார். ஆலமர இலைகளால் தழுவப்பட்ட காற்று உள்ளே வந்தது. வானத்தை சுட்டிக்காட்டிய நீதியரசர் அப்போ அங்கே மிதக்கிறதே அது என்ன? என்றார். எதிர்தரப்பு வழக்கறிஞரை நோக்கி, சற்றே சிந்தித்த வழக்கறிஞர் தனது கோட்டை சரிசெய்துகொண்டு அது ஒரு பொழியாத மேகம் என்றார். தீர்க்கமாக அது பொழியும் வரை தீர்ப்பை தள்ளி வைப்பதாக நீதியரசர் உத்தரவிட்டார். அச்சிறு நகரத்தில் தீர்ப்புக்கும், பிண மழை பொழிவிற்கும் வானத்தை நோக்கி காத்திருந்தனர்.

புது எழுத்து சந்தா விபரம்

இனிவரும் இதழ்கள் மொழிபெயர்ப்பு
இணைப்பு இதழுடன் வரும்.
தனி இதழ் மொழிபெயர்ப்பு இணைப்பு
இதழுடன் விலை ரூ.100/-

நான்கு இதழ்களுக்கான சந்தா	ரூ. 300/-
நிறுவன சந்தா	ரூ. 600/-
மாணவர் சந்தா	ரூ. 250/-

சந்தாதாரர்களுக்கு புது எழுத்து
வெளியீடுகளில் 20% கழிவு உண்டு.

அஞ்சல் / கூரியர் செலவு இலவசம்.

என் கவிதை பற்றிய ஒரு சிறுவரையறை

சுழுக்குத் துயரார்ந்து வறண்டு இறுகி அந்த மலை வாழ்கிறது தனியாக
அந்தப் பறவை அவ்வப்போது தன் இறக்கைகளை நினைத்து வருத்தப்படுகிறது
ஆழமான அந்த ஈரமற்ற குளம் தன் கனவிலிருந்து இன்னும் விடுபடவில்லை
அந்தப் பசுமையான மரம் எப்போதும் பழுக்கும் இலையை மட்டும் விரும்பும்
நான் திருப்தியின்மையில் திருப்தி அடைகிறேன்
அதோ ஒரே காலத்தில் நிலவும் சூரியனும் சஞ்சரிப்பது உன்
பிரதேசத்தில்தான்.

ஒரு மரம் கோடைக்கு உள்ளேயும் வெளியேயும் வாழ்கிறது

அந்தக் கோடை வெயிலைக்
கண்டவுடன் மரங்கள் தம்மை இலைகளால் மூடிக்கொண்டன
நிழல் வேண்டுமென்று பறக்கும் அந்தக் கருங்குயில்
இப்போது அந்த மரத்திற்குள் பாய்கிறது
அந்த மரம் என்பது எரிந்து கொண்டிருக்கும் தீக்கொன்றைதான்
எரியும் அந்த மலர் அந்தக் குயிலை ஆரத் தழுவுகிறது
ஆக ஓர் எரியும் மலர் ஒரு குயிலை உண்டுவிட்டது
ஆனால் வந்து சேர்கிறது ஒரு வசந்த காலம்
அந்தக் கருங்குயில் இப்போது இல்லை
கொன்றைமரத்தின் கிளைகளில் இப்போது மலர்கள் எரியவில்லை
அல்லது மலர்கள் இல்லவே இல்லை
நீங்கள் பார்க்கும் வேளை
அந்தக் கொன்றைமரத்தின் எல்லா கிளைகளிலும்
மலர்கள் இருந்த இடங்களில்
ஒரே குயில்
அமர்ந்திருப்பதைக் கண் ஆரக் காணலாம்.

அர்த்தமும் அர்த்தமுமற்ற காட்சிப் பிழைகள்

சற்று முன் துயரத்துடன் அயர்ந்திருந்தேன்
அது இரவு வேளை அல்லது கனவில் பகல்வேளை
நான் கண்டேன் கனவில் நான் படுத்துறங்குவதை
சட்டென்று
வலக்கண்ணிலிருந்து ஒரு மயில் தோகை விரித்தபடி பறக்கிறது
இடக்கண்ணில் மேல் வந்து அமர்கிறது ஒரு பழுத்த இலை

சம்பு

புலியின் முன் நிற்கும் சிறுமி......

வழிமாறி எப்படியோ வந்து சேர்கிறது
வரிப்புலியொன்று கானக எல்லைக்கு
வழிமாறி அவ்விடத்திற்கே வந்து சேர்கிறாள்

விளையாடித் திரிந்த சிறுமியொருத்தி

நீராலான எல்லைச் சுவர்மீது
மோதி விழுகிறது
கானக வெளியைக் கடந்து போகப்
பாயும் புலி
மறுபுறம் விளையாடி வரும் சிறுமியோ
பிஞ்சு விரல்களால் சுவரைத் தொடுகிறாள்
அல்லாமல்
கதவொன்றை வரைந்தும் காற்றில் உடைக்கிறாள்

நீர்மையின்
தடுப்பு உடைந்து விழுந்தவுடன்
உணர்கிறாள் அச்சிறுமி
காட்டுப்புலி அருகிருக்கும் வாசனையை
தவிர்க்கவியலாமல் நுகர்கிறது
அப்புலியும் அதே நொடியில்
நெகிழ்ந்து
பெருகும் பேரன்பின் வாசனையை

பிறகோ
விக்கித்துப் போய் அழத்துவங்கும்
புலியை
பிரம்பு ஓங்கி விளையாட்டாய்
மிரட்டத் தொடங்குகிறாள் சிறுமி

புலியோ
கூண்டுக்குள் தலை தாழ்ந்து
நன்றி பொங்க
பக்கவாட்டில் ஆட்டத் தொடங்குகிறது
தன் வாலை.....

பேரழகி உண்ணும் ஆப்பிள்.....

கோமாளின் காதலியான பேரழகி
ஆப்பிள் என்பது
சுவைத்து சுவைத்து உண்ணும்
ஒரு கனியென அறியாமலிருந்தாள்
கோமாளியோ அறிந்திருந்தான்
இப்பிரதேசம் சாராத அரிய கனி
ஆப்பிளென்றும்
காதலியான பேரழகிக்கு அதைப்
பரிசளிக்க வேண்டுமென்றும்

அவளிடம் அதைச் சொல்ல நினைத்து
அவன் மறந்த இரவில்
தக தகக்கும்
ஆப்பிளொன்றை கனவில் கண்டாள்
கோமாளியின் காதலியான பேரழகி

அவனிடம் அதைச் சொல்ல நினைத்து
அவள் மறந்த இரவில்
கோமாளி கனவில் கண்டான்
பளபளக்கும் ஆப்பிளொன்றை
கனவு காணும்
தன் காதலியான பேரழகியை

அவளிடம் அதைக் கேட்க நினைத்து
அவன் பிறந்த இரவில்
கனவில் கண்டாள்
கோமாளியின் காதலியான பேரழகி
பளபளத்து தகிக்கும் ஆப்பிளொன்றை
அவன் பரிசளிப்பதையும்
சுவைத்து சுவைத்து
தாம் அதை உண்பதையும்.....

வடகரை ரவிச்சந்திரன்

சூர்ப்பணங்கு நாடகம் - ஒரு பார்வை

பெண்ணுடல் பூண்ட முழு இயற்கை நான்
-குறிஞ்சியின் தலைவி என்ற கவிதையில் அனார்.
(உடல், பச்சை, வானம் தொகுப்பு)

அனாரின் கவிதை வரிகளுக்கிடையில் பெண் நீராகிறாள், ஊற்றாக, நதியாக, மழையாக, கடலாக மாறுகிறாள். பெண் நிலமாகிறாள். மலையாக, வயல்வெளியாக உருவங்கொள்கிறாள். பெண் காற்றாகிறாள். மூச்சாக, ஊழிப்புயலாக வடிவெடுக்கிறாள். பெண் ஒளியாகிறாள். அனலாகிறாள். இயற்கை பெண்ணுடலாகிறது. இயற்கை பெண்ணாகிறது.

-அனாரின் கவிதைகள் பற்றி கவிஞர் சுகுமாரன் (உடல், பச்சை, வானம், தொகுப்பு)

முருகபூபதியின் எழுத்திலும், இயக்கத்திலும் உருவான சூர்ப்பணங்கு நாடகம் சுமார் ஒரு மாத காலப் பயிற்சிக்குப் பின்னர் ஜூலை 7 தொடங்கி கோவில்பட்டி, மதுரை, திருவண்ணாமலை, சென்னை ஆகிய இடங்களில் நிகழ்த்தப்பட்டது.



நாடகம் தயாரிப்பில் இருந்த காலத்தில் ஒரு நாள் கோவில்பட்டிக்கு சென்று ஒத்திகையைப் பார்த்துவிட்டு அந்த அனுபவத்தினைப் பற்றி முக நூலில் ஒரு பத்தியாக எழுதியிருந்தேன். ஏற்கனவே நாடகத்தினை ஒத்திகையின் போது பார்த்திருந்ததின் காரணமாக, அதன் முழுமையான வடிவத்தில், ஒளியமைப்புடன் பார்வையாளர்களின் முன்னிலையில் நிகழ்த்தப்படும் போது காண வேண்டும் என்ற ஆர்வமும் இருந்தது.

மதுரைக் கல்லூரி வளாகத்தில் தமிழ் துறையின் ஆதரவுடன் நிகழ்த்தப்பட்ட நாடக நிகழ்வின் துவக்க நிகழ்ச்சியின்போது நிர்வாகத்தினர் சார்பாக வழமையின் பொருட்டு நடந்த உரைகள் பார்வையாளர்களே அனைவரும் பெரும் பொறுமையை சோதிக்கும் படியாக இருந்தன. மரங்களுடன் இருந்த வெளி நாடகத்திற்கு ஏற்ற விதத்தில் பொருத்தமான களமாக இருந்தது. ஒளியமைப்பிற்கான விளக்குகள் மரங்களிலேயே கட்டப்பட்டிருந்தன. நிகழ்வை அண்மையில் காண வேண்டும் என்ற எண்ணத்தில் முன் பகுதியில் அமர்ந்திருந்தேன். சூழ்ந்து இருள் கவிந்திருக்க, ஒரு மூலையிலிருந்து ஒரே விளக்கு மட்டும் ஒளிக்கற்றை ஒன்றைப் பாய்ச்ச, பூபதியின் குரலுடன் இணைந்த குழல் மற்றும் தாளக் கருவிகளின் கூட்டுடனான இசையின் பின்னணியில் நாடக நிகழ்வு துவங்கியது. ஒவ்வொரு பகுதியாக காட்சிகள் நிகழ்ந்தேறின. துவங்கிய சற்று நேரத்திலேயே காட்சியமைப்பின் கூர்மையினாலும், நடிகர்களின் துல்லியமான உடல் மொழியினாலும், காத்திரமான படிமங்களின் கோர்வையினாலும் பார்வையாளர்களை அவர்களே உணராவண்ணம் உணர்வு பூர்வமாக நாடக நிலத்திற்குள்ளாக ஈர்த்துக் கொண்டுவிட்டிருந்தது நாடகம். பார்வையாளர்கள் உணர்வெழுச்சி மேலோங்கிய நிகழ்வின் தருணங்களில், அவற்றை அடியொற்றி அனிச்சையாகக் கரவொலி எழுப்பித் தங்கள் பாராட்டுதலைப் பதிவு செய்ததும் நிகழ்ந்தது. நிகழ்வின் நிறைவும் முழுமையாகவே உணர்வெழுச்சி மேலோங்கிய ஒரு தருணமாக இருந்தது. பார்வையாளர்கள் அனைவரும் எழுந்து நின்று மொத்தமாகக் கரவொலி எழுப்பியதுடன், நடிகர்களின் அறிமுக நிகழ்விற்குப் பின்னர், முருக பூபதியையும், ஏனைய நடிகர்களையும் உடலோடு தழுவியும், கரங்களைப் பற்றிக் கொண்டும் மன நெகிழ்ச்சியுடனான பாராட்டுக்களைத் தெரிவித்த வண்ணமிருந்தனர்.

முருகபூபதி இதற்கு முன்னர் எழுதி இயக்கிய செம்மூதாய், மிருகவிதூஷகம் ஆகிய நாடகங்களும் மனித வாழ்வின் தற்போதைய இருப்பில் உள்ள இழப்புகளின் வலியைப் பற்றிப் பேசுவனவாய் இருந்தன என்றாலும், சூர்ப்பணங்கு நாடகம் அவற்றிலிருந்து விலகி மனித வாழ்வின் ஒரு இன்றியமையாத பகுதியானதும், இன்றைய நிலையில் மிகவும் கூர்மையடைந்திருப்பதும், அதே வேளையில் மிகுந்த சிடுக்குகளுக்குட்பட்டிருப்பதுமான பெண்களின் சமூக நிலை பற்றிய மிக அழுத்தமானதொரு விவரிப்பை முன் வைக்கிறது.

தென் தமிழ் நாட்டில் கரிசல் நிலப்பகுதியில் மிகப் பரவலாக அறியப்பட்டுள்ள தொல் கதையான நல்ல தங்காள் கதைப்பாடலின் உள்ளார்ந்த மனதை அறுக்கும் துயரம் நாடகத்தினை உந்திச்செலுத்தும் ஒரு விசையாக, நாடகப்புனைவு முழுக்க விரவிக் கிடக்கிறது. மஞ்சுகுழல் பிஞ்சுமுலை வஞ்சி நல்ல தங்காள் என்ற வரி தொடங்கி, நாடகத்தின் பல வசன மொழிகளும், சொற்களும் நல்ல தங்காள் கதைப்பாடலிலிருந்து எடுத்தாளப்பட்டிருக்கின்றன. எனினும், அவை நாடகத்தின் மையக் கருத்தோட்டம் துலங்கும் விதமாக எடுத்தாளப்பட்டுள்ளதன் செய் நேர்த்தியின் மூலம் முருகபூபதி தான் ஒரு தேர்ந்த படைப்பாளி என்பதை உறுதிப்படுத்துகிறார். தனது துயரம் கவிந்த வாழ்வின் கொடுமை நிலை தாளாது தனது மக்கள் எழுவரையும் பாழுங்கிணற்றில் தள்ளி, பின் தானும் வீழ்ந்து உயிரை மாய்த்துக்கொண்ட.

பச்சைக் கிளி போல் பாழுங்கிணற்றில் பறந்த நல்ல தங்காளின் உடலும், அவளது அறுபது பாகக் கூந்தலும் காத்திரமான படிமங்களாக உருமாறி காலத்தின் நெடுகிலும் பெண்களின் உடல்களை மையமாகக் கொண்டு நிகழ்த்தப்பட்டு வரும் உடலரசியலைக் குறிப்புணர்த்தும் விதமாக நாடக நிலத்திற்குள்ளும் நீண்டு பிணைந்திருக்கக் காண்கிறோம்.

பதிவு பெற்றுள்ள வரலாறு, நாட்டார் வாய்மொழிக் கதைகள் என துயரமும், வஞ்சனையும், கைவிடுதலும், வன்கொடுமைகளும் நிறைந்த பெண்களின் தொடர்பிலான கதைக்கூறுகளை இழைகளாகக் கொண்டு பன்னெடுங்காலமாக தந்தை வழிச் சமூகத்தின் ஆதிக்கக் கொட்டடியில் குரல்கள் ஒடுக்கப்பட்டு, வதைகளுக்கும், வாதைகளுக்கும் உள்ளாகி, இன்றளவும் மீள ஒரு வழியில்லாது உழன்று கொண்டிருக்கும் பெண் சமூகத்தின் தீராத பாடுகளைச் சித்தரிக்கும் அதே வேளையில் இயற்கை பெண்களுக்குத் தந்துள்ள உள்ளுறையும் பேராற்றலை வெவ்வேறு வடிவங்களில் மீட்டெடுத்து அவற்றை ஒன்று திரட்டி ஆதிக்க சக்திகளுக்கு எதிராகத் திருப்பிக் கையாளுவதொன்றே பெண் விடுதலைக்கான வழி என்பதைக் குறிப்புணர்த்தும் பூபதியின் சூர்ப்பணங்கு நாடகம் பெண் விடுதலை பெறும் நிலையே சமூக மாற்றத்திற்கான முதல்படி என்பதையும், பெண்களின் பங்களிப்பின்றி சமூக மாற்றம் சாத்தியமில்லை என்ற கருத்தினையும் எந்த வித பாசாங்குகளுமின்றி முன் வைக்கிறது.

காலத்தினூடே காற்றில் தொலைந்து போன நல்லதங்காளின் அறுபது பாகக் கூந்தல் சுருள் மீட்டெடுக்கப்பட்டு, பெண்மையின் உள்ளுறைப் பேராற்றலின் வடிவமான கூந்தல், விரிந்த கூந்தலின் வடிவத்தில், படிம உருவெடுக்கிறது. அணங்கு உருவின் தவிர்க்க முடியாத அடையாளம் விரிகூந்தல், கட்டி முடியப்பட்ட அல்லது பின்னப்பட்ட கூந்தல் கட்டுப்பாட்டிற்குள் வயக்கப்பட்ட பெண்மையின் அடையாளம். விரிகூந்தல் அதற்கு நேரெதிரானது. விரிகூந்தலின் ஆற்றல் மகிமையைச் சொல்லும் தடங்கள், மதுரையை எரித்த கண்ணகியின் கதை தொடங்கி, அண்மையில் கல்குதிரை - வேனிற்காலங்களின் இதழில், சந்திராவின் அழகம்மாளின் கதை வரை வரலாற்றின் நெடுகிலும் நிறைந்து கிடக்கின்றன. ஆண்களின் இன்ப நுகர்வு விழைவை உள்ளடக்கியதாகக் கட்டமைக்கப்பட்டுள்ள அழகியலில் பெண்மையின் பேரடையாளமான கூந்தல் குறிப்புணர்த்திச்செல்லும் பொருள் தளம் ஆழமும் விரிவும் மிக்கது. அதற்கென தனிக்கட்டுரையே எழுதலாம். எனினும், அதன் தொடர்பில் தமிழில் எழுதப்பட்டுள்ள குறிப்பிட்டுச் சொல்லும்படியான இரண்டு புனைகதைகள் உண்டு. முதலாவது சுரேஷ்குமார் இந்திரஜித் எழுதிய விரித்த கூந்தல், இரண்டாவது ஜெயமோகன் எழுதிய கூந்தல் இரண்டுமே சிறுகதைகள் தான்.

அணங்கு நல்லதங்காள் தன் கூந்தலைக் கூறுகளாக அரிந்து நாடகத்தில் பெண்ணுடல் பூண்டிருக்கும் நடிகர்களுக்கு அளிக்கும் காட்சியில், நாடகப்பிரதி, நல்லதங்காளின் கதையிலிருந்து படைப்பூக்கம் பெறுவது நிகழ்த்திக் காட்டப்படுகிறது.

அடுத்ததாக நல்ல தங்காளும் அவளது பிள்ளைகளும் விவரித்துச் சொல்வதான தாது வருடப் பஞ்சத்தினைப் பற்றிய குறிப்புகள் வரலாற்றின் நெடுகிலும் வஞ்சனை, கைவிடுதல், வன்கொடுமை, தற்கொலை மற்றும் இன்ன பிற நுட்பமான கொடுமைகளுக்கும், பெண்கள் எளிதான இலக்குகளாக்கப்பட்டு

வந்துள்ள - உயிர்ப்பின் ஈரமற்றுப் போன, வாழ்வின் ருசிக்கு ஏங்கித் தவிக்கிற, பெண்களின் துக்கத்திற்கு கருணை வார்த்தைகள் கிடைக்காத, இளைப்பாறுதலுக்கு இடமற்றுப்போன, பெண்களின் சுயமரணப் பாதைக்குத் தள்ளப்படுகிற ஒரு சூழலை, படிமங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட காட்சி மொழியும், நடிகர்களின் நுட்பமான உடல் மொழியும் வெகு எளிதாகப் பார்வையாளர்களுக்குக் குறிப்புணர்த்தி விடுகின்றன.

நாங்கள் தான் பூமியின் இசை. எம் இருப்பின் ஆழ்ந்த மோனம் இசையாய் இருக்கிறது. என்ற வசன மொழிகள் மட்டுமே பெண்களின் இயல்பான மாண்பை, பெண்களின் பேராண்மையை உணர்த்தப் போதுமானவையாய் இருக்கின்றன. ஆனால், எம் தேகத்தில் பதிந்த நகங்களுண்டு, பற்தடங்களுண்டு, எச்சில் படித்த வியர்வைப் பிசுபிசுப்புண்டு. எம் தேகங்களை எப்போது எங்களுக்குத் தருவீர்கள்? என கேள்வியைக் கொண்ட வசன மொழிகள் மனதை உலுக்கி எடுக்கின்றன.

பெண்களுக்கெதிரான ஒடுக்குமுறையின் அடுக்கில், ஆண்களின் ஆதிக்கத்திற்குட்பட்ட குடும்ப அமைப்பிற்குள் மட்டுமின்றி, சாதியத்தை உள்ளடக்கிய அரசியல் பொது வெளியிலும் பெண்கள் பலவிதமான ஒடுக்கு முறைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருப்பது வரலாற்றில் மட்டுமின்றி இன்றளவும் ஒரு தொடர்கதையாக நிகழ்கிறது. அவற்றை அடையாளப் படுத்துவனவாய், தோள் சீலைப் போராட்டம் தொடங்கி மராட்டிய மாநிலத்தில் நிகழ்ந்த கயர்லாஞ்சி வன்கொடுமை, ஈழ விடுதலைப்போராட்டத்தில் சிங்கள அரசுப் படைகளின் வன்கொடுமைக்குள்ளான பெண்கள், வீரப்பனுக்கான தேடுதல் வேட்டை என்ற பெயரில் காவல் படையினரால் பெண்கள் மீது நிகழ்த்தப்பட்ட வன்முறை, உறங்கா நிலத்தில் விழித்தலையும், தேகங்களின் சங்கீதம் பாடும இளைப்பாறுதலற்ற பறவை யாகச் சுட்டப்படும், உடலிச்சைக்காக சிறகொடித்து வீழ்த்தப்பட்ட பொது மகளிர், இவை தவிர, காவல் நிலையங்களில் விசாரணை என்ற பெயரில் பெண்களுக்கு இழைக்கப்படும் வன்கொடுமைகள் என சமகாலத்தினது வரையிலான பெண்கள் மீதான ஒடுக்குமுறைகள் நாடக வசன மொழிகள் மூலமாகக் குறிக்கப்படுகின்றன.

என் பெயர் லஜ்ஜம்மா. நான் தெலுங்கான காட்டு விதை. போராளிகளின் துணிகளை சலவை செய்பவள். அந்த நதிக் கரையோரமெங்கும் எங்கள் பெண் போராளிகளின் வாசனை இருக்கும். எங்கள் ஊர்க்காரர்களைப் பயம் பீடித்ததென்றால் நதியின் கரையில் கூட்டமாக வந்து மௌனம் காத்து நின்று காற்றில் மூச்சை இழுப்பார்கள். அப்போது நதி அவர்களுடன் பேசும். உங்கள் மகத்தான ஆதர்சத்தை திசையெங்கும் பரப்புவேன். நான் ஓடிச்சமுத்திரத்தில் கலந்து பூமியெங்கும் உங்களின் கதை பாடுவேன் என நதிபேசிக் கொண்டேயிருக்கும்.

கவித்துவமும், தீரமும் செறிந்த இந்த வசன மொழிகள் முருக பூபதியை ஒரு தேர்ந்த நாடகக் கலைஞனாகவும், சிறந்த படைப்பாளியாகவும் அடையாளப்படுத்துகின்றன.

காலங்காலமாக கிராமப்புறப் பெண்களது உள்ளங்கை ரேகைகளை அழித்தே தமக்கென வழுவழுப்பை ஏற்றிக்கொண்ட, உருவில் ஆண்மையின் அடையாளமாகக் காணப்படும் உலக்கைகள், பெண்களின் கைகயில் ஆண்களின்

அதிகாரத்திற்கெதிரான ஆயுதங்களாக உரு மாறுவது அற்புதம். இன்றும், கிராமப்புறத்தில், பெண் பூப்படையும்போது தனிமைப் படுத்தி ஒரு மூலையில் அமரவைத்து ஒரு உலக்கையைக் கிடத்தி அதைத் தாண்டக் கூடாதென்று சொல்லி உலக்கையை ஒரு தடையாகப் பாவிக்கும் வழக்கம் உண்டு. யானைக்கு அங்குசம் போல.

இதன் தொடர்பில் சில காலத்திற்கு முன்பு பக்கத்து கிராமத்தில் தினமும் குடித்துவிட்டு இம்சை செய்து கொண்டிருந்த கணவனை ஒரு நாள் தாள மாட்டாமல் அவனது மனைவி உலக்கையால் தலையில் அடித்துக் கொலை செய்துவிட்டுச் சிறைக்குச் சென்ற நிகழ்வு தவிர்க்க முடியாமல் நினைவிற்கு இங்கு வருகிறது. சன்னஞ்சன்னமாய் சுதி உயர்ந்து இறுதியில் ஆரவாரத்துடன் நிறைவு பெறும் துடியான தாள இசை, அணங்குகளாய் உருமாறிய பெண்கள் உலக்கைகளை ஆயுதங்களாகக் கொண்டு போராட்டத்தில் ஆண் மைய அதிகாரத்தினை வீழ்த்தும் காட்சிக்குப் பொருத்தமான பின்னணி இசையாக, மிகுந்த வலு சேர்ப்பதாய் உள்ளது.

நாடகத்தில் பொருட்களாக இடம்பெறும் விளக்குமாறு, ஓட்டடைக்குச்சி, நெளிந்த ஈயப்பாத்திரங்கள், பெரிய மண்பானைகள், அழுக்கு மூட்டைகள், பிறிமனைகள், தானிய வகைகள், கண்ணாடிச்சட்டங்கள், ஒப்பனைப் பொருட்கள், பனையோலைப்பெட்டிகள். உலக்கைகள், சுளகுகள், தொட்டில்கள், மரக்கால், சேலைகளில் சுருட்டி செய்யப்பட்ட தூக்குக் கயிறுகள் என பெண்களோடு உறவு கொண்ட பொருட்கள் அனைத்தும் பெண்களின் நிராசைகளின் வலி மிகுந்த உலகத்தினை குறிப்புணர்த்தும் அதே வேளையில், பார்வையாளர்கள் மனதில் ஆழமும், அகலமும் கொண்ட சிந்தனைத் தளத்திற்கான தடங்களை வெகு அழுத்தமாகப் பதிவு செய்கின்றன.

அடுத்ததாக பெண்களின் வாழ்வு வெளியெங்கும் அவர்களுடைய உடல்களிலிருந்து கசிவதான வியர்வையின் படிமமாக உப்பு என்பது மிகுந்த காத்திரத்துடன் நாடக நிலத்தில் பதிவு செய்யப்படுகிறது. தோள் சீலைபோராட்டம் பற்றிய குறிப்பைத் தேடும் போது இன்னொரு முக்கியமான குறிப்பு தட்டுப்பட்டது. அதே காலத்தில், வேலை செய்தவர்களுக்கு ஊதியத்தை மறுக்கும் பணி உப்பு ஊழியம் என்று குறிப்பிடப்பட்டு வந்துள்ளது. இன்றும் அன்றாட குடித்தன வாழ்வில் பெண்களுக்கு அதிகாலை விழிப்பது முதல் இரவுக்குப் பின்னும் கூட ஊதியமற்ற ஊழியம் செய்வதற்குத்தானே விதிக்கப்பட்டிருக்கிறது. பெண்களது நிராசைகளின் துயரம் நிறைந்த வலியின் வெளிப்பாடான கண்ணீர், ஆண்-பெண் உடல்களின் இணைவில் கசகசப்பான வியர்வை, ஓய்வற்ற உழைப்பின் வியர்வை என இவற்றில் கலந்துள்ள உப்பின் சுவை பெண்மையின், பெண்ணுடலின் ஆகச்சிறந்த படிமமாக உப்பு பதிவு பெறுகிறது.

இவ்வாறான படிம அடுக்குகளினூடே ஆண்-பெண் உறவில் சமனிலை குலைந்து போன நிலையினைக் குறிப்புணர்த்துகிற அதே வேளையில், அதை மீட்டெடுக்க வேண்டியதின் தேவையை உரத்துச் சொல்லும் குரலையும் உள்ளடக்கியதாக இருக்கிறது நாடகம்.

ஆண்-பெண் உறவில் சமனிலை திரிந்தது எப்போது? ஆரியர்களின் வழி வந்த மனு ஸ்மிருதியினை அடிப்படையாகக் கொண்ட கட்டமைப்புகளினாலா?

ஒரு நிலையில் பெண்ணியப் பார்வையும், இன்னொரு நிலையில் சகல விதமான கலகப்போக்குகளுக்கும் இலக்காகப்படும் பெண்களின் இந்த மனம் கூர் [illegible]

காலங்கள் எவ்வளவோ இருக்கின்றன. இன்றைய பெண் சமூகத்தில் நிலை இது தான். பெண்களின் உடலில் செய்யப்படும் மாற்றப்படவும் வேண்டாம். மீதி போட்டு நக்கப்படவும் வேண்டாம். பெண்ணுடலை பொருளாகக் கொள்ளும் சமூகத்தின் ஒரு அங்கமாக இருப்பவளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு வடிவமாகக் காணும் பார்வையைக் கொண்டமைந்தது நாடகம்.

சமூகமே உருவாக்கிய உடல் வேண்டாம். உடலின் கதவு திறந்து வா என்கிறேன். என் உடல் என்னுடைய ஒளியே பொருளா? உடலைப் பிய்த்து கொண்ட உடலுக்கு எல்லைக்கோடு காட்டுகிறேன்.

பெண்ணுடலை தமது இச்சைகளைத் தீர்த்துக் கொள்ளும் ஒரு பொருளாக, தமது அதிகார உளைச்சல்களுக்கு வடிகாலாகக் கையாளும் போக்கே இன்றைய ஆணாதிக்க சமூகத்தில் மேலோங்கியிருக்கும் பார்வையாக இருக்கிறது. தமது ஆதிக்கத்தைத் தக்க வைத்துக்கொள்ளும் ஆண் மனோபாவத்தின் அந்தரங்கமான பின்னணிகளைக் கொண்டு நீளமாக வரும் நாடகத்தில் இறப்பு உண்டாக்கும் அச்சம் மனித உடலிலிருந்து உயிரை நீக்கி குளிர்வித்து உறைய வைக்கும் மரணத்தின் இடைவிடாத அச்சுறுத்தலிலிருந்து காப்பாற்றுவதற்கும் கட்டிக்காக்கும் பகுத்தறிவு [illegible] பெண்ணுடல். ஆண் பெண்ணுடல் மீது நிகழ்த்தும் ஆளுகையில் ஆணின் நான் என்பதை மையப்படுத்துகிறது. மையத்திலிருந்து விலகிக் கரைவதும் ஒரே வேளையில் நிகழும் செயல்பாடாக, ஒரு நாணயத்தின் இரு பக்கங்களை விளக்குகிறது. திருமணம் என்கிற நிகழ்வின் மூலமாகச் சமூகம் அளிக்கும் அங்கீகாரத்தினூடே ஆண்-பெண் என இருபாலும் இணையும் குடும்பம் என்கிற அமைப்பின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ள ஆணாதிக்க ஆசையின் [illegible]

இன்றைய சமூகத்தில் ஆண்-பெண் உறவு என்பது ஆணும் பெண்ணும் பரஸ்பரம் விருப்பத்தின் பேரில் கொள்ளும் உடல் உறவாக அன்றி ஒருவழிப் போக்கின் தன்மை கொண்டதாகவே இருக்கிறது. பிரபஞ்சப் பேரியக்கத்தின் அடையாளமாக விளங்கும் இயற்கையின் உயிர்ப்பான இணைப்பிலிருந்து விலகிச் சென்று செயற்கையின் முகமூடிகளை அணிந்து பழகிப்போன உடல்களிலிருந்து மீள இயலாத நிலையில் இருப்பதுவே அதன் காரணம்.

ஆனால், அதன் மகத்துவத்தை உணர்ந்து அதனை மீட்டெடுக்க வேண்டியதின் தேவையை முன் வைக்கும் பதிவுகள் வரலாற்றில் இல்லாமலில்லை. [illegible] அது தான். பிரபஞ்சப் பேரியக்கத்தின் பிணைப்பிலிருந்து நாம் விலகு [illegible] ஜெயகாந்தனின் ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம் என்ற நாவல்.

சம காலத்தில், இதே கருத்தினை வலியுறுத்துவதாக அமைந்த பெண் கவிஞர் **உமா மகேஸ்வரியின்** இன்றைய காட்சி என்ற தலைப்பிலான கவிதை வரிகளை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

இன்றைய காட்சி
நிராசைகள் கொப்புளிக்கும்
நம் படுக்கையில் நிகழ்த்துவோம் இன்றும்
திரை நியமங்கள் விலகாத
எண்ணிக்கையில் வராத இன்றைய காட்சியை.
நீயே நிர்மாணித்த சுலபப்பாதையை
ராஜபாட்டையென்று கருதி
நிறுவிக்கொள்கிறாய் நீயாகவே
இறுதி நிறுத்தத்தை வெற்றிப் புள்ளியென்று
அனுசரணைகள் பூசிமெழுகல்கள்
சம்பிரதாயங்கள் சமரசங்கள்
மூடிய புதைகுழிகளினூடாக
அடையமுடியாது நாம் என்றைக்குமே
ஆதிக்காதலின் வனத்தை
புதர்கள் தாண்டிப் பூத்த உச்சி மலரை
செய்வதொன்றுமில்லை இனி
திரும்பிய முதுகோடு உன் ஒரே நொடி உறக்கம்
சில்லிடும் தரை
ஒண்டிய சுவர்
சுருண்ட பூனையாக என் உளைச்சல்கள்

இக்கவிதை பற்றிய பெண் கவிஞர் குட்டி ரேவதியின் விளக்கம் கவிதை உணர்த்தும் பொருள் குறித்த புரிதலை எளிதாக்கும். ஆணே நிர்மாணித்த சுலபப்பாதையை ராஜபாட்டை யென்று கொள்ளுதல் தான் பாலியில் உறவிற்காக ஆண் கொண்டிருக்கும் நியமங்களில் முதன்மையானது. அப்படியான ஒரு தலைபட்ச நியமம் கொண்ட உறவில் ஆதிக்காதலின் எந்தச் சுவடும் சுகமும் இருக்கமுடியாது.

ஆதிக்காதலின் வனத்தை அடைந்து புதர்கள் தாண்டிப் பூத்த உச்சி மலரைக் கொய்ய முடியாத இயலாமை தான் இன்றைய ஆண்-பெண் பாலியல் உறவில் சமநிலை திரிந்த நிலையில் குறியீடாகச் சுட்டப்பெறுகிறது.

இவ்வாறு வறட்சி மிகுந்த பாலை நிலத்தை, தாது வருடப் பஞ்சத்தின் கொடுமைகளைச் சொல்லித் துலங்கும் நாடகம், இறுதியில் சுரைக்குடுவைகளே முலைகளாக அவற்றிலிருந்து ஜீவ நீரான பாலையருந்தும் சிசுக்கள் தாய்மை பூண்ட பெண்ணுடலை நத்திச் செல்லும் உயிர்ப்பான, காத்திரமான படிமமாக காட்சி உருக் கொள்ளும்போது மனதில் ஒரு நிறைவுணர்வும் அதே வேளையில் யதார்த்தத்தில் இழப்புகளின் வலியும் ஒருங்கே எழுவது தவிர்க்க முடியாததாகிறது.

இதன் தொடர்பில் இதே போன்ற படிமங்களைக் கையாளும் இரு திரைப்படங்களைப் பற்றிக் குறிப்பிட வேண்டும். முதலாவது இந்தியத்

திரைப்பட உலகின் ஆகச்சிறந்த கலைஞனாக வாழ்ந்து மறைந்த **ஜான் ஆபிரஹாம்** இயக்கிய **அம்ம அறியான்** (1986) என்ற திரைப்படம். படத்தில் மையக் கதாபாத்திரமான ஒருவன், அவனது தாயின் வேண்டுகோளின்படி அவன் எங்கிருந்தாலும் தன் இருப்பைப் பற்றிய செய்தியை தன் தாய்க்கு தெரிவிக்க வேண்டும் என்ற உறுதி மொழியுடன் டெல்லிக்கு பயணத்தை மேற்கொள்கிறான். வழியில் அவனுக்கு அறிமுகமாக ஒரு நண்பன் தற்கொலை செய்து கொண்டு மரணமுற்றதை அறிகிறான். தன் பயணத்தை மாற்றிக்கொண்டு, அந்தச் செய்தியை மரணமடைந்தவனின் தாயினிடத்தில் கொண்டு சேர்க்க வேண்டிய பொறுப்பை ஒரு கடமையாக மேற்கொள்கிறான். வழியில் மரணமடைந்தவனை அறிந்த நண்பர்களும் ஒவ்வொருவராக அவனுடன் பயணத்தில் இணைந்து கொள்கின்றனர். அந்தப் பயணத்தினூடாக இறந்து போனவனைப் பற்றிய நினைவுகளைப் பகிர்ந்து கொள்ளும் விதமாக எழுபதுகளில் கேரளத்தில் நக்சலைட் இயக்கத்தின் எழுச்சியும், வீழ்ச்சியும் விவரிக்கப்படுகின்றன. இறுதியில் அந்த நண்பர்களின் குழுவினர் மரணமடைந்தவனின் தாய் இருக்குமிடம் அடைந்து அவளது மகன் மரணமுற்ற செய்தியினைச் சொல்வதும், அத்தாய் அந்தச் செய்தியினை எதிர்பார்த்திருந்ததாகவும் படம் நிறைவடைகிறது. படத்தின் செய்தி இதுதான். இந்தியா போன்ற அடர்ந்த கலாச்சார வேர்களைக் கொண்ட மண்ணில் சமூக மாற்றம் என்பது எளிதான ஒன்றல்ல. அதற்கு முன் நிபந்தனைகளாகப் பல அடிப்படையான கூறுகளில் மாற்றம் தேவை. குறிப்பாக, பெண்களின் சமூக நிலை மாற்றம் பின்னர் பெண்களின் பங்களிப்பு இவை இரண்டுமின்றி சமூக மாற்றம் என்பது சாத்தியமில்லை என்பதே படம் குறிப்புணர்த்தும் கருத்து.

இரண்டாவது, ஸ்விடன் நாட்டு திரைப்பட இயக்குநர் **இங்க்மார் பெர்க்மன்** இயக்கிய, **கன்னி ஊற்று** என்ற திரைப்படம். நாட்டார் வாய்மொழிப்பாடலை அடிப்படையாகக் கொண்டு படமாக்கப்பட்ட கதை. ஒரே பிரதேசத்தின் தலைவராக உள்ள ஒருவரின் மகளான முதிரா இளம்பெண் தன் தமக்கையுடன் தேவாலயத்திற்கென மெழுகுவர்த்திகள் எடுத்துச் செல்லும் போது கானகத்தினிடையே இருவரும் வழிமாறிப் பிரிந்து விடுகின்றனர். வழியில் மூன்று ஆடு மேய்க்கும் இளைஞர்களைக் காணும் அவள் அவர்களைத் தன்னுடன் மதிய உணவைப் பகிர்ந்து கொள்ளுமாறு அழைக்கிறாள். மாறாக, அவர்கள் மூவரும் (அவர்களுள் ஒருவன் சிறுவன்) காமம் மீதூர அந்தப் பெண் வன்புணர்வுக்குட்படுத்திக் கொலையும் செய்து விடுகின்றனர். பின்னர், அந்தப் பெண் அணிந்திருந்த ஆடைகளை எடுத்துக் கொண்டு அந்தப் பெண்ணின் தகப்பனிடமே அவற்றை விற்பதற்கெனச் செல்கின்றனர். தனது மகள் அவர்களால் சிதைக்கப்பட்டதை அறிந்த அவர் அவர்கள் மூவரையும் கொடூரமாகக் கொன்று பழி தீர்க்கிறார். பின்னர், மகளின் உடலைத் தேடிச் செல்லும் அவர் உடலைக் கண்டுபிடித்து அப்பெண் மரணமுற்ற இடத்தில் ஒரு ஆலயத்தினைக் கட்டத் தீர்மானித்து அந்த உடலைத் தூக்கும் போது, உடல் கிடந்த மண்ணிலிருந்து நீரூற்று பீறிட்டுக் கொப்பளிக்கிறது. சொற்களுக்கெட்டாத அரூப மொழியிலான உலகளாவிய நிலையிலான இப்படிமம், பிரபஞ்சப் பேரிருப்பின் இயற்கை சார்ந்து இயங்கும் அறம் நிலை நாட்டப்படுவதையே சுட்டுகிறது. இந்த இரு திரைப்படங்களின் இறுதிக் காட்சிகளில் காட்டப்படும் படிமங்களும், சூர்ப்பணங்கு நாடகத்தின் இறுதிக் காட்சியில் காட்டப்பெறும் இயற்கையின் வடிவமான ஆதித்தாய் தன்

குழந்தைகளுக்குப் பாலூட்டுவதாய் அமைந்த காட்சி படிமத்தினோடு ஒரே தளத்தில் இணைவதோடு மட்டுமின்றி ஒரு பொதுவான அடையாளத்தினையும், செய்தியினையும் பகிர்ந்து கொள்கின்றன.

பிரபஞ்சப் பேரிருப்பின் அடையாளமாகத் தாய்மை பூண்ட பெண்ணுடலையும், அதன் இயக்கத்திற்கான ஆதார சக்தியின் ஊற்றாக முலைப்பாலையும் உருவகப்படுத்தும் போது நாடகம் இக்கட்டுரையின் துவக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனாரின் கவிதை வரிகள் உணர்த்துவதைப் போல, பெண்ணுடன் பூண்ட இயற்கையாகத் தன்னில் முழுமையானதொரு நிறைவைச் சுட்டுகிறது.

நாடக நடிகர்கள் அனைவரும் தங்களது நுட்பமான உடல் மொழி, துடிப்பான அங்க அசைவுகள், காட்சிகளோடு இசைந்து செல்லும் முக பாவனைகள் ஆகியவற்றின் மூலமாக தமது கடுமையான உழைப்பையும், நாடகப்பிரதியின் மீது அவர்கள் கொண்டிருந்த மன ஒருமையையும் முழுவீச்சில் வெளிப்படுத்தியிருப்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

நாடகத்தில் குறைகள் என்றால், முதலாவது முருக பூபதியின் மாயத்தன்மை கலந்த வசன மொழி சில காட்சிகளில் அவற்றின் கனத்தினாலேயே மேலெழும்பி நடிகர்களின் உடல் மொழியோடு இசைந்து பயணிக்காது தனித்து விடப்படுவதைச் சுட்டிக்காட்ட வேண்டும். மூன்று தலைமுறைகளாக, அழுத்தமான கலை, இலக்கியப் பாரம்பரியம் கொண்ட குடும்பத்தில் தோன்றியவர்கள் என்பதைக் கவனத்தில் கொண்டு பார்க்கும் போது இருவருக்குமிடையே பொதுத் தன்மைகள் காணப்படுவது தவிர்க்க முடியாதது.

இரண்டாவது பார்வையாளர்கள் மனதில் உணர்வெழுச்சியைத் தூண்டும் காட்சிகளின் உள்ளார்ந்த பலவீனம். நாடகம் நிகழ்த்தப்படும்போது பார்வையாளர்கள் மனதில் உணர்வெழுச்சியைத் தூண்டும் காட்சிகள் உண்டாக்கும் தாக்கம், அவர்கள் நாடக நிலத்தை விட்டு நீங்கிய பின்னர் நீர்த்துப் போவதற்கான அனைத்து சாத்தியங்களையும் கொண்டிருக்கின்றன. மற்றுமொரு நாடக நிகழ்வாக எஞ்சிவிடாத நிலையில் இதை ஒரு விவாதத்திற்கான களமாக வளர்த்தெடுக்க வேண்டியது சமூக அக்கறை கொண்டோரின் கடமையாகிறது.

இதனாலேயே கருத்தியல் தளத்தில் கவனிக்கத்தகுந்த தலையீட்டைச் செய்திருக்கும் இந்த நாடகத்தினை, தொடர்ந்து தமிழகத்தின் பெண் கவிஞர்கள், பெண்ணியவாதிகள் மற்றும் பெண்கள் ஆகியோர் மத்தியில் நிகழ்த்திக் காட்டி நாடகத்தினைப் பற்றிய அவர்களது கருத்துக்களை முன் வைத்து இதை ஒரு விவாதமாக முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பதை முருக பூபதிக்கான ஒரு வேண்டுகோளாக இக்கட்டுரையின் மூலமாக முன்வைக்கின்றேன்.

நூற்குறிப்புகள்

1. உடல், பச்சை, வானம் - அனார்
   கவிதைத் தொகுப்பு - காலச்சுவடு பதிப்பகம் - 2009
2. புகழேந்திப் புலவர் இயற்றிய பெரிய எழுத்து நல்ல தங்காள் கதை படங்களுடன் பி. ரத்தினநாயக்கர் அண்ட் சன்ஸ் அவர்களால் பதிப்பிக்கப்பெற்றது, சென்னை -13.
3. ஆண்குறி மையப்புனைவைச் சிதைத்த பிரதிகள்-8
   உமா மகேஸ்வரி - பசுமையின் வரியைத் தனியாக எழுதும் ஒற்றைப்புல்

திருமாவளவன் (கனடா)

பழி

விடியக்காலமையே கிளம்பிவிட்டான் சூரியன். கடந்த இரண்டு நாளாய் இவன்ரை தலைக்கறுப்பையே காணயில்லை.

வேட்டைநாயைப் போலை நாக்கை தொங்கப் போட்டபடி அலைஞ்சது. பட்ட காலிலைதான் படும் எண்டது போலை ஊரைவிட்டு துரத்தப்பட்ட சனங்களை பின்னாலை நின்டு நல்ல துவரந்தடியாலை அடிச்சுடிச்சு, மாட்டைக் கலைக்கிறது போலை... பாட்டம் பாட்டமாய் அடிச்சுடிச்சுப் பெஞ்சது மழை.

இண்டைக்கு எண்டால் நாகாலி வெய்யில் வந்ததும் வராததுமாய் அலையுது. ஒரு இடம் மிச்சம் விடாமல் மோந்து மோந்து திரியுது. சனமெல்லாம் போட்டுதோ இல்லாட்டி இன்னமும் மிச்சமீதி இருக்குதோ எண்டு கணக்கெடுக்குமாப் போலை..

கண்டறியத சனியன் பிடிச்ச வெய்யில்

வாயுக்குள் திட்டினபடி சைக்கிலை உன்னி மிதிச்சான் மயன். அவன்ரை முழுப்பெயர் மாயவன். எல்லாரும் அவனை மயன் எண்டு இல்லாட்டி மீகி எண்டுதான் கூப்பிடுகிறவை. இப்ப அவனுக்கு அவசரம். எவ்வளவுக்கு முடியுமோ அவ்வளவு கெதியிலை வீட்டை போய் திரும்பிவிட வேணும் எண்கிற அவசரம்.

ரோட்டெல்லாம் ஒரே சேறும் சகதியுமாய் கிடக்கு. ரோட்டெண்டு சொன்னாப்போலை தார்போட்ட ரோட்டில்லை. அது முந்தியொரு காலம். இப்ப எல்லாம் கிண்டும் குழியுமாய் போச்சு. பத்தாததுக்கு சனம் தூக்கேலாமல் போட்டிட்டுப் போன மூட்டை முடிச்சுகளும், சில்லறைச் சாமானுகளும், வார் அறுந்து போன செருப்புகளும் இறைஞ்சுப்போய் கிடக்கு. கடைசியில் போனவர்கள் யாரோ ஒதுக்கி ஒதுக்கி விட சில இடங்களிலை தொட்டந்தொட்டமாய் குவிஞ்சு கிடக்கு.

சைக்கில் முன் சில்லு ஒரு செருப்பிலை இடறுண்டு முன்னாலை கிடந்த கிடங்கிலை விழுந்து நிமிர்ந்திச்சு.

பூழலில் செருப்பு.. செருப்பு போட்டுக் கொண்டு வெளிக்கிட்டிட்டுதுகள்.. நாயள்.. பொடியள் வெளிக்கிடச் சொன்னால் வெளிக்கிட வேண்டியதுதானே. பிறகென்னத்துக்கு செருப்பும் மசிரும் மண்ணாங்கட்டியும்..

அவனை அறியாமல் வாய் திட்டியது. அவன் எதையும் நினைச்சுக் கதைக்கயில்லை. அவனுக்கு உண்மை தெரியாமலும் இல்லை. யுத்தம். யுத்தத்துக்கை வாழுகிற போராட்டம் அவனுக்கு. யாழ்ப்பாணத்தானைவே பிறகு சொல்லவே வேணும். அவனவன் சூழலுக்கு ஏற்றபடிதான் இசைவாக்கம் அடைஞ்சிருக்கிறான். சந்தர்ப்பத்துக்கு ஏத்தமாதிரி கதைக்கிறதுக்கும் வாழுறதுக்கும்.

நேற்று மதியானம் இவனும் இதே சனத்தோடை சனமாய் ஊரைவிட்டு வெளிக்கிட்டவன்தான். இவன் எண்டு சொன்னாப்போலை மயன்

தனியாளில்லை. பெரியகுடும்பம். இவன்ரை அம்மா. மூண்டு தம்பியவை. பத்தாததிற்கு அம்மம்மா கிழவி. அவள் வருத்தக்காரி வேறை...

தகப்பன்காரன் பொயிலை சுருட்டு வியாபாரம். கிளிநொச்சியிலை நிண்டவர். இவனும் தேப்பன் காரனோடைதான் நிண்டவன்.

டேய்... மகி, நிலமை அவ்வளவு நல்லாத் தெரியல்லையடா. ஏதோ நடக்கப் போறது மாதிரி அசுமாத்தம் தெரியிது. ஒருக்கா வீட்டை போய் செலவுக்கு கொஞ்சம் காசு குடுத்துப்போட்டு எல்லாரையும் பார்த்துக் கொண்டு வா.

தேப்பன்காரன் சொன்னாப்போலை வெளிக்கிட்டவன். வீட்டை வந்து கால் ஓயவில்லை. ஒரு நாளுக்குள்ளை நாட்டு நிலமை தலைகீழாய் மாறிப்போச்சு. ஆமி பலாலியிலை இருந்து ஷெல் குத்திக்கொண்டு வெளிக்கிடத் தொடங்கியிட்டான். அடியெண்டா இம்மை மறுமையில்லாத அடி.. மழை கொட்டுறது போலை. ஒண்டுவிழுந்த சத்தம் ஓயுறதுக்கு முன்னாலை மற்றது வெடிக்கும். யாருக்கும் சனத்தைப்பற்றி கவலையில்லை. எல்லாருக்கும் நிலம் பிடிக்கிற ஆசைதான்.

இனி ஒண்டுஞ் செய்யேலாது. எல்லாரும் வீட்டைக் காலி பண்ணிக்கொண்டு ஊரைவிட்டு வெளிக்கிடுங்கோ எண்டு பெடியள் சொல்லிப் போட்டாங்கள்... என்னத்தைக் காலிபண்ணுறது. முடிஞ்ச அளவுக்கு எல்லாரும் வெளிக்கிட்டுதுகள். போட்டதுகள் போட்டப்படி கிடக்க கையிலை அம்பிட்டதை பொறுக்கிக்கொண்டு செம்மறியப்பட்டியைப் போலை இரவிரவாய் நடந்துதுகள். இடிப்பட்டு நெருக்குண்டு களைச்சு விழுந்து, போகிற திசையுந் தெரியாது. எங்கை போறம் எண்ட இலக்கும் தெரியாது.

மயனும் எல்லாரையும் இழுத்துக் கொண்டு வெளிக்கிட்டான். இனித் தொடரேலாது எண்ட நிலை.

பளை தாண்டினதுக்கு பிறகு எல்லாரையும் ஒரு வீட்டுத் தாழ்வாரத்திலை விட்டுப்போட்டு நிமிர்ந்தான். அப்பதான் தாய்க்காரி சொன்னாள்.

தம்பி அம்மம்மாவின்ரை மருந்துப் பொட்டலத்தை காணயில்லை. எடுத்துவைச்சதாய் எனக்கு ஞாபகத்திலையும் காணயில்லை. அவசரத்திலை மறந்து போனன் போலை கிடக்கு. இப்ப என்ன செய்யிறதெண்டு ஒண்டுமாய் விளங்கயில்லை.

வெளிக்கிடையிக்க பாக்கவேண்டாமே. என்னம்மா நீ... இவ்வளவு தூரம் கஸ்டப்பட்டு அம்மம்மாவை கொண்டு வந்தும் என்ன பிரியோசனம்... மருந்தில்லையெண்டால்

பேசிப்போட்டு வெளியிலை வந்து கொஞ்சநேரம் வானத்தைப் பாத்துக்கொண்டு நிண்டான். ஒரு ஐஞ்சு நிமிசம் வரையில்தான் ஆகியிருக்கும் இருந்தாப்போலை என்ன நினைச்சானோ தெரியாது.

சரி சரி நான் போய் எடுத்திட்டு வாறன். நீங்கள்கொஞ்சம் அவதானமாய் இருங்கோ. சொல்லிப்போட்டு சைக்கில் கட்டையையும் தள்ளிக் கொண்டு வெளிக்கிட்டிட்டான்.

எட மோனை வந்ததும் வராததுமாய் எங்கையட போறாய். போகாதையடா மோனை. நான் செத்தாலும் பறவாயில்லை. இந்தக் கொட்டிக்கட்டை கிடந்து என்னத்தை செய்யப்போகுது. உங்களுக்குத்தான் இடைஞ்சல். பிரளுவானுகள்.. பாடையிலை போவானுகள்.. எந்தப் பத்தேக்கை (புகர்) படுத்துக்கிடப்பானுகளோ தெரியாது. நீ போகதையடா மோனை.

கிழவி தலையிலையடிச்சு குழறிக்கூடப் பாத்திச்சு. அவன் காதிலை விழுக்காத மாதிரி வெளிக்கிட்டான். கிழவி தொடர்ந்து திட்டிக் கொண்டே கிடந்தது. தாய்க்காரிக்கு நல்லாய் தெரியும். அவன் சொல்வழி கேளான் எண்ட விசயம்.

சும்மா கிடந்தேன் பிதற்றிறாய். பேசாமல் கிடவேன்.

அவள் கிழவியைத்தான் அதட்டினாள். மயனுக்கு நல்லாய் தெரியும். ஆமி இன்னும் காம் பை விட்டு வெளிக்கிடயில்லை. இப்ப கண்டபடி ஷெல்தான் குத்திறாங்கள். அதுக்கிடையிலை போய் வந்திடலாம் என்டவிசையம். எல்லாம் ஒரு விதமான அனுபவந்தான். விருத்தெரிஞ்ச நாளிலை இருந்து போருக்கை வாழ்ந்த அனுபவம்.

இவன் பள்ளிகூடத்துக்கெண்டு திரிஞ்சவன். இவன்ரை தமையன்காரன் இயக்கத்துக்கெண்டு போனவன். பின்னாலை சுட்டாடங்களோ முன்னாலை சுட்டாங்களோ ஆர் சுட்டாங்களோ தெரியாது இரண்டு கிழமைக்குப் பிறகுதான் சுதன் வந்து சொன்னான். எங்கையோ ஒரு சண்டையிலை செத்துப்போனான் எண்டு. சுதன் எண்டது தமையன்காரன்ரை சினேகிதப் பெடியன். இரண்டு பேரும் சேர்ந்து தான் இயக்கத்துக்கு போனவை.

பதினைஞ்சு நாளைய் தாய்காரி அன்னந்தண்ணியில்லாமல் கிடந்தாள். தேப்பன் அடிச்சுப் போட்ட பாம்புமாதிரி சுருண்டு போனார். கிழவி தன்னாரவாரம் ஒரே ஒப்பாரி. சின்னனுகளுக்கு ஒண்டும் விளங்கயில்லை. ஏதோ நடக்கக் கூடாதது நடந்திட்டுது. எண்டு மட்டும் தெரியும். ஒவ்வொண்டும் மூலைக்கு மூலை கிடந்துகள். கடைக்குட்டி மட்டும் தாயிண்டை மடியுக்கை சுருண்டு போய் கிடந்திச்சு.

மயன்தான் கொஞ்சம் விருத்தெரிஞ்ச பொடியன். வெளிக்கிட்டிட்டான். குடும்பப் பாரத்தை நான் சுமக்கிறன் எண்டு வெளிக்கிட்டான்.

ஊரிலை சுத்துக கொட்டிலை போய் சுருட்டு பொயிலை வாங்கிறது. சையிக்கில் மிதிச்சு மன்னார் வவுனியா முல்லைத்தீவெண்டு கொண்டு போய் குடுக்கிறது. அங்கை சீனி, பருப்பு, கருவாடு எண்டு கட்டிறது. ஊரிலை கொண்டு வந்து விக்கிறது. மூண்டு நாலு நாள் பயணம். சிலசமையம் வாரக்கணக்கிலையும் ஆகும். மூண்டு நாலு மூடையை ஒண்டாய்க்கட்டி, சைக்கில் உழக்கி, நோட்டம் பாத்து, கிளாலிக் கடலுக்காலை கொண்டு வந்து சேர்க்கிறதெண்டால் சும்மாவே.

இப்ப மூண்டு வரிசமாய்ப்போச்சு. தேப்பன்காரனும், வியாபாத்துக்கு நல்ல ஒத்துழைப்பு இவன்தான் எல்லாத்துக்கும் மூப்பு. எந்தச் சிக்கலுக்காலையும் சுழிச்சுக் கொண்டு போய் வருவான். இயக்கப் பொடியளும் வலு சினேகிதம். மாவீரக் குடும்பமெண்டு சலுகையள்வேறை... ஆள் வலு சுழியன்.

விடியக்காலமை. இளந்தாரி வெய்யில். சுட்டெரிக்கிது. இரண்டு நாளாய் ஆத்தலைஞ்சு திரிஞ்சது. தலை வேறை கிறுகிறுக்கிது. தேயிலை போட்டு வெறும் சுடுதண்ணியைக் குடிச்சுப்போட்டு வந்தது. வயிறு புகையுது.

விடியப்புறம் சத்தம் கொஞ்சம் ஓய்ச்சு கிடந்தது. பழையபடி ல் குத்தத் தொடங்கிவிட்டார்கள். ல் குத்திற சத்தம், அது பறக்க எடுக்கிற நேரம் விழுந்து வெடிக்கிற சத்தம், திசை படபடவெண்டு இரண்டு பக்கமும் மாறிமாறிச் சுடுபடுகிற சத்தம் எல்லாத்தையும் கூட்டிக் கழிச்சுப் பார்த்தான். ஆமி காம்பிலையிருந்து கனதூரம் முன்னேறயில்லை. ஒரு கணம் மனம் வெறுத்துப் போனது. அவனறியாது உணர்வு பேசத் தொடங்கிச்சுது.

சீ... எவ்வளவு கஸ்டம் நாய் அலைச்சல். இப்படி ஒரு மனிச வாழ்க்கை தேவையா... ஒரு நாள் விழுந்து குடும்பத்தோடை எல்லாரும் மண்டை

யைப் போட்டாக்கூட பறவாயில்லைப் போலை கிடக்கு. ஒரு அறிவு வேண்டாம். கண்டபடி கண்ணில் குத்தினா ஆர் மிஞ்சிறது. தங்கடை சனமெண்டா இப்பிடி கொல்லுவாங்களோ... பெடியளுக்குத்தான் அறிவு வேண்டாம். உடனை வெளிக்கிடுங்கோ எண்டு சொன்னால் சனம் குழந்தை குட்டியளோடை எங்கை போகும். பாவங்கள். என்னும் எத்தனை காலத்துக்கு ஆத்தலையப்போறோமோ.

தனக்குத்தானே அலுத்துக்கொண்டான்.

மண்டைக்குள்ளையிலிருந்து பெரிய குறவணவன் புழுவொண்டு நோண்டத் தொடங்கியிட்டுது. சரியாய் ஐஞ்சு வரியத்துக்கு முந்தி மண்டைக்குள்ளை பூந்த புழு. நினைச்சுப் பார்த்தா நேத்து நடந்ததைப் போலைக் கிடக்கு. சரியாய் இதே மாதந்தான், ஒரு பின்நேரம் போலை... ரோட்டுரோட்டாய் லவுஸ்பீக்கர் கட்டி ஒலிபரப்பத் தொடங்கியிட்டாங்கள். இருபத்திநாலு மணித்தியாலத்திலை சோனகர் (முஸ்லிம்) எல்லாரையும் நாட்டைவிட்டு வெளியேறச் சொல்லிப் போட்டாங்கள். ஆளுக்கு ஐந்நூறு ரூபா காசு மட்டும் கொண்டு போகலாம். வேறை ஒரு சாமானும் கொண்டு போக முடியாது எண்டு கடுமையாய் சொல்லிப்போட்டாங்கள். தமிழ்ச் சனமொண்டும் மூச்சுவிடயில்லை.

அதுகள் எங்கை போகுங்கள். பரம்பரை பரம்பரையாய் வாழ்ந்த வீடு... தொழில்துறை எல்லாத்தையும் விட்டு எப்பிடிப் போகுங்கள். இரவிரவாக நித்திரையில்லை. எல்லா வீட்டிலையும் இரவிரவாய் விளக்கு வெளிச்சம் தெரிஞ்சிச்சுது. ஆரும் நித்திரை கொள்ளயில்லை அடுத்த நாள் காலையிலை எல்லாரும் வரிசையிலை நிண்டிச்சுதுகள். சோர்ந்து போய் அழுத முகத்தோடை... குழந்தை குட்டியளு குஞ்சுகள் குருமான்கள் எல்லாரும்.

ஊரிலை சில சனங்கள் விடுப்புப் பார்க்கப் போயிருந்ததுகள். இவனும் பள்ளிகூடத்தை கட் பண்ணிக்கொண்டு பெடியளோடை பெடியாளய் விடுப்புப் பார்க்கப் போயிருந்தவன். அப்ப இதுவெல்லாம் அவனுக்கு அது ஒரு பெரிய விடயமாய் படயில்லை. அதுதான் போகட்டும்... பாவங்கள் கூட நினைக்கத் தோன்றயில்லை. தனக்கு தனக்கெண்டு வரயிக்கைதான் களகு படக்கு படக்கு என்னுமாம்... இப்பதான் அவனைப் புழு அரிச்சரிச்சு நோண்டுது. பழி. பெரிய பழி. அரசன் அண்டறுப்பான் தெய்வம் நிண்டறுக்கும் எண்டு சொல்லுவினம்.

இப்ப எல்லாம் உடனையுடனையே நடக்குது. நாங்கள் செய்த வினையின் வெளிப்பாடுதானோ இது... என்கிறது போலை நோண்டுது.

இல்லை... இருக்காது

வலிஞ்சுகட்டி மறுக்கிறான். எப்பிடியாச்சும் புழுவைப் பிடிச்சு வெளியிலை விட முனையுறான். முடியல்லை. அது மண்டையை குடையுது. பல்லைக்கடிச்சுக் கொண்டு சைக்கிலை மதிச்சான். இடையிலை ஒரு பொட்டல் வெளி. றோட்டுக் கரையிலை இருந்து கொஞ்சந் தள்ளி ஐஞ்சாறு பேர் கூட்டமாய் நின்று ஏதோ செய்யினம். திரும்பிப் பாத்தான். அவையின்ரை சொந்த அலுவல் மாதிரித் தெரியயில்லை. பாவம். அவைகளுக்கு என்ன அவசரமோ தெரியாது. இவனுக்கு இளகின மனம். கொஞ்சம் பதகளிக்குது. தன்ரை உடம்புக்கு கொஞ்சம் ஓய்வு தேவை போலையும் இருந்திச்சுது. சைக்கிலை அருகிலை நின்ற பூவரசோடை சாத்தினான். காரியம் நடக்கிற இடத்தைப் பாத்து நடந்தான். இரண்டு பேர் கிடங்கு வெட்டுகினம். ஒத்தாசைக்கு இரண்டு மூன்டு சனம் சுத்தி நிக்கிது. பக்கத்திலை ஏதோ காவோலையாலை மூடிக்கிடக்கு.

இவன் எதுவும் கேக்கயில்லை.

ஆரெண்டு தெரியல்லைத் தம்பி. செத்தபிணம். தனிய வந்திச்சுதோ, ஆரும் கூட்டி வந்தினமோ தெரியாது. இரண்டு நாளாய் அனாதையாய் கிடக்கு. மனிசப் பிணம். இப்பிடி விட மனசு கேக்கையில்லை. நாளைக்கு எங்களுக்கும் வரலாம். அதுதான் அடக்கம் பண்ணிறம்.

இவனைப் பாத்திட்டு இயக்கப் பெடியன் எண்டு நினைச்சோ என்னவோ, ஒரு செய்யக்கூடாத காரியத்தை செய்யிறமாதிரிப் பயந்த மனநிலையிலை ஒரு கிழவன் சொல்லி முடிச்சுது.

இவன் ஓலையை தூக்கி பிரேதத்தை பாத்தான் அடையாளந் தெரியல்லை. கொஞ்சம் உப்பிப் போச்சு. சாதுவாய் மணமும் வரத் தொங்கியிட்டுது. காவோலையால் மெல்ல மூடினான். தானும் கொஞ்ச நேரம் நின்டு அவையளுக்கு உதவவேணும் போலை மனசு சொல்லிச்சிது.

நேரத்தைப் பாத்தான். நிக்கிறதுக்கு சரிப்பட்டு வராது. இடத்தை விட்டு நைசாய் கழன்டான். சயிக்கிலை எடுதது மிதிக்கத் தொடங்கினான்.

ஒரு முக்கால் மணி நேரத்தை தாண்டியிருக்கும். இப்ப வெடிச்சத்தங்கள் கொஞ்சம் தெளிவாய் கேட்கிது. பக்கத்திலை விழுகிறது போலையும் பிரமை. வடக்கு பக்கமாய் காதைக்குடுத்து அவதானிச்சான். சத்தங்கேட்கிற தூரத்தை அனுமானிக்க முடிஞ்சுது.

கே.கே.எஸ். றோட்டை ஊடறுத்துத்தான் போகவேணும். றோட்டிலை மருந்துக்கு கூட ஒரு சனமும் கிடையாது. சுடலை வெளியைப் போலை நீண்டு கிடந்திச்சு. மனசு பக்பக் என்டு அடிக்கத் தொடங்கியிட்டுது. மேலாலை ஏதோ கூவிக் கொண்டு போகுது. டவுன் பக்கமாய் ஆள்காட்டிக் ஹெலி ஒன்டு வட்டம் போடுது ஒழுங்கையிலை சைக்கிலை விட்டான்.

ஐயோ, ஐயோ

இருந்தாப்போலை எங்கையோ ஒரு மனுசக் குரலொன்டு அவலமாய் கேக்குது. பிரமையோ, நம்ப முடியல்லை. சயிக்கிலை நிறுத்தி காதைக் குடுத்து

கேட்டான். சத்தம் இல்லை. வெறும் பிரமைதான் எண்டு நினைச்சு மனதை திடப்படுத்திக் கொண்டு சைக்கிலிலை ஏறு திரும்பவும் சத்தம்.

ஐயோ.. ஐயோ... ஆராவது காப்பாத்துங்கோ.

பேசாமல் போவெண்டு மனசு சொல்லிச்சு. இவன் கேக்கயில்லை. சயிக்கிலை வேலியோடை சாத்தினான். சத்தம் வந்த திசையிலை நடந்தான். ஒரு பழைய நால்சாரவீடு. கதவெல்லாம் திறந்தபடி கிடக்கு. உள்ளுக்கை கால் வைக்கவும் தயக்கமாயிருந்திச்சு.

சத்தம் எங்கையிருந்து வருகிதெண்டு அனுமானிக்க முடியல்லை. வீட்டுக்கை நுளைஞ்சான். கண்மூடித் திறக்கிறதுக்கிடையிலை எல்லாப்பக்கமும் பாத்தாச்சு. யாரும் இல்லை. அப்ப சத்தம் எங்கையிருந்து வருகிது. வீட்டுக்கோடிப்பக்கம் போனான். தாழ்வாரததோடை சேர்த்து ஒரு பங்கர். பனங்கொட்டுகளாலை மூடி மேலை மண் மூடை அடுக்கிக் கிடக்கு. இறங்கிற படியெல்லாம் மழையீரம். அவசரத்தில் வழுக்கி விழப் பாத்திட்டான். தன்னை சுதாகரிச்சுக் கொண்டு கீழை போனான்.

கிழவன். பக்கவாதம். மழை ஈரத்துககு புற்றெடுத்து பூத்து சிலிர்த்துக்போய் கிடக்கு நெருப்பெறும்பு. கிழவனை ஈச்சுப் பிடிச்சுக் கடிக்கிது. கிழவன் வலி தாங்காமல் துடிக்கிது. தன்றை இடக்கையாலை விறாண்டி விறாண்டி விறாண்டின் இடமெல்லாம் இரத்தம் கசியுது.

இவனுக்கு இப்ப எதைப்பற்றியும் யோசினை இல்லை. முதல் வேலையாய் கிழவனை வெளியிலை கொண்டு வந்தான். தூக்கிக் கொண்டு போய் கிணத்து மிதியிலை இருத்தினான். துலாவைத் தாட்டு நாலு வாளி தண்ணி அள்ளி வார்த்தான்.

வீட்டுக்கை தூக்கி கொண்டு போய் கட்டிலிலை கிடத்தி துவாய் துண்டாலை துடைச்சான்.

கொஞ்சம் எண்ணை பூசினால் வேதனை குறையும் எண்டு நினைச்சிருப்பான் போலை. குசினிப்பக்கம் போனான் அடுப்படி புகைக்கூட்டிலை இரண்டு மூண்டு போத்தல் அடுக்கிக் கிடக்கு.

மணந்து பார்த்து நல்லெலண்ணைப் போத்திலை எடுத்தான். முடிஞ்சளவுக்கு உடம்பெல்லாம் பூசினான். கிழவன் தன்றை இடக்கையாலை வலக்கையைத் தூக்கி கும்பிடுகிது. கண்ணிலை கண்ணீர் ஆறாய்ப் பெருகிது. தன்றை கோணல் வாயாலை தெத்திதெத்தி எதோ சொல்லமுனையுது. இவனுக்கு விளங்கிக்கொள்ள முடியல்லை. தெரிஞ்சுக்கொள்ளறதுக்கு இவனுக்கு பொறுமையும் இல்லை. விட்டிட்டுப் போகவும் மனசில்லை. ஆரோடை இருக்கிறியள். எங்கை எல்லாரும். திருப்பித்திருப்பிக் கேட்கிறான்.

மகள் மகள் வருவா..ள்

இது மட்டுந்தான் அவனுக்கு விளங்கினது. இவனுக்கு அவையாள் மேலை கோவம் கோவமாய் வந்திச்சுது. தூசனத்தாலை பேச வேணும் போலை கிடக்கு.

வெளியிலை வந்தான். மனசு கேட்கயில்லை. காரணமில்லாமல் திரும்பவும் உள்ளுக்கை போனான். கிழவன் கையெடுத்துக் கும்பிடுகிது.

திடீரெண்டு ஒரு இடத்தில் எங்கையோ கிட்டவிழுந்து வெடிச்சிருக்க வேணும். வீடு கோப்புசத்தோடை விழுமாப்போலை அதிருது. கொஞ்சம்

படுத்திட்டான். பட்டெண்டு வெளியிலை வந்தான். கிட்டடியிலை ஒரு மோட்டார் சயிக்கிள் சத்தம் கேட்டுது. படலையைத் திறந்து வெளியிலை ஓடி வந்தான்.

ஓ சுதன் தான் நல்லதாய்ப்போச்சு. அவன் நினைக்கிறதுக்கு இடையிலை சுதன் கிட்ட வந்திட்டான்.

டேய் மயன்... என்னடா.. நீ நீ ஏன் இதிலை நிக்கிறாய்.

ஒரு அவசரம் மச்சான்.. நீ வந்தது நல்லதாய் போச்சு.. ஒருக்கால் வந்திட்டுப் போ.

மோட்டார்ச் சயிக்கிலை மறைவு பார்த்து மாத்துக்கு கிழை விட்டான். தோளிலை கிடந்த ஏ.கே.ஐ கைக்கு மாத்திக் கொண்டான். மயனுக்குப் பின்னாலை நடந்தான்.

கிழவனை பார்த்தவுடனை சுதனுக்கு சிரிப்புத்தான் வந்தது.

ஆரடா இது கிழடு

தெரியாது. ஆனா ஏதாவது செய்யோணும். பாவம் கிழவன்.

உனக்கென்ன விசரே... இந்த இடம் தேவையில்லாத சோலி பாத்துக் கொண்டு நிக்கிறாய். நான் போகோணும். விடு.

மயன் பாதையை வழிமறிச்சு நிண்டான். சுதனுக்கு மறுக்க முடியல்லை. வேற ஆருமெண்டா அவனுக்கும் மறிக்கிற துணிவு வந்திருக்காது. சுதனும் வெடி வைச்சிட்டுப் போயிருப்பான். அண்ணன்காரனை நான்தான் இயக்கத்திலை கொண்டுபோய் சேர்த்து அவன் அநியாயமாய் செத்துப் போனான் எண்டொரு உறுத்தல் எப்பவும் சுதன்ரை மனசுக்கை குடைஞ்சு கொண்டு கிடக்குது.

சரி இப்ப என்ன செய்யச் சொல்லுறாய்.

எங்கையாவது கொண்டுபோய் விடு. நான் தூக்கி பின் சீற்றலை ஏத்தி விடுறன்.

என்ன கதை கதைக்கிறாய். சும்மா விசர் கதை கதைக்காதை. நடக்கிற காரியமாய் கதை.

மயன் கொஞ்சம் உணர்ச்சிவசப் படுகிற சுபாவம் கொண்டவன். முற்கோபி. ஆரோடை என்ன கதைக்கிறதெண்டு தெரியாமல் கதைச்சுப் போடுவான்.

டேய் உன்ரை கொப்பர் எண்டா விட்டிட்டுப் போவியா

மயன் இப்படிக் கேப்பான் எண்டு சுதன் கனாவிலையும் எதிர்பார்த்திருக்கையில்லை. பிடரியிலை யாரோ அறைஞ்சது போலை வலிச்சது. அவன் தன்ரை குடும்பம் பற்றின நினைவே இல்லாமல் இருந்தவன். இப்ப அதுகள் எங்கை ஆத்தலையுதுகளோ.

ஒரு கணந்தான். சுதன் தன்னை சுதாகரிச்சுக் கொண்டான்.

சரி... சரி... இப்ப என்ன செய்யச் சொல்லுறாய்.

கிழவை எங்கையாவது கொண்டுபோய் விட்டிட்டுபோ.

முடியாதுடா. சொன்னால் கேள். இதுக்குள்ளை நான் எங்கை கொண்டு போறது. எங்கை விடுகிறது.

சுதனின் குரல் உடைஞ்சு கெஞ்சல் தொனிப்புடன் வந்திச்சு. மயனுக்கு எப்பிடித் தான் சொல்லத் துணிவு வந்ததோ தெரியாது. டக்கெண்டு சொன்னான்.

சரி அப்பிடியெண்டால் தட்டி யிட்டுப் போ.

சுதன் திகைச்சுப் போனான்

என்ன கிழவனை கொல்லச் சொல்லுறியா... உனக்கு என்ன நடந்தது. ஏதாவது யோசிச்சு கதை. சும்மா விசரைக்கிளப்பாதை... வயசுபோன கிழவன். பாவமடா.

அதாலைதான் சொல்லுறன் தட்டியிட்டுப் போவெண்டு.

இப்ப மயன்ரை குரலிலை உறுதி இருந்தது. இவன் உண்மையாகத்தான் சொல்லுறான் எண்டது சுதனுக்குப் புரிஞ்சு போச்சு. அவனுக்கு என்ன சொல்லுறதெண்டே தெரியல்லை.

ஒரு நிமிசம் கூடத் தமாதிக்கயில்லை. மயன் திரும்பவும் மௌனத்தை உடைச்சான்.

இனி ஆரும் வந்து கிழவனைக் கொண்டு போகப் போறதில்லை. கிழவன் பசியிலையும் பயத்திலையும் கிடந்து அழுந்தி அழுந்திச் சாகப் போகுது. பார். உடம்பெல்லாம் எறும்பு கடிச்சு கிழவன் விறாண்டி விறாண்டி இரத்தம் கொட்டுறதை... பாவம் வலியிலை துடிக்கிகுது. இதைவிடக் கொல்லிறது ஒண்டும் பாவமில்லை. அது தருமம்.

இல்லை. நான் கொல்ல மாட்டன்... என்னாலை முடியாது.

ஏன் நீ ஒருத்தனையும் கொண்டதே இல்லையா,

சுதன் ஒரு கணம் நிலைகுலைஞ்சு போனான். அவனுயுக்கையே அந்தக் கேள்வி இரைஞ்சி கொண்டு கிடந்திச்சு. அவன் நீண்ட காலமாயே வீட்டை விட்டு வெளிக்கிட்டு இயக்கத்தோடை திரிஞ்சவன். அனேகமான சண்டையள்ளை முன்னுக்கு நிண்டிருக்கிறான் எல்லாத்தையும் விட இந்தியன் ஆமிக் காலத்திலை கனபேரை போட்டுத்தள்ளி யிருக்கிறான். அவன் பத்து வார்த்தை கதைச்சால் நாலு வார்த்தையாவது போட்டுத்தள்ளிப் போடுவன் என்றுதான் இருக்கும்.

டேய்.. டேய். சும்மா கதைச்சுக் கொண்டிராதை. போட்டுத்தள்ளிப் போட்டு போயிடுவன்.

அதைத்தான் நானும் செய்யச் சொல்லிறன்.

சுதன் வாயடைச்சுப்போனான். அவனுக்கு என்ன செய்யிறதெண்டும் தெரியல்லை. எப்பிடிப்புரியவைக்கிறதெண்டும் தெரியல்லை.

டேய் இப்ப என்ன செய்யச் சொல்லுறாய். நான் கொலை செய்திருக்கிறன் தான். இல்லையெண்டு சொல்லயில்லை. அதெல்லாம் தலைமையிரை ஓடர் நான் வெறும் கருவிதான். அதிலை எந்தப் பாவமும் எனக்கில்லை. எப்பவும் என்னை மனசாட்சி உறுத்தினது கிடையாது.

உறுத்தினது கிடையாது. எண்டு சொல்லைக்கை தான் நெஞ்சிலை மூக்கிழுவை முள்ளு குத்தினது போலை வலி. தலை கிறுகிறுக்கது. ஓ... அந்த சம்பவம்.. அது மண்டையை குடைஞ்சி கொண்டிருந்தது கன நாளாய் நித்திரையில்லாமல் அலைஞ்சிருக்கிறான். ஒருக்கா இந்தத் தொழிலை விட்டிட்டு எங்கையாவது வெளிநாட்டுக்கு ஓடுவமோ எண்டு கூட நினைச்சதுண்டு. முடியல்லை. அவனாலை மீண்டு வெளியிலை வர முடியல்லை.

அது நடந்து இப்ப பத்து வரிசத்துக்கு கிட்டவாச்சு. காலம் கொஞ்சம் கொஞ்சமாய் எல்லாத்தையும் மறக்கடிச்சிட்டுது. சண்டையின்ரை உக்கிரத்திலை நேற்று நடந்ததைக் கூட இண்டைக்கு ஞாபகப்படுத்த சிரமப்பட வேண்டியிருக்கு. ஆனா அதே காலம் தேவை வரயிக்கை எல்லாத்தையும்

தாயையோ கொண்டுவந்து ஊறடையை முன்னாலை போட்டு முடிச்சை அவிழ்க்கிது. எலுமிச்சங்காய் போலை நினைவுகள் உருண்டோடுது.

தமிழ் மன்னர்கள் காலத்து தாயாதி சண்டைகளின் தொடர்ச்சியைப் போல சகோதரர்களுக்குள் எற்பட்ட ஆதிக்க வெறியில் இவர்களும் ஒருவரை ஒருவர் அழித்துக் கொண்டிருந்த காலத்தில் நடந்தது.

இரண்டு நாட்களுக்கு முதல் மாற்றுக் குழுவைச் சேர்ந்த இரண்டு பேரை பிடிச்சிருந்தினம். சுட்டிறது எண்டது முதலே முடிவானது தான். விசாரணை எண்டு சொல்லி கட்டுக்கதைகளை பரவவிட்டு சனங்களிடத்திலை தங்களை நியாயவான்களாக சித்தரிப்பதென்பது இரண்டாவது. ஒரு கல்லிலை இரண்டு மாங்காய். ஆதனாலை தான் இந்த இரண்டு நாள்அவகாசம்

அதுவொரு பிரபலமான சந்தி. சனநடமாட்டம் உள்ள இடம். அங்கே வைத்துத்தான் இரண்டு பேரையும் சுட்டிறதெண்டு பிளான். இண்டைக்கு இவ்விடத்திலை வைச்சு இரண்டை போடப்போறம் எண்ட கதை கூட வெளியிலை சில வாலுகளுக்கு கசிஞ்சிட்டுது. இதாலை விடுப்பு பாக்க எடிபிடியாளும் சயிக்கில்லை சந்தியை வட்டம் போட்டுக் கொண்டு திரிஞ்சுதுகள்.

மத்தியானம். இரண்டு மணியிருக்கும் இரண்டு பேரையும் வானிலை கொண்டு வந்திச்சினம்

ஒருத்தன் கிழக்கு மாகாணம். மற்றவன் சுதன்ரை பாலிய நண்பன் சின்னனிலை ஒண்டாய் படிச்சு நீண்டகாலமாய் ஒண்டாய்த் திரிஞ்சவை. இரண்டு பேரும் சேர்ந்து செய்யாத திருகுதாளம் கிடையாது. இருந்தாப் போலை ஒரு சனிக்கிழமை. அவனைக் காணயில்லை எண்டு தாய் தேப்பன் அழுது குளறிச்சினம். ஊரிலே உள்ள அவன்ரை சினேகிதப் பொடியள் எல்லாரையும் விசாரிச்சினம். ஏதோ இயக்கத்துக்கு போட்டான் எண்டு சாடைமாடையாய் கதை வரத் தொடங்கிச்சுது. உனக்கு சொல்லாமல் போயிருக்க மாட்டான் எண்டு சொல்லி சுதனையும் வந்து விசாரிச்சினம். அவன் போது உண்மையிலை அவனுக்குத் தெரியாது.

இது நடந்து ஒரு நாலு மாதத்திற்கு பிறகுதான் சுதன் இயக்கத்திற்குப் போனவன். பிறகு ஒருவரை ஒருவர் சந்திச்சதே இல்லை.

இவ்வளவு காலங்கழிச்சு இப்பிடி ஒரு சூழல்லை சந்திக்க வேண்டியதாய்ப் போச்சு. திடீரென்று ஓடர் வந்திச்சுது. தன்ரை குறுப்போடை இவனும் வெளிக்கிட்டிட்டான். வேனிலை ஏற்றியபோது கூட இண்டைக்கு போடப்போறதிலை ஒருத்தன் தன்ரை பழைய நண்பனாய் இருப்பான் எண்டு சுதன் நினைச்சிருக்கயில்லை. அவனைக்கண்டதும் முகம் கறுத்துப்போச்சு. தனக்கு தெரியாதவன் போல நடக்கக் கொண்டு இருந்திட்டான். வானுக்கை எல்லாரும சிரிச்சு கதைச்சுக் கொண்டுதான் வந்தாங்கள். சுதன் மட்டும் கதைக்கயில்லை. பேயறைஞ்சவன் மாதிரி இருந்தான்.

சந்திலை உள்ள தேத்தண்ணிக் கடையுக்கை கொண்டு வந்து விட்டு விரும்பினதை எடுத்து சாப்பிடுங்கோ எண்டாங்கள். தங்கடை கதை முடியப் போற விசயம் இரண்டு பேருக்கும் தெரிஞ்சிட்டுது. கிடைச்ச இடைவெளியிக்கை தப்பி ஓட தொடங்கினான் கிழக்கு மாகாணத்தை சேர்ந்தவன். கடையைவிட்டு வெளியிலை வந்து ரோட்டிலை இறங்க வெடி விழுந்திச்சு. சுருண்டு விழுந்தான். அவன்ரை கதை சரி.

மற்றவனை கூட்டிக் கொண்டு சந்திக்கு வந்தாங்கள். எல்லாரும சுத்தவர துவக்கோடை நிக்கிறாங்கள். அவன் நடுவிலை. உயிருக்கு மன்றாடுறான். ஒவ்வொருதராய் கெஞ்சிறான். ஒருதனுக்கொருதன் கிண்டல் பண்ணி சிரிகிறான்கள். எல்லாற்றை கையிலை இருந்த ஏக்கேயும் லோட்பண்ணிக் கிடக்கு. ஆற்றையிலை இருந்து புகை வருமெண்டது தெரியாது.

சுதனுக்கு என்ன செய்யிறதெண்டே தெரியல்லை. அவன் கெஞ்சிறதை பார்க்க அவனுக்கு பொறுக்கையில்லை. அவனோடை சேர்ந்து ஒண்டாய் ஒரு சைக்கில்லை திரிஞ்சது. திண்டது பேண்டது எல்லாம் தலையை குடைஞ்சது. அவனைப்பார்க்க பாவமாய் இருந்திச்சு. எப்பிடி முடிவெடுத்தான் எண்டது யாருக்கும் தெரியாது. சுதன் நினைக்கு முன்னரே அவன் விரல்கள் இயங்கிவிட்டது.

இரண்டு சத்தம் தான். சுருண்டு விழுந்தான்.

சுதன் கண்களை இறுக மூடி தலையை நிமிர்த்தி வானத்தை பார்த்தான். அஞ்சலி செலுத்துவதைப் போல இருந்தது. யாருடனும் பேசவில்லை. திரும்பி நடந்தான். வேனை நோக்கி.

ஹெலி ஒண்டு மேலாலை கடந்து போகுது. ஏதும் அசுகை தெரிஞ்சால் வட்டம் போடத் தொடங்கியிடும். சுதன் ஒரு கணம் கண்ணை மூடினான்.

அவன் முடிவெடுத்துவிட்டான் என்பது மயனுக்குத் தெரியும். யோசிக்காதை. பாவமும் புண்ணியமும் எனக்கு வரட்டும் தைரியம் சொன்னான்.

எப்படி நடந்ததெண்பது தெரியாது. இயந்திரம் மாதிரி உள்ளுக்கை போனான். ஒரு சத்தந்தான அறைக்குள்ளை எண்டதாலை அடைச்ச குரலிலை உறுமிப் போட்டு அடங்கிச்சுது.

வெளியிலை வந்தான். மயனோடு கூட பேசவில்லை. அவன் மேலை கொஞ்சம் கோபம் இருந்தது போலை தெரிஞ்சது. அவன்ரை பார்வையிலை ஒருவிதமான வெறுமை இருந்திச்சு.

மோட்டச்சயிக்கிலை எடுத்து மிதிச்சான். உறுமிச்சுது.

மயனும் எதுவும் பேசயிலலை. தன்ரை வீட்டுப்பக்கமாய் சைக்கிலை மிதிச்சான். சுதனின் மோட்டச்சையிக்கில் ஒரு நூறு யார் சென்றிருக்காது. இரண்டு சையிக்கில்கள் எதிரே வந்தது. மூண்டுபேர். முன்னால் வந்த சயிக்கிலின்ரை பின் கரியரில் ஒரு பொம்பிளை. பின்னால் வந்த சையிக்கிலின் பின பக்கம் ஆரும் இல்லை. ஆனால் கரியரில் ஒரு கதிரை கட்டிக்கிடக்கு. அதுவும் நிமிர்த்திவைச்சு. ஒராளை இருத்திறதுக்கு வசதியாய்.

இதுகள் இந்த நேரம் பார்த்து எங்கை போகுதுகள். சுதனுக்கு விளங்கயில்லை.

ஆமி அடச்சுக் கொண்டு வாறான். உந்தப் பக்கமாய் எங்கை போறியள்? தோளிலை கிடக்கிற துவக்கை கண்டதும் சையிக்கில மிதிச்ச ஆம்பிளையள் இரண்டு பேருக்கும் பதில் சொல்லுற துணிவில்லை. பின்னால் இருந்த பொம்பிளைதான் பயந்தபடி வாயைத் திறந்து சொல்லிச்சுது.

நாங்கள் ஓடயிக்கை அப்பாவை விட்டிட்டுப்போட்டோம். அவருக்கு நடக்கேலாது. பாரிசவாதம். கூட்டிக்கொண்டு போக ஆள் கிடைக்கயில்லை. இப்பதான் கூலிக்கு ஆட்களை ஒழுங்கு பண்ணி கூட்டியாறன்..

மாதுளை வனம்

தளவாடங்கள் அறிவதில்லை
அறியப்போவதேயில்லை
கனவுகளின் வெப்பத்தை
துளைக்கும் பணியை அவை மிக நேர்த்தியாகவே செய்கின்றன

படைப்பின் பொருட்டு விலங்கிடப்பட்ட பிராணிகள்
கால்களை இழுத்தபடி
அழுகிய புண்களைச் சுவைத்தபடி
சாத்தான்களை அடையாளம் காட்டத் துவங்கிவிட்டது
உடல்களிலிருந்து
கிழிந்து தொங்குகிறது அர்த்தங்கள்

காலம் ஆணாயிருக்கிறது
எச்சரிக்கையாயிருக்கிறது
அதுவே
கற்பிதமாயும் இருக்கிறது

பிடுங்கி எறியப்பட்ட மாதுளையை
அதெனா* கையில் எடுக்கிறாள்
அர்த்தங்கள் எரியூட்டப்பட்டன
வழியும் உதிரச் சொட்டுக்களை
நட்டுவைக்கிறாள்
இவ்வுலகெங்கும் வேர்விட

ஆம்...
எரியப்படும் கற்களுக்காக
ஆவலாய் காத்திருக்க வேண்டியதிருக்கிறது
தோன்றுவது சிற்றலைகளே
சிற்றலைகள் எங்கும் உடைவதில்லை
சுழன்று கொண்டே தெளியும்
கற்களை
மிக சமாதானமாய்
ஆறுதலாய்
அது விரும்பாதவண்ணம்
உள்ளிழுத்துக் கொண்டு...

அதுவோர்
பெயரற்ற சமாதி

*அதெனா கிரேக்க பெண் தெய்வம்

கடவுளற்றவளின் நாட்குறிப்பு

ஆண்களின் பற்றாக்குறை அச்சுறுத்துகிறது. கழுட்டும் அடையாளங்களை மாட்டி வைக்க ஆண்கள் போதவில்லை. இரவின் இருட்டில் நடக்கும் முலைகளையும், யோனிகளையும் அதிஜாக்கிரதையாக மாட்டி வைக்க ஆண்கள் போதவில்லை. பெண் நிழலை கடந்து வரும் பட்டங்களை, விலங்குகளை மாட்டி வைக்க, பொங்கி வரும் காமத்தை அடக்கி, முடிச்சிட்டிருக்கும் சில்லங்களைத் தொங்கவிட, ஒவ்வொரு முறையும் ஃ...ஸின் கால்களில் உதைப்பட்டு கிழிந்த இளநீலப்பான கருமையை உதிரமுதற் தொங்கவிட, தேன் தடவிய சொற்கள் ஏற்றி வைத்திருக்கும் எதிர்பார்ப்புகளை தொங்கவிடவும் ஆண்கள் போதவில்லை. கடவுளர்களின் முழுமுற்றான அகம்பாவக் குறிகளை அறைந்திட ஆண்கள் போதவில்லை. போதவேயில்லை.

நாங்கள் இப்படியாகத்தான் எங்களை அழைத்துக் கொள்வோம்

கனவான்களே
இம்மண்ணில்
நாங்கள் குரல்களை மென்று வாழ்பவர்கள்
நாகரீகமற்றவர்கள்
நிழல்களின் அம்மணத்தை
அதன்
விலையுயர்ந்த
ருசியை அறிந்தவர்கள்

சோடியம் விளக்குகளின் கீழ்
இயற்கை குறித்து கவலை கொள்வீர்கள்
நிறம்பாய்ந்த உங்கள் கன்னங்கள் அப்பொழுது சிவக்கும்
சேவைகளுக்கான அட்டவணை தயாராகும்பொழுது
அடிமைகளை சேகரிக்கத் துவங்குவீர்கள்

எங்களுடல்களை மீட்டெடுக்க வழங்கிக்கொண்டேயிருப்பீர்கள்
உதிர நிறங்கூடிய கைகளால் பெற்றுக்கொண்டே
கண்ணீரால் வாழ்த்துவோம்
உள்ளாடைகளுக்குள் ஒளிந்திருக்கும் கடவுளர்களின்
இறுகப்பொத்திய செவிகளை
அவை துளைக்கட்டும்
நாங்கள் அப்படியே உங்களுக்குத் தேவை
கறிப்பன்றியைப் போல
கைவிடமாட்டோம் கனவான்களே...
நீங்கள் பலசாலிகள்

அதைக் கனவிலும் நாங்கள் மறந்ததில்லை
உண்மையை ஈனித்தள்ளும் உதடுகளைப் பார்த்து
கடவுளாகிய
நீங்கள்
பற்களைத் திறக்கும்போதும்
புன்னகைக்கும் போதும்
துவாரத்திலிருந்து வழிகிறது
ஓலம்

வதை செய்யும் வல்லமை உங்களுக்கானதென்பதை
நன்கறிவோம்
மேலும்...
கனவான்களே
எங்கள் குரலுயரா தொண்டையை
உங்களது மேட்டிமைமிக்க குறிகளால்
நாங்கள் விருமபும் வண்ணம் திறந்து
வாதையின் பயத்தை விதைத்துச் செல்வீர்கள்

மரம் கனிக்கொடுக்கும் கனவான்களே
உங்கள் இருதயத்தை ஆண்டவர் ஆசிர்வாதிப்பாராக
நீங்கள் உண்பது எங்கள் பயம் கொண்ட விழிகளை

உடல் வலிகளால் நிறைந்தது
கடவுளும் அடிமையும் ஆத்மாவும் அதனை நன்கு அறியும்
உணர்ச்சியற்ற உடல்கள்
சொல்லக்கூசும் அளவுக்கு அவமானகரமானது
அதை அப்படியே நாங்கள் கற்றுக்கொண்டிருக்கிறோம்
நம்புங்கள் கனவான்களே

நம்பிக்கொண்டிருக்கிறோம்
ஏற்றுக்கொண்டிருக்கிறோம்
மறந்துகொண்டிருக்கிறோம்
நீங்கள் மறக்கும் வரை

எங்களது வார்த்தைகளை
எங்களது வாதையை
எங்களது கனவை
நாங்கள் காத்திருக்கிறோம்
கனவான்களே...

க. பன்னீர்செல்வம்

தமிழ் கல்வெட்டுகள் வெளிச்சமிடும் துரோகிகள்

துரோகம் என்ற சொல்லிற்கு - மோசடி செயல் என்று நேரடியாகப் பொருள் கொள்ளலாம். மேலும் ஒரு சமூகத்தினுடைய, நீதிநெறிமுறைகளுக்கு எதிராக செயல்படுகின்ற கீழ்த்தரமான செயல்களையும் குறிப்பிடுவதாகலாம். இதற்கு எடுத்துக்காட்டாக இரண்டகம் பண்ணுவது, இடையூறு செய்வது, இனத்திற்கு கேடு செய்வது, ஈன்றவர்களுக்கு இன்னல் கொடுப்பது, ஊர் சமூகத்திற்கு கட்டுப்படாமல் இருப்பது, களவு செய்வது, கொலை செய்வது, சதிசெய்வது, சூழ்ச்சிபண்ணுவது, தீங்கு செய்வது, நல்ல பழக்கவழக்கங்களைத் தடுப்பது, நம்பிக்கைக்கு கேடுவிளைவிப்பது, பாதகம் செய்வது, பாவம் செய்வது, பெரியோர்களை துன்புறுத்துவது, பொய் சொல்வது, மாற்றான் மனைவியை விரும்புவது, மோசடி செய்வது, வஞ்சகம் செய்வது முதலான படுபாதகச் செயல்களைக் குறிப்பிடலாம் (1) இவற்றை செய்பவரின் குற்றத்திற்கு ஏற்ப, அவற்றிற்கு பெயரிட்டு அழைக்கப்பட்டுள்ளன. அவை

1. சிவத்துரோகம் - சுவாமித்துரோகம் - எசமானர்துரோகம்
2. குருத்துரோகம் - ஆச்சாரியத்துரோகம்
3. இராசதுரோகம் - நாட்டுத்துரோகம் - தேசத்துரோகம்
4. கிராமத்துரோகம் - ஊர்த்துரோகம்
5. இனத்துரோகம் - வருக்கத்துரோகம்
6. பித்துருதுரோகம் - பிதிர்துரோகம்
7. மித்திரத்துரோகம் - நட்பில் துரோகம்
8. நம்பிக்கைத்துரோகம் - விசுவாசத்துரோகம்

என்பனவாகும். இத்துரோகங்களை செய்பவர்கள் துரோகிகள் ஆவார்கள். இத்துரோகிகள் செய்யும் தவறுகளின் தன்மைக்கு ஏற்ப, துரோகத்தின் பெயரை முன்னொட்டாகக் கொண்டு, அவர்கள் அழைக்கப்படுகின்றனர். எடுத்துக்காட்டாக சிவனுக்கு மோசடி செய்பவருக்கு சிவத்துரோகி என்று பெயராகும். இத்துரோகிகள் மிகவும் கொடுமையானக் குற்றவாளிகள் என்பதை குறிப்பிடுவதற்கு, அவர்களை பஞ்சபாதகர்கள் என்றும் அழைக்கப்பட்டுள்ளனர். 2. பஞ்சமாபாதகர்களைப்பற்றி தமிழ்சொல் அகராதியில் பொருள் சொல்லுகையில், களவுசெய்தல், குருநிந்தை செய்தல், கொலை செய்தல், பொய் சொல்லுதல், மதுகுடித்தல் போன்ற தவறுகளை செய்பவர்கள் என்றும் 3. தமிழ் ஆங்கிலம் பொருள் சொல் அகராதியில் பஞ்சமாபாதகர்களைப்பற்றி குறிப்பிடுகையில், இராசதுரோகம், இனத்துரோகம், சுவாமிதுரோகம், குருதுரோகம், பிதிர்துரோகம் என்று பொருள் சொல்லப்பட்டுள்ளது. 4. சமஸ்கிருதம் பொருள் சொல் அகராதியில் பஞ்சமாபாதகர்களைப் பற்றி பொருள் குறிப்பிடுகையில் களவுசெய்தல், குருநிந்தை செய்தல், பிராமணரைக் கொலை செய்தல், மதுகுடித்தல், இவற்றிற்கு உடந்தையாக இருத்தல் என்றும் வந்துள்ளது. 5. இத்தகைய பஞ்சமாபாதக குற்றங்களைச் செய்தவர்கள் சோழர்காலத்தில் (கி.பி. 840-914) ஊர் சபையில் உறுப்பினர்களாக தேர்ந்தெடுப்பதற்கு தகுதி அற்றவர்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. 6. இது போல கி.பி. 15-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தமிழ் கல்வெட்டில் சிவதுரோகம், குருத்துரோகம் செய்தவர்கள் பஞ்சமாபாதகர்கள் என்று வந்துள்ளது. 7. இவற்றை ஒப்பிட்டுப் பார்க்கையில் பஞ்சமாபாதகம் என்பது காலத்திற்கு காலம், சமூகத்திற்கு சமூகம், அவர்கள் செய்யும் துரோகத்திற்கு தகுந்தாற்போல, அவற்றின் பொருள் வேறுபட்டு இருந்துள்ளதை அறிய முடிகிறது. குருத்துரோகம் என்ற குற்றம் மட்டும், எல்லா காலங்களிலும், எல்லா சமூகத்தவர்களும் மிக மோசமான துரோகமாகக் கருதியுள்ளதை உணர முடிகிறது. ஒட்டுமொத்தத்தில் மேற்சொன்ன துரோகங்கள் யாவும் கொடிய குற்றங்களாக காலம், காலமாகக் கருதப்பட்டு வந்துள்ளன. இத்தகையத் தவறுகளைச் செய்த துரோகிகள், அனைத்து சமூகத்திலும், அனைத்து காலங்களிலும் இருந்துள்ளனர். அத்துரோகிகளைப் பற்றிய செய்திகள் சோழர் கால தமிழ் கல்வெட்டுகளில் நேரடியாகவும், மறைமுகமாகவும் சொல்லப்பட்டுள்ளன. அவை

1. **சிவத்துரோகம் செய்துள்ள சிவத்துரோகிகள்,**
2. **இராசதுரோகம் செய்துள்ள இராசதுரோகிகள்,**
3. **நாட்டுத்துரோகம் செய்துள்ள நாட்டு துரோகிகள்,**
4. **கிராமத்துரோகம் செய்துள்ள கிராமத்துரோகிகள்,**
5. **இனத்துரோகம் செய்துள்ள இனத்துரோகிகள்,**
6. **குருத்துரோகம் செய்துள்ள குருத்துரோகிகள்**

ஆகியோர்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றனர்.

சிவத்துரோகம்

சிவத்துரோகம் என்பது, சிவன் புண்ணியத்திற்கு இடையூறு செய்வது, திருக்கோவிலின் சொத்துகளுக்கு நஷ்டம் ஏற்படுத்துவது, சிவ தருமத்திற்கு எதிராகச் செயல்படுவது முதலான செயல்களைச் செய்வதாகும். இதுபோன்ற தவறுகளைச் செய்பவர்கள் சுவாமிதுரோகிகள் எனவும், சிவத்துரோகிகள் எனவும், சைவ சமய துரோகிகள் எனவும் அழைக்கப்பட்டுள்ளனர்.

8. எடுத்துக்காட்டாக, திருக்கோவில் கருவூலத்தில் உள்ள பொன்னை களவு செய்து பங்கிட்டுக் கொண்ட சிவத்துரோகிகளைப் பற்றியும், சிவன் திருக்கோவிலுக்கு சொந்தமான சொத்துக்களை தன் வசப்படுத்திக் கொண்டு, தனது உறவினர்களுக்கு பங்கிட்டுக் கொடுத்துள்ள சிவத்துரோகிகளைப் பற்றியும் திருக்கோவிலின் ஆபரணங்களைக் களவு செய்து, தனது வைப்பாட்டிக்கு கொடுத்துள்ள சிவத்துரோகிகளைப் பற்றியும், திருக்கோவிலின் தானியங்களை களவு செய்துள்ள சிவத்துரோகிகளைப் பற்றியும், கோவிலில் பொய் கணக்கு எழுதியுள்ள சிவத்துரோகிகளைப் பற்றியும் செய்திகள் நேரடியாக சோழர் கால தமிழ் கல்வெட்டுக்களில் வந்துள்ளதைக் குறிப்பிடலாம்.

இவற்றில் தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டத்தில் உள்ள பந்தநல்லூரில் அமைந்துள்ள பசுபதீஸ்வரர் திருக்கோவில் மண்டபத்தின் வடக்கு சுவரில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டில் திருக்கோவிலின் கருவூலத்தில் உள்ள பொன்னை களவு செய்து பங்கிட்டுக் கொண்ட சிவத்துரோகிகளைப் பற்றிய செய்தி வந்துள்ளது.

9. இத்திருக்கோவிலில் இரண்டாம் இராசராசனின் ஆறாம் ஆட்சியாண்டில் (கி.பி. 1152) பணியாற்றிய பதிபாத மூலப்பட்டுடைய பஞ்சாசாரியர்கள், தேவகன்மிகள், சிரிம கேசுவர கண்காணிசெய்வார்கள், சிரிகாரியம் செய்வார்கள் ஆகியோர்கள், இவ்வூர் தேவருக்கு திரு ஆபரணம் செய்வதற்காக, திருக்கோவிலின் பண்டாரத்தில் பொன் சேர்த்து வைத்திருந்துள்ளனர். இத்திருக்கோவிலில் பணியாற்றிய சிவப்பிராமணர்களில் சிலர், இந்த பொன்னில் சிறிதளவு களவு செய்து பங்கிட்டுக் கொண்டுள்ளனர். இவர்கள் செய்துள்ள, சிவதுரோகத்தினை, திருக்கோவில் நிருவாகிகள் கண்டறிந்துள்ளனர். இதற்காக இவர்களுக்குத் தண்டனைக் கொடுத்துள்ளனர். அத்தண்டனையின்படி இத்திருக்கோவிலில் களவு செய்துள்ள சிவபிராமணர்கள், இவர்களது வமிசத்தவர்கள், இத்திருக்கோவிலிலும், இதனுள்ளிருக்கும் விக்கிரமசோளிஸ்வரர் கோவிலிலும், குலோத்துங்க சோளிஸ்வரர் கோவிலிலும் இனி உள்ளே வரக்கூடாது (உள்ளே புகுதப்பெறார்களாகவும்) என்ற கட்டுப்பாடு விதித்துள்ளனர். இச்சிவபிராமணர்களுக்கு, இத்திருக்கோவிலில் பணியாற்றுவதற்காக, கொடுக்கப்பட்டிருந்த பணி நாட்களை (இவர்களது காணியான நாள் விற்று) 180 காசுகளுக்கு விற்பனை செய்துள்ளனர். அதனை இவர்கள் இத்திருக்கோவிலுக்கு செலுத்த வேண்டிய வரிக்கு (இவர்கள் ஒடுக்கும் கடமைக்குடலாக) செலுத்தியுள்ளனர். இத்திருக்கோவில் நிருவாகம், இச்சிவபிராமணர்களுக்கு கொடுத்துள்ள இத்தண்டனையை, சிவத்துரோகிகள் ஏற்றுக் கொண்டதற்கு இணங்க, கையொப்பம் இட்டுள்ளனர். இதற்கு சாட்சியாக திருக்கோவில் நிருவாகிகளும் கையொப்பம் இட்டுள்ளனர்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள, உடையார்பாளையம் வட்டத்திலுள்ள, கோவிந்தபுத்தூரில் அமைந்துள்ள கங்காஜடாதரர் கோவிலின் இரண்டாம் சுற்றுசுவரின் கிழக்கில் பொறிக்கப்பட்டுள்ள மூன்றாம் குலோத்துங்களின் 16-ஆம் ஆட்சியாண்டுக் (கி.பி. 1194) கல்வெட்டில், சிவன் திருக்கோவிலுக்கு சொந்தமான சொத்துக்களை தன்வசப்படுத்திக்கொண்டு, தனது உறவினர்களுக்கு பங்கிட்டுக் கொடுத்துள்ள சிவத்துரோகிகளைப் பற்றிய செய்தி வந்துள்ளது. 10. இத்திருக்கோவிலில் கடவுளை கும்பிட்டிருக்கும் சிவனடியார்கள் (ஆண்டார்கள்) இரண்டாம் இராசராசனின் 7-ஆம்

ஆட்சியாண்டில் (கி.பி. 1170) உடையார் தேவதானமான (கமுகு) பாக்குத் தோப்பில் 640 பாக்குமரங்களை நட்டு (கமுகாக்கி) பாதுகாக்க வேண்டும் என்று பல்லவராயர்க்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். பல்லவராயர், உடையார்களின் விண்ணப்பத்தினை, அரசருக்கு தெரியப்படுத்தியுள்ளார். அரசர் அதனை ஏற்றுக்கொண்டு, திருக்கோவிலின் திருநந்தவனத்தோப்பில் 640 பாக்கு மரங்களை நடுவதற்கு பல்லவராயர்க்கு அனுமதியளித்துள்ளார். அதன்படி பல்லவராயர் திருத்தோப்பில் 640 -பாக்கு மரங்களை நட்டு, அதன் மூலம் வருகின்ற வெற்றிலை பாக்குக்கு (திருக்கொடி கமுகு) தேவதானத்திருக்கோப்பின் நுழைவாயிலில் (திறப்பிலே) அவ்வப்பொழுது நிர்ணயிக்கப்படும் விலையின்படி, கையில் முழுப்பணத்தையும் பெற்றுக் கொண்டு (கையிலைக்கொண்டு) அதனை, திருக்கோவிலுக்கு பயன்படுத்திக் கொள்வதற்கு ஒழுங்குமுறை செய்துள்ளார். (அதன்படி அத்திருக்கோவிலில் தலைமை நிருவாகம் (மாடாபத்தியம் - மேலாளர்) செய்துவந்த பழலூர் ஆண்டான், இரண்டாம் இராசாதிராசனின் 7-ஆம் ஆட்சியாண்டு (கி.பி.1170) முதற்கொண்டு, மூன்றாம் குலோத்துங்கனின் 13-ஆம் ஆட்சியாண்டு (கி.பி. 1191) வரையிலும் சுமார் 21-ஆண்டுகள் சரியாக செய்து வந்துள்ளான். ஆனால் இம்மன்னனின் 14, 15-ஆம் ஆட்சியாண்டுகளில் (கி.பி. 1192-93) திருநந்தவனத் திருத்தோப்பின் மூலம் வருகின்ற வருவாயை, திருக்கோவிலுக்கு பழலூர் ஆண்டான் கொடுக்காமல் ஏமாற்றிவந்துள்ளான். அதோடு திருநந்தவனத்தோப்பில் இருந்த பாக்கு மரங்களை வெட்டி, தனது வீட்டின் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொண்டு (தனது அகத்துக்கு வெட்டியும்), காசுக்கு விற்பனை செய்துள்ளான். மேலும் தனது உறவினர்களுக்கு (சம்பந்திகளுக்கு) அம்மரங்களை வெட்டிக் கொடுத்துள்ளான். இவற்றின் மூலம் திருத்தோப்பில் இருந்த சுமார் 3200-பாக்கு மரங்களை அழித்துள்ளான்.

இதனால் அம்மரங்களின் மூலம் கிடைக்கக்கூடிய முப்பத்திரண்டு லட்சம் (முப்பத்திரண்டு நூறு ஆயிரம்) பாக்குகளைத் திருக்கோவிலுக்கு கிடைக்காமல் நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளான்.

மேலும் திருக்கோவிலின் ஐந்துவேலி ஆறு மா (10600-ம்) விவசாயநிலத்தை, சரியாக கவனிக்காமல், அந்நிலத்தை வளமை இழக்கச்செய்துள்ளான். மேலும்அந்நிலத்தின்மூலம் வரும் வரியை செலுத்தாமல் (இக்கீல்) பாழாய் கேள்கூடமை இறந்து திருக்கோவிலுக்கு இழப்பை ஏற்படுத்தியுள்ளான். இவற்றை எல்லாம் அறிந்த திருக்கோவில் ஆண்டார்களும், தானத்தார்களும் சேர்ந்து, திருக்கோவிலின் கருவூலத்திற்கு 30,400 காசுகளை, அவன் ஏற்படுத்தி இருந்த இழப்பீட்டை ஈடுசெய்து கொள்வதற்காக, தானமாகக் கொடுத்துள்ளார். ஆனால் பழலூர் ஆண்டான் (கையுற்ற காசு) அவற்றையும், திருக்கோவிலுக்கு செலவு செய்யாமல் தன்வசப்படுத்தி கொண்டுள்ளான். மேலும் பழலூர் ஆண்டான் திருக்கோவில் கருவூலத்திலிருந்து, திருப்பிக் கொடுக்காமல் ஏமாற்றியுள்ளான்.

இப்படி இவன், சிவன் பெயரைச்சொல்லி வாங்கியுள்ள காசுகளையும், தேவதான நிலத்திலும், கமுகத் தோட்டத்திலும் வரும் வரிகளையும் கோவிலுக்குக் கொடுக்காமல் இருந்ததை திருக்கோவில் ஆண்டார்கள், கண்டறிந்துள்ளனர். இவன் செய்துள்ள அக்கேடுகளை கேட்பதற்காக, திருக்கோவில் ஆண்டார்கள், அவனை அழைத்து விசாரணை செய்வதற்கு தீர்மானித்துள்ளனர். அதன்படி திருக்கோவில்

ஆண்டார்கள், மூன்றாம் குலோத்துங்க சோழனின் 15-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 1193) பழூர் ஆண்டானை அழைத்து விசாரிப்பதற்கு (முறையிடையாட்டம் கேட்க) முற்பட்டுள்ளனர். அதனை அறிந்து கொண்ட பழூர் ஆண்டான், தன்னை அழைத்து விசாரித்தால், தான் திருக்கோவிலில் செய்துள்ள தவறுகள் தெரியவந்து கடுமையான தண்டனை கிடைத்துவிடும் என்று பயம் கொண்டு, வீட்டின் பின்பக்க வழியாக (புழக்கடையை விழுந்து ஓடிப்போனவாறே) ஓடிப்போய்விடுகிறான். அதனை அறிந்து கொண்ட திருக்கோவில் ஆண்டார்கள், அவனது வீட்டை சோதனை செய்து (இவன் அகத்தை சோதித்த இடத்து) பார்த்துள்ளனர். அப்பொழுது, அவனது வீட்டில், கோவிலுக்குச் சொந்தமான பாத்திரங்களும் (கோயில் குறியான திருப்பரிகலம்) 40 கலம் நெல்லும் இருந்துள்ளதைக் கண்டறிந்துள்ளனர். அதனால் திருக்கோவில் ஆண்டார்கள். பழூர் ஆண்டான், மன்னர் செய்துள்ள சிவத்துரோகங்களையும், தற்போது செய்துள்ள சிவத்துரோகங்களையும் மனதில் கொண்டு, அவனை சிவத்துரோகி என்று தீர்மானித்துள்ளனர்.

அதன்படி அவனுக்கு தண்டனைக் கொடுப்பதற்கு முடிவு செய்துள்ளனர். அதன்படி பழூர் ஆண்டானின் வீட்டை இடித்துவிட்டு, அந்த இடத்தில் குலோத்துங்க சோழ விநாயகப்பிள்ளையாருக்கு, திருக்கோவிலைக் கட்டியுள்ளனர். மேலும் திருக்கோவிலின் கருவூலத்தில் முதல் இல்லாமல்போன முதலுக்கு (காசிலி காசுக்கு) ஈடு செய்து கொள்வதற்கு, பழூர் ஆண்டானுக்கு ஜீவிதத்திற்காக (தனக்கு காணியாக் கொண்ட நிலம்) சிரிபராந்தக சதுர்வேதிமங்கலத்தில் கொடுக்கப்பட்டிருந்த விளைநிலங்களையும், பாக்குத் (கமுகு) தோட்டங்களையும் அவனிடமிருந்து பறித்து, அத்திருக்கோவிலுக்கு விற்றுள்ளனர். அந்த நிலங்களை திருக்கோவில் நிருவாகிகள், கோவிலின் கருவூலத்திலிருந்து காசு எடுத்து, (சிரிபண்டாரத்தே கொண்ட காசு) திருக்கோவிலுக்கு திருநாமத்துகாணியாக வாங்கியுள்ளனர்.

அந்நிலத்திற்கு மதிப்பிடப்பட்ட காசை, மீண்டும் திருக்கோவிலின் பண்டாரத்தில் (காசிலி காசுக்கு) முதல் இல்லா முதலுக்கு ஈடாக வைத்துக் கொடுத்துள்ளனர். அதனால் திருக்கோவிலில் வழக்கமாக நடை பெற வேண்டிய காரியங்கள் மூன்றாம் குலோத்துங்கசோழனின் 16-ஆம் ஆட்சியாண்டு (கி.பி. 1194) முதற்கொண்டு, மீண்டும் பழையபடி தொடங்கியுள்ளதனை அறியமுடிகிறது.

தஞ்சாவூர் மாவட்டம், பெரம்பலூர் வட்டத்திலுள்ள ஊட்டத்தூரில் அமைந்துள்ள சித்தரத்னேஸ்வரர் திருக்கோவில் மண்டபத்தின் தெற்கு சுவரில் பொறிக்கப்பட்டுள்ள மூன்றாம் குலோத்துங்கனின் 21-ஆம் ஆட்சியாண்டுக் (கி.பி. 1199) கல்வெட்டில் திருக்கோவிலின் ஆபரணங்களைக் களவு செய்து, பயன்படுத்தி கொண்ட சிவத்துரோகியைப் பற்றிய செய்தி, வந்துள்ளது (11) இத்திருக்கோவிலில் பணியாற்றிய பிராமணன் ஒருவன், திருக்கோவிலில் உள்ள அம்மனின் திருக்கழுத்தில் இருந்த ஆபரணங்களைத் திருடியுள்ளான். அதனைத் திருக்கோவில் நிருவாகிகள் கண்டறிந்துள்ளனர். இதனால் அச்சிவப்பிராமணனுக்குத் தண்டனைக் கொடுக்கப்பட்டுள்ளது. அதன்படி அவன் திருக்கோவிலில் பணியாற்றுவதற்கு, கொடுக்கப்பட்டிருந்த (ஜீவித காணியை) நிலத்தை பறித்துக் கொண்டுள்ளனர். மேலும் அந்த நிலத்தை, மீண்டும் திருக்கோவிலுக்கு தேவதான நிலமாக மாற்றிக் கொடுத்துள்ளனர். அதனை அக்கோவிலில் திருக்கோவிலில் பணியாற்றும் சிரிபாதம் தாங்கிக்கு மீண்டும் ஜீவிதக் காணியாகக் கொடுத்துள்ளதனை அறியமுடிகிறது.

[illegible] திருக்கோயில் [illegible]

[illegible] கி.பி. 1200 [illegible] திருக்கோயிலுக்கு [illegible] (12) [illegible] திருக்கோயிலுக்கு [illegible]

[illegible] திருக்கோயில் [illegible] (13) திருக்கோயிலில் [illegible] 23-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 1269) [illegible] திருக்கோயிலில் [illegible] திருக்கோயில் [illegible] செய்துள்ளனர். [illegible] திருக்கோயிலில் [illegible] செய்துள்ளனர். இவற்றுடன் அத்திருக்கோயிலில் பூஜை செய்து வந்த ஞானசிவபண்டிதரும் [illegible] திருக்கோயிலில் செப்பேடு (இட்டு) வைத்திருந்த [illegible] களவு செய்துள்ளனர். இதேபோல் திருக்கோயிலில் இருந்த திருமேனிகளை (ஐம்பொன் விக்ரகங்கள்) [illegible] செய்துள்ளனர். மேலும் திருக்கோயில் [illegible] (ஐம்பதாயிரம்) (50,000) காசுகளை களவு செய்துள்ளனர். இவற்றுடன் அரசின் [illegible] பாதித்துள்ளனர். இதனால் [illegible] இருவரும் சேர்ந்து செய்த [illegible]

கொண்டு, அவர்கள் சிவத்துரோகிகள் என்று அறிவித்துள்ளனர். அதன்படி இனி அச்சிவத்துரோகிகள் இருவரும் அத்திருக்கோவிலுக்குத் தேவையில்லை (சிவத்துரோகம் செய்த இவர்கள் இக்கோயிலுக்கு ஆகாதவர்கள்) என்றும், வேறு கோவிலுக்கும் போகக்கூடாது. (பணியிலும் தடை (தகுதி) என்றும் தடை விதித்துள்ளனர். அதனோடு அச்சிவப்பிராமணர்களை திருக்கோவிலில் வேதம் பற்றி விளக்கி கூறுவதற்கு (வேதபாராயணம் செய்வதற்கு) கொடுத்திருந்த நிலத்தினையும், (இவர்கள் அத்யயனமும் காணியும்) அவர்களுக்கு உதவுவதற்கு கொடுத்திருந்த பணியாட்களையும் (அடிமைகளையும்) பறித்துக்கொண்டுள்ளனர். அச்சிவத்துரோகிகளிடமிருந்து பறிக்கப்பட்ட அவையும், அவையா சொத்துகளைக் கைக்கொண்டு, திருக்கோவில் பண்டாரத்தில் முதலாகக் கொடுப்பதற்கு சொல்லியுள்ளனர். மேலும் கோவிலில் சிவப்பிராமணக்காணியுடைய மற்ற சிவப்பிராமணர்கள், அவரவர்களுக்கு உரியவற்றை, அவரவர்கள் வைத்துக்கொண்டு, அவர்களது பணியையும், முறையையும் செய்வதற்கு சொல்லியுள்ளதனை அறியமுடிகிறது.

இவற்றைப்போன்று அரும்பாவூர் (14) ஆடுதுறை (15) பெண்ணாகடம் (16) முதலிய ஊர்களில் காணப்படுகின்ற கல்வெட்டுகளில், கொடுக்கப்பட்டுள்ள கொடைகளுக்கு, யாரேனும் கெடுதல் செய்தால் (அநீதம் செய்தால்) அவர்கள் சிவத்துரோகிகள் ஆவார்கள் என்று ஓம்படைக்கிளவியில் வந்துள்ளது நோக்கத்தக்கதாகும்.

இதுவரையில் பார்க்கப்பட்டுள்ள கல்வெட்டுகளின்மூலம், சிவத்துரோகம் செய்தவர்கள் அனைவரும், திருக்கோவில்களில் பணியாற்றியுள்ள பிராமணர்கள் என்பது தெள்ளத்தெளிவாகிறது. திருக்கோவில்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு அரசும், அரசாள்பவர்களும், திருக்கோவில் நிருவாகமும், பலவிதமான வசதிகளை செய்து கொடுத்துள்ளனர். குறிப்பாக பிராமணர்கள் வசிப்பதற்கு பிரம்மதேயம் ஊர்களை அமைத்து கொடுத்துள்ளனர். நிலங்களைக் கொடையாகத் தந்துள்ளனர். குடி இருப்பதற்கு திருமடை விளாகங்களை அமைத்து கொடுத்துள்ளனர். கல்வி பயிலுவதற்கு திருக்கோவில்களில் வேதபாடசாலைகளை அமைத்து கொடுத்துள்ளனர். இன்னும் பல சலுகைகளையும் அவர்களுக்கு செய்து கொடுத்துள்ளனர். இப்படி அனைத்து வசதிகளையும், சலுகைகளையும் தானமாகப் பெற்றிருந்த பிராமணர்கள், திருக்கோவில்களில் ஏன் தவறு செய்துள்ளனர்? என்று பார்க்கின்றபொழுது, பல காரணங்கள் புலப்படுகின்றன. இதற்கு முதல் காரணம் பிராமணர்களுக்கு இருந்துவந்த பேராசையாகும். இரண்டாவதாக அரச வம்சத்தவர்களைப் போன்ற ஆடம்பர வாழ்க்கை வாழவேண்டும் என்ற எண்ணமாகும். மூன்றாவதாக சமூகத்தில் தங்களை உயர்ந்தவர்களாக நினைப்பவர்கள் மத்தியில், மென்மேலும் எடுப்பாக தெரியவேண்டும் என்ற நினைப்பாகும். நான்காவதாக சாதிய சமூக பொருளாதாரத்தில், உயர்ந்த நிலையில் இருக்கும் நாம் செய்கின்ற தவறுகள் வெளிவராது என்று அசட்டுத் தைரியமாகும். இவர்களின் எண்ணங்களுக்கு ஏற்ப திருக்கோவிலில் நிருவாகம் செய்தவர்கள் பெரும்பாலும் பிராமணர்களாக அமைந்து இருந்ததால், அவர்கள் தவறுகளை தைரியமாக செய்வதற்கு வாய்ப்புகள் அதிகம் இருந்துள்ளன. இதற்கு எடுத்துக்காட்டாக பந்தநல்லூர் கல்வெட்டில் திருக்கோவிலின் கருவூலத்தில், திருக்கோவில் சிவபிராமணர்கள்

கூட்டாக சேர்ந்து, திருடியுள்ளதனையும், கோவிந்தபுத்தூர் கல்வெட்டில் திருக்கோவிலில் உயர்ந்த பதவியில் இருந்த பிராமண உயர்அதிகாரி செய்துள்ள ஊழலையும், ஊட்டத்தூர் கல்வெட்டில் திருக்கோவிலில் பணியாற்றியுள்ள சிவப்பிராமணன், அம்மனின் திருஆபரணங்களைத் திருடியுள்ளதனையும், சிவபுரம் கல்வெட்டில் திருக்கோவிலில் பணியாற்றிய மெத்த படித்த சிவப்பிராமணர்கள் அம்மனின் ஆபரணங்களைத் திருடியுள்ளதனையும் குறிப்பிடலாம். இவற்றின் மூலம் திருக்கோவிலில் பணியாற்றியுள்ள மெத்த படித்த சிவப்பிராமணர்கள், தூயவர்களாகவும், கடவுளுக்குப் பயந்து நடப்பவர்களாகவும், நீதி, நேர்மை முதலானவற்றிற்கு முன்னோடியாக இருப்பவர்களாகவும் இருக்க வேண்டும் என்ற பொதுவான நடைமுறை எண்ணங்களுக்கு மாறாக, அவர்கள் நடந்துள்ளனர். குறிப்பாக வைப்பாட்டி வைத்திருந்துள்ளனர். மேலும் உடன்பணியாற்றியுள்ள சகபணியாளர்கள், அவற்றின பித்தலாட்ட மோசடியான தவறுகளுக்கு ஒப்புக்கொள்ளாததால், அவர்களை கொலை செய்வதற்கு துணிந்துள்ளனர். அரச ஆணையை அவமதித்துள்ளனர். செய்யக்கூடாத தவறுகளைத் திட்டமிட்டு, எவ்விதபயமும் இன்றி செய்துள்ளனர். இவற்றையெல்லாம் பார்க்கின்றபொழுது, சில பிராமணர்கள், அக்கால சமூக அமைப்பில் எந்த தரும சிந்தனைகளுக்கும், நியாயங்களுக்கும் பயம் கொள்ளாத கொடியவர்களாக இருந்துள்ளதனை அறியமுடிகிறது. இப்படி தவறு செய்துள்ளப் பிராமணர்களை, அவர்களுடன் பணியாற்றியுள்ள நேர்மையான நிருவாகிகள் கண்டறிந்துள்ளனர். மேலும் அவர்கள், தொடர்புடைய நிருவாகத்திடம் தெரியப்படுத்தி, அவர்களுக்குத் தண்டனைப் பெற்று தந்துள்ளனர். அதன்படி திருக்கோவிலில் பணியாற்றியுள்ள சிவத்துரோகிகளின் பணியை பறித்துள்ளனர். மேலும் அவர்கள் திருக்கோவிலில் நுழைவதற்கு தடை விதித்துள்ளனர். தவறு செய்துள்ள அதிகாரிக்கு ஜீவிதக்கிற்கு, திருக்கோவிலால் கொடுக்கப்பட்டிருந்த, நிலத்தை பறித்துள்ளனர். அதனை மீண்டும் திருக்கோவிலுக்கு நேரடியாக வரும்படி செய்து கொடுத்துள்ளனர். இப்படி சிவத்துரோகிகளுக்கு கொடுக்கப்பட்டுள்ளத் தண்டனையானது, மேலோட்டமாக பார்க்கின்றபொழுது, சாதிய சமூகப் பொருளாதார, மனம் சம்மந்தப்பட்டத் தண்டனை மட்டும் கிடைத்துள்ளது போன்று காணப்படுகிறது. ஆனால் அவர்களுக்கு மனதளவிலும், சமூகஅளவிலும் கிடைத்துள்ள தண்டனையானது மிகப்பெரியப் பாதிப்பை எற்படுத்தி, உயிருள்ள நடைபிணமாக வாழ்ந்திருக்க வேண்டும் என்பதில் ஐயம் இல்லை.

இராசதுரோகம் (Treason against the king)

இராசதுரோகம் என்பது, அரசர்க்கும், அரச வர்க்கத்திற்கும் எதிராக வஞ்சகம் செய்வது, சதித்திட்டம் தீட்டுவது, அரச சட்டங்களை மீறுவது, அரச செயல்களுக்கு விரோதமாக நடப்பது முதலான தவறுகளை செய்வதாகும். இக்கவறுகளை செய்தவர்கள் நாட்டின் அறிவிக்கப்பட்டக் குற்றவாளிகள் ஆவார்கள். இவர்களை இராசதுரோகிகள் என்றும், நாட்டுத்துரோகிகள் (17) என்றும் அழைக்கப்பட்டுள்ளனர். இராசதுரோககளைப் பற்றிய செய்திகள் கல்வெட்டுகளில் நேரடியாகவும், மறைமுகமாகவும் வந்துள்ளன. உதாரணமாக சோழநாட்டு இளவரசன் இரண்டாம் ஆதித்தக் கரிகாலச்சோழனை வஞ்சகமாக கொலை செய்த பிரம்மாதிராஜர்கள், அரசருக்கு எதிராக சதித்திட்டம்

திட்டியவர்கள். அரசின் அதிகார ஓலையை அவமதித்து, அரச ஓலையைக் கொண்டு வந்தவர்களை அடித்து, அவமானப்படுத்தியவர்கள் இராசதுரோகிகள் என்பதனை நேரடியாக சொல்லப்பட்டுள்ளதை குறிப்பிடலாம். இவற்றைப்போன்று உடையான், கிழான் முதலான வெள்ளான் சமூகத்தைச் சார்ந்த நிலக்கிழான்தார்கள், அரசுக்கு எதிராக ஏதோ ஒரு வகையில் இராசதுரோகம் செய்துள்ளதால், அவர்களது அடிமைகளையும், அவர்களுக்குரிய சொந்த நிலங்களையும் பறித்து, அரசாங்கம் அவற்றை பொது ஏலத்தில் விற்பனை செய்து, அரசக் கருவூலத்தில் செலுத்தச் சொல்லியுள்ள செய்தியின் மூலம் இராச துரோகிகளைப் பற்றிய செய்தி மறைமுகமாக வந்துள்ளதனை அறிந்து கொள்ளமுடிகிறது.

தென் ஆற்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டத்திலுள்ள உடையார்குடியில் அமைந்துள்ள அனந்தஸ்வரர் திருக்கோவிலின் கருப்பகிரகத்தின் மேற்குசுவரில் பொறிக்கப்பட்டுள்ள முதலாம் இராசராசனின் 2 -ஆம் ஆட்சியாண்டுக் (கி.பி. 987) கல்வெட்டில், சோழநாட்டு, இளவரசன் இரண்டாம் ஆதித்தகரிகால சோழனை வஞ்சகமாக கொலைசெய்த பிரம்மாதிராஜர்களைப் பற்றிய செய்து வந்துள்ளது. (18) இதில் வீரநாராயணசதுர்வேதி மங்கலத்தில் வசித்த பிராமணர்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சோமன். இவன் தம்பி இராவிதாசனான பஞ்சவன் பிரமாதிராஜன். இவன் தம்பி இருமுடி சோழ பிரமாதிராஜன், இவர்களுடைய உடன் பிறந்தான மலையனூரான் பஞ்சவன் பிரமாதிராஜன் ஆகிய நான்கு பேர்களும், இரண்டாம் ஆதித்தக் கரிகாலச் சோழனை (கி.பி.960 - 965) வஞ்சகமாக கொலைசெய்த இராசதுரோகிகள் (பாண்டியனைத் தலைகொண்ட கரிகாலச் சோழனைக் கொன்ற துரோகிகள்) என்ற செய்தி வந்துள்ளது. இந்த நான்கு இராசதுரோகிகளுக்கும் முதலாம் இராசராசசோழன் தனது 2-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 987) தண்டனை வழங்கியுள்ளார். அதன்படி இராச துரோகிகள் நான்கு பேர்களும், அவர்களுடைய மக்களும், அவர்களுக்கு பெண் கொடுத்துள்ள (பிள்ளைக் கொடுத்த) மாமன்மார்களும், அவர்களது தாயோடு உடன்பிறந்த மாமன்மார்களும், இனி பிராமணர்கள் என்ற சாதியைச் சார்ந்தவர்கள் இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அவற்றோடு இராசதுரோகிகளின் பெண்கள் மாற்று இனத்தவராகவும், பிள்ளைகள் வேற்று இனத்தவராகவும் சமூகத்தில் கருத வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. மேலும் இராசதுரோகிகளுக்குச் சொந்தமாக உள்ள 6-வீடுகளையும், அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த இரண்டு வேலி 16 மாநிலத்தை (இரண்டே முக்காலே ஒரு மாவும்) 112 - பொற்காசுகளுக்கு விற்று அரசு கருவூலத்தில் செலுத்துவதற்கு கட்டளை இடப்பட்டுள்ளது. அந்தத் தொகையை முதலாகக் கொண்டு வரும் வட்டியில் வீரநாராயணசதுர்வேதிமங்கலத்தில் உள்ள திருக்கோவிலில் தண்ணீர் வைக்கும் (தண்ணீர் அட்டும்) பிராமணன் ஒருவனுக்கும், உணவு உண்ணும் பிராமணர்கள் 15 - நபர்களுக்கும் ஆக 16 - பிராமணர்களுக்கும் செலவு செய்யவேண்டும் என்று உத்தரவு இடப்பட்டுள்ளது.

செங்கல்பட்டு மாவட்டம், வட்டத்திலுள்ள திருவொற்றியூரில் அமைந்துள்ள ஆதிபுரிஸ்வரர் திருக்கோவில் கருவறையின் வடக்கு சுவரில், மூன்றாம் குலோத்துங்கசோழனின் 3-ஆம் ஆட்சியாண்டுக் (கி.பி. 1181) கல்வெட்டில் அரசருக்கு எதிராக சதித்திட்டம் தீட்டியவர்களைப் பற்றிய செய்து

[illegible] (11) இந்த இடமானது [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] சில இராசதுரோகிகளைக் [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible] பெற்றுக் கொண்ட [illegible]
[illegible] பெயர்பெற்றுச் சென்று. அக்கிரக இராசதுரோகிகளை
கண்டறிந்துள்ளதனை அறியமுடிகிறது. ஆனால் இராசதுரோகம் செய்தவர்கள்
யார் என்பதனையும், அவர்கள் என்ன இராசதுரோகம் செய்தார்கள்
என்பதனையும், அவர்களுக்கு எத்தகைய தண்டனை கொடுக்கப்பட்டது
என்பதனையும் அறிவதற்கு அக்கல்வெட்டு உடைந்துள்ளதால் போதுமான
தரவுகளைக் காணமுடியவில்லை.

தஞ்சாவூர் மாவட்டம், சீகாழி வட்டம், சீகாழியில் அமைந்துள்ள
பிரம்மபுரீசுவரர் திருக்கோயில் உள்சுற்றுச் சுவரில் கிழக்கில் [illegible]
இராசராசனின் 9ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 1224) பொறிக்கப்பட்டுள்ள
கல்வெட்டில் இராசதுரோகம் [illegible] [illegible] (12)
இந்த [illegible] நிலையை [illegible] விக்கிரம சோழன் [illegible]
[illegible] பெருந் [illegible] சோழன் இவர்களின்
உறவுமுறையுடையார்கள். இவர்களுடைய பணியாட்கள், அடியவர்கள்
இவர்களுடன் துரோகத்திற்கு உட்பட்டவர்கள் முதலானவர்கள் ஆகக்கூடி
[illegible] [illegible] [illegible] செய்து இராசதுரோகி ஆகியவர்களைக்
குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு தண்டனையாக இவர்களுக்கு சொந்தமான
நிலங்களைப் பறித்து [illegible] [illegible] [illegible]
அவற்றை பொது எதற்கில் விற்பனை செய்வதற்கு [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible] [illegible] [illegible]
அறியமுடிகிறது. இந்த [illegible] [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] இராசதுரோகிகளின் நிலத்தை [illegible]
வாங்கிக் கொள்வதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. இந்த நிலத்தை
[illegible] [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible] உடையான். [illegible]
[illegible] [illegible] [illegible] வேளான் ஆகியோர்கள் [illegible]
[illegible] செய்து, [illegible] [illegible] கொடுக்கப்
[illegible] குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே இந்த இராசதுரோகிகளின்
[illegible] [illegible] [illegible] [illegible] பகுதிகளின்
நிலத்தைப் பறித்து விற்கப்பட்டுள்ளது. இவற்றுக்கு சொந்தமான 10 வேலி
[illegible] [illegible] [illegible] [illegible] உட்பட்டுள்ள
[illegible] [illegible] [illegible] அமைந்திருக்குள்ளது. இதில் 11
[illegible] உடையார் திருப்புகலூர் திருக்கோயிலுக்கு உடையார்க்கு
[illegible] ஆதிசண்டேசுவரர் தேவகன்மிகளுக்கு
[illegible] [illegible]. இடதிலாயம் [illegible]
[illegible] [illegible] [illegible] [illegible]
விற்பனை செய்யப்பட்டுள்ளது. இந்த 20,000 [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible] [illegible] [illegible]
[illegible]. இவற்றை [illegible] [illegible] விற்கப்பட்டுள்ளது [illegible]

பிறிதொரு இராசதுரோகியான விக்கிரம சோழனுக்கு பல ஊர்களில் சொந்தமாக இருந்த 50 வேலி நிலத்தையும், இத்திருக்கோவிலின் தேவர்கன்மிகளுக்கும் சிவபாதசேகரவாசகன்காணி செய்வார்களுக்கும், தேவதான இறையிலி நிலமாக அதிகாரிகள் விற்றுக் கொடுத்துள்ளனர். இவற்றைப்போன்று மற்ற இராசதுரோகிகளின் நிலங்களும் பறிக்கப்பட்டு, அரசபொது ஏலத்தில் விற்கப்பட்டுள்ளதை கல்வெட்டில் விரிவாக சொல்லப்பட்டுள்ளதனைக் காணமுடிகிறது.

தஞ்சாவூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டத்திலுள்ள வலிவலத்தில் அமைந்துள்ள மனத்துணைநாதர் திருக்கோவில் கர்ப்பகிரகத்தின் மேற்கு சுவரில் மூன்றாம் இராசராசனின் 14?-ஆம் ஆட்சியாண்டுக் (கி.பி. 1230) கல்வெட்டில் இராசதுரோகிகளைப் பற்றிய செய்து வந்துள்ளது (21) இதில் வலிவலம், அதன் சுற்றுப் புறத்திலுள்ள ஊர்களில் உள்ள நிலக்கிழார்கள் பரிசைகிழார்கள், பாத்தூர் கிழவர்கள், கிளியூர் உடையார்கள், திணையாகு உடையான் ஆகியோர்கள், அரசுக்கு எதிராக (துரோகிகளாய் பலரையும்) ஏதோ தவறு செய்து அதற்கு தண்டனையாக அவர்களின் நிலம் பறிக்கப்பட்டுள்ளதனை (காணிமாறின நிலம்) அறிய முடிகிறது. இராசதுரோகிகளின் நிலமானது. அருள்மொழிவளநாட்டிலுள்ள, வலிவலம் கூற்றத்தில் உள்ள வலிவலம் மனத்துணைநாயனார் தேவதானம் குலோத்துங்கசோழநல்லூர் நிலகணக்குப் புத்தகத்தின்படி, ஏழு சின்னம் இருந்துள்ளது. அந்நிலம் ஏழுசின்னத்தையும், 33,000 காசுகளுக்கு, காங்கேயராயர், வாணதிராயர், நுளம்பாதிராயர், வங்கத்தரையர், ஈழத்தரையர், புரவரிகரணநாயகம் பந்தணைநல்லூர் உடையார், ஒழுகரை உடையார், முகவெட்டி கிரங்குடையார் ஆகியோர்கள் இருந்து விலைமதிப்பீடு (விலை நிச்சயத்து) செய்துள்ளனர். அந்நிலம் ஏழு சின்னமும், திருக்கோவிலுக்கு திருநாநத்துக்காணியாக மேற்கண்டவர்களின் முன்னிலையில் பொது ஏலத்தில் விற்கப்பட்டுள்ளது. அந்த இராசதுரோகிகளின் நிலம் விலைமதிப்பீடு செய்யப்பட்ட 33,000 காசுகளையும், நுளம்பாதராயரும், இராசராச விழுப்பரையரும் முன்னின்று, இராசராச விழுப்பரையரின் பொறுப்பில் இருக்கும் அரச கருவூலத்தில் (கண்டற் கருவுலகத்து ஒடுக்க) செலுத்தச் சொல்லப்பட்டுள்ளனர். இந்த பத்திரப்பதிவானது, இராசநாராயண மூவேந்தவேளான் (எழுத்திட்டு சாதனம் பண்ணிக் குடுக்கவும்) முன்னின்று கையொப்பம் இட்டு செய்து கொடுத்துள்ளதனை அறியமுடிகிறது.

தஞ்சாவூர் மாவட்டம், சீர்காழி வட்டத்திலுள்ள திருவெண்காட்டில் அமைந்துள்ள சிவதாரணிஸ்வரர் திருக்கோவில் உள்சுற்று சுவரின் மேற்கில் பொறிக்கப்பட்டுள்ள மூன்றாம் இராசராசனின் 18-ஆம் ஆட்சியாண்டுக் (கி.பி. 1234) கல்வெட்டில் இராசதுரோகிகளைப் பற்றிய செய்தி வந்துள்ளது (22) கிடங்கில் உடையான் திருச்சிற்றம்பலமுடையான், திருநட்டமாடி, இவர்கள் உறவுமுறையார்கள், அம்பார் உடையான் திருவலஞ்சுழி உடையான் ஆகியோர்கள் ஊர்கீழ் இறையிலான நிலத்திற்கு நிலவரிகட்டாமலும், திருக்கோவிலுக்கு கொடுக்க வேண்டிய பங்கைக் கொடுக்காமலும், ஏதோ ஒரு வகையில் அரசுக்கு எதிராக செயல்பட்டு, (துரோகஞ் செய்து) இராசத்துரோகியாகியுள்ளனர். அதற்காக அவர்களின் நிலங்கள் (காணிமாறி) பறிக்கப்பட்டு, அபராதம் (தண்டமுண்ட) செலுத்தியுள்ளனர். இராசதுரோகிகள் செய்த இராசகுற்றத்திற்காக, அவர்களின் விவசாய நிலங்களும் (நிலங்களும்)

ஆகியோர் அமைத்துள்ள [illegible] பதிக்கப்பட்டுள்ளன. இவற்றில் [illegible] [illegible] 16-ஆம் ஆட்சியாண்டு (கி.பி. 1234) [illegible] [illegible] செய்து கொள்வதற்கு. திருக்கோயில் [illegible] திருநாமத்துக்காணி [illegible] கொடுக்கப்பட்டுள்ளது. [illegible] விற்பனை செய்து [illegible] காசுகளை [illegible] கொடுக்கப்பட்டுள்ளது. [illegible] [illegible] கொடுக்கப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள [illegible] வட்டத்திலுள்ள [illegible] 21-ஆம் ஆட்சியாண்டு (கி.பி. 1237) [illegible] [illegible] [illegible] [illegible] இராசேந்திர [illegible] செய்து. [illegible] [illegible] [illegible] காசுகளுக்கு விற்பனை செய்துள்ளனர். [illegible] அக்காசு (13,000) பதின்மூன்றாயிரத்தை இராசகருவூலத்தில் (கருவூலத்துக்கு) செலுத்தியுள்ளனர். [illegible] [illegible] செய்தது [illegible] [illegible] திருக்கோயிலுக்குத் திருநாமத்துக்காணியாக விற்பனை செய்தது. [illegible]

இக்கோயில் [illegible] என்ற ஊரில் அமைந்துள்ள [illegible] திருக்கோயிலின் [illegible] 21-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 1237) [illegible] [illegible] [illegible]

அவனிடம் குத்தகைக்கு இருந்துவந்த திருக்கோவிலுக்கு சொந்தமான தேவதான நிலத்தைப் பறித்து கொள்வதற்கு (காணியாற்றின நிலம்) அரசன் கட்டளை (திருவாய்மொழிந்து) இட்டுள்ளார். அதன்படி அம்பர் உடையான் திருவைந்தழி உடையானிடம், (இருமுடி சோழநல்லூரிலிருந்து பிரிந்த தேவதான ஊராகிய (இவ்வூரில் பிரிந்த தானம்) விருநாதநல்லூர், மற்றும் அருவியூர் ஆகிய ஊர்களில்) இருந்துவந்த, ஐந்து வேலி, மூன்று மாகாணி, அரைக்காணி, முந்திரிகை நாலுமா நிலத்தைப் பறித்துள்ளனர். அந்நிலத்திற்கு வயிராதராயர், விலாடத்தரையர், வங்கத்தரையர் ஆகியோர்கள் முன்னின்று, அதற்கு விலை (விலைமதித்ததாக்கு) மதிப்பிட்டுள்ளனர். பின்னர் அந்நிலத்தை பொது ஏலத்தில் (இராசராச பெருவிலை விற்கவும்) திருமாகளாமுடையாருக்கு, ஆதிசண்டேசுவரர் பேரில், தேவதான திருநாமத்துக்காணியாக, இருபதினாயிரத்தி எழுநூறு. (20,700) காசுகளுக்கு (விலைபாக விலை மதித்ததாக) விற்பனை செய்துள்ளனர். பின்னர் அக்காசு இருபதினாயிரத்தி எழுநூறும் (20,700) இராசகருவூலத்தில் (கருவூலத்து) செலுத்தி, அரசாங்கனை கருவூலத்தின் அதிகாரிகளைக் கொண்டு தனிக்கை (மாளிகை தாலைத்து கிறியருக்கவும்) செய்வதற்கு சொல்லியுள்ளனர். இவற்றை வயிராதராயர், விலாடத்தரையர். வங்கத்தரையர், வேசாலிப்பல்லவரையர், பாண்டியராயர், வைராதிராயர், சிங்களராயர், சோமன் முதலான சிற்றரசர்களும், புரவுவரி சிறீகரணநாயகம் சீரங்குடையான், புரவுவரி கணக்கு முகவெட்டித் திருவிளக்கன் போன்ற உயர் அதிகாரிகளும் முன்னின்று, இராசதுரோகியிடம் இருந்து வந்த திருக்கோவிலின் தேவதான குத்தகை நிலத்தை, திருக்கோவிலுக்குத் திருநாமத்துக்காணியாக விற்பனை செய்து பத்திரப்பதிவு (பிரமாணம் குடுக்கவும்) செய்து கொடுத்துள்ளதனை அறியமுடிகிறது.

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டத்திலுள்ள சிவபுரத்தில் அமைந்துள்ள சிவபெருமானின் திருக்கோவில் மண்டபத்தின் கிழக்கு சுவரில் பொறிக்கப்பட்டுள்ள மூன்றாம் இராசராசனின் 23-ஆம் ஆட்சியாண்டுக் (கி.பி. 1239) கல்வெட்டில் அரசரின் அதிகார ஓலையை அவமதித்து, அரச ஓலையைக் கொண்டு வந்தவர்களை அடித்து, அவமானப்படுத்திய இராசதுரோகிகளைப் பற்றிய செய்தி வந்துள்ளது. (25) இத்திருக்கோவிலில் சிவத்துரோகம் செய்துள்ள திருச்சிற்றம்பலபட்டனும், இவனுடன் பணியாற்றியுள்ள பிரிதொரு சிவப்பிராமணனும், இம்மன்னனின் பிறந்த நட்சத்திரமான மூல நட்சத்திரத்தில் கடவுளை எழுந்தருளிவிப்பதற்கு கொண்டு வந்த அரச ஓலையை வாங்க (திருமுகத்தை மறுத்தும்) மறுத்துள்ளனர். அதோடு அரசனின் கட்டளையைக் கொண்டு வந்தவர்களை (அடிப்பித்தும்) தண்ணீரில் வைத்து அமுக்கி (நீரிலே அமுக்கிவித்து) அரச ஓலையைப் பிடுங்கிக் கொண்டு (திருமுகத்தைப் பறித்துக் கொண்டு) ஓட செய்துள்ளனர். மேலும் அரசுக்கு செலுத்தவேண்டிய நிலவரிகளை (நிலகடமைகளை) கேட்க வந்தவர்களை மோசமான வார்த்தைகளால் (துரோகமான வார்த்தை சொல்ல) திட்டியும் உள்ளனர். இதனால் அந்த இராச துரோகிகள் பணியாற்றிவந்த, திருக்கோவிலின் திருவாகிகள், அவர்கள் திருக்கோவிலில் செய்து வந்த பணியையும், அவர்களுக்கு ஜீவிதத்திற்காக கொடுத்திருந்த நிலங்களையும் பறித்துக் கொண்டு, சாதிக்கட்டுப்பாடு விதித்து தண்டனைக் கொடுத்துள்ளனர்.

இராசேந்திர[illegible] [illegible] கல்வெட்டுகள். [illegible]

[illegible]

இவற்றைப் போன்று சீகாழி, வல்லம், திருவெண்காடு, கோயில் திருமாகாளம் ஆகிய ஊர்களில் காணப்படும் கல்வெட்டுகளின் மூலம் வெள்ளாளர் சமூகத்தைச் சார்ந்த கிழான், உடையான் போன்ற பெரும் நிலக்கிழார்கள் [illegible] ஒரு வகையில் பொருளாதார மேம்பாடு அடைந்து [illegible] [illegible]

[illegible]

அதிகாரிகளையும் முன்னிலைப்படுத்தி செயல்படுத்த அரசர் உத்தரவு இட்டுள்ளார். இதனை உறுதிப்படுத்துகின்றவகையில் தற்பொழுதுள்ள பாண்டிய ஆட்சியருக்கு இணையான அதிகாரிகள் (மூவேந்தவேளாண்) மற்றும் உயர்நிலையில் இருக்கும் புரவுவரித்திணைக்களம் முகவெட்டி போன்றவர்கள் முன்னின்று, அவர்களுக்குத் தண்டனை வழங்கியுள்ளதனைக் காணமுடிகிறது. மேலும் அரசர் தனது உத்தரவை செயல்படுத்துகின்றபொழுது, தனது ஆட்சிக்கு எதிராக, சமூகத்தில் வலிமையான பொருளாதாரப் பின்னணியும், மதிப்பும் இருந்து வந்த அவர்களிடமிருந்து, எதிர்ப்போ, கிளர்ச்சியோ, எந்த வகையிலும் வந்து விடக்கூடாது என்பதற்காக, அவர்களுக்கு இராசத்துரோகி என்ற குற்றம் சுமத்தி, சமூகத்தில் அவர்களிடமிருந்த ஒட்டுமொத்த சக்தியையும் பலவீனப்படுத்தியுள்ளார். மேலும் அக்கால சமூகத்தில் பொருளாதாரபலமும், சமூகமதிப்பும் உள்ள நில உடைமையாளர்களை, அவர்களின் அதிகாரம் குறைந்த நிலையில் இருக்கும் உள்ளூரில் உள்ளவர்கள் எந்த வகையிலும், அவர்களை எதிர் கொள்ள அச்சம் கொண்டிருப்பது இயல்பான ஒன்றாகும். அதனால் அக்குற்றவாளிகளின் நிலத்தை பொது ஏலத்தில் வாங்கிக் கொள்வதற்கு வேறு யாரும் முன்வந்திருக்க மாட்டார்கள். ஆதலால் அவர்களின் நிலங்களைத் திருக்கோவில் நிருவாகமே பொது ஏலத்தில் வாங்கியுள்ளதாகக் கருதமுடிகிறது. ஒருவேளை திருக்கோவிலில் இராசத்துரோகிகள் தங்களது செல்வாக்கையும், பலத்தையும் மறைமுகமாகப் பயன்படுத்தி, அவர்களின் நிலத்திற்கு விலை மதிப்பிடப்பட்டு, விற்பனை செய்யப்பட்டத் தொகையை, அவர்கள் மீண்டும் எடுத்துக்கொண்டு சென்று விடக்கூடாது என்பதற்காக, பாதுகாப்பு கருதி, அத்தொகையை திருக்கோவில் பண்டாரத்தில வைக்காமல், அரசக் கருவூலத்தில் வைத்துள்ளனர். மேலும் அப்பணத்தைக் கருவூலத்தின் அதிகாரிகளைக் கொண்டு, அதனை கணிக்கை செய்வதற்கும் உத்தரவு இட்டுள்ளனர். அரசர் தனது நிருவாகம் நாட்டில் செம்மையாக நடைபெறவேண்டும் என்பதற்காகவும், இதுபோன்ற தவறுகளை வேறுயாரும் செய்யக்கூடாது என்பதற்காகவும், அத்தகைய தண்டனையைக் கொடுத்துள்ளார். மேலும் இத்தகையத் தண்டனையின் வாயிலாக அரசையும், திருக்கோவில் நிருவாகத்தையும் ஏமாற்றுவதற்கு நினைக்கும் நில உடைமையாளர்களுக்கு எச்சரிக்கை மணி அடிக்கப்பட்டதாகவும் கருதலாம். இவற்றுடன் திருக்கோவிலுக்கு சொந்தமான நிலங்களை வைத்திருக்கும் குத்தகைத்தாரர்கள், தண்டனை அடைந்தப் பிறகு, அவர்களிடமிருந்துப் பறிக்கப்பட்ட நிலமானது, மீண்டும் திருக்கோவிலுக்கு வந்தடைந்துள்ளது. இதனால் குற்றம் செய்தவரின் மூலம் இழந்த வருமானத்தை திருக்கோவில் மீண்டும் ஈடுசெய்துள்ளதனை அறியமுடிகிறது. இவற்றால் அரசுக்கும், திருக்கோவில் நிருவாகத்திற்கும் நிருவாகத் தொந்தரவு ஏற்பட்டிருந்தாலும், அவர்கள் பொருளாதார முறையில் பயன் பெற்றுள்ளனர் என்பதில் ஐயமில்லை. இதுபோன்ற தவறுகளை செய்துள்ளவர்கள் பெரும்பாலும் வெள்ளான் சமூகத்தைச் சார்ந்தவர்களாக உள்ளார்கள். இவர்களிடமிருந்து பறிக்கப்பட்டுள்ள நிலங்கள், திருக்கோவிலுக்கு திருநாமத்துக் காணியாகவும், ஜீவிதக் காணியாகவும் அல்லது வேறு ஒரு காணியாகவும் மாற்றப்பட்டு, மீண்டும் வெள்ளான் சமூகத்தைச் சார்ந்த வேறு ஒருவரிடம், அதனின் குத்தகை உரிமைக் கொடுக்கப்பட்டுள்ளதனைக் காண முடிகிறது. இதன் மூலம் திருக்கோவில் நிலம் மீண்டும் திருக்கோவிலுக்கே

உதவியுடன் நடந்துள்ளதனை அறிய முடிகிறது. அந்நிலங்களுக்கு விலைமதிப்பிட்டு, விற்பனை செய்கின்றபொழுது, மூவேந்தவேளான் முதலான உயர் பொறுப்பில் இருக்கும், உயர் அதிகாரிகள் கையொப்பம் இட்டு, பத்திரப்பதிவு செய்து கொடுத்துள்ளனர். இந்தச் செயல்களை முன்னின்று செய்து கொடுத்துள்ளவர்களில், பெரும்பாலானோர்கள் வெள்ளான் சமூகத்தைச் சார்ந்தவர்களாகவே அமைந்துள்ளனர். இதனை உறுதிப்படுத்துவதற்கு, மூவேந்தவேளான் முதலான உயர் அதிகாரிகளும், உடையான், கிழான் முதலான நிலஉடைமையாளர்களும் அச்சமூகத்தைச் சார்ந்தவர்களாக இருந்துள்ளதனைக் குறிப்பிடலாம். ஒட்டுமொத்தத்தில் நிலம் சார்ந்த பணிகள் வெள்ளாளர் சமூகத்தவர்களிடம் இருந்துள்ளதனை அறியமுடிகிறது. அதே வேளையில் நில உடைமை சமூகத்தில் உயர்ந்த நிலையில் இருந்தவர்கள், செய்த பொருளாதாரம் சம்மந்தப்பட்டுள்ள இராசதுரோகத்திற்கு, அவர்களின் பணியாட்கள், வேலையாட்கள் முதலானோர்களையும், நிலம் முதலானவற்றையும் பறித்துக் கொண்டு, சமூகத்தின் கடைநிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளதனைக் காணமுடிகிறது. இதனால் இராசக் குற்றம் செய்தவர்கள், சமூக அளவிலும், பொருளாதார நிலையிலும், மனதளவிலும் பெரிதும் ஈடு செய்ய முடியாத இழப்பினை சந்தித்துள்ளனர் என்ற முடிவிற்கு வரமுடிகிறது.

கிராமத்துரோகம் (sin against the village)

கிராமத்துரோகம் என்பது, ஒரு ஊரின் நல்ல செயல்களின் முடிவிற்கு எதிராக நடந்துகொள்ளும் நபரின் நடவடிக்கையாகும். இத்தகைய துரோகங்களைச் செய்தவர்களைப் பற்றிய செய்திகள் கல்வெட்டுகளில் அரிதாகவே வந்துள்ளன. தஞ்சாவூர் மாவட்டம், மாயவரம் வட்டத்திலுள்ள தலைச்சங்காடு என்ற ஊரில் அமைந்துள்ள சங்காரண்யேசுவரர் திருக்கோயில் உள்சுற்று சுவரின் வடக்கில் பொறிக்கப்பட்டுள்ள மூன்றாம் இராசராசனின் 5-ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 1221) கல்வெட்டில் கிராமத்துரோகம் பற்றிய செய்தி வந்துள்ளது. தலைச்சங்காட்டில் கிராமகாவலனாகப் பணியாற்றுபவருக்கு (கிராம காவலுடைய பாதுகாப்பிற்கு) குடியிருப்பு மக்கள் இல்லாமலும், முன்னர் அவருக்கு கொடுத்து வருகின்ற ஊதியம் (ஜீவனம்) பற்றாமலும் (போதாமையாலும்) இருந்துள்ளது. இதனை நிவர்த்தி செய்வதற்கு தலைச்சங்காடு உடையார், ஊர்ச்சபைக்கள் முதலானோர்கள் ஒன்றுகூடி முடிவு செய்து, ஊர்காப்பானுக்கு நான்கு வேலி நிலம் (இந்நிலம் நால்வேலியும் பற்றி அநுபவிக்கக் கடவதாகவும்) கொடுத்துள்ளனர். அந்நிலம் நான்கு வேலி நிலத்தையும், அநுபவிக்கும் பொழுது தேவர்கள், ஆழ்வார்கள், முதலிகள் முதலானவர்களுக்கு தானமாகவோ, விற்பனை செய்யவோ கூடாது (இந்நிலம் தேவர்களுக்கு ஆகல், ஆழ்வார்களுக்கு ஆகல், முதலிகளுக்கு ஆகல், குடுத்தல், விற்றல் செய்யக்கடவது அல்லதாகவும்) என்ற கட்டுப்பாட்டுடன் கொடுத்துள்ளனர். இதனை மீறி ஊர்காப்பான் செயல்பட்டால், அவன் ஊர்கட்டுப்பாட்டை மீறி செயல்பட்டதாகக் கருதி, அவனை கிராமத்துரோகி என்று தீர்மானித்துத் தண்டனைக் கொடுப்பதற்கு முடிவுசெய்துள்ளனர். இந்தத் தண்டனையாக அவனுக்கு கொடுத்திருக்க நான்குவேலி நிலத்தையும் பறித்துக் கொள்ள வேண்டும் என்றும் முடிவு செய்துள்ளனர். மேலும் அந்நிலத்தை ஊரின் முடிவை மீறி யாரேனும் தானமாகப் பெற்றுக் கொண்டாலோ, விலைக்கு வாங்கி கொண்டாலோ, ஒத்திவைத்து, பெற்றுக் கொண்டாலோ (விற்றல், இடுதல்

செய்யக்கடவது அல்லாதாகவும், கொண்டாற்கு ஸேமம் இன்றியே ஒழியக் கடவதாகவும்) அவரும் கிராமத்துரோகியாக (கிராமத்துரோகம் செய்தார் உண்டாகில்) கருதப்படுவார் என்றும் முடிவு செய்துள்ளனர். இப்படி கிராமத்துரோகம் செய்தவர்க்குத் தண்டனையாக, அவரிடம் இருக்கும் நிலத்தைப் பறித்து (நியோகம் செய்தவன் காணிமாற்றி செய்தாற்கு இடக்கடவதாகவும்) ஊர்க்காப்பானுக்கு கொடுத்துள்ள, நான்கு வேலி நிலத்துடன் சேர்த்து விட வேண்டும் (இன்னிலம் நால்வேலியும் பக்கமடங்காக சேர நிற்க கடவதாகவும் சொன்னோம்) என்றும் ஊரிலுள்ள சுமார் 70 நபர்கள் ஒன்றுகூடி முடிவு செய்து, கையொப்பமிட்டுள்ளனர். இப்படி கையொப்பம் இட்டவர்கள் பிராமணர்சபை உறுப்பினர்களாகவும், வெள்ளாளன் ஊர்சபை உறுப்பினர்களாகவும் இருந்துள்ளதனை, அவர்களின் பெயர்களையும், பட்டங்களையும் கொண்டு அறிய முடிகிறது.

தஞ்சாவூர் மாவட்டம், மாயவரம் வட்டத்திலுள்ள திருமெய்ஞானம் என்ற ஊரில் அமைந்துள்ள ஞானபரமேஸ்வரர் திருக்கோவில் மண்டபத்தின் தெற்கு சுவரில் பொறிக்கப்பட்டுள்ள மூன்றாம் இராசராசனின் 17-ஆம் ஆட்சியாண்டுக் (கி.பி. 1233) கல்வெட்டில் கிராமத்துரோகம் பற்றிய செய்திவந்துள்ளது. (27) நாலூரானா வானவன்மாதேவி சதுர்வேதி மங்கலத்திலுள்ள பெருங்குறி மகாசபையார்கள், அவ்வூரிலுள்ள பாண்டன்நேரி என்ற இடத்தில் இருக்கும் புளியமரத்தின் நிழலில் கூடியிருந்து (புளி அடியிலே) ஊரின் நன்மைக்காக சில முடிவுகளை (விவஸ்தை) எடுக்கின்றனர். அதன்படி அவ்வூரில் (நம்மூரிலே) இருக்கும் (ஊரார்கள்) வெள்ளாளர் சமூகத்தவர்கள், அதில் இவ்வூர் பிராமணர்களுக்கும் (நம்மூர்க்கும்) கடவுளுக்கும் (திருமெய்யான முடையாருக்கும்) திருக்கோவில் தொடாபாணவற்றிற்கும் (திருமுற்றங்கள்) எந்தவிதத்திலும் விரும்பத்தகாதச் செயல்களைச் செய்யக்கூடாது (தவறை செய்யாதொழியவும்) என்று முடிவு செய்துள்ளனர். அப்படி மீறி செயல்பட்டால் வெள்ளாளர் சமூகத்தவர்கள் (காரியஞ் செய்தாருண்டாகில் கிராமத்துரோகிகள்) கிராமத்துரோகிகள் என்ற அவப்பெயருக்கு உட்பட்டவர்கள் என்றும், அவர்களுக்குத் தண்டனையாக என்ன முறை உள்ளதோ (பட்டதும் பட்டுத்தரவும்) அதன்படி அவர்கள் தண்டனைப் பெறவேண்டும் என்ற முடிவும் செய்துள்ளனர். மேலும் இத்தீர்மானம் வருடாவருடம் (ஆட்டை வர்ணமாக நிற்க கடவோமாகவும்) பின்பற்ற வேண்டும் என்றும் முடிவு செய்துள்ளனர். இந்த தீர்மானத்தின்படி யாரேனும் நடப்பதற்கு பிராமணர்கள் உடன்படவில்லை என்றால் அவர்களும், சிவனைத் தொட்டுவழிபடுவதற்கு தகுதியற்றுள்ள வெள்ளாளர்களைப் போன்று (இவர்களுடன் ஸிவஸ்ரீஸாதிகள் தவுரக்கடவதாகவும்) கருதப்படுவார்கள் என்று ஊரிலுள்ள அனைவரும் (ஸர்வ்வரும்) கையொப்பம் இட்டும் (எழுத்திட்ட) மகாசபையார்கள் (மஹாஸபாநியோகம்) முடிவுசெய்துள்ளனர்.

தஞ்சாவூர் மாவட்டம், நாகப்பட்டினம் வட்டத்திலுள்ள செம்பியன்மாதேவி என்ற ஊரில் அமைந்துள்ள கைலாசநாதசுவாமி திருக்கோவிலிலுள்ள, சந்திரசேகரசுவாமி சன்னிதியின் மேற்கு சுவரில் பொறிக்கப்பட்டுள்ள மூன்றாம் இராசராசனின் 17?ஆம் ஆட்சியாண்டுக் (கி.பி.1233) கல்வெட்டில் கிராமத்துரோகம் பற்றிய செய்தி வந்துள்ளது. (28) அருண்மொழிதேவவளநாட்டிலுள்ள, அளநாட்டில் இருக்கும்

செம்பியன்மாதேவி சதுர்வேதிமங்கலத்தின் பெருங்குறி மகாசபையார்கள், ஊர்கூட்டம் கூட்டுவதற்கு, ஏற்படுகின்ற அதிக செலவை தவிர்ப்பதற்கு முடிவு செய்துள்ளனர். அதன்படி இச்சபைக்கூட்டம் பகலிலும், இரவிலும் முன்னர் கூடியதால் (முன்பு பகலிலும் இரவிலும் அம்பலமிருந்து) சபைக்கு அதிக செலவு ஏற்பட்டு ஊர்வரியும், அரசவரியும் (கெட்டு போந்தமையில்) நஷ்டம் அடைந்துள்ளது. மேலும் இரவு நேரத்தில் கூட்டம் கூடியபொழுது (இரா அம்பலம் ஏறினால் உபஹறதியும் உண்டாகி) இரவு நேரத்தில் எரியும் விளக்கிற்கு ஆகும் செலவு அதிகமாகியுள்ளது. ஆதலால் இரவு நேரத்தில் கூட்டம் கூட்டும்பொழுது, விளக்கு எரிப்பதற்கு பயன்படும் எண்ணைக்கு அதிக செலவு (அம்பலவிளக்கெண்ணைக்கு ஸபாவினியோகம் மிகுதிபட்டு இருக்கையாலும்) ஏற்பட்டுள்ளதால், இனி இரவில் கூட்டம் கூட்டுவதைத் தவிர்த்துவிட்டு, இந்த நாள் முதற்கொண்டு, பகல் நேரத்தில் மட்டும் கூட்டம் கூட்ட வேண்டும் என்று தீர்மானம் செய்துள்ளனர். இந்த தீர்மானத்தை இச்சபையில் உள்ளவர்கள் மீறினால் அவர்கள், ஐந்து வருடங்களுக்கு இந்த சபையில் உறுப்பினராக இருப்பதற்கு தகுதியற்றவர்கள் என்றும், இதனை செய்வதற்கு தயங்குபவர்களை கிராமத்துரோகி என்று முடிவு செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும் அவர்களுக்கு கொடுக்கும், தண்டனையை அடைவார்கள் (இப்படி தவிரச் செய்தார் உண்டாகில் கிராமதுரோகிகள் பட்டது படக் கடவதாகவும் விவஸ்தைப் பண்ணினோம் பெருங்குறி மஹா சபையோம்) என்றும் மகாசபையார்கள் முடிவு செய்துள்ளனர்.

கிராமத்துரோகம் பற்றி தலைச்சங்காடு கல்வெட்டில், ஊரில் உள்ளவர்களை பாதுகாக்க நியமிக்கப்பட்ட ஊர்காப்பனின் நன்மைக்காக ஊர் மக்களால் கொடுக்கப்படுகின்ற ஊர்பொது நிலத்தை தவறாகப் பயன்படுத்துபவர்களுக்கும், கிராமக் கட்டுப்பாட்டை மீறுகின்றவர்களுக்கும் கிராமத்துரோகி என்ற அவப்பெயர் சூட்டப்பட்டுள்ளதனை அறியமுடிகிறது. இதற்கு தண்டனையாக அவர்களுக்கு சமூகம் சார்ந்த பொருளாதார இழப்பீடு ஏற்படுத்தப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. திருமெய்ஞானம் கல்வெட்டின் மூலம் பிராமணர்களுக்கும், திருக்கோவிலுக்கும் தீங்கு செய்ய நினைப்பவர்கள் கிராமத்துரோகிகள் என்று முடிவு செய்துள்ளது. வெள்ளாளர் சமூகத்தின் மீது பிராமணர்கள் செலுத்தியுள்ள ஆதிக்கத்தினையும், சாதிய பாகுபாட்டையும் உணரமுடிகிறது. இது ஏறக்குறைய தீண்டாமையின் கடினத்தன்மையைப் புலப்படுத்துகிறது. செம்பியன்மாதேவி கல்வெட்டில் அக்காலத்தில் ஊர்சபையின் நிருவாகத்தில், பொருளாதாரச் சிக்கனத்தை கடைப்பிடிக்கத் தவறியவர்களை, கிராமத்தின் முடிவிற்கு எதிராக நடப்பவர்கள் என்று கருதி, அவர்கள் கிராமத்துரோகி என்று முடிவு செய்து அவர்களுக்கு கொடுக்கும் தண்டனையை கொடுப்பதற்கு எச்சரித்துள்ளதனை அறியமுடிகிறது. இவற்றின்மூலம் ஒவ்வொரு ஊர்சபையிலும் எடுக்கும் முடிவுகளுக்குத் தக்கவாறு கிராமத்துரோகம் தீர்மானிக்கப்பட்டுள்ளதை உணரமுடிகிறது.

இனத்துரோகம் (sin against the Descent)

இனத்துரோகம் என்பது, தன்னுடைய இனம், குலம், வருக்கம், வமிசம், பரம்பரை, பரிவாரம், சாதி, கூட்டம், உற்றார், உறவினர், பந்தம் முதலானவற்றிற்கு செய்கின்ற மோசடி என்று பொருள் கொள்ளலாம். இவற்றிற்கு செய்கின்ற மோசடிப் பேர்வழிக்கு இனத்துரோகி என்று பெயராகும்.

இனத்துரோகிகளைப் பற்றிய செய்திகள் பெரும்பாலும் கல்வெட்டுகளில் ஓம்படைக்கிளவியில் வந்துள்ளன. இதற்கு எடுத்துக்காட்டாக தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டத்திலுள்ள ஆடுதுறையில் அமைந்துள்ள அபராதரக்ஷகேஸ்வரர் திருக்கோவிலின் இரண்டாம் கோபுரத்தின் வலதுபக்கப் நுழைவாயிலில் காணப்படும் கி.பி. 15 - ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டு ஒன்றில் இனத்துரோகியைப் பற்றிய செய்தி வந்துள்ளதனைக் குறிப்பிடலாம் (29)

குருத்துரோகம் (sin gainst the priest)

குருத்துரோகம் என்பது அத்தியாபகர், ஆச்சாரியர், உபாத்தியார், கிரமவித்தர், ஞானசாரியரார், சிக்சகர், பட்டர், பண்டிதர், போதகர், யமுனாசாரியர், வக்காணிபட்டர், வாத்தியார் முதலான பெயர்களில் அழைக்கப்படுகின்ற, ஆசிரியர்களுக்கு செய்யும் மோசடியாகும். இவர்களில் புராணத்தில் பிரகஸ்பதி, தேவர்களுக்கு குருவாகவும், சுக்கராச்சாரியார் அசுரர்களுக்கு குருவாகவும், துரோணச்சாரியார் பாண்டவர்களுக்கு குருவாகவும், ஈசானசிவபண்டிதர், சர்வ சிவபண்டிதர், ஈஸ்வரசிவா முதலானவர்கள் சோழர்களுக்கு குருவாகவும் இருந்து, அவர்களை நல்வழிப்படுத்தி வந்துள்ளனர். இவர்கள் அரசக் குருவாகவும், சமயத்தின் குருவாகவும், பாடசாலையில் போதிக்கும் போதகராகவும் இருந்துவந்துள்ளனர். எல்லா சமூகத்திலும் உயர்ந்த இடத்தில் வைத்துப் போற்றப்பட்டு வருகின்ற, ஆசிரியர்களைக் கொலை செய்தவன், நிந்தனை செய்தவன், பழித்தவன், குருவின் இல்லாளை அடைய நினைத்தவன் முதலான தவறுகளைச் செய்யும் பாதகன் குருத்துரோகி ஆவான். இவர்களைப் பற்றிய செய்தி ஒரு சில கல்வெட்டுகளில் ஓம்படைக்கிளவியில் மட்டும் வந்துள்ளது. அவற்றில் கி.பி. 15-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டு ஒன்றில் குருத்துரோகம் செய்தவன், பஞ்சமாபாதகம் செய்தவன் என்று வந்துள்ளது (30)

இதன் மூலம் குரு என்கிற மதிப்புமிக்க ஆசிரியர்க்கு எந்தவிதத்திலும் கேடுசெய்யக்கூடாது என்ற படிப்பினையை கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

இதுவரையில் பார்க்கப்பட்டுள்ள கல்வெட்டுகளில் சிவத்துரோகம், இராசத்துரோகம், கிராமத்துரோகம், இனத்துரோகம், குருத்துரோகம் முதலியவற்றை செய்தவர்கள் யார் என்பதனைப் பார்க்கின்றபொழுது, சிவத்துரோகம், மற்றும் இராசதுரோகம் செய்தவர்கள் சமூகத்தில் உயர்ந்த தகுதியில் இருந்த படித்தவர்களும், நிலக்கிழார்களும், செல்வாக்கு மிக்கவர்களும் அரச பதவி வகித்தவர்களும் என்பது தெள்ளத்தெளிவாக அறியமுடிகிறது. மேலும் எப்படிப்பட்டத் தண்டனை அவர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்பதனையும் அறிந்து கொள்ள முடிகிறது கிராமத்துரோகம், இனத்துரோகம், குருத்துரோகம் போன்றவற்றை யாரும் செய்துள்ளதாகச் சான்றுகள் நேரடியாக கிடைக்கவில்லை. ஆனால் இப்படிப்பட்டத் தவறுகள் செய்யக் கூடாது என்றும், அவர்களுக்கு என்னத் தண்டனைக் கொடுக்க வேண்டும் என்றும், ஊர்சபை கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. இத்துரோகங்களை செய்தவர்களின் ஆண்களை தவிர்த்து, பெண்களில் யாரும் செய்துள்ளார்களா என்ற நோக்கத்தில் பார்க்கப்பட்ட பொழுது, அப்படி ஒன்றும் இருப்பதாக தெரியவில்லை. அதேசமயத்தில் ஆண்துரோகிகளுக்கு கொடுக்கும் தண்டனையின் பொழுது, அவர்களைச் சார்ந்தப் பெண்களும்,

அத்தண்டனையை அனுபவித்துள்ளனர். தாம் வாழ்வதற்காக பிறரைக் கொடுப்பவர்களுக்கும், சமூகத்தில் நேரடியாகவும், மறைமுகமாகவும் பிறருக்கு கொடுத்து வரும் இன்னல்களுக்கும், துரோகங்களுக்கும் நிச்சயமாக தண்டனை உண்டு என்பதனை அறிந்து கொள்ள முடிகிறது. மேலும் தாம் செய்துள்ள தவறுகளை அனைத்து வகையான செல்வாக்குகளாலும் மறைத்துள்ளவர்களுக்கும், மறைப்பதற்கு நினைப்பவர்களுக்கும் ஒரு நாள் தண்டனை நிறைவேற்றப்படும் எனவும் நம்பப்படுகிறது.

அடிக் குறிப்புகள்

1. தமிழ்சொல் அகராதி, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை. பக். *307, 1017, 1378, 1986, 2408, 2663, 2665, 3425.*
   கம்பராமாயணத்தில் **குருவின்வாசங்கொண்டு கொன்றவன்.**
   வில்லிபுத்தூரார் பாரதத்தில் (4.34), **திட்டதுய்மன் என நின்ற குருத்துரோகி கொன்றன்.**

2. தமிழ்சொல் அகராதி, சென்னைப்பல்கலைக் கழகம், சென்னை, பக் 2408
   தமிழ்-ஆங்கிலச் சொல்லகராதி, ஆசியன் எசுகேசனல் சர்வீஸ், புதுடெல்லி, பக் 607.
   உபதேசகா -ல் **பாயவெண்புற நிலத்துழல் பஞ்சபாதகரே.**

3. தமிழ் சொல் அகராதி, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை பக். 1986.

4. தமிழ்-ஆங்கில சொல்லகராதி ஆசியன் எசுகேசனல் சர்வீஸ், புதுடெல்லி, பக். 607.

5. மோனியர் வில்லியம்ஸ், **சமஸ்கிருதம் - ஆங்கில சொல்லகராதி,** பக் 797.
   பிரம்மகத்தியா சுறாபாணம் ஸ்தேயம் குரு அங்கனாமகா பாதக யாங் ஆகு சம்சர்க் சாபி தைசகா.

6. ASIAR-*1994-05,* P. *140.* முதலாம் பராந்தக சோழனின் உத்திரமேரூர் கல்வெட்டில்.

7. ARIEp, 1937 B; no 207.

8. மதுரைத்தமிழ் பேரகராதி, தொகுதி - I பக். 677/ 931

9. ARIE p. 1932 B; no 115, **10.**ARIE p. 1929 B; no 189, **11.**ARIE p. 1912 B; no 490, ARIE p. 1913 B; no 106, **12.** ARIE p. 1927 C; no. 308 page 84. **13.**ARIE p. 1927 B; no 279, **14.**ARIE p. 1913 B; no 06. **15.** ARIE p. 1913 B; no 36, **16.**ARIE p.1929 B; no249, **17.** ARIE p.1929B; no 249, **18.** EP, IND, vol: XXI, PP - 165 - 170, **19.** ARIE p.1921, Para 31, **20.** ARIE p.1918 B; no393, **21.** ARIE p.1911 B; no 112, **22.** ARIE p 1918 B; no 506, **23.** ARIE p. 1917 B; no246, **24.** ARIE p. 1917 B; no 246, **25.**ARIE p. 1927 B; no 279, **26.** ARIE p. 1925 B; no 207, **27.** ARIE p. 1910 B; no 332, **28.** ARIE p.1925 B; no 500, **29.** ARIE p. 1913 B; no 36, **30.** ARIE p. 1937 B; no 207

லாக்கப்

பாழடைந்த கைலாயப் பொந்தின் அடைப்பு தகர்த்து
வந்திருந்தான் கடவுள் சோர்வோடு நேற்று
பசித்துக் கிடந்த வயிற்றிரைச்சலடக்க
பிச்சை கேட்டு கோயிலடி நின்ற
குஷ்டரோகியின் கையிலிருந்த படையலைப் பறித்துத் தின்றான்
தூக்கிக் கட்டிய மடிசார்களிடை தெரியும் கெண்டைக் கால்களில்
காமங் கொண்டு சுயமைதுனஞ் செய்து சுருங்கித் தொங்கும் குறியோடு
துண்டு பீடி சிகரெட் பொறுக்கியடித்து மூத்திரச் சந்துகளில் உலாவிக் கிடந்தான்.
சாலையோரக் குடிசையுள் நுழைந்து நாலு குப்பி பட்டையடித்து
போதையேறி வயிரெறிய சால்னாக் கடை நுழைந்து
மாட்டுக்கறி, சுட்ட ஈரல் குடல் என குழைத்துச் சுவைத்து
கனன்று திமிரும் வெறிக் கண்களோடு
குதித்தாடித் தெருவில் கூத்திட்டான்
ங்கோத்தா எவன்டா இருக்கான் என்னைக் கேட்க?
நைந்த புலித்தோல், செத்தழுகும் நாகம் இற்றுத் தொங்கும் முப்புரி
அத்தனையும் அவுத்தெறிந்துவிட்டு சிக்குநாத்த சடைமுடி விரித்து
ஆச்சாரம் காக்கும் பாப்பாரத் தெருவில் லங்கோடு தெரிய
ஓடியசாமி பற்றி சட்ட ஒழுங்கர் சிலர் அவசர போலிசுக்கு போன் போட்டனர்
கற்புடை மாதர் கிளப்புகளை கடந்து கடைசி சந்து வேசியிடம்
வெகுநேரம் கெஞ்சி கூடிச்சுகிக்க குனிந்த சாமியிடம்
சங்கம் அளித்த ஆணுறையை நீட்டி எய்ட்ஸ் காப்பென
யோனியுயர்த்தி முயங்கச் சொன்னாள்
காண்டமும் நானே, எய்ட்சும் நானே என முண்ட முயன்றவனை
காசெங்கே? பொறுக்கி நாயே ஓசியில ஏறிப்போக இதென்ன
உங்கோயா வீட்டு சரக்காவெனத் தெருவில்
சவுட்டித் தள்ளி கதவடைத்தாள் பாலியல் பாட்டாளி
நாயாய் ஓலமிட்டு உடுக்கணங்களோடு கணமாய் தேடி
ஓடிபோன தாயோளிக் கடவுளின் மென்னியைப் பிடித்தமுக்கி
முட்டிக்கு முட்டி தட்சி சமூக அமைதி குலைத்தாய் போட்ட
பக்திமான் பரஞ்சோதி சைவப் பிள்ளையிடம்
நாமாவளி பஜனையெல்லாம் கேட்டலுத்துப் போனதால்
பறை உறுமி அடிகேட்டு கூத்தாட நீ கூட்டிவராத் தெரு வந்தேனென்றும்
வடைபாயாசம் அக்கார வடிசல் நெடியில் செத்தழிந்த மூக்குநாக்குக்கு
ரசனைகாட்டி உயிர்ப்பிக்க சால்னாக்கடை புகுந்தேன் என்றும்
கழுநீர்ப் பானகத்தின் நாற்றம் மறக்கத்தான்
நாலுகுப்பி பதச்சர்க்கரை பேட்டரி கலந்த பட்டையடித்தேன் எனவும்

குலமகளொழுக்கம் மகரென்று நியூடாகாமல் மூடவுட்டாக்கிய
சக்திரூபிணியைவிட வேசி உன்னதமெனவும் விளக்கம் தந்தபின்
கஞ்சாவும் அபினும் கடையெல்லாம் தேடியும் காணகிலேன்
ஹோல்சேல் ஏஜெண்ட் நீயாமே? எம் பிள்ளையாய் கொஞ்சம் தா நுகர
எனக்கேட்ட சாமியை முறைத்த புள்ளமார் மை புருவம் தூக்கிப் பார்த்த சாமி
பிடிவாரண்ட் இருக்காடா? பெட்டிசன் தந்தது எவன்டா? என எதிர்க்க
கிடைத்த உதையில் விரைகள் பிதுங்கி வெளிக்கோடு வந்தது நாக்கு
அவமானத் தாங்காமல் தற்கொலைத்துக கொண்டதாய் பைலை மூடியது
சைவப் போலீசு
மறவாமல் சாமியின் சலித்துத் தொங்கும் சாமானை அறுத்தெடுத்து
பாடஞ்செய்து லிங்கமாக்கி நிறுத்தித் தொழுதழுத சைவக் கூட்டம்
முழங்கித் திரிந்த தெருவெங்கும் நமச்சிவாயா நமச்சிவாயா

கடவுளும் கட்டைப் பஞ்சாயத்தும்

நாளைய முன்னிரவின் அதிகார பூர்வமற்ற
மன்றாட்டில் வந்த கதறுமாறு பணித்த
15ஆம் அப்போலஸ்தனின் கண்களில் மிளிர்ந்த வன்மத்தை
காணத் தவறாதவர்கள் பாக்கியவான்கள்
உனது எல்லாச் செயல்களும் குற்றங்களே என்றும்
என் எல்லா உளறல்களும் அருளேயெனவும்
மன்றாட்டின் ஊடே
காலாட்டிக் கொண்டே உரைத்த அவனின் உதடுகள்
மடங்களைக் காக்கும் ஊழிய வர்க்கத்தைப் பாதுகாப்பதென்பதே
என் பதவி வர்க்கக் கடனென
உரைத்துப் போனான்
தேவன் சுமந்த சிலுவையைக் கூட விற்றுக் காசாக்கிய
ஏசுவின் தோழர்கள் அதில்
கமிசனை மட்டும் கணக்கிட்டு எடுத்தபின்
தேவனின் பங்கைத் தேவனுக்கும்
சீசரின் பங்கை சீசருக்கும் வழங்கிச் சென்றனர்
வெறும் பைபிளை மட்டும் படிக்கத் தெரிந்தவனுக்கு
தேவன் அருளினான்
பாவத்தின் சம்பளத்தை
பீடங்களைக் காப்பாற்ற சற்று அழுத்தி அமர்ந்தால்
பிட்டத்திலரும்பிய குண்டிப்புண்களில்
வழியும் அதிகாரச் சீழோடு
அமைதியின்றித் திரிகிறார்கள் தீர்க்கதரிசிகள்
அவர்தம் மடங்களில் புதைத்த
தத்துவ மண்டையோடுகளின்
புராதனச் சாபங்களில்
கரைந்தழிகிறது நிறமிழந்த கொடி.

எல்லா நேரங்களிலும் ஜன்னலை இறுகச் சாத்தமுடியாது

ஜன்னல்கள்
அவர்களைப் பிரித்து வைத்தது
ஜன்னல்கள்
அப்படித்தான் அவற்றை அழைக்க வேண்டும்
அழைக்கப்பட வேண்டும்

சிறைச்சாலையில்
மிதந்து கொண்டிருக்கும் ஜன்னல்கள்
சிறைக்கம்பிக்கும் அளவு குறைந்த கன பரிமாணத்தில்
இப்படியாக...
ஜன்னல்கள் தொங்கிக் கொண்டிருக்கின்றன.

ஜன்னல்கள்தான் சுதந்திரம் பேசும் வாய்களை
உற்பத்தி செய்கிறது
அதை
ஈறுகள் தெரிய திறக்க வைக்கிறது

வானத்தை பார்க்கும் ஜன்னல்கள்
இதுதான்
கவிஞனின்
துரோகியின்
தீவிரவாதியின்
ஏமாற்றுபவனின்
கொள்ளைக்காரனின்
கொலைசெய்பவனின்
வன்புணர்ச்சியாளனின்
குடிகாரனின்
குரூபியின்
படிமமாய் இருக்க வேண்டும்
வானத்தைப் பார்க்கும் ஜன்னல்கள்

ஆனால்
மேற்கண்டவர்கள்
தங்களது தொழிலை
அரசுக்குச் செம்மையாக
அதன் துருவேறிய மூளையை வெட்டும்
கூரான மண்வெட்டியைபோல் செய்திருக்க வேண்டும்
அரசால் மிகச் சரியான முறையில் உதைபட்டு
ஆவணங்களில் பதியப் பெற்றிருக்க வேண்டும்

அரசு
ஏதும் சாத்தானுக்கு குதமோ குறியோ கிடையாது
கவிஞர்கள் மட்டுமே அதை திறந்து
அதிகாரத்திற்கப்பாற்பட்ட முறையில் உடைணர்ந்து விடுகிறார்கள்

அரசு தன் வாயைத் திறக்கும்போது
அது முடிவில்லாத வகையில் கல்களையும் இசைகளையும்
இறுகக் கவிழ்த்தபடி
கவிஞர்களை
துரோகியென்று உறுமியழைக்கிறது

எனக்குத் தெரியும்
இவ்வாறாக ஜன்னல்கள் நாள்தோறும் உறுதிமொழி எடுக்கிறது

கவிஞன் எழுதுவதை நிறுத்தி
அச்சத்தை நிர்வாணமென்று
ஒளியால் திறந்து
அடிவயிற்றிலிருந்து
அம்மாவென்றழைப்பதைப் போல
கக்கிறாய்
என ஓர் நாள் உரக்கக் கத்துகையில்
வானத்தைப் பார்த்த ஜன்னல்களும்
அரசின் இறுகிய சொற்களால் கட்டப்பட்ட
கூடங்களும் நொறுங்கி விழும்

ஜன்னல்கள் அறியாது கடத்திக்கொண்டே இருக்கிறது
அரசுக்கு

அரசு...
அதன்
உடைத்தலை
திறக்கை
பித்தை
பித்தென பிதற்றும் அதன் சட்டங்களை
உடைத்தெறியும் சொற்களின் உரிகளை

நாள்தோறும்
இறுகிய கம்பிகளால் கவிஞர்கள்
தங்களது அறமென்ற கூர் பற்களுடைய
கவிதைகளால்
அழுத்தி அணைத்துக் கொண்டேயிருக்கிறார்கள்

எல்லாம் சொற்களாகத்தான் இருந்தன

முடிவற்ற ஒரு சொல் இடறும்பொழுது
குழந்தைகள் புன்னகைத்து விடுகின்றனர்
சிறிய துளி
அவ்வளவு சிறிய
ஒரு துளிக் கண்ணீர்

வண்ணங்களற்ற ஓவியங்களை அழிக்கும் வல்லமையோடும்
இறைவனை மண்டியிட வைக்கும் அதிகாரமாகவும்
சொட்டி உறைகிறது
குழந்தைகள்
அவ்வாறு புன்னகைகின்றனர்.

ஒரு குழந்தையை புன்னகைக்க வைக்க
உனக்கும் எனக்கும்
உங்களுக்கும் எங்களுக்கும்
கடவுளுக்கும் சாத்தானுக்கும் தெரியாது
ஏமாற்று வேலைகளில் கைதேர்ந்தவர்கள்
நீ
நான் மற்றும்
நாம்

மிட்டாய்களை கொடுத்து
முத்தங்களை உறுமிப் பெரும் பூனைகள்
விரல்களால் அவர்களின் புன்னகைக்கு
உடலில் கள்ளச்சாவி போடும் ஆத்மாக்கள்
துரதிருஷ்டமாய் ஈறுகள் நெளிய புன்னகைத்தல்
மொழியைக் கொலைசெய்தல்
ஒலி எழுப்பல்
இவைகள்

குழந்தைகளை மிருகமாய் மாற்றி
சிரிப்பைக் களவாட மனிதர்கள் செயும் எத்தனங்கள்
அறிவோம்
நாமாகிய மனிதர்கள்
ஒரு மிருகத்தை சிரிக்க வைக்க முடியாதென்று
அறிவோம்
நாம்

நம்மால் ஒரு போதும் பயனில்லாது
எதிர்ப்பார்பில்லாது
வேண்டுதல்கள்
கெஞ்சல்கள் இன்றி ஒரு புன்னகையை
சிந்த
சிரிக்க முடியாதென்று

அறிந்து கொள்ளுங்கள் குழந்தைகளே
உங்களுக்கு
சிரிக்கத் தெரியும் போது மனிதர்களாகிறீர்கள்
பூரண வளர்ச்சி பெற்ற
தந்திரங்கள் பருகிய
காதுகளை விடைக்காது
பற்களைக் காட்டாது
எளிய புன்னகை சிந்தும்போது

முழு முற்றான மனிதர்களாகிறீர்கள்
ஓநாய் வெகு வேகமாய்
தனது உடலை உள்ளிழுத்துக் கொள்ளுகிறது
கோரைப் பற்களில்
மின்னும் புன்னகையை அது குழந்தைக்கு கற்றுத் தருகிறது.

பெருந்தச்சன்
கணபதி ஸ்தபதிக்கு அஞ்சலி

தீபச்செல்வன்

பறவைகள் வீழ்ந்த நிலம்

நான் எதுவரை நிலம் பற்றியே பாடிக் கொண்டிருப்பேன்?
நிலத்திலிருந்து பிடுங்கி எறியப்படும்வரை
குழந்தைகள் தங்கள் கைகளில் நிலத்தை
உறுதியாய் பிடித்து வைத்திருக்கும்வரை
நான் நிலம் பற்றி பாடிக் கொண்டிருப்பேன்
பறவைகளின் காட்டில் குழந்தைகள்
நிலத்தின் வார்த்தைகளை ஒளித்து வைத்திருந்தனர்

இன்று அந்த நிலத்தில் பறவைகள்
துடித்து விழ அந்நியக் குடிகள்
நிலமூன்றிக் கொண்டன
வெட்டிக் காயப்படுத்தப்பட்டு
நலிந்த மரங்களில் இன்னும் ஏதேனும் பறவைகள்
தொங்கிக் கொண்டிருக்கின்றனவா
என்று தேடும் குழந்தைகள்
நிலம் அள்ளப்பட்ட அரசியல்க் குழிகளில் வீழ்கின்றனர்

நிலத்திலிருந்து நாம் துரத்தப்படுகையில்
எல்லாப் பறவைகளும் வீழ்ந்தன
நிலத்தின் இருதயத்தைத் தின்னும்
அந்நியக் குடிகள் விழுங்கினர் கடல்வெளிகளை
பொறியாய் நுழைந்த
சிங்கங்கள் நிலத்தை வேட்டையாடின

மணல்வெளியில் புதியதாய் பதியும்
கால்கள் எழுதும் கதைகளால்
சிறுவன் குளத்து மீன்கள் துடித்திறந்தன
அந்நியப் பெயர்களால்
கொல்லப்பட்ட கிராமங்களில்
புத்தரின் ஞானம் அமைதியைத் தின்கிறது

எல்லாம் பட்டு வீழ்ந்த பிறகும்
குழந்தைகள் நிலத்தின் பாடல்களை
பாடிக்கொண்டிருக்கின்றனர்
குழந்தைகள் நிலத்தை இழந்திருப்பதை
நான் எப்படி பாடாமலிருக்க முடியும்?

பீரங்கிகளை சிறுவர்கள் முறிப்பார்கள்

சிறுவர்களுக்காக துப்பாக்கிகளும்
பீரங்கிகளும் சேகரிக்கப்பட்டிருக்கின்றன
துப்பாக்கிகள் என்ன செய்யப்போகின்றன?
ஒன்றில் அவை சோர்வடைந்து
சரிந்து போகும்
அல்லது கூர்மையடைந்து முகங்களைக் கிழிக்கும்
நீதான் புரட்சியை ஆயுதமாக்கும்படி
நிர்பந்திக்கிறாய்
எதிர்ப்பை கிளப்பும் களத்தை திறக்கிறாய்
புரட்சியையும் எதிர்ப்பையும் கொல்ல முடியாது
சனங்களை அடக்கும்பொழுது
புரட்சி குருதியில் பெருக்கெடுக்கிறது
வாழ்வின் பாடலை
நாம் பாடிக் கொண்டிருக்கும் நிலத்தைவிட்டு
அந்நியப்படைகளே
எப்பொழுது வெளியேறிச் செல்வீர்கள்?
வாழ்வை மூடியிருக்கும்
உங்கள் அதிகார நிழலை
எப்பொழுது விலக்கிக் கொள்வீர்கள்?
முதியவர்கள் சோர்வடைந்து
முடங்கியபடி காலத்தை கடக்கும் பொழுது
சிறுவர்கள் வளர்ந்து
நீங்கள் கொண்டு வந்த துப்பாக்கிகளையும்
பீரங்கிகளையும் முறித்துப் போடுவார்கள்
இந்த நிலத்தின் எல்லாத் தலைமுறைகளும்
யுத்தத்தால் அழிக்கப்படுகிறார்கள்
அழிவு எப்பொழுது முடியும்?
எங்கள் சிறுவர்கள் மீது
அவலத்தை சுமத்தும் பொழுது
மீளவும் அழிவின் தொடக்கமாகிற பொழுது
இந்தச் சிதைநிலம் நடுநடுங்கித் துடிக்கும்
எனினும் பீரங்கியையும்
துப்பாக்கிகளையும் இந்நிலத்திற்கு
கொண்டு வரும்பொழுது
அவற்றை சிறுவர்கள் முறித்துப் போடுவார்கள்

தூரன் குணா

எறும்பின் பசி

நேற்று
முன்னிரவு 11.59 க்கு
நான் எறும்பாவதற்கு
முந்தைய கணம்
யானையாகத்தான் இருந்தேன்
அதுவொரு
பிரக்ஞை குழம்பிய கனவென்று
யானை சமாதானப்படுத்துகிறதென்று நினைத்துக்கொள்கையில்
கிரிகோர் சாம்சா
செவ்வியல் பிரதியாகிவிட்டான்
என்ற எறும்பின் குரல்
இது நிஜமென்று உறுதியாக்கியது
எறும்பின் கண்களுக்கு முன்னால்
ஆயுளில் ஆயிரம் முறை
தென் வடதுருவங்கள் தொட்டுவிடக்கூடிய
எறும்பின் எளிய பிரபஞ்சம்
அதை இயக்கும்
மிக எளிய ஒற்றை வரி நீதி -
எறும்பின்
இன்னொரு மடங்கு எடையில்
அது வணங்கும் ஒரு கடவுள் -
வழிப்போக்கில் நிகழும்
காதலும் அன்பும் -
அதற்கென்றே சமைந்த
ஒற்றையடித்திசை
மிகமுக்கியமாக
சுகிக்க மீந்திருக்கும் பிரபஞ்சத்தின்அது அறியாத பருண்மை
உலகம்தான்
எவ்வளவு பெரிய மகிழ்வென்று
எறும்பு அங்குமிங்கும் அலைகையில்
அதன் உடலில்
அங்குமிங்கும் அசைந்து மேலெழுகிறது
ஒரு யானை.
அக்கணம் அங்கே எல்லாம்
யானையின் மடங்கில் சுருங்கத் துவங்குகின்றன.

மிருகத்தின் ஆன்மாவை மேவுதல்

நான்
குறைந்தபட்சம் ஒரு மனிதன்
பழுப்பு வண்ணத்தை அடைந்துவிட்ட
என் கண்கள்
இந்த உலகின்
புராதன நீதிகளை தொழுகிறது
ஆனால் அதன் நீரடியில்
வெளியே கேட்காமலே அடங்குவது
ஒரு கலகக்குரல்-
நான் தொழும் தெய்வத்திற்கோ
இந்த உலகின் சமநிலையை
காக்கவேண்டிய கடமையிருக்கிறது.
தெய்வத்திற்கும் எனக்குமான சமர்
ஒரு இருதயத்தின் தசை அளவைக்குள்
நிகழ்ந்து கொண்டிருக்கிறது
அப்போது எனது
கண்ணீர்த்துளிகள் விலையுயர்ந்தவை-
தெய்வம் பிதற்றும் நீதியை
முழுக்கவும் கண்ணீர்த்துளிகள் மறுக்கின்றன
தெய்வங்கள் சிலைக்குள்
வசிக்காத காலத்தில்
தெய்வத்திற்கு எதிரான சங்கீதம்
ஒலிக்கிறது
அப்போது ஒரு மிருகம்
தெய்வத்தின் ஆன்மாவை மேவுகிறது
நான்
மிருகத்தின் ஆன்மாவை மேவுகிறேன்
அக்கணம் வரலாற்றில்
இந்த உலகம் தட்டையாகவிருந்தது
என்பது கடந்தகாலம்.

படுகளம்

வீடுகள்
கதகதப்பை சிருஷ்டிக்கும்
நள்ளிரவில்
இருளின் குளிர்படலம் மிதக்கிறது
தனிமை வீதியில்
லேசாக அசையும் நிழல்களுக்குள்
தூரத்து நாய்களின் ஒலியாய்
சாபக்குரல்கள் தேய்கையில்
மனிதர்கள் சவமாய் கிடக்கிறார்கள்
களைப்புற்ற உடலோடு ஒருத்தி
வீடு திரும்பும்போது
வீட்டிலிருந்து வெளியேறிய
பீதிர் கலங்கிய ஒருவன்
அவளை பிரக்ஞையற்றுக் கடக்கிறான்
திருடர்கள் ஊருக்குள் இறங்க
இன்னும் நேரமிருக்க
உலர்ந்துவிட்ட பியர்பாட்டிலை
இரவின் மீது வீசுகிறேன்.
தெறித்த தன் இரத்தத்துளியை
நான் விரும்பிச்சுவைப்பது கண்டு
வன்மத்தில் பாய்ந்து
வேட்டை நாயைப் போல்
குதறி குற்றுயிராக்கிவிட்டது
துயரார்ந்தவர்களே
யாரும் இரவின் மீது
பியர்பாட்டிலை வீசவேண்டாம்.

மா. கணேசன்

ஜீவித்தலும் வாழ்தலும்

ஒவ்வொரு மனித ஜீவியும் பிரக்ஞையற்ற கருவாகத் தொடங்கி இறுதியில் பிரக்ஞையுள்ளவனாக முழுமையடையும் வழிமுறை வாழ்தலாகாது; அது வெறும் ஜீவித்தல் ஆகும். ஜீவித்தல் என்பது பிராணி வகைப்பட்டதொரு வாழ்க்கையைக் குறிப்பதாகும். ஏனெனில் அது வெறுமனே உயிரியல் மற்றும் உடலியல் ரீதியானது மட்டுமே. ஒவ்வொரு உயிரியல் ஜீவியும் உடலைக் கொண்டிருப்பதால் அது பசி, தாகம், உறக்கம், இனப்பெருக்கம், தற்காப்பு.... ஆகிய இயல்பூக்கங்களால் (Instincts) செலுத்தப்படுகிறது.

மனிதனும் ஒரு உயிரியல் ஜீவியே என்றும் அவன் வெறும் உயிரியல் ஜீவி மட்டுமல்ல. ஒரு உயிரியல் ஜீவியாகத் தனது வாழ்க்கையைத் தொடங்கும் மனிதன் தனது உள்ளார்ந்த பரிணாம விதிகளின்படி ஒரு உளவியல் ஜீவியாக வளர்ந்து வாழ்ந்து முழுமையடைகிறான். அவன் வெறுமனே மரணத்தில் முடிவடைந்துவிடுவதில்லை. பிறப்பு, இறப்பு எனும் இரு எதிரெதிர் துருவங்களுக்கிடையில் பயணிப்பவனல்ல அவன். மாறாக தன்னை அவன் ஒரு மூன்றாவது துருவமாக உருவாக்கிக் கொள்பவன்.

மனிதன் என்பவன் குழந்தைப்பருவம், இளமைப் பருவம், முதுமைப்பருவம் என்று உடலியல் விதிகளின்படி வளர்ந்து மரணத்தில் முடிந்து போகும் உடலுடன் தன்னை அடையாளப்படுத்திக் கொள்பவனல்ல. மாறாக, இவையெல்லாம் வளர்ந்து முதிர்ந்து செழித்து இறுதியில் உதிர்ந்து போகும் உடல் எனும் கனியை அது கனிந்து உதிர்ந்து போவதற்கு முன்பே இணையற்றதோர் இலக்கிற்காக உபயோகப்படுத்திக் கொள்பவன்.

ஜீவித்தல் என்பது பிறப்பிலிருந்து இறப்பு நோக்கிச் செல்லும் ஒரு கிடைமட்டப் பயணம் ஆகும். தண்ணீரானது மேட்டிலிருந்து பள்ளத்தை நோக்கிச் செல்வதுபோல ஜீவித்தல் என்பது பிறப்பிலிருந்து இறப்பு நோக்கிச் செல்லும் அந்த ஜீவியின் இயல்பானதோர் இயக்கம் அவ்வளவே. இவ்வியக்கத்தை மேற்கொள்வதற்காக அந்த ஜீவியானது தனது இயல்பூக்கங்களை (பசி, தாகம், உறக்கம், இனப்பெருக்கம்....) பின்பற்றிச் செல்வதைத் தவிர்த்து பிரத்யேகமாய் வேறு எதையும் செய்வதில்லை.

உண்மையில், ஒரு அங்கஜீவி அல்லது ஒரு பிராணியானது அதன் இயல்பூக்கங்களால் இயக்கப்படுகிறதே தவிர தன்னிச்சையாய் தனது விருப்பத் தேர்வினால் அவை ஒரு போதும் இயங்குவதில்லை, செயல்படுவதில்லை. இவ்வாறு இயல்பூக்கங்களின் வழிகளில் செல்வதன் மூலம் உயிர் வாழ்தல் எனும் ஒரே ஒரு நோக்கம் மட்டுமே சாதிக்கப்படுகிறது. ஆனால் இவ்வாறான உயிர்வாழ்தல் என்பது எவ்வகையிலும் பரிணாம ரீதியில் இறுதியானதல்ல. மாறாக, அது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததொரு துவக்கம் மட்டுமே. ஏனெனில் வெறும் உயிர் பிழைத்திருத்தல் என்பதுடன் பரிணாமப் பயணம் முடிந்துவிடுவதில்லை.

முதல் உயிர் தோன்றி கிட்டத்தட்ட 400 கோடி ஆண்டுகள் ஆகின்றன. உயிர் பிழைத்திருத்தல் (Survival) என்பது உயிர்ப்பரிணாமம் தொடங்கிய அந்த தொடக்க காலத்திலேயே வெற்றிகரமாக சாதிக்கப் பட்டுவிட்டது எனலாம்.

அதில் உயிர் பிழைத்திருத்தல் அல்லது வெறுமனே ஜீவித்தல் என்பதே பரிணாமத்தின் பிரதான நோக்கம் என்றிருந்தால் பரிணாமமானது நீல ஆல்காவோடும் அந்த ஆதி அங்கஜீவியுடன் முடிவுற்றிருக்க வேண்டும். ஆனால் பரிணாம வரலாறு வெறுமனே நீல ஆல்காக்களுடன் நின்றுவிடவில்லை. மாறாக அது தொடர்ந்து ஒரு செல்லுயிரிலிருந்து பலசெல்லுயிரி, ஊர்வன, பறப்பன, பாலூட்டி என்று எண்ணற்ற ஜீவராசிகளை உருவாக்கிச் சென்றது. என்றாலும் உடலியல் ரீதியான பரிணாமமானது மனித ஜீவியை உருவாக்கிய பிறகே முடிவிற்கு வந்தது.

உண்மையில் பரிணாம நிகழ்வு என்பது சில விஞ்ஞானிகளும், ஒரு சில தத்துவஞானிகளும் கருதுவது போல யாதொரு குறிக்கோளும், திட்டமும் அற்றதொரு குருட்டு இயக்கமல்ல. மேலும் எண்ணற்ற வகைப்பட்ட ஜீவிகளும் விபத்து போன்ற சந்தர்ப்ப சூழ்நிலைகளின் விளைவாய்த் தோன்றியவையல்ல. மேலும் உடலியல் ரீதியான பரிணாமம் மனிதஜீவியுடன் முற்றுப்பெற்றதும் கூட சந்தர்ப்பவசமானதல்ல. மாறாக, பரிணாம இயற்கையின் குறிக்கோளை நிறைவேற்றும் வகையிலானதொரு இலட்சிய ஜீவியை உருவாக்கிடும் வழிமுறையில் அமீபா, ஆல்காவிலிருந்து டைனோசரஸ், திமிங்கிலம், குரங்கு என்று மனிதன் வரை எண்ணற்ற ஜீவராசிகள் பூமியின் மீது உருவாயின. பரிணாம நிகழ்வின் இறுதியான இலக்கினை எட்டும் விதத்திலான அம்சங்களையுடைய பொருத்தமான ஜீவியாக மனிதன் உருவானதும் உடலியல் ரீதியான பரிணாமம் என்பது உடலியல் ரீதியான பரிணாமம் முடிவிற்கு வந்திட்டது. இதன் அர்த்தம் பரிணாமம் என்பது உடலியல் ரீதியான பரிணாமத்தையும் கடந்தது என்பதே ஆகும். இனி பரிணாமத்தை உடலியல் தளத்திலிருந்து மேலெடுத்துச் செல்லும் மாபெரும் பொறுப்பு மனித ஜீவியைச் சார்ந்ததாகிறது. முக்கியமாக அனைத்து விலங்கு ஜீவராசிகளிலும் சிறந்ததாக, மேலானதாக மனித ஜீவி விளங்குவதற்குக் காரணம் மனித ஜீவிக்கு பரிணாம இயற்கை அளித்துள்ள பரிணாமப் பொறுப்பு காரணமாகும். வேறு எவ்வொரு விலங்கு ஜீவியிடமும் இல்லாத விசேடப் பண்பு அல்லது பிரத்யேக அம்சம் மனித ஜீவியிடமுள்ள உளவியல் பரிமாணமே ஆகும். இனி பரிணாமம் என்பது உளவியல் ரீதியானதே.

முதல் அணுக்கள் தோன்றியதிலிருந்து முதல் உயிர் தோன்றிடும் காலம் வரை பொருளியல் ரீதியாய் விளங்கிய பரிணாமம், உயிர் தோன்றியதிலிருந்து மனிதன் தோன்றிடும் வரையிலான காலக் கட்டத்தில் உடலியல் ரீதியான பரிணாமமாய் விளங்கிற்று. மனிதன் தோன்றியதிலிருந்து இனி பரிணாம நிகழ்வின் இறுதி இலக்கு அடையப்பெறும் வரையில் பரிணாமம் என்பது உளவியல் தளத்தில் நிகழ்ந்தேறுவதாய் இருக்கும்.

மனித ஜீவிக்கும் ஏனைய பிற விலங்கு ஜீவிகளுக்கும் உள்ள வித்தியாசம் பரிணாம அடிப்படையிலானது பிற விலங்கு ஜீவிகளைப் பொறுத்தமட்டில் பிரத்யேகமான, பரிணாமச் செயல்பாடுகளோ, இலக்குகளோ ஏதுமில்லை. இதற்குக் காரணம் இவ்விலங்கு ஜீவிகள் ஏற்கனவே பரிணாம இயற்கையினால் ஒரு குறிப்பிட்ட இலக்கினை அடையும் வழிமுறையில் மறைமுகமாக பயன்படுத்தப்பட்டு விட்டன. அந்த இலக்கு தான் 'மனிதன்'.

அதாவது, மனிதனுக்குக் கீழேயுள்ள ஜீவராசிகள் இல்லாமல் மனிதஜீவியானவன் நேரே திடீரென உருவாகியிருக்கவியலாது. ஒரு வகையில் மனிதனைத் தவிர்த்து பிற விலங்கு ஜீவிகள் அனைத்துமே இயற்கையின்

பரிணாமத் தேர்வில் ஒவ்வொரு வகையில் குறைபாடுடையவையும் தோல்வியடைந்தவையுமாகும். ஒட்டு மொத்த பரிணாமத் தேர்வில் மனிதனின் மட்டுமே வெற்றிப்படியினை அடையும் விதத்தில் பிற விலங்கு ஜீவிகள் அனைத்தும் படிக்கட்டுகளாக உதவியுள்ளன. பரிணாம வரலாற்றில் மனித ஜீவியின் உருவாக்கத்திற்கு பிற விலங்கு ஜீவிகள் பெரிதும் உதவியாய் அமைந்திட்டன என்பது ஒருபுறமிருக்க, இன்றைய அளவில் அவை புவியின் மீது மனித ஜீவியின் உயிர் வாழ்க்கையை சாத்தியப்படுத்தும் இயற்கையுடன் இணைந்த உயிரியல் சூழலாக சேவை புரிந்து வருகின்றன. எனவே, மனிதன் என்றென்றும் இயற்கைச் சூழலையும், பிற ஜீவராசிகளையும் சார்ந்திருப்பவனே

இவ்வாறு பிற விலங்கு ஜீவிகளனைத்தும் இயற்கையோடு இயற்கையாய் சூழலோடு சூழலாய் இணைந்து இயங்குவதைத் தவிர்த்து வேறு குறிப்பான, பிரத்யேகமான பரிணாம இலக்கு எதுமில்லை. ஆகவே தான், ஜீவித்தல் அல்லது வெறுமனே உண்டு, உறங்கி, இனம் பெருக்கி உயிர் வாழ்ந்து இறுதியில் மாண்டு போகும் வழிமுறை என்பது பிராணி வகைப்பட்ட வாழ்க்கை (Creaturely Existence) எனக் குறிப்பிடப்படுகிறது.

ஒரு அங்கஜீவி என்கிற வகையில் மனிதனும் பிராணி வகைப்பட்ட வாழ்க்கையம்சத்தைப் பெற்றிருப்பது இயற்கையே (இது தவிர்க்கவியலாததும் கூட)! எனினும் அதுவே அவனது முழு வாழ்க்கையுமாகாது. ஏனெனில் மனிதனுக்கு உயிரியல் அல்லது உடலியல் பக்கத்துடன் இன்னொரு பிரத்யேக பக்கமான உளவியல் பக்கமும் உள்ளது. மனிதனின் உளவியல் அம்சமே அவனது வாழ்க்கையை வெறும் ஜீவித்தலைக் கடந்த ஒன்றாக ஆக்குகின்றது. மனித ஜீவி என்பவன் ஏனைய பிற ஜீவிகளைப் போன்ற இன்னொரு ஜீவி அல்ல.

ஏனைய பிற ஜீவராசிகள் இயற்கையின் உள்ளார்ந்த பரிணாமச் சக்திகளின் உந்துதலின் விளைவாய் உருவானவை. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு குறிப்பிட்ட பரிணாமக் கட்டத்தினை அல்லது நிறுத்தத்தினைச் சார்ந்ததாய், பிரதிநிதித்துவம் செய்வதாய் அமைந்திட்டவையாகும். மனிதனும் தனது உருவாக்கத்தினைப் பொறுத்த வரையில் இயற்கையின் உள்ளார்ந்த பரிணாமச் சக்திகளின் உந்துதலின் விளைவாய் உருவானவனே எனினும் அவன் ஒரு குறிப்பிட்ட பரிணாம நிறுத்தத்தில் தங்கி விடுபவனோ அல்ல. மாறாக, அவனே இனி பரிணாம நிகழ்வினை அதன் ஒப்பற்ற இலக்கு நோக்கி முன்னெடுத்துச் செல்லும் பிரதான பிரதிநிதியாவான்.

ஏனைய பிற விலங்கு ஜீவிகளின் வரிசையில் இறுதியாகத் தோன்றிய மனிதன் அது வரையிலும் பிரக்ஞையற்ற ரீதியில் இயற்கையின் பரிணாம உந்துதலில் இயங்கிவந்த பரிணாம வரலாற்றை முடிவிற்குக் கொண்டு வருகிறான். அதோடு தன்னுடன் ஒரு புதிய பரிணாம வரலாற்றின் சகாப்தத்தை, பிரக்ஞையுடன் பரிணாம நிகழ்வில் பங்குபெறக் கூடிய உளவியல் பரிணாமத்தை தொடங்கி வைப்பவனாகிறான். இனி பரிணாமம் என்பது நனவிலி ரீதியாய், பிரக்ஞையற்ற எந்திரத் தனமாய் இல்லாமல், மனிதனுடன் இணைந்து சுய பிரக்ஞையுடன் செல்வதாய் விளங்கும்.

அனைத்து ஜீவராசிகளிலும் மனிதன் மட்டுமே தனது இருப்பை உணர்வதோடு தெளிவாய் அறிந்து அங்கீகரித்து வாழ்பவனாய்த் திகழ்கிறான். இந்த அறிதலைச் சாத்தியப்படுத்தியது அவனது பிரக்ஞையே ஆகும். பிரக்ஞை எனும் இந்த அம்சமே பிரபஞ்சப் பரிணாம இயற்கையினால் பல நூறு

கோடியாண்டுகளாக எதிர் நோக்கப்பட்ட ஒன்றாகும். மனிதனின் இப்பிரக்ஞை உண்மையில் மனிதனுடையது மட்டுமல்ல. மாறாக, இயற்கையின், உலகின், பிரபஞ்சத்தின் பிரக்ஞையும் ஆகும்.

உண்மையில் பிரபஞ்சமானது மனிதனைக் கொண்டே, மனிதனின் பிரக்ஞையைக் கொண்டே, தன்னை அறிகின்றது. இல்லாவிடில், பொருண்மையினாலான பிரபஞ்சம் அறிதல் திறன் கொண்ட பிரக்ஞையுடன் கூடிய மனித ஜீவியை உருவாக்கியதற்கான காரணம் வேறு என்னவாய் இருக்க வியலும்?

மேலும், மனிதனின் வருங்காலமும் இன்னும் ஒட்டு மொத்த பிரபஞ்சத்தின் வருங்காலமும் இப்பிரக்ஞையைக் கொண்டு உருவாகக் கூடிய விளைவுகளையே எதிர் நோக்கிச் சார்ந்துள்ளன.

பிறப்பும், இறப்பும் இரு எதிரெதிர் துருவங்கள் எனக் கொண்டால் பிரக்ஞை என்பதே அந்த மூன்றாவது துருவமாகும். இவ்வுலகில் பிறப்பு கொண்ட எதுவொன்றிற்கும் இறப்பு உண்டு. உயிர் தோன்றுவதற்கு ஒரு முக்கிய காரணியாக இருந்திட்ட சூரியனுக்கும் அழிவு அல்லது இறப்பு உண்டு. உயிர் தோன்றுவதற்கு ஒரு முக்கிய காரணியாக இருந்திட்ட சூரியனுக்கும் அழிவு அல்லது இறப்பு உண்டு. இன்னும் ஒரு நான்கு பில்லியன் ஆண்டுகளே (1 பில்லியன் = 100 கோடி) நமது சூரியன் ஒளிரும் பிறகு அது தனது எரிபொருளைத் தீர்த்து விட்டு ஒரு செம்பூதமாக (Red Giant) அல்லது ஒரு கருந்துளையாக சுவடின்றி மறைந்து போகும். ஏன், பிரும்மாண்டமான இந்த ஒட்டு மொத்தப் பிரபஞ்சமும் கூட மேலும் சில பில்லியன் ஆண்டுகளே இருக்கும்!

காலத்தில் தோன்றிய எதுவும் தற்காலிகமானதே. இந்தப் பிரபஞ்சம் உட்பட. ஏன், காலமும் கூட தற்காலிகமானதே! ஒரு பெருவெடிப்பில் தோன்றிய கால வெளிப் பிரபஞ்சம் மீண்டும் ஒரு மாபெரும் உள்ளடர்தலில் (Implosion) மீண்டும் கனபரிமாணமற்ற புள்ளியில் அடங்கிப் போகும். அப்படியெனில், தற்காலிகமான இந்தப் பிரபஞ்சத்திலிருந்து விடுதலை பெற வழியேதும் இல்லையா? தற்காலிகப் பிரபஞ்சத்திற்கு எதிர்(சம)நிலையாக நிரந்தரமானதொரு நிலை அல்லது மெய்ம்மை ஏதும் உள்ளதா?

உண்மையில், பிரபஞ்ச இயற்கையானது தனது உள்ளார்ந்த அடிப்படையில் ஒரு பரிணமிக்கும் மெய்ம்மையாக விளங்குவதன் நோக்கமே அது. ஒரு இலக்கை நோக்கிய நிகழ்வுப் போக்காக, பயணமாக, தன்னைத் தானே கடந்து செல்லக் கூடியதாக இருப்பதினால் தான். தன்னளவில் தன்னுள் முழுமையும் பூரணமுமானதொரு மெய்ம்மைக்கு வளர்ச்சி, பரிணாமம் போன்றவை தேவையில்லை. ஆனால் பிரபஞ்ச மெய்ம்மையாக விளங்குவதன் நோக்கமே அது. ஒரு இலக்கை நோக்கிய நிகழ்வுப் போக்காக, பயணமாக, தன்னைத்தானே, கடந்து செல்லக் கூடியதாக இருப்பதினால் தான். தன்னளவில் தன்னுள் முழுமையும் பூரணமுமானதொரு மெய்ம்மைக்கு வளர்ச்சி, பரிணாமம் போன்றவை தேவையில்லை. ஆனால் பிரபஞ்ச மெய்ம்மை இவ்வாறிருக்கவில்லை. அது முழுமைக் குறைவானதாய் இருப்பதினாலேயே பரிணமிப்பதாய் விளங்குகிறது. மேலும்-அது காலத்தின் உலகில் (கட்டுண்டு) இருப்பதால் நிரந்தரத் தன்மையற்றதாயும், பிறப்பு, வளர்ச்சி, முதிர்ச்சி, இறப்பு ஆகியவற்றைக் கொண்டதாயும் உள்ளது.

ஆக, இவ்வாறு காலம் - வெளி - பொருண்மையின் அமைப்பான பௌதிக மெய்ம்மையானது அது தொடங்கியதிலிருந்து படிப்படியாக ஒரு மாபெரும் பிரபஞ்ச அரங்கமென நெபுலா, கேலக்ஸிகள், நட்சத்திரங்கள், கிரகங்கள் என பரந்து விரிந்து வளர்ந்தது. இப்பிரபஞ்ச அமைப்பானது அதன் ஒட்டுமொத்த அளவில் பல நூறு கோடியாண்டுகள் ஆயுளுடன் கூடியதாய் விளங்குகிறது. இந்த நெடிய ஆயுட் காலத்தின் நோக்கம் அதற்குரித்து நிகழ்த்தப்படக் கூடிய பரிணாம வளர்ச்சி வடிவங்களுக்கான ஒரு நீடித்து நிலைக்கும் விதமான அடிப்படையை அளிப்பதற்காகத்தான். ஆனால் பிரபஞ்ச அமைப்பின் உள்ளடக்கமான தனித்தனி பொருட்களின் (கேலக்ஸிகள் மற்றும் நட்சத்திரங்கள்) ஆயுட்காலம் ஒட்டுமொத்த பிரபஞ்சத்தின் ஆயுட் காலத்தைவிட குறைவானதாயுள்ளது. ஆக ஒரு மனிதனைவிட சூரியனைப் போன்ற ஒரு நட்சத்திரத்தின் ஆயுட்காலம் மிகவும் நெடியதாக இருப்பதில் எவ்வித விசேஷமும் இல்லை. நீண்ட நெடிய ஆயுள் என்பது முக்கியமல்ல. மாறாக ஒரு நிகழ்வு வழிமுறை, செயல்பாட்டின் மூலம் அடையக்கூடிய முடிவுகள் எத்தன்மையிலானது என்பது மட்டுமே முக்கியமானது.

அடுத்து, பிரபஞ்சத்தின் ஆயுட்காலம் (அதனுடைய அமைப்பு மற்றும் பௌதிக விதிகளுக்கேற்ப) பல நூறு கோடியாண்டுகள் என்பதனால் அந்த கடைகோடியாண்டுகளின் இறுதியில் தான் பிரபஞ்சத்தின் பரிணாம இலக்கு எட்டப்படும் என்பதில்லை. ஏனென்றால், பிரபஞ்ச மெய்ம்மையின் இருப்பானது கிடைமட்டமாக பல நூறு கோடியாண்டுகளாக தொடரலாம். ஆனால் முக்கியத்துவம் வாய்ந்த பரிணாம மாற்றங்கள் எப்போதும் செங்குத்தான பாதையில் காலத்தை எதிர்க்கும் அல்லது கடக்கும் விதமாகவே நடைபெறுவதாயுள்ளது. இன்னொரு வகை இருப்பானது கால ஓட்டத்திற்கு செங்குத்தான திசையில் செல்வதாயுள்ளது.

பரிணாம வரலாற்றில் ஒரு குறிப்பிட்ட பரிணாம ஜீவி புதிதாகத் தோன்றி நிலைபெற்ற பிறகு அந்த ஜீவியானது காலத்தில் பயணிப்பதை தனது இருப்பின் பிரதான நோக்கமெனக் கொண்டு இயங்குவதாகிறது. ஆனால் ஒவ்வொரு முறையும் எவ்வொரு படைப்புப்பூர்வமான, பண்பு ரீதியான அடுத்தகட்ட பரிணாம மாற்றமும் நிகழவேண்டுமெனில் செங்குத்துப் பாதையில் தான் மேற்கொள்ளப்படுகிறது. இந்த செங்குத்துப் பாதையினை தேர்வு செய்திடாத ஒரு பரிணாம ஜீவியானது அது அடைந்த நிலையில் மேற்கொண்டு எவ்வித குறிப்பிடத் தக்க அடிப்படையான மாற்றத்தையும் அடைவதில்லை. மாறாக, தான் அடைந்திட்ட அந்த நிலையிலேயே திருப்தி கண்டு வெறுமனே காலத்தைக் கழித்துச் செல்வதாய், காலத்தில் வளர்ந்து முதிர்ந்து இறுதியாக இறப்பில் முடிந்து விடுகிறது. பிறப்பில் தொடங்கி இறப்பில் முடிந்து போகும் இந்த கிடைமட்டப் பயணத்தையே ஜீவித்தல் என்று குறிப்பிடப்படுகிறது.

மனித ஜீவியானது புவி முழுவதும் பரவி பல்கிப் பெருகி ஒரு மாபெரும் சமூகமாக, பலவித மொத்த விதிமுறைகளை, சட்ட திட்டங்களை வகுத்துக் கொண்டு இங்கே ஜீவித்தலை தனது பிறப்புரிமையாய், கடமையாய்க் கொண்டு நடத்திச் செல்கின்றது. உண்மையில் ஒட்டுமொத்த மனித சமுதாயமானது வெறுமனே உயிர் பிழைத்திருத்தலையே வாழ்க்கையென வாழ்ந்து செல்கிறது. அதே போது அது தனது ஜீவித்தல் பிராணி வகைப்பட்ட ஜீவித்தலினின்று பிரித்தறியும் வகையிலான போர்வையினை உருவாக்கிக் கொண்டு தனது

ஜீவித்தலை நடத்திச் செல்கிறது. அதாவது, மனித சமூகமானது தனது உயிர் வாழ்தலை பல விதத்திலும் அலங்கரித்திடும் வழியினில் தனது ஜீவித்தலை பிராணி வகைப்பட்ட ஜீவித்தலிலிருந்து வித்தியாசப்படுத்திவிட்டதாய் காண்கிறது. அதோடு அது தன் இனத்திற்குள்ளேயே ஒருவருக்கொருவர் வித்தியாசப்படுத்துதலைச் செய்வதற்காக ஏற்றத்தாழ்வை உருவாக்கிடும் வகையிலான சமூக அந்தஸ்து நிலை, செல்வநிலை..... ஆகியவைகளைக் கொண்ட போலி மதிப்புக்களின் படிமுறை அமைப்பினையும், அம்மதிப்புக்களை அடையும் வழிமுறையாக போட்டியடிப் படையிலமைந்த ஒரு பந்தயமாக (இதுவே எலிப் பந்தயம் (Rat-race) எனப்படுவது) வாழ்க்கையை உருவகித்தும் உருவாக்கி வைத்துள்ளது.

இவ்வகையில், மனித சமூகத்தின் அனைத்து செல்வமும், செல்வத்தின் மீதான அதன் மோகமும், அதன் அனைத்து 'உயர்ந்த' மதிப்புக்களும், சகலவிதமான சௌகரிய சம்பத்துக்களும், அதன் கேளிக்கைகளும், அதன் கலை இலக்கியங்களும், உண்மை குறித்த அக்கறையற்ற அதனுடைய விஞ்ஞானமும், தொழிற்நுட்ப சாதனைகளும், அதனுடைய ஒருவகையான உண்மையான 'மனித' வாழ்க்கையை வாழ்ந்திட சிறிதும் உதவுவதில்லை.

மனித வாழ்க்கையின் உண்மையான இலக்கானது வெறும் ஜீவித்தலைக் கடந்து செல்வதன் மூலமே எட்ட வியலும் என்பதையறியாத மனித சமூகம் வாழ்க்கையின் உண்மையான இலக்கு, அர்த்தம், நிறைவு, முழுமை ஆகியவை குறித்த எவ்வித ஆழமான தேடல் முயற்சியையும் மேற்கொள்வதற்கு பதிலாக தம்மிஷ்டம் போல் வாழ்க்கைக்கான அர்த்தத்தையும், இலட்சியங்களையும், இலக்குகளையும் தாமே கற்பித்துக் கொண்டு வாழ்க்கையை நடத்திச் செல்கிறது.

மேலும் அது நோய் நொடியின்றி தம்மைப் பாதுகாத்துக் கொள்வதையும், அர்த்தமின்றி நீண்ட நெடிய ஆயுட் காலத்தைப் பெற்றிடுவதையும் பெரிதென எண்ணி வாழ்கிறது. மேலும், கீழ்மட்ட ரீதியான ஜீவித்தலுக்குப் பழகிப் போய்விட்ட அதன் கீழ்மட்டப் பார்வையானது வாழ்க்கையை பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடைப்பட்ட பயணமாகக் காண்பதுடன் நிறுத்திக் கொள்ளாமல் இறப்பிற்கு அப்பாலும் நீண்டு செல்வதாய் கனவு காண்கிறது. இவ்வாறு தான் அது தனது தட்டையான கீழ்மட்டப் பார்வையின் துணை கொண்டு சொர்க்கம், நரகம், மறுபிறப்பு போன்ற புனைவுகளையும் உருவாக்கிக் கொண்டுள்ளது. இவ்வழியே மனித ஜீவியானவன் இப்போதே, இக்கணத்தில் மேற்கொள்ள வேண்டிய பிரக்ஞையுடன் கூடிய வாழ்க்கையை அவசியமில்லாமல் தள்ளிப்போட்டுக் கொண்டே செல்கிறான். இன்று, தான் செய்யாமல் தவிர்த்திட்டதை நாளை செய்து விடக் கூடும் என அவன் நம்புகிறான். ஆனால், உண்மையில் மனிதன் எத்தனை பிறவிகள் எடுத்தாலும் உண்மையான வாழ்க்கை என்பதும், முழுமையடைதல் என்பதும் எப்போதும் செங்குத்துப் பாதையில் பயணிப்பதையே வேண்டுகிறது. வெறுமனே பிறவிகள் பல எடுப்பதென்பது மனிதனை ஒருபோதும் செங்குத்துப் பாதையினை நோக்கிச் செலுத்திடாது. இப்பிறவியாயினும், அடுத்த பிறவியாயினும் இன்னும் எப்பிறவியாயினும் ஒருவன் சரியான வழியை பிரக்ஞையுடன் தீர்மானித்திடாவிடில், தேர்வு செய்திடாவிடில் பிறவிகள் பல எடுப்பதில் எவ்வித அர்த்தமும் பயனும் இருக்க வியலாது.

பிரபஞ்சத்தின் நீண்ட நெடிய பரிணாம வரலாற்றில் பொருள், உயிர் எனும் பண்புகளுக்கு அடுத்தபடியாக பிரக்ஞை எனும் பண்பு வெளிப்பட்ட பிறகு இனி பரிணாமம் என்பது பிரக்ஞையற்ற ரீதியில் இயற்கையின் உந்துதலினால் தானியங்கி ரீதியில் நடைபெறவியலாது. அக்காலக் கட்டங்கள் மனிதன் தோன்றியவுடன், மனிதனுள் பிரக்ஞை வெளிப்பட்டவுடன் முடிவிற்கு வந்து விட்டன. எனவே, இனி பரிணாமம் எனும் நிகழ்வும், அதில் பரிணமிக்கும் ஜீவியும், பிரக்ஞையுடன் பங்கு பெறுவதும், முன்னோக்கிச் செல்வதும் வளர்ச்சியின் புது விதியாகிறது.

பிறப்பில் தொடங்கி இறப்பில் முடிகிற ஜீவித்தலில் பிரத்யேக பரிணாமக் குறிக்கோள் எதுவும் சாதிக்கப் படுவதில்லை. அதாவது, வெறுமனே ஜீவித்தல் அல்லது உயிர் பிழைத்து வாழ்தல் எனும் அடிப்படையைத் தவிர! ஆனால் எவ்வொரு அடிப்படையும், அடித்தளமும் ஒரு தொடக்கம் அல்லது ஆரம்பம் தானே தவிர முடிவல்ல. மேலும் எவ்வொரு அடிப்படை அல்லது அடித்தளம் என்பது மேற்கொண்டு உருவாகக் கூடிய அடுத்தடுத்து தொடர்ந்து நிகழவிருக்கும் மாற்றங்களைத் தாங்கிடுவதற்காக அமைக்கப்பட்டதே ஆகும்.

மேலும், ஜீவித்தல் என்பது வெறுமனே உயிர் பிழைத்திருத்தல் அல்லது உயிர் வாழ்தலுக்காக வாழ்தல் ஆகும். ஆனால் வாழ்தல் என்பது குறிப்பாக பிரக்ஞையை உடைய மனித ஜீவியைப் பொறுத்த வரையில், ஜீவித்தலைக் கடந்து வாழ்தலை 'அறிதல்' ஆகும். ஜீவித்தல் எனும் இயக்கம் பிறப்பில் தொடங்கி தவிர்க்கவியலாமல் இறப்பில் முடிந்துவிடக் கூடிய ஒரு (புலன் உணர்ச்சி) ரீதியான இருப்பாகும். ஆனால் வாழ்தல் எனும் இயக்கம் பிறப்பில் தொடங்கி இறப்பு நோக்கிச் செல்லும் ஜீவித்தலை நிகழ்த்தும் மனித ஜீவியின் பிரத்யேகமான பிரக்ஞைச் செயற்பாடு ஆகும். இம்மனித ஜீவி ஜீவித்தல் எனும் இயக்கத்துடன் (அவ்வியக்கத்தில் தான் அது தனது இருப்பின் வேர்களைப் பெற்றுள்ளது என்ற போதிலும்) தன்னை அடையாளப்படுத்திக் கொள்வதில்லை. மாறாக அது தொடர்ந்து பிரக்ஞைச் செயற்பாடான அறிதல் எனும் இயக்கத்துடனேயே தன்னை அடையாளப்படுத்திக் கொள்வதாகிறது. இது ஜீவித்தலின் நீண்ட நெடிய (400 கோடியாண்டு கால) வரலாற்றில் ஒரு ஜீவி கொள்கிற பண்புரீதியாக முற்றிலும் மாறுபட்டதொரு புதுவகை அடையாளமாகும்.

ஜீவித்தல் என்பது ஒரு (புலன் உணர்ச்சி) ரீதியான இருப்பு என்றால், வாழ்தல் என்பது பிரக்ஞை ரீதியாக இருப்பினையே அறிதலுக்குட் படுத்தும் ஒரு இருப்பாகும். அறிதல் என்பது இருப்பானது உட்படக்கூடிய ஆக உயர்ந்த வளர்ச்சி நிலை அல்லது மாற்றமாகும். பரிணாம வரலாற்றில் உயிர் தோன்றுவதற்கு முன் வெறும் பௌதிக வகையாக விளங்கிய இருப்பானது உயிர் தோன்றிய பிறகு புலன் உணர்ச்சியுடையதாக மாறியது. பிறகு மனிதன் தோன்றி, அவனுள் பிரக்ஞை ஊற்றெடுக்கும் இருப்பானது தன்னைத் தானே அறிந்து கொள்ளும் வகையிலானதொரு புதிய பரிணாமத்தை அடைகிறது. இப்பரிமாணமே இருப்பானது தனது பரிணாமத்தில் அடையக் கூடிய ஆக உயர்ந்த இறுதியான வளர்ச்சியின் நிலையாகும்.

அப்படியெனில், இவ்வாறு அறிதல் இயக்கத்தில் ஈடுபடும் ஒரு ஜீவிக்கு குறிப்பாக மனித ஜீவிக்கு இறப்பின் அர்த்தம் தான் என்ன? அல்லது இறப்பு என்பது அந்த ஜீவியுடன் எத்தகைய தொடர்பில் உள்ளது?

உண்மையில், பிறப்பு இறப்பு மற்றும் இவ்விரண்டிற்குமிடையேயான வளர்ச்சிப் பருவங்களினூடேயான இயக்கம், இவையனைத்தும் பிரபஞ்ச இருப்பானது தானடையக் கூடிய உயர்ந்த இலக்கை அடையும் வழியினில் அமைந்திட்ட 'பொறி அமைப்புக்களே' (mechanisms) ஆகும். அதில் பிறப்பு எனும் பொறியமைப்பின் வழியே இருப்பைப் பெற்றிடும் ஒரு ஜீவியானது தனது ஜீவித்தலை நிகழ்த்தி இறுதியாக இறப்பு எனும் பொறியமைப்பில் சிக்கித்தான் முடிய வேண்டும் எனகிற தேவை அல்லது விதி கட்டாயமில்லை. அதிலும் ஜீவித்தலைக் கடந்து அறிதலை வாழ்க்கையென மேற்கொள்ளும் ஒரு மனித ஜீவியைப் பொறுத்த மட்டில் எவ்வளவு முழுமையாக அது தனது அறிதல் இயக்கத்தில் ஈடுபடுகிறதோ அவ்வளவிற்கு அது அறிதலின், பிரக்ஞை எனும் மூன்றாம் துருவத்தின் அங்கமாக மாறிவிடுகிறது. அறிதல் இயக்கமானது முழுமையாய் விளங்கிடும்போது அறிபவன் (மனிதன்), அறியப்படுவது (உலகம், பிரபஞ்சம்) என்பதனைத்தும் அறிதலின் (புரிதலின்) கூறுகளாக மாறிவிடுகின்றன. அல்லது செரிக்கப்பட்டு விடுகின்றன. இவ்வழியே அம் மனிதஜீவி இறப்பு எனும் பொறியமைப்பில் சிக்காமல் கடந்து சென்று விடுகிறான்.

ஆனால், ஒரு மனித ஜீவியினால் தனது உடலையும், அதிலுள்ள ஒவ்வொரு செல்லையும் பிரக்ஞைப்படுத்திட இயலுமெனில் முழுமையாகத் தன்னை பிரக்ஞையின் உலகிற்கு, பரிமாணத்திற்கு உருமாற்றிக் கொள்ளவியலும். இவ்வழியே அதனால் முற்றிலுமாக இறப்பைத் தவிர்த்து விட முடியும்.

ஆனால் இவ்வாறான முழுமையான திவ்விய மாற்றம் சாத்தியப்படாத போது பொருண்மை மற்றும் உடலியல் விதிகளினால் ஆளப்படும் மனித ஜீவியின் பிரக்ஞை மாற்றம் பெறாத பகுதியான உடலானது இறப்பினைச் சந்தித்து சிதைந்து மீண்டும் பொருண்மையுலகின் பகுதியாக கலந்து விடுகிறது. ஆனால் அனைத்து ஜீவிகளிலும் மனித ஜீவியே மிகவும் வித்தியாசமானவன் ஆவான். ஏனெனில் அவன் ஏற்கனவே ஒரே சமயத்தில் இருவித உலகங்களில் வாழ்பவனாக விளங்குகிறான். தனது உடல் எனும் ஊடகம் வழியே காணும்போது அவன் 'காலம் வெளி பொருண்மை'யின் உலகில் வாழ்பவனாகவும் தனது பிரக்ஞையின் வழியே அறியும் போது பிரக்ஞையின் உலகில் வாழ்பவனாகவும் விளங்குகிறான்.

ஆனால் இன்றளவிலும் மனிதனால் புறவுலக அம்சங்கள் விளைவிக்கும் திரிபைக் (Distortions) கடந்து விடயங்களை ஊடுருவிப் புரிந்து கொள்ளும் பக்குவத்தைப் பெற இயலவில்லை. இதன் விளைவாக அவன் தன்னை இப்புறவுலகம் எனும் மாபெரும் பெட்டியினுள் வசிப்பவனாகவே காண்கிறான். இப்பெட்டியினுள் சிரமமின்றி வாழ்வது எவ்வாறு என்பதைக் கண்டு பிடித்து பல்வித வழிமுறைகளை உருவாக்கிட உதவும் ஒரு கருவியாகவே அவன் தனது பிரக்ஞையைக் காண்கிறான். மாறாக, அவன் இப்பிரபஞ்சம் எனும் மாபெரும் பெட்டியினுள் அடைபட்டு வாழ்பவனாக அல்லாமல்; உண்மையில் தானும் இப்பிரபஞ்ச ஊடகத்தின் நீட்சியானதொரு வளர்ச்சியே என்பதையும்; அந்நீட்சியின் அடுத்த கட்ட வளர்ச்சியாக விளங்குவதே தனது பிரக்ஞை என்பதையும் அவன் இன்னமும் அறிந்தவனாயில்லை.

மேலும் மனிதனின் பிரக்ஞை என்பது பிரக்ஞையின் இறுதி நிலையன்று. மாறாக அது பிரக்ஞை எனும் மாபெரும் மெய்ம்மையின் ஒரு தொடக்க நிலை மட்டுமே. ஆனால் மனிதனோ, தனது பிரக்ஞையின் உண்மையான

மாத்திரத்தையும், பயண எட்டடையும் அறியாதவனாய் தனது குறுகிய விருப்பம் மற்றும் ஆசைகளின் வழியாக தனது பிரக்ஞையை கட்டுப்படுத்தி வைத்து பேயத்துச் செய்கிறான். மனிதனது பிரக்ஞையானது சுதந்திரமாக இயங்கவியலாமல் ஆதிதொட்டு அன்றாட உலகியல் விவகாரங்கள் மற்றும் விடயங்களால் பிணைக்கப்பட்டதாக முடக்கப்பட்டுக் கிடக்கிறது.

ஆனால் அன்றாட உலகியல் விவகாரங்கள் மற்றும் விடயங்களின் ஆக்கிரமிப்பிலிருந்து தனது பிரக்ஞையை விடுவித்துக் கொள்ளும்போது (இவ்விடுவிப்பு தான தியானம் எனப்படுகிறது), மனிதனின் பிரக்ஞையானது தனது இயல்பான இயக்கத்தைத் திரும்புகிறது. அதுவரை அணை போடப்பட்டு முடக்கப்பட்டிருந்த பிரக்ஞையானது ஊற்றெடுத்துப் பெருகத் தொடங்கிவிடுகிறது. பிறகு அது ஆறெனப் பெருகி கரைபுரளும் வெள்ளமெனப் பெருக்கெடுத்து இறுதியில் மாபெரும் சமுத்திரமாய் எல்லையற்ற பிரபஞ்சத்திற்கிணையாகப் பரந்து விரிந்து இணையிலா தனது இலக்கான பிரபஞ்சப் பிரக்ஞை எனும் முழுமையை எட்டி விடுகிறது.

ஆனால் எவ்வகையாகவோ பெரும்பாலும் மனிதர்கள் எல்லையற்றுப் பரந்து விரியக் கூடிய தமது பிரக்ஞையின் இயக்கத்தை தடுத்து நிறுத்தி 'தன்முனைப்பு' (Ego) எனும் சிறு குட்டையாக்கி அதிலேயே தேங்கிவிடுபவர்களாக, வெறும் தமது பார்வை, சிந்தனை, அறிவு மற்றும் செயற்பாடுகளின் எல்லைகளை 'சமூக பொருளாதார அரசியல்' வட்டத்திற்குள்ளேயே முடக்கி வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறு தமது உண்மையான அடையாளத்தை அறியாதவர்களாக; அதற்கான யாதொரு முயற்சியினையும் மேற்கொள்ளாதவர்களாக வெறும் தன்முனைப்புக்களாக தேங்கி உதிர்ந்து விடுகின்றனர்.

அதே வேளையில், தன் முனைப்பு எனும் சிறு குட்டையாகத் தேங்கிவிடாமல் தனது குறுகிய விருப்பங்களின் தளங்களில் தனது பிரக்ஞையை முழுமையாக முடக்காமல் விடுவிக்கும் ஒருவன் தனது பிரக்ஞையின் இயல்பான ஓட்டத்துடன் பயணிப்பவனாய் இறுதியில் தனது பிரக்ஞையின் பிரபஞ்சமளாவிய விரிவுடன் தனது உண்மையான அடையாளத்தை அறிந்து கொள்கிறான்.

இவ்வாறு மனிதனானவன் தனது பிரபஞ்சமளாவிய அடையாளத்தை அறிவதென்பதும், தனது பிரக்ஞையை பிரபஞ்சம் அளவிற்கு விரிவடையச் செய்வதென்பதும் ஒன்றேயாகும். இச்செயற்பாடு ஏற்கனவே கூறப்பட்ட செங்குத்துப் பாதையில் நிகழ்வதாகும். செங்குத்துப் பாதையில் பயணிப்பதென்பது காலத்திற்கு எதிர்த் திசையில் காலத்தைக் கடக்கும் விதமாக அமைவதாகும். மனிதன், காலம் வெளி பொருண்மையினாலான கட்டுப்பாடான உலகிலிருந்து தனது பிரக்ஞையை விலக்கி விடுவித்துக் கொள்ளும்போது காலமற்ற வெளியற்ற பொருண்மையற்ற (அதாவது காலம், வெளி, பொருண்மை இவை மூன்றையும் கடந்த) தொரு சூன்யப் பிரதேசத்தில் அவனது பிரக்ஞையானது அனுபவம் கொள்வதாய் அமைகிறது. காலம் அற்ற நிலை வெளியுமற்றது.

வெளியற்றது என்பதால் அது பொருண்மையுமற்றது. இவ்வாறு ஏதுமற்ற சூன்யநிலை அல்லது சூன்ய அனுபவம் என்பதே இறுதியானது, முழுமையானது.

ஏனெனில், இவ்வனுபவத்தில் இனி சென்றடையக் கூடிய இடம் (வெளி) அல்லது கடக்கப்படவேண்டிய தொலைவு என்று ஏதுமில்லையாதலால், காலத்திற்கும் அதில் இடமில்லாமல் போய்விடுவதால் இயக்கம் அல்லது பயணம் என்பது முடிவிற்கு வந்துவிடுகிறது. இது ஒரு உச்சநிலை அனுபவம் ஆகும். மலை மீதேறி அதன் சிகரத்தை அடைந்த பிறகு அந்த உச்சியில் மலை என்பதில்லை. அதாவது பொருண்மை அல்லது உலகம், பிரபஞ்சம் என்பதில்லை. அவை முழுவதுமாக கடக்கப்பட்டு விடுகின்றன. இறுதியாக இருப்பது எல்லையில்லாத ஆதியும் அந்தமும் ஆன, அந்த பிரபஞ்சப் பிரக்ஞை மட்டுமே! அவ்வனுபவத்தில் 'மனிதன் உலகம்', 'அறிபவன் அறியப்படுவது' போன்ற பிளவுகளும் இல்லை. காலம் முற்றும் நீங்கிய அனந்தநிலையின் அவ்வனுபவம் மிகவும் செறிவுடையதாக, ஒருமையும் முழுமையானதாக உணரப்படும்.

காலத்தின் உலகில் பெறப்படும் எவ்வொரு அனுபவமும் முழுமைக் குறைவானதாகவே இருக்கும். ஏனெனில் காலம் என்பது எப்போதும் நீட்சியை, தொடர்ச்சியை குறிப்பதாகும். ஆகவே பருண்மையான இப்பிரபஞ்சத்தில், மனிதனால் பெறக்கூடிய எவ்வொரு அனுபவமும் முழுமையானதாய், முற்றானதாய், மனிதனை நிறைவு செய்வதாய் இருக்கவியலாது. எனவே, இப்பிரபஞ்சத்தில் இவ்வாழ்க்கையில் முழுமையான அனுபவம் என்றேதும் இருக்கவியலாது எனும் அவசர முடிவிற்கு வந்துவிடுவது முறையாகாது. ஏனெனில் முழுமையான அனுபவம் எனபது இவ்வுலகில் இவ்வாழ்க்கையில் மனிதன் பேரார்வத்துடன் விரும்பினால் இப்போதே இந்தக் கணத்திலேயே உடனடியாகப் பெறவியலும்!

மலையின் மீதேறி சிகரத்தின் உச்சியையும் அடைந்த பிறகு மலையானது மறைந்து விடுவதைப் போல பிரபஞ்சம் எனும் மலையின் சிகரம் போன்ற வளர்ச்சி நிலையான மனிதப் பிரக்ஞையின் உச்சியை ஏறிக் கடந்திடும்போது 'பிரபஞ்சப் பிரக்ஞை' எனும் முழுமையான அனுபவம் சம்பவிக்கிறது. காலம் முற்றிலுமாக நீங்கிய இந்தப் பிரபஞ்சப் பிரக்ஞையின் அனுபவமே இறுதியானது. ஆகவே அனைத்திலும் ஒப்பற்ற வித்தியாசமாய்த் திகழ்வது. இவ்வனுபவமே இறப்பின் அவசியத்தை வெகுவாகக் குறைத்து விடுகிறது. இவ்வனுபவத்தின் முன் இறப்பு என்பது மிகக் குறைவான சொற்பமான அர்த்தத்தையே பெறுகிறது! இவ்வனுபவமே செங்குத்துப் பாதையின் உச்சமாகும். இதுவே மூன்றாம் துருவமாகும்.

புது எழுத்து

நன்கொடை மற்றும் சந்தா ஆகியவற்றை கீழ்க்கண்ட வங்கி கணக்கு எண்ணிற்கு அனுப்ப வேண்டுகிறோம்.

A/c No. 867 999 265
Indian Bank,
Kaveripattinam Branch (K-212)

இளைய அப்துல்லாஹ்- லண்டன்

பேராசான்

(10.05.1932 - 06.07.2011)

பேராசிரியர் சிவத்தம்பியின் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொழும்பு கனத்தை மைதானத்துக்கு எடுத்துச் செல்லும் பொழுது அவரது மனைவி மக்கள் ஓ வென்று அழுதார்கள்.

அங்கு நின்ற பெரியவர்கள், படித்தவர்கள், மாணவர்கள் எல்லோரும் தான் அழுதார்கள். சிலரின் கண்களில் இருந்து தாரை தாரையாக கண்ணீர் சொரிந்த வண்ணம் இருந்தது.

உண்மையில் உற்ற தோழன் ஒருவரை இழந்த தவிப்பு எங்கள் எல்லோர் மனதிலும் இருந்தது. நெஞ்சில் வலி இருந்தது.

பேராசிரியரின் உடலை இங்கு லண்டனில் தொலைக்காட்சியில் வீடியோவாக பார்த்தபொழுது நான் எழுந்து நின்று அஞ்சலி செலுத்தினேன்.

அவர் மிகவும் மரியாதைக்குரிய ஒருவராக இருந்தார்.

பேராசிரியர் இறந்து விட்டார் என்பது மனதில் பெரியதொரு வலியாக இன்னும் இருக்கிறது.

நான் முதன் முதலில் பேராசிரியரோடு தொலைபேசியில் பேசியது 'சுன்னத்து செய்தல்' என்ற கட்டுரைக்காக. அதற்கு முதல் அவரது கட்டுரைகள், அரசியல் ஆய்வுகள், மேடைப்பேச்சுகள் எல்லாவற்றையும் கூர்ந்து கவனித்து வந்திருக்கிறேன். எட்ட நின்று அவரின் புலமையை என்னுள்ளே பிரமித்து மகிழ்ந்திருக்கிறேன். கிட்டப்போய் பேசவில்லை.

'சுன்னத்து செய்தல்' தொடர்பாக நான் கேட்ட எல்லா கேள்விகளுக்கும் வரலாற்று ஆதாரங்களோடு உடனுக்குடன் மிகுந்த தோழமையோடு பதிலளித்தார்.

மிகவும் பொறுமையாக நேரமெடுத்து பதிலளித்தார். எந்த மாணவர்கள் எந்த நேரத்தில் எதனைப் பற்றி கேட்டாலும் பதில் சொல்லக்கூடிய ஒரு பேராசிரிய நண்பராகத்தான் அவரை நான் மட்டுமல்ல எல்லோரும் மனதார நேசிக்கிறார்கள்.

அவர் இலங்கைத் தமிழர்களுக்கு பெரும் கொடையாக விளங்கினார்.

அவரது மேடைப்பேச்சுக்கள் வலு சுவாரஸ்யமாக இருக்கும்.

ஒருமுறை பத்திரிகையாளர்களுக்கு பரிசு வழங்கும் விழா ஒன்றில் 'ஆங்கில, சிங்கள பத்திரிகைகளை பார்த்தால் இரண்டும் இரண்டு நாடுகளின் பத்திரிகைகள் போல இருக்கின்றன. அது பெரும் கவலையாக இருக்கிறது' சொன்னார். தமிழ் பத்திரிகைகள் தமிழர் சார்பாக மட்டும் எழுதுகின்றன.

சிங்கள பத்திரிகைகள் தமிழர்களை எதிரிகளாக மட்டுமே எழுதுகின்றன என்ற கவலை அவரிடம் அதிகமாக இருந்தது. ஊடகங்கள் இன ஒற்றுமையை விடுத்து இன பிரச்சனைக்கு தொடர்ந்து தூபமிட்ட வண்ணமே இருந்தன என்ற விடயத்தை அவர் தெளிவுற சொன்னார். முக்கிய பத்திரிகையாளர்களுக்கு அன்று உறைத்திருக்கும்.

அவர் சொல்ல வந்த விடயத்தை மிகவும் ஆணித்தரமாக முன்னிறுத்தி பேசுவார். பேசும்போது தமிழ் வார்த்தைகள் கேட்பதற்கு மிகவும் இனிமையாக இருக்கும். அது அவரின் மேடைப் பேச்சின் அழகாகும்.

தினக்குரல் பத்திரிகையில் 'பீஷ்மர்' எனும் புனை பெயரில் வாரா வாரம் இலங்கையின் அரசியல் போக்குகளை அலசி ஆராய்ந்து வந்தார்.

கட்டுரை வந்தவுடன் அதிலுள்ள கருத்துக்கள் தொடர்பாக அவருடன் உரையிடுவேன். அப்பொழுது 'நான் சொல்ல வந்த கருத்து உனக்கு விளங்குதோடா ' என்று வாஞ்சையோடு கேட்பார்.

அவர் எப்பொழுதும் யாருக்கும் விளங்காத மொழியில் எழுதுவதேயில்லை. எல்லோருக்கும் புரியும்படிதான் எழுதுவார். அவரின் அரசியல் கட்டுரைகளில் யுத்த நெருக்கடி காலங்களில் பிரபாகரனுக்கும், அரசாங்கத்துக்கும் முக்கியமான ஆலோசனைகளை சொல்லுவார். ஆனால் அதனை யாரும் கேட்க மாட்டார்கள். கேட்கும் மனநிலையில் பிரபாகரனும் இருக்கவில்லை அரசாங்கமும் இருக்கவில்லை.

இப்பொழுதும் இலங்கை சுவடிக் கூடத்தில் இருக்கும் தினக்குரல் பத்திரிகையின் பழைய பிரதிகளை எடுத்து பீஷ்மரின் கட்டுரைகளை வாசித்தால் புரியும் எவ்வளவு முக்கியமான அரசியல் ஆலோசனைகள் அவை என்று.

அவருடைய அரசியல் கட்டுரைகளால் அரசாங்கத்துக்கும் நெருக்கடி இருந்தது. புலிகளும் சில நேரங்களில் அவரை விரும்பவில்லை. ஆனாலும் தொடர்ந்து ஒரு தமிழறிஞராக தனது கடமையை அவர் செய்து கொண்டு தானிருந்தார்.

'நான் சார்ந்த தொலைக்காட்சிக்காக செவ்வி காண வேண்டும் சேர்'என்று ஒரு வேண்டுகோளை வைத்த போது வா என்று ஒரு நாளை குறித்து தந்தார்.

காமெரா கருவிகளோடு போன போது இங்கு லண்டனின் இருக்கின்ற ஒரு பொக்ஸ் ரூமைப் போன்ற ஒரு நெருக்கடி மிக்க சிறிய அறையில் தனது பெரிய உடம்பை அசைக்க முடியாமல் இருந்தார். லுங்கியோடும் ஷேட்டோடும் அவரை இயல்பாக வைத்து அவரது கட்டிலில் வைத்து பேட்டி எடுத்தேன்.

அந்த புழுக்கமான அறையில் வியர்வைக்கு காற்றாடியை போட வேண்டும். அந்த இட்டு முட்டான அறையில் லைட்டை வைக்க வேண்டும்.

ஒலிவாங்கிக்கு காற்று அடிக்க அது புஸ்.... புஸ்.... என்கிறது இவ்வாறான நெருக்கடிக்குள் அரை மணி நேரம் அரசியலிலும் அரை மணிநேரம் இலக்கியமும் பேசினோம்.

இலங்கையின் மிக முக்கியமான பெரும் அறிவுச் செல்வத்தை எப்படி பாதுகாக்க வேண்டும்.

அவருக்கு ஒரு வசதியான ரூம் கூட இல்லாமல் இருந்தது.

எத்தனை பெரிய தமிழ் பணக்காரர்கள் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் இருந்தாலும் கொழும்பில் யாழ்ப்பாணத்தில் வெண்கல மணி வாங்கவும் கோபுரம் கட்டவும் கோடிக் கணக்கான ரூபாய்களை கோவில்களுக்கு கொட்டி கொடுக்கின்ற எந்தப் பணக்காரரும் சிவத்தம்பி என்ற பொக்கிஷத்தை பாதுகாக்க முன்வரவில்லை.

அவர் சிரமப்பட்டுக் கொண்டுதான் இருந்தார். அவருக்கு மாடியில் தான் அறை இருந்தது. நெருக்கடியான லிப்ட்

ஒன்றில் தனது கம்பி ஊன்றுகோலுடன் கீழே வருவதற்கு பெரும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தார்.

குடும்பத்தினர் பார்க்கட்டும் என்று அறிஞர்களை அந்தரத்தில் விடுவது இந்த தமிழ் சமூகம் மட்டும் தான் என்று நினைக்கிறேன். அப்படி ஒரு கவலை எனக்கு வந்தது. ஆனால் அவர் அதனை எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு வாழ்ந்திருக்கிறார். அதுதான் அவரின் பெருந்தனம்.

அவ்வளவு சிரமத்தோடும் பேராசிரியர் செம்மொழி மகாநாட்டுக்கு போனதை பெரிது படுத்தி அவரிடம் படித்த ஒருவர் கூட 'சவத்தம்பி' என்று கிண்டலடித்து கட்டுரை எழுதி பிரசுரத்திற்கு விட்ட பொழுது அவர் சொன்னது 'அவனை பாஸ் மார்க் போட்டு மேலே அனுப்பினது நான்தான். அதுக்கு நன்றியாக இப்படி எழுதுகிறான் எழுதட்டும் எழுதட்டும்.'

அவர் எதற்கும் பெரிதாக அலட்டிக் கொள்ளாதவராக இருந்தார்.

தன்மீது முன் வைக்கப்படும் விமர்சனங்களை அவர் நேரடியாக எதிர் கொள்ளுவார். அவரது இறுதி காலங்களில் அவர் தமிழா? அரசியலா? என்று வரும்பொழுது தமிழுக்கே முன்னுரிமை கொடுத்தது சிலருக்கு பிடிக்கவில்லை. ஆனால் அதனை சட்டை செய்யாமல் தனக்கு சரி என்று பட்டதை தெளிவாக முன்னெடுத்துக் கொண்டு போனவர் அவர்.

துறை என்னவாக இருந்தாலும் தனது ஆழ் அறிவாலும் சுயமான சிந்தனையாலும் தனது கருத்துக்களை தெளிவோடு வெளிப்படுத்தியவர் அவர்.

தமிழ் நாடகத் துறைக்கு தனது ஆய்வின் மூலமாக பெரும் பங்களிப்பும் பிரகாசமும் ஏற்பட செய்தவர் அவர்.

விமர்சனங்களுக்கு மார்க்சிய நோக்குகளை முன்வைத்து புதிய விமர்சன பாங்கை ஏற்படுத்தியவர்.

தமிழ் மொழிக்கு எப்பொழுதும் பெருமை சேர்ப்பவராக பேராசிரியர் தனது வாழ் முழுவதும் இருந்தார்.

பேராசிரியர் மு. இளங்கோவன் பேராசான் சிவத்தம்பியை பற்றி சொல்லும்பொழுது 'மாக்ஸ் முல்லர் உள்ளிட்ட பலர் சமஸ்கிருத மொழி இந்தியா முழுவதும் பரவியிருந்த மொழி எனவும் இலக்கண, இலக்கிய வளங்களைப் பிற மொழிகளுக்கு வழங்கிய மொழி எனவும் கருத்துக்களைப் பரப்பி மேற்குலகம் முழுமைக்கும் சமஸ்கிருத முதன்மையைப் பதிவு செய்திருந்த காலத்தில் பழந்தமிழ் இலக்கியங்கள் கிரேக்க, ரோம இலக்கியங்களுக்கு நிகரான பழைமையை உடையது, சிறப்பினை உடையது எனத் தக்க சான்றுகளுடன் நிறுவிக் காட்டி சங்க நூல்கள் மேற்குலகில் கவனம் பெற உழைத்த கைலாசபதி, சிவத்தம்பி எனும் இருவரும் என்றென்றைக்கும் தமிழர்களினால் நன்றியுணர்வுடன் போற்றத்தக்கவர்களே' என்று மனதார குறிப்பிடுகிறார்.

உண்மைதான் பேராசிரியர் சிவத்தம்பியை தமிழக அறிஞர்கள் மாத்திரமன்றி உலக அறிஞர்களும் என்றும் போற்றுவார்கள்.

தமிழுக்கு இணையான ஆங்கிலப் புலமை அவரை உலகம் முழுவதும் பிரகாசிக்க செய்தது.

இந்தியா, இங்கிலாந்து, ஜெர்மனி பல்கலைக் கழகங்களிலும் பேராசிரியரின் விரிவுரைகள் முக்கியமாக பேசப்பட்டன.

மேடை நாடகங்களை மிகவும் வாஞ்சையோடு மேடையேற்றி நடித்தார். இலங்கை வானொலியில் அவர் நடித்த 'விதானையார் வீட்டில்'

நாடகம் இன்றும் பேசப்படும் ஒன்று. பேராசிரியர் என்ற பெருந்தனத்தை அவரிடம் நான் எப்பொழுதும் பார்க்க வில்லை.

மக்களோடு மக்களாக, மாணவர்களோடு மாணவராக அவர் கலந்து போய் நின்றது தான் அவரை ஒரு தோழனாக நினைக்கத் தோன்றுகிறது.

இப்படிப்பட்ட ஆசிரியர்கள் தமிழில் அருமை. பேராசிரியரின் இழப்பை 'இணையற்ற இலக்கிய வரலாற்றாசிரியரின் மறைவு' என்று அதனால்தான் நாமெல்லோரும் சொல்லி வேதனைப்படுகிறோம்.

வீ.அரசு

இருபதாம் நூற்றாண்டைப் பேராசிரியர் கா.சிவத்தம்பி எதிர்கொண்ட முறைமை: சில குறிப்புகள்

தொல்பழம் வரலாறுகளைப் பெற்றிருக்கும் இனக்குழுக்கள், சமகால வரலாறுகள் குறித்த அக்கறையை முதன்மையாகக் கவனத்தில் கொள்வதில்லை. பழம் வரலாற்றில் ஒரு வகையான போதையை உள்வாங்குவது இயல்பு. தமிழ் இனக்குழுக்களுக்கும் இந்தத் தன்மை பொருந்தும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் உருவான இயங்கியல் வரலாற்று அணுகுமுறை மேற்குறித்த தன்மையை உடைத்தது. தமிழ்ச்சமூகம் குறித்த ஆய்வுகளில் ஈடுபடும் இயங்கியல் அணுகுமுறையை மேற்கொள்ளும் ஆய்வாளர்கள், பண்டைக்காலம் முதல் சமகாலம் வரை சமநிலையில் சமூக வரலாற்றை ஆய்வு செய்வர். பழமை எனும் போதைக்கு ஆளாவதில்லை. ஒவ்வொரு கால உற்பத்திமுறைகள், அதனைச் சார்ந்து உருப்பெறும் உற்பத்தி உறவுகள் முதலானவற்றைக் கணக்கில்கொண்டு, மனித சமூகம் குறித்த வரலாற்றைப் பதிவு செய்வர். பத்தொன்பதாம் நூற்றாண்டு முதல் உருவான

தமிழ்ச்சமூகம் குறித்த ஆய்வுகளில் சமகாலம் குறித்தப் பார்வையை முதன்மைப்படுத்தும் போக்கு உருவானது. இவ்வகை ஆய்வுகள் சமகாலத்தில் வாழும் பிரக்ஞையை உணருவதற்கு உதவியது; இல்லையேல் சமகாலத்தை மறந்து பழமையைப் போற்றும் மனநிலையே பெரிதும் புழக்கத்தில் இடம்பெறும் ஆபத்து உருப்பெற்றிருக்கும்; சமயவாதிகள், அடிப்படைவாதிகள், கருத்து முதல் கண்ணோட்டம் உடையோர் ஆகிய பிறர் பழமைப் போதையில் மூழ்குவதை இன்றும் காணமுடிகிறது.

மேற்குறித்தப் பின்புலத்தில் பேராசிரியர் கா.சிவத்தம்பி இருபதாம் நூற்றாண்டு எனும் பிரக்ஞையை தமது ஆய்வுகளின் வழி எவ்வகையில் கட்டமைத்தார்? இதன் மூலம் பழம்காலம் தொடங்கி இன்றுவரை தமிழ்ச்சமூகத்தில் நிகழ்ந்தவற்றைப் புரிந்துகொள்ளும் இயங்கியல் பார்வையை அவரது ஆக்கங்களின் ஊடாக எவ்வகையில் அறிந்து கொள்ள முடிகிறது? என்ற மீள்பார்வை மூலம், அவருக்கு நன்றி பாராட்டும் அஞ்சலியைக் குறிப்பை நாம் பதிவுசெய்யலாம். இதனை நமது வசதிக்காக கீழ்க்காணும் வகையில் தொகுத்துக் கொள்ளலாம்.

- நவீனத்துவம் தொடங்கிப் பின்-நவீனத்துவம் வரையிலான போக்குகளை (காலனியத்திலிருந்தும் மேலைத்தேயங்களிலிருந்தும் பெற்று அவற்றை நமது மரபுகளாக கட்டமைக்கும் நிகழ்வுகள்) விரிவான உரையாடலுக்கு உட்படுத்திய அவரது ஆய்வுகள்.
- புதிதாக உருவான சமூக நிகழ்வுகள் எவ்வகையில் தமிழ்ச்சமூகத்தில் புதிய இயக்கங்கள் உருப்பெறப் பின்புலமாக அமைந்தன? இவ்வகையில் இருபதாம் நூற்றாண்டில் உருவான சமூக இயக்கங்களையும் புரிந்து கொள்ள உதவும் அவரது உரையாடல்கள்
- பத்தொன்பதாம் நூற்றாண்டில் உருப்பெற்று, இருபதாம் நூற்றாண்டில் தமிழ்ச் சமூகத்தில் பெரும் தாக்கங்களை ஏற்படுத்திய/ஏற்படுத்திவரும் ஊடகங்கள் குறித்த உரையாடலை பல் பரிமாணங்களில் வெளிப்படுத்திய அவரது ஆக்கங்கள். பத்தொன்பது மற்றும் இருபதாம் நூற்றாண்டில்தான் நவீனத்துவம் உருப்பெறுகிறது. ஐரோப்பிய நிகழ்வுகள், காலனியத்தின் மூலமாக நமக்கு வந்தடைகின்றன. இவ்வகையில் வந்தடைந்த நவீனத்துவம், நமது சமூகத்தில் செயல்பட்டுக் கொண்டிருந்த பல்வேறு கருத்துநிலைச்சார்பாளர்கள் வழி எவ்வகையில் எதிர்கொள்ளப்பட்டன? அல்லது உள் வாங்கப்பட்டன? என்ற வரலாறு சுவையானது. நமது புரிதலுக்காக நம் சமூகத்தில் செயல்பட்ட பல்வேறு கருத்துநிலைச் சார்பாளர்களைப் பின்வரும் வகையில் தொகுத்துக்கொள்வோம். இக்குழுக்கள் குறித்தப் பேராசிரியரின் குறுக்கீடுகள் எவ்வகையில் அமைந்திருந்தன? என்ற உரையாடல், பேராசிரியரைப் புரிந்து கொள்ள வழிவகுக்கும்.
- பாரம்பரியக் கருத்துநிலைகள் அனைத்தையும் எவ்வித விமரிசனமும் இன்றி ஏற்றுக் கொள்பவர்கள். சமய நெறிமுறைகளே தங்களது வாழ்க்கையை நடத்திச் செல்லும் என்று நம்புபவர்கள். ஆனால், நவீன சமூகத்தில் உருப்பெற்றுள்ள கருத்துநிலைகளையும் தங்களது கருத்துநிலைகளோடு இணைத்துக்கொள் பவர்கள். நவீனகல்வியைப் பெற்றவர்கள். இக்குழுவினர் இருபதாம் நூற்றாண்டு நிகழ்வுகளை எதிர்கொண்ட முறைமை சுவையானது. இக்குழுவிற்கு எடுத்துக்காட்டாக பெரியவர் அ.ச.ஞானசம்பந்தம் போன்ற பிறரைக் கொள்ளலாம்.
- நவீனக் கல்வியால் ஆங்கிலம் கற்றவர்கள். அதில் உள்ளவற்றை தமிழுக்குக் கொண்டு வருவதில் மிகுந்த அக்கறையோடு செயல்பட்டவர்கள். ஐரோப்பிய

மரபுகளை நமது மரபாகவே கட்டமைக்க முனைவர்கள். சமூகத்தில் கொடுமையான சாதிய ஒடுக்குமுறை வர்க்க முரண்பாடுகள் குறித்தோ எவ்விதமான உணர்வுகளிலும் ஈடுபடாதவர்கள். பெரும்பகுதி ஆதிக்க சாதிகளைச் சேர்ந்தவர்கள். புதிதாய் தன்மைகளைத் தமிழுக்குக் கொண்டு வந்தவர்கள். இவர்களை நவீனத்துவர் அல்லது முன்னணிப் படையினர் (Avantgarde) என்று அழைக்கலாம். இந்த வரிசைக்கு க.நா.சு. மற்றும் சி.சு.செல்லப்பா போன்ற பிறரை எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

- பத்தொன்பதாம் நூற்றாண்டில் உருவான மார்க்சிய கருத்துநிலையை ஏற்றுக் கொண்டவர்கள். இயங்கியல் பொருள்முதல்வாதம், வரலாற்றியல் பொருள் முதல் வாதம் ஆகிய மார்க்சிய கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு செயல்படுபவர்கள். தங்களை மார்க்சியர்கள் என்று அழைத்துக்கொள்பவர்கள். மார்க்சியம் குறித்துப் புரிதலில் பல்வேறு அணுகுமுறைகளை மேற்கொள்பவர்கள். தொ.மு.சி. ரகுநாதன் மற்றும் பேராசிரியர் கோ.கேசவன் போன்ற பிறரை இந்தவகையினராகப் புரிந்து கொள்ளலாம்.

மேற்குறித்த மூன்று தரப்பினரும் நவீனத்துவத்தை ஏற்றுக் கொண்டவர்களே என்று கொள்ள முடியும். ஆனால், ஒவ்வொருவரும் நவீனத்துவம் என்பதை எவ்வகையில் புரிந்து கொண்டார்கள் என்பது குறித்த உரையாடலைப் பேராசிரியர் கா.சிவத்தம்பி தமது ஆக்கங்களில் விரிவாகப் பதிவு செய்துள்ளார். இருபதாம் நூற்றாண்டின் இத்தன்மைகளைப் பல பரிமாணங்களில் புரிந்து கொள்ள பேரா. சிவத்தம்பி ஆக்கங்கள் உதவுகின்றன.

அ.ச.ஞா. மு.வ. எழில்முதல்வன் தொடக்கி இன்று செயல்படும் பல்வேறு தமிழாசிரியர்களும் நவீனத்துவத்தை அதன் வரலாற்றுப் பின்புலப் புரிதலின்றியே பேசினர். எந்திரத்தனமான உள்வாங்குதல் உருவானது. அ.ச.ஞா.வின் 'இலக்கியக்கலை' எனும் நூல் இதற்கு நல்ல சான்று. ஆங்கில மொழியில் மேலோட்டமாக எழுதப்பெற்ற நூல்களை எவ்வித விமர்சனமும் இன்றி தமிழில் எடுத்தாண்டனர். இதனால் நவீனத்துவத்தின் அடிப்படை பற்றிய புரிதல் இல்லாமல் செயல்பட்டனர். அடிப்படைவாதிகளுக்குரிய மனநிலை உடைய இவர்கள் நவீனத்துவச் சொற்களை பயன்படுத்துவது குறித்த பிரக்ஞை ஏதுமின்றி இருந்தனர். நவீனத்துவச் சொல்லாடல்கள் புதுச்சொற்களாகவே அவர்களுக்குப் பயன்பட்டது. அ.ச.ஞா. மற்றும் மு.வ. ஆகியோரின் இவ்வகைச் செயல்பாடுகளை பேரா.கா.சிவத்தம்பி பின்வரும் வகையில் பதிவு செய்துள்ளார்.

இலக்கியக்கலை என்னும் நூலை எழுதியுள்ள அ.ச.ஞானசம்பந்தன், Novel என்பதனைப் 'புதினம்' எனக் கொண்டு அதுபற்றிய அத்தியாயத்தில் Plot என்பதைச் 'சூழ்ச்சி' அல்லது சதி என மொழிபெயர்த்து அச் 'சூழ்ச்சி அல்லது சதி' எவ்வாறு அமைய வேண்டுமென்பது பற்றிக் கூறிச் செல்கின்றார். 'சூழ்ச்சி' என்னும் பதத்தை விளக்க முனையும்பொழுது 'கதைப்போக்கு', 'கதையின் கட்டுக்கோப்பு' எனவரும் சில சொற்றொடர்களைக் கையாண்ட பின்னரும் தொடர்ந்து சூழ்ச்சி என்ற பதத்தையே கையாள்கின்றார். சூழ்ச்சி என்ற பதம் எவ்வாறு ஆங்கிலப் பதத்துக்கிணையான தமிழ்ச்சொல்லாக அமைந்துள்ளது என்பதனை நிறுவாது விட்டுவிடுகின்றார். புனைகதைத் துறையில் பயிலப்படும் Plot என்னுஞ் சொல்லை சூழ்ச்சி அல்லது சதி என்று அவர் மொழிபெயர்த்துள்ளமை இத்துறையில் அவரது ஞானமின்மையையே காட்டுகின்றது.

பேராசிரியர் மு.வரதராசன் அவர்கள் 'இலக்கிய மரபு' என்ற நூலில் நாவல் என்ற அத்தியாயத்தில் Plot என்பதனைக் கரு என்ற பெயர்ச்சொல் பதினாறு கருத்துடை

நிற்கும் எனத் "தமிழ் லெக்ஸிகன்" மூலம் அறிகின்றோம். புனைகதைத் துறையுடன் இணையத்தக்கதாகவுள்ள கருத்து - substance-contents-உட்பொருள் என்ற கருத்தே பேராசிரியர் அவர்கள் தொடர்ந்து தம் நூலில் கருவும் நிகழ்ச்சியும் பலவகையாக அமைவது உண்டு" என்று சொல்வதனாலும் "நிகழ்ச்சிகள் பலவாக அமையினும், ஒன்று மற்றொன்றுக்குக் காரணமாகத் தொடர்புற்று நிற்க, கதையின் கரு அவற்றால் விளக்கமுறுவதும் உண்டு" என்று கூறுவதனாலும் கருவும் நிகழ்ச்சியமைப்பும் வெவ்வேறான விடயங்கள் எனக்கொள்ள முனைகின்றார் என்பது தெரிகின்றது. Plot என்பதுபற்றி மேனாட்டாராய்ச்சியாளர் விளக்கத்தைப் பார்க்கும்பொழுது இக்கருத்துத் தவறானது என்பது புலனாகின்றது. பேராசிரியர் நாவலாசிரியராகவும் இருப்பதனால், இக்கருத்து மயக்கம் மன்னிக்க முடியாத தொன்றாகவேயுள்ளது. (1978:67-68)

தமிழ்ச்சூழலில் மிகவும் பிரபலமாக அறியப்பட்டிருந்த 'பேராசிரியர்களை', பேராசிரியர் சிவத்தம்பியும் பேராசிரியர் கைலாசபதியும் நவீனத்துவ கோட்பாடுகளை விரிவாக அறிமுகப்படுத்தியதன் மூலம் எதிர்கொண்டார்கள். 'இலக்கியக்கலை', 'இலக்கியமரபு' ஆகிய நூல்களை முறையே 'நாவலும் வாழ்க்கையும்', 'தமிழில் நாவல் இலக்கியம்' எனும் நூல்களில் சிவத்தம்பியும் கைலாசபதியும் எழுதி நேர் செய்தார்கள். நவீன மரபுகளை தவறாக அறிமுகப்படுத்திய தமிழ்ச்சூழலில் நவீனத்துவத்தைச் சரியாக அறிமுகப்படுத்திய சிவத்தம்பி, கைலாசபதி பங்களிப்பை இவ்விடத்தில் பதிவுசெய்வது அவசியம்.

1930கள் முதல் தமிழில் நவீனத்துவம் பல்பரிமாணங்களில் செயல்படத் தொடங்கிறது எனலாம். வ.வே.சு. ஐயர் முன்னெடுத்த சமகிருத காவிய மரபிலான அணுகுமுறைகள், அ.மாதவையா முன்வைத்த அணுகுமுறைகள் ஆகியவை 1930களில் புதிய பரிமாணத்தை உள்வாங்கிச் செயல்படும் போக்கு உருவானது. இதில் ஒருபக்கம் க.நா.சு.வும் இன்னொரு பக்கம் புதுமைப்பித்தன் மற்றும் கு.ப.ரா ஆகியோரைக் குறிப்பிட முடியும். 1930களில் உருவான இப்போக்கு 'எழுத்து' இதழ் வருகையோடு அதன் உச்ச வளர்ச்சியை சென்றடைந்தது எனலாம். இதில் சி.சு.செல்லப்பாவின் பங்கு மிக முக்கியமானது. இதில் க.நா.சு மற்றும் சி.சு.செல்லப்பா ஆகியோரின் நவீனத்துவம் தொடர்பான கருத்துநிலைகளைப் பேராசிரியர் கா.சிவத்தம்பி விரிவாக எதிர்கொண்டார். இவ்விருவரும் பயன்படுத்திய கலைச்சொற்களை விமரிசனத்திற்குட்படுத்தினார். ரசனை தொடர்பாக சி.சு.செல்லப்பாவின் விளக்கத்தை பேரா.கா.சிவத்தம்பி எதிர்கொண்டதை பின்வரும் மேற்கோள் வழி புரிந்து கொள்ளலாம்.

செல்லப்பாவின் கருத்தினை அவர சொற்கொண்டே எடுத்துக்கொள்வோம் "கலையில் ஒரு பிரிவான இலக்கியம் முதன்மையாக ஒரு ரசனைக்குரிய துறையல்லாமல் வேறு எதுக்கு உரியதாயிருக்கும் என்று நிதானிக்க முடியவில்லை" என்பது அவர் கொள்கை. ரசனைக்குரியதென்பதும் சுவைத்தநுபவித்தற்குரியதெனக் கருதப் பெறும் எனவே செல்லப்பா அவர்களைப் பொறுத்தவரையில் இலக்கியமென்பது சுவைத்து அநுபவிப்பதற்கே என்பது நன்கு தெரிகிறது. இவ்வாறான ஒரு நோக்குச் சரியானதா என்பதைப் பிரபல ஆங்கில விமர்சகர் கண்கொண்டு பார்ப்போம்

சிறந்த முறையில் வாசிப்பதனால் ஏற்படும் இன்பத்திற்காகவே ஒரு கவிதையை வாசிப்பதென்பது கவிதையைச் சரிவர அறியும் ஒரு முறைமையாகவே இருக்காது என ஐ.ஏ.றிச்சாட்ஸ் அவர்கள் கூறியுள்ளார்.

To read poem for the sake of pleasure which will ensure if it is successfully read is to approach it in an inadequate attitude. Obviously it is the poem in which we should be interested not in a by-product of having managed successfully to read it. (*Principles of literary Criticism,p.96,1950*)

கவிதையிலேயே முக்கிய கவனம் செலுத்த வேண்டுமே அல்லாது கவிதையை நன்கு வாசித்ததனால் ஏற்பட்ட ஓர் உணர்வை முக்கியமாகக் கருதக்கூடாது என்றும் விளக்கமாகக் கூறியுள்ளார்.

அதாவது கவிதையை வாசிப்பதனால் ஏற்படும் உணர்வு நிலையை முக்கியமாகக் கருதுவதால் கவிதையை நன்கு விளங்கிக் கொள்ள முடியாதென்று அவர் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார். மேலும் கவிதையை வாசிப்பதால் ஏற்படும் உணர்வு அல்லது அநுபவம் கவிதைப்பொருளிலிருந்து வேறுபட்டதாக அமைந்துவிடக்கூடாதென்றும் அவ்வாறு ஏற்படுமேயானால் அது பூரணமடையாத குறுகிய சமநிலையற்ற உணர்வினை ஏற்படுத்திவிடுமென்றும் கூறியுள்ளார் றிச்சாட்ஸ்.

The separation of poetic experience from its place in life and its ulterior worths involves a definite lopsidedness, narrowness and incompleteness in those who preach it sincerely.

கவிதையால் தோன்றும் அநுபவத்தை மாத்திரம் எடுத்துக் கொண்டு அவ்வநுபவம் தோன்றுவதற்கான அடிப்படைக் காரணங்களையும் அது எவ்வாறு தோன்றுகின்றதென்பதையும் ஏன் தோன்றுகின்றதென்பதையும் கவனியாது விட்டால் விமர்சனம் முழுமையடையாது. அவ்வாறு அடிப்படை விஷயங்களை ஆராயாத விமர்சகர்களை பட்டுப்புடைவையின் தூசி தட்டும் விமர்சகர் என்று அழைப்பர். (Brushers of noble mens cloths) அவ்வாறு அடிப்படை விஷயங்களைப் பற்றி ஆராய்கின்ற பொழுது இலக்கியத்துடன் நேரடித்தொடர்பு கொள்ளாதவை போன்றிருக்கும் இலக்கியத்திற்குப் புறம்பானவிடயங்களும் விமர்சனத்துள் வரும். அவற்றைத் தவிர்க்க முடியாது. தவிர்த்தால் இலக்கியத்தையும் இலக்கிய ஆசிரியன் ஏன் அவ்வாறு எழுதியுள்ளான் என்பதையும் அறியமுடியாது போய்விடும். (2001:100-101)

இவ்வகையில், உருவம் - உள்ளடக்கம், ஆக்க இலக்கியவாதியின் சித்தாந்த நிலைப்பாடு, அழகியல், சுவை ஆகிய பிற பல்வேறு கலைச்சொற்களை சி.சு.செல்லப்பா மரபினர் எதிர்கொண்ட முறைமையிலிருந்து மாற்று நிலையில் பேரா.சிவத்தம்பி எதிர்கொண்டு செயற்படுமுறைமையைக் காணமுடிகிறது. க.நா.சு., சி.சு.செல்லப்பா குழுவினர் 'நவீனத்துவம்' என்பதை ஆங்கில மொழி வழி கிடைத்த கருத்துருவாகவே உள்வாங்கினர். அதனை ஒரு சமூக மாற்றத்தின் அடிப்படையில் உருவான ஒன்றாகக் கருத்தில் கொள்ளவில்லை. நவீனத்துவம் என்பது 'வரையறைப்பாடு', 'சமயச்சார்பின்மை' ஆகிய பல்வேறு கூறுகளில் செயல்படுவதை பேரா.சிவத்தம்பி விரிவாக உரையாடலுக்கு உட்படுத்தியுள்ளார். (பார்க்க: நவீன தமிழிலக்கியத்தின் பண்புகளும் கருத்துநிலை அடிப்படையும் நூல்: இலக்கியமும் கருத்துநிலையும் ப.65:2002) க.நா.சு. போன்றவர்கள் நவீனத்துவத்தை புதிய வருகை என்ற கண்ணோட்டத்தில் உள்வாங்கிய அளவிற்கு சமூகத்தில் ஏற்பட்ட மாற்றத்தின் உடைவினை எனும் அடிப்படையில் உள்வாங்கவில்லை என்பது சந்தேகமே. இத்தன்மை, அடிப்படையைக் கவனத்தில் கொள்ளாத போக்காகவே கருதவேண்டியுள்ளது.

நவீனத்துவத்தின் எடுகோளாக வளர்ச்சிபெற்ற பார்வைகளுள் ஒன்று, அழகியல் குறித்த உரையாடல். மார்க்சியக் கருத்துநிலை சார்ந்தவர்கள் மீது வைக்கப்படும் குறைபாடுகளாகப் பின்கண்டவற்றைப் பேராசிரியர் கூறுகிறார்.

- கோஷங்களை மேலோட்டப் போக்குடைய செந்நெறிக் கோட்பாட்டிறுக்கம்
- ஆக்க இலக்கியத்தின் அழகியலடிப்படைகள் பற்றிய தெளிவும், அத்தெளிவினைப் பெறுவதற்கான அறிவுமில்லாததால் இவர்களின் ஆக்கங்கள் பிரச்சாரங்களாகவே அமையும் தன்மை.

- பிழையான விமரிசன அளவுகோல்கள் கொண்டு மதிக்கப்பெற்றுத் தவறான முறையில் உயர்த்தப்பட்டமை" (ஈழத்துத் தமிழிலக்கியத்தடம் (1980-2000):பார்வையும் விமர்சனங்களும் 61:200)

இக்குற்றச்சாட்டுகள், இலக்கியத்திற்கும் வெகுமக்களுக்குமான உறவு தொடர்பான பார்வைகளில், மார்க்சியர்களிடமிருந்து வேறுபட்ட பார்வையுடையவர்களால் தான் முன்வைக்கப்படுகின்றன. கொள்கை என்பது குறித்தும் பிரச்சாரம் என்பது குறித்தும் இயக்கம் என்பது குறித்தும் வேறுபட்ட கண்ணோட்டமுடையவர்களுடைய குற்றச்சாட்டுகள் மேற்குறித்தவை. மார்க்சியர்கள் இதனை நேர்மையாக எதிர்கொள்ள வேண்டும். கொள்கை-நடைமுறை ஆகியவற்றில் வேறுபாட்டினை மார்க்சியர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. இந்தப்பின்புலத்தில் மார்க்சிய அழகியல் என்பது எவ்வகையில் அமைய வேண்டும் என்பது குறித்துப் பேரா.கா.சிவத்தம்பியின் வரையறை பின்வரும் வகையில் அமைகிறது.

"மார்க்ஸிய அழகியல் எனும்பொழுது அழகியல் என்னும் துறையுடன் மார்க்ஸிய அடிப்படைக் கோட்பாடுகளை இணைத்துக் கொள்வதாகும மார்க்ஸியமும் இருத்தல் வேண்டும். அழகியலும இருத்தல் வேண்டும இவர்கள் உண்மையாக மாரக்ஸிஸ்டுகள் என்றால் மார்க்ஸியத்தைப் பார்த்தல் கூடாது. மார்க்ஸிஸ்டுக்களாக நின்று கொண்டு அழகியலைப் பார்க்கவேண்டும்"(மேற்படி. 65: 2000)

பேராசிரியர் நவீனத்துவ மரபுகளை பல்வேறு தரப்பிலும் எவ்வகையில் எதிர்கொண்டார் என்பது குறித்த உரையாடலை சுருக்கமாக மேலே தொகுத்துக் கொண்டோம். பெண்ணியம், கட்டவிழ்ப்புக்கோட்பாடு, மையமற்ற உலகம், அர்த்தங்களின் பன்மை ஆகிய பிற பின் - நவீனத்துவச் சொல்லாடல்கள் குறித்தும் பேராசிரியர் பிற்காலங்களில் எழுதியுள்ளார். ஆனால் அவற்றின் பல்பரிமாணங்களை உள்வாங்கி எழுதினார் என்று சொல்வதற்கில்லை. நவீனத்துவம் தொடர்பான அவரது விரிவான ஆய்விற்கு முன், பின்-நவீனத்துவம் குறித்த அவரது ஆய்வுகள் போதுமானவை என்று கூறஇயலாது.

பேராசிரியர் இருபதாம் நூற்றாண்டின் பல்வேறு இயக்கங்கள் குறித்துச் செய்துள்ள பதிவுகள் குறிப்பிடத்தக்கவை. அவற்றை அடிப்படையாகக் கொண்டு மேலும் ஆய்வு செய்வதற்கான அடிப்படைகளாகக் கொள்ளத்தக்கவை. இவற்றில் 'தனித்தமிழ் இயக்கம்' குறித்தும், திராவிட இயக்கம் குறித்தும் எழுதியுள்ள குறுநூல்கள் குறிப்பிடத்தக்கவை.

இலக்கியச் செயல்பாடுகள் சார்ந்து உருவான சமூக இயக்கமாகத் தனித்தமிழ் இயக்கத்தைப் பேராசிரியர் பதிவு செய்கிறார். இவ்வியக்கத்தில் செயல்பட்ட பல்வேறு அடிப்படைகளைப் பேராசிரியர் எவ்வகையில் வெளிப்படுத்தினார் என்பதைப் பின்வருமாறு தொகுக்கலாம்.

- சமஸ்கிருத மொழி மேலாதிக்கம் செலுத்திய சூழலில், அதற்கு எதிரான பண்பாட்டு இயக்கமாகத் தனித்தமிழ் இயக்கத்தைப் புரிந்து கொள்ளுதல்
- சாதிய படிநிலைகளுக்கும் சமூகத்தில் உருவாகும இயக்கங்களுக்குமான உறவுநிலை சார்ந்து தனித் தமிழ் இயக்கத்தை எவ்வாறு புரிந்து கொள்ளலாம் எனும் உரையாடலை மிகச்சுவையாக நிகழ்த்தியிருப் பதைக் காண்கிறோம்.
- தேசிய விடுதலை இயக்கம் சார்ந்து செயல்பட்ட சுப்பிரமணிய சிவா போன்றோர் முன்னெடுத்த தனித்தமிழ் மரபும் மறைமலையடிகள் முன்னெடுத்த மரபும் குறித்த ஒப்பீட்டின் மூலமாக நமக்குக் கிடைக்கும் புதிய புரிதல்.

- தலித்தமிழ் இயக்கம் சாதி வரைபடத்தில் தனிமைப்படுத்தும் ஆதிக்க எல்லையில் உருபெறுகிறது என்ற உரையாடல்.

இவ்வகையில் தமிழ்ச்சூழலில் எமது காலமாகச் செயல்படும் பல்வேறு கருத்து நிலைகள் உருவெடுத்துள்ளன. தலித் தமிழ் இயக்கம் போன்றவற்றில் சூழலில் உள்ளார்ந்த நிலைகளை எவ்வாறு பேராசிரியரின் அணுகுமுறை வெகுஜன இயக்கங்களைப் புரிந்து கொள்ள உதவும். குறுக்கீட்டுத்திறனைகள் வாயிலாக சாதிகளாக வகுபட்டு பெற்றிருப்பதில் பல பரிமாணங்களைப் புரிந்து கொள்ளும் தேவையை பேராசிரியரின் இந்த ஆய்வு வெளிப்படுத்துகிறது.

தலித் தமிழ் இயக்கத்தைப் போன்று திராவிட இயக்கம் தொடர்பான பேராசிரியரின் உரையாடல் மூலம் கீழ்க்காணும் முக்கியக்கூறுகள் வெளிப்படுவதைக் காணலாம்.

- இந்தியா என்ற தேசியத்துக்கு எதிராக தமிழ்நாட்டு தேசியம் பெறும் இடம் மற்றும் மறுகட்டமைக்கும் தன்மைகள். இதனைப் பொருளாதார மற்றும் அரசியல் நிகழ்வுகள் வழி அறிதல்.
- பெரியார் உருவாக்கிய இயக்கம் சாதி தொடர்பான படிநிலைகளுக்கும் வர்க்கம் தொடர்பான படிநிலைகளுக்கும் உள்ள உறவை எல்லைகளில் முன்னெடுத்தது; இத்தன்மை பின்னர் இந்திய அளவில் உள்வாங்கப்படும் கூறுகள்.
- திராவிட இயக்கம் அடிப்படையான பொருளாதாரக் கோட்பாடுகளை முன் வைக்காத சூழலில், பல்வேறு உள்மாற்றங்களை பெற்றுக்கொண்டு ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியதும் சமூக இயக்கமாக மாறியதும் குறித்த கேள்விகள்.
- 1960கள் முதல் திராவிட இயக்கம் சமூக அமைவடிக்கத்தில் பெறுமிடம்.
- பின்னர் உருவான 'தலித் இயக்கங்கள்' போன்றவைகளுக்கு திராவிட இயக்கம் எல்லைகளில் முன்னோடியாகக் கருதலாம் என்ற பார்வை.

மேற்குறித்த இவ்விரு இயக்கங்கள் தமிழ்ச்சூழலில் உருவாக்கிய தாக்கங்களை நாமறிவோம். இவை இன்றைய சூழலில் எப்படிப் புரிந்து கொள்ளவேண்டும் என்பதை அறிவதற்குப் பேராசிரியரின் ஆய்வுகள் முன் எடுகோள்களாக அமைந்துள்ளன.

புதிய உற்பத்திக்கருவிகள் உருவான தமிழ்ச்சூழலில், ஊடகம் எனும் புதிய தன்மை உருப்பெற்றது. அவை அச்சு, கேட்பு, காட்சி எனும் வடிவங்களில் முதன்மையாகச் செயல்பட்டன/செயல்படுகின்றன. இவற்றில் அச்சு மற்றும் காட்சி தொடர்பான ஊடகங்கள், இருபதாம் நூற்றாண்டில் தமிழ்ச்சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கங்களை அடிப்படையாகக் கொண்டு பேராசிரியர் தமது ஆக்கங்களை உருவாக்கியுள்ளார். 'அச்சுப்பண்பாடு' எனும் புதிய தொடரை உருவாக்கி அதன் பல்வேறு பரிமாணங்கள் குறித்து விரிவாக எழுதியுள்ளார்.

காலனியத்தின் மூலம் உருவான அச்சுப்பண்பாடு தமிழ்ச்சமூகத்திற்குக் கொடுத்த கொடைகளாகக் கீழ்க்கண்டவற்றைக் கருதலாம்.

- செய்யுள் மரபிலேயே செயல்பட்டுவந்த தமிழ்ச்சூழலில், உரைநடை மரபை உருவாக்கியதில் அச்சுப்பண்பாட்டின் இடம் முதன்மையானது.
- நாட்டார் மரபில் செயல்பட்டுவந்த கதைசொல்லல் மரபு என்பது அச்சு வடிவில் புனைகதையாக உருவானது. இத்தன்மையும் அச்சுப் பண்பாட்டில் உருப்பெற்ற ஒரு செயலே ஆகும்.
- ஏட்டுச் சுவடிகளை அச்சாக்கம் எனும் போக்கில் பதிப்பு எனும் புதிய கருப்பொருள் உருவானது. இதற்கு மூலமாக அமைந்தவை அச்சுப் பண்பாடே ஆகும்.

- ஓலை வடிவத்தில் இருந்த நமது 'நூல்மரபு' அச்சுநூல் மரபாக வடிவம் பெற்றதும் அச்சுப்பண்பாட்டில்தான்.

மேற்குறித்தப் பல்வேறு அச்சுப்பண்பாடுகள், ஊடகமாகச் செயல்படுவதற்கு அடிப்படையாக அமைபவை பின்வருமவை.

- எழுத்தறிவு பெற்றதின் மூலம் உருவான வாசிப்புப் பழக்கம்
- வாசிப்புப்பழக்கத்தின் பரவலால் உருவான இதழியல் எனும் துறை
- நூல் அச்சிடுதல் வழி உருவான நூலக இயக்கம்

மேற்குறிப்பிட்ட பல்வேறு தன்மைகளையும் 'அச்சுப்பண்பாடு' எனும் தொடரில் குறிக்கலாம். இத்தன்மையைத் தமிழில் அறிமுகப்படுத்தி, அதன் பல்வேறு பரிமாணங்கள் குறித்துப் பேராசிரியர் விரிவான உரையாடலை நிகழ்த்தியுள்ளார்.

காட்சி ஊடகத்தில் 'சினிமா' குறித்த பேராசிரியரின் ஆய்வுகள், சமூகப் இயங்கியல் சார்ந்து அமைந்துள்ளன. 'வெகுசனம்' எனும் மக்கள் திரள் உருவாக்கம், காட்சி ஊடகத்தின் மூலம் எவ்வாறு மேலும் மேலும் வளர்த்தெடுக்கப்பட்டதை பேராசிரியர் விரிவாக ஆய்வு செய்துள்ளார். சாதி, வர்க்கம் ஆகிய பிற படிநிலைகளை 'சினிமா' எனும் ஊடகம் எவ்வகையில் உடைக்கிறது? என்ற பேராசிரியரின் உரையாடல் கனையானது. நவீனத்தமிழ்ச் சமூகம், தமிழ் சினிமா எனும் ஊடகச் செயல்பாடுகளின் உள்ளிழையாக எவ்வகையில் செயல்படுகிறது, எனும் விவரங்களைப் பேராசிரியர் , சினிமா எனும் ஊடகம் குறித்த ஆய்வில் மேற்கொண்டுள்ளார். கல்வியாளராக இருப்பவர்கள், ஊடக ஆய்வாளராகவும் இருக்க வேண்டியதன் அவசியத்தைப் பேராசிரியரின் ஆய்வுகள் மூலம் புரிந்து கொள்ள முடிகிறது.

ஆசிரியராகவும் கல்வியாளராகவும் செயல்படுவோருக்குச் சமகாலப் புரிதல் மிக அடிப்படையான தேவையாகும். இவ்வகையில், இருபதாம் நூற்றாண்டைப் புரிந்து கொள்ள பேராசிரியர் செயல்பட்டுள்ள முறைமை, அவரை இயங்கியல் கருத்து நிலையாளராக அறிந்து கொள்ள வழி வகுக்கிறது. அவரது மறைவு நிகழ்ந்த இந்தத் தருணத்தில், அவர் நமக்குப் பயிற்றுவித்த இயங்கியல் மரபுகளை மேலும் மேலும் கற்றுத் தேர்வோம். அதுவே அவருக்குச் செய்யும் சரியான அஞ்சலி.

குறிப்பு:

இக்கட்டுரையில் உரையாடலுக்குட்படுத்தியுள்ள பேராசிரியரின் கருத்துநிலைகளைப் புரிந்து கொள்ள, அவரது கீழ்க்கண்ட நூல்களை வாசிக்க வேண்டுகிறேன். நாவலும் வாழ்க்கையும்(1978), விமர்சனச் சிந்தனைகள் (2001), இலக்கியமும் கருத்துநிலையும் (2002), ஈழத்துத் தமிழிலக்கியத்தடம் (1980-2000): பார்வையும் விமர்சனங்களும் (2000), நவீனத்துவம் - தமிழ் - பின் நவீனத்துவம் (2010), கார்த்திகேசு சிவத்தம்பியின் நேர்காணல்கள்(2011), தமிழ்ப்பண்பாட்டில் சினிமா(2010), தனித்தமிழ் இயக்கத்தின் அரசியல் பின்னணி(1979), திராவிட இயக்கத்தின் இன்றைய பொருத்தப்பாடு (1995)

குலசேகரன்

உப்பு நீர் முதலை - நான் ஒரு பார்வை

சேலம் 'தக்கை' இலக்கிய அமைப்பின் விமரிசனக் கூட்டத்தில் வாசித்தது

இன்றைய கவிதைகள் அதி யதார்த்தம் என்பதை தம் புனைவாகக் கொண்டுள்ளன. முன்பு கவிதைகளில் யதார்த்தம் என்பது தவிர்க்க முடியாத முன் நிபந்தனையாக இருந்தது. அதன் அடிப்படையில்தான் யதார்த்தத்தை மீறும் முயற்சிகள் கட்டப்பட்டன. இப்போது யதார்த்ததுக்கும் மாய யதார்த்தத்துக்குமான இடைவெளி அழிக்கப்பட்டுவிட்டது. கவிதைகள் அதி யதார்த்தத்தையே தம்முடைய யதார்த்தங்களாக மாற்றியிருக்கின்றன. அவை கவிதைகளின் கவித்துவமாகவும் விளங்குகின்றன. இந்த மாய யதார்த்தங்கள் தரும் அனுபவம் கவிதைகளின் அர்த்தங்களாகவும் உள்ளன. இயல்பான யதார்த்தங்கள் மிகவும் இறுக்கமானதால் அவற்றிலிருந்து கவிதை தப்பிக்க விரும்புகிறது. இதனால் கவிஞர்கள் நடைமுறை உலகுக்கு மாற்றான வேறொன்றை மொழியின் வழியாக படைக்கிறார்கள்.

நானுடைய சில கவிதைகள் குழந்தைத் தன்மையை பாவனை புரிபவை. சில கவிதைகள் குழந்தைகளாக மாறுகின்ற நிலையை முன் வைப்பவை. வேறு சில கவிதைகள் குழந்தைகளாக அடைந்த தன்மையைக் காட்டுபவை. குழந்தைகளை போல் புதிதாக உலகத்தைப் பார்ப்பதால் வியப்பும், விநோதமும் கிடைக்கின்றன. இதற்கு '37 கொக்குகள் என்ற கடைசி கவிதை உதாரணம். இதில் கொக்குகளின் கால்கள் காரட்டுகளாகவும் அதனால் நிறைய கொக்குகள் பறக்கும் வானம் காரட்டு தோட்டமாகவும் தோன்றுகின்றன. கால்கள் காரட்டுகளாக இருப்பதற்கான காரணம் கவிதையில் செங்கால் கொக்கு என்று முதல் பார்க்கப்பட்டுவிடுவது. பின்னணியாக ஒரு கொக்கு மேலே ஏறவோ அல்லது கீழே இறங்கவோ செய்கிறது என்ற ஐயப்பாடான நிலை உண்டாக்கப்படுகிறது. குறிப்பிட்ட கால இடைவெளிக்குப் பிறகு பிற கொக்குகளை காண்கிறபோதுதான் காரட் தோட்டம் என்கிற மாயத் தோற்றம் ஏற்படுகிறது. உண்மையில் கொக்குகளின் கால்களைக் காட்டிலும் காரட்டுகள் அழகு குறைந்தவைதான். ஆனால் கவிதையில் வேறொன்றுக்கு பதிலியாக கூறப்படும்போது மேன்மையடைகிறது.

'கொக்குகள்' என்ற மற்றொரு கவிதையில், இறக்கைகளோடும், கால்களை மடக்கிக் கொண்டும் கொக்குகளைப் போல் வானில் மேகங்கள் பறக்கின்றன. 'முயல்கள் கொக்குகள்' என்ற மற்றொரு கவிதையில் மருத்துவர்கள் கொக்குகளைப் போல் தென்படுகிறார்கள். காரணம் மருத்துவர்கள் கொக்குகளைப் போல் வெள்ளைச் சட்டையை அணிந்திருக்கிறார்கள். அவர்களுடைய கால்கள் வேறு நிற உடைகளில் கொக்குகளின் ஆரஞ்சு நிற கால்களைப் போலிருக்கின்றன. பிறகு அவர்கள் பிரசவ அறையிலிருந்து கொக்குகளின் குஞ்சுகளோடு வருவதாகவும் எழுதப்படுகிறது. இவை எல்லாவற்றிலும் கொக்குகளின் வெண்ணிற உடல்களும் ஆரஞ்சுக் கால்களும் மிகவும் கவனமாக ஒப்புமைப்படுத்தப்படுகின்றன. வாசிப்பில் சிறு விலகலும் ஏற்படக்கூடாது என்று முயற்சிக்கப்படுகிறது. இதனால் காரட்டுகளாலான வானமும், கொக்குகளைப் போல் பறக்கும் மேகங்களும், கொக்குக் குஞ்சுகள் பிறக்கும் மருத்துவமனையும் உள்ள திரிபான உலகை வாசிப்பில் ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது.

'முதலை' என்கிற தலைப்பில் இரண்டு கவிதைகள் இருக்கின்றன. ஒரு கவிதையில், ஊர்கின்ற புழுவை விழுங்குகின்ற மீனை விழுங்குகின்ற பறக்கும் கொக்கை விழுங்குகிறது முதலை. இப்படி இயல்பற்ற ஒரு தருணம் உண்டாக்கப்படுகிறது. வெவ்வேறு காலத்தில் நிகழ்வதை ஒன்றாக்கி கற்பனையான ஒற்றைக் கணத்தில் அடைக்கிறது. இதனால் ஏதோ ஒரு வகையில் இயற்கையின் சுழற்சியை உணர்த்தி வினோத சுவையை தோற்றுவிக்கிறது. மற்றொரு கவிதையில் கடலிலும் கரையிலும் முதலை படுத்திருப்பது மழையிலும் கோடையிலும் ஒரு சேர இருப்பதாகக் காட்டப்படுகிறது. இங்கு பருவ வேறுபாடுகளென்ற தர்க்கம் அழிபடும் மாயம் நிகழ்கிறது.

இதே போல் வேறொரு கவிதையில் வெட்டுண்ட மண் புழுவின் உடல்கள் ஏக காலத்தில் பல திசைகளில் பயணிக்கினறன. (உடல் துண்டாக்கப்பட்டாலும் மண் புழு மரணமடைவதில்லை.) எண்ணற்ற வகைப்படுத்த முடியாத வண்ணத்துப் பூச்சிகள் மற்றொரு கவிதையில் வருகின்றன. இதுவரை அறிந்திராத விநோதப் பறவையொன்று ஒரு கவிதையில் உள்ளது. மற்றொரு கவிதையில் பிள்ளைத்தாய்ச்சி எறும்புக்குத் தருவதற்காக மற்ற எறும்புகள் பிள்ளைத்தாய்ச்சிப் பெண்ணிடமிருந்து ஹார்லிக்ஸை திருடுகின்றன. ஓர் அன்னப் பறவை பால்காரனின் சைக்கிளில் உட்கார்ந்திருக்கிறது. அதே கவிதையில் அந்த கற்பனையான அன்னம் மேலும் இரண்டாக மாறுகிறது. இன்னொரு கவிதையில் நாயும் நிழலும் சேர்ந்து குரைக்கின்றன. பிறகு இறந்துவிட்ட நாயின் குரைப்பொலி இறந்த மனிதர்களுக்கு கேட்கிறது. கவிதையில் அது படிம நாய் என்று வெளிப்படையாக குறிப்பிடப்படுகிறது. மற்றொரு நாயைப் பற்றிய கவிதையில் நாயை முழுவதுமாக வெளியில் துரத்துவதற்கு பெரும் வன்முறையுடன் அது சாகடிக்கப்படுகிறது. அந்த நாய் கருப்பு என்று கூறப்படுகிறது. (இந்த கருப்பு என்கிற நிறம் குறிப்பிடுகிற சமிக்ஞையை வைத்து கவிஞருடைய வர்ண சாதி ஏற்றத் தாழ்வு பற்றிய கருத்தையும் ஆராயலாம்.) வரிக் குதிரைகளைப் பற்றியும் சில கவிதைகள் எழுதப்பட்டுள்ளன. பொதுவாக எல்லாவற்றிலும் அருகருகே அமைந்த அவற்றின் கறுப்பு வெள்ளைக் கோடுகளைப் பற்றிய மயக்கம் முன் வைக்கப்படுகிறது. ஒரே வரிக்குதிரை கறுப்பு வெள்ளையாகப் பிரிந்து சண்டை போடுகிறது. அதனுடைய வரிகள் இரவும் பகலுமாக காட்டப்படுகின்றன. செஸ் ஆட்டத்தின் கட்டங்களைப் போலிருப்பதாகவும் எழுதப்படுகிறது. இதே போல் மனிதனைப் பார்த்துக் கத்தும் எறும்புகளும், புத்தகத்திலிருந்து எழுத்துகளைப் போன்று உதிரும் எறும்புகளும் கூட கவிதைகளில் வருகின்றன.

இப்படி குழந்தைமைக்கு நகர காலத்தில் பின்னால் நடக்க வேண்டியிருக்கிறது. 4 வயதுக்கும், 8வயதுக்கும், 15 வயதுக்கும், 5வது படிக்கும் சிறுமி வயதுக்கும், 17 வயதில் வசித்த வீட்டுக்கும் திரும்பலைப் பற்றி கவிதைகள் புனைந்து பார்க்கின்றன. ஆனால், குழந்தைகள் பெரிய காலணிகள் அணிந்து பெரிய அடிகளால் முன்னோக்கி செல்லவே முயலுகின்றன என்று ஒரு கவிதையும் சொல்கிறது. காலத்தைப் பற்றிய பிரக்ஞை கவிதைகளில் தொடர்ந்து வருகிறது. காலம் மிகத் துல்லியமுடையதாக வரையறுக்கப்படுகிறது. 'திரு. பெலிக்ஸ்' மற்றும் வைஸ்ராய் மார்லின் டைரிக் குறிப்பு', 'ஆய்வறிக்கை' 'அதே வீடு', 'செவி வழிக் கதைகள்' போன்ற கவிதைகள் வயது பற்றிய குறிப்புகளால் நிரம்பியிருக்கின்றன. 63 வயது பெலிக்ஸ், 7 வயது வங்கப் புலி, 4 வயது

குலசேகரன்

உப்பு நீர் முதலை - நரன் ஒரு பார்வை

சேலம் 'தக்கை' இலக்கிய அமைப்பின் விமரிசனக் கூட்டத்தில் வாசித்தது

இன்றைய கவிதைகள் அதி யதார்த்தம் என்பதை தம் புனைவாகக் கொண்டுள்ளன. முன்பு கவிதைகளில் யதார்த்தம் என்பது தவிர்க்க முடியாத முன் நிபந்தனையாக இருந்தது. அதன் அடிப்படையில்தான் யதார்த்தத்தை மீறும் முயற்சிகள் கட்டப்பட்டன. இப்போது யதார்த்ததுக்கும் மாய யதார்த்தத்துக்குமான இடைவெளி அழிக்கப்பட்டுவிட்டது. கவிதைகள் அதி யதார்த்தத்தையே தம்முடைய யதார்த்தங்களாக மாற்றியிருக்கின்றன. அவை கவிதைகளின் கவித்துவமாகவும் விளங்குகின்றன. இந்த மாய யதார்த்தங்கள் தரும் அனுபவம் கவிதைகளின் அர்த்தங்களாகவும் உள்ளன. இயல்பான யதார்த்தங்கள் மிகவும் இறுக்கமானதால் அவற்றிலிருந்து கவிதை தப்பிக்க விரும்புகிறது. இதனால் கவிஞர்கள் நடைமுறை உலகுக்கு மாற்றான வேறொன்றை மொழியின் வழியாக படைக்கிறார்கள்.

நரனுடைய சில கவிதைகள் குழந்தைத் தன்மையை பாவனை புரிபவை. சில கவிதைகள் குழந்தைகளாக மாறுகின்ற நிலையை முன் வைப்பவை. வேறு சில கவிதைகள் குழந்தைகளாக அடைந்த தன்மையைக் காட்டுபவை. குழந்தைகளை போல் புதிதாக உலகத்தைப் பார்ப்பதால் வியப்பும், விநோதமும் கிடைக்கின்றன. இதற்கு '37 கொக்குகள்' என்ற கடைசி கவிதை உதாரணம். இதில் கொக்குகளின் கால்கள் காரட்டுகளாகவும் அதனால் நிறைய கொக்குகள் பறக்கும் வானம் காரட்டு தோட்டமாகவும் தோன்றுகின்றன. கால்கள் காரட்டுகளாக இருப்பதற்கான காரணம் கவிதையில் செங்கால் கொக்கு என்று முதல் பார்க்கப்பட்டுவிடுவது. பின்னணியாக ஒரு கொக்கு மேலே ஏறவோ அல்லது கீழே இறங்கவோ செய்கிறது என்ற ஐயப்பாடான நிலை உண்டாக்கப்படுகிறது. குறிப்பிட்ட கால இடைவெளிக்குப் பிறகு பிற கொக்குகளை காண்கிறபோதுதான் காரட் தோட்டம் என்கிற மாயத் தோற்றம் ஏற்படுகிறது. உண்மையில் கொக்குகளின் கால்களைக் காட்டிலும் காரட்டுகள் அழகு குறைந்தவைதான். ஆனால் கவிதையில் வேறொன்றுக்கு பதிலியாக கூறப்படும்போது மேன்மையடைகிறது.

'கொக்குகள்' என்ற மற்றொரு கவிதையில், இறக்கைகளோடும், கால்களை மடக்கிக் கொண்டும் கொக்குகளைப் போல் வானில் மேகங்கள் பறக்கின்றன. 'முயல்கள் கொக்குகள்' என்ற மற்றொரு கவிதையில் மருத்துவர்கள் கொக்குகளைப் போல் தென்படுகிறார்கள். காரணம் மருத்துவர்கள் கொக்குகளைப் போல் வெள்ளைச் சட்டையை அணிந்திருக்கிறார்கள். அவர்களுடைய கால்கள் வேறு நிற உடைகளில் கொக்குகளின் ஆரஞ்சு நிற கால்களைப் போலிருக்கின்றன. பிறகு அவர்கள் பிரசவ அறையிலிருந்து கொக்குகளின் குஞ்சுகளோடு வருவதாகவும் எழுதப்படுகிறது. இவை எல்லாவற்றிலும் கொக்குகளின் வெண்ணிற உடல்களும் ஆரஞ்சுக் கால்களும் மிகவும் கவனமாக ஒப்புமைப்படுத்தப்படுகின்றன. வாசிப்பில் சிறு விலகலும் ஏற்படக்கூடாது என்று முயற்சிக்கப்படுகிறது. இதனால் காரட்டுகளாலான வானமும், கொக்குகளைப் போல் பறக்கும் மேகங்களும், கொக்குக் குஞ்சுகள் பிறக்கும் மருத்துவமனையும் உள்ள திரிபான உலகை வாசிப்பில் ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது.

'முதலை' என்கிற தலைப்பில் இரண்டு கவிதைகள் இருக்கின்றன. ஒரு கவிதையில், ஊர்கின்ற புழுவை விழுங்குகின்ற மீனை விழுங்குகின்ற பறக்கும் கொக்கை விழுங்குகிறது முதலை. இப்படி இயல்பற்ற ஒரு தருணம் உண்டாக்கப்படுகிறது. வெவ்வேறு காலத்தில் நிகழ்வதை ஒன்றாக்கி கற்பனையான ஒற்றைக் கணத்தில் அடைக்கிறது. இதனால் ஏதோ ஒரு வகையில் இயற்கையின் சுழற்சியை உணர்த்தி வினோத சுவையை தோற்றுவிக்கிறது. மற்றொரு கவிதையில் கடலிலும் கரையிலும் முதலை படுத்திருப்பது மழையிலும் கோடையிலும் ஒரு சேர இருப்பதாகக் காட்டப்படுகிறது. இங்கு பருவ வேறுபாடுகளென்ற தர்க்கம் அழிபடும் மாயம் நிகழ்கிறது.

இதே போல் வேறொரு கவிதையில் வெட்டுண்ட மண் புழுவின் உடல்கள் ஏக காலத்தில் பல திசைகளில் பயணிக்கினறன. (உடல் துண்டாக்கப்பட்டாலும் மண் புழு மரணமடைவதில்லை.) எண்ணற்ற வகைப்படுத்த முடியாத வண்ணத்துப் பூச்சிகள் மற்றொரு கவிதையில் வருகின்றன. இதுவரை அறிந்திராத விநோதப் பறவையொன்று ஒரு கவிதையில் உள்ளது. மற்றொரு கவிதையில் பிள்ளைத்தாய்ச்சி எறும்புக்குத் தருவதற்காக மற்ற எறும்புகள் பிள்ளைத்தாய்ச்சிப் பெண்ணிடமிருந்து ஹார்லிக்ஸை திருடுகின்றன. ஓர் அன்னப் பறவை பால்காரனின் சைக்கிளில் உட்கார்ந்திருக்கிறது. அதே கவிதையில் அந்த கற்பனையான அன்னம் மேலும் இரண்டாக மாறுகிறது. இன்னொரு கவிதையில் நாயும் நிழலும் சேர்ந்து குரைக்கின்றன. பிறகு இறந்துவிட்ட நாயின் குரைப்பொலி இறந்த மனிதர்களுக்கு கேட்கிறது. கவிதையில் அது படிம நாய் என்று வெளிப்படையாக குறிப்பிடப்படுகிறது. மற்றொரு நாயைப் பற்றிய கவிதையில் நாயை முழுவதுமாக வெளியில் துரத்துவதற்கு பெரும் வன்முறையுடன் அது சாகடிக்கப்படுகிறது. அந்த நாய் கருப்பு என்று கூறப்படுகிறது. (இந்த கருப்பு என்கிற நிறம் குறிப்பிடுகிற சமிக்ஞையை வைத்து கவிஞருடைய வர்ண சாதி ஏற்றத் தாழ்வு பற்றிய கருத்தையும் ஆராயலாம்.) வரிக் குதிரைகளைப் பற்றியும் சில கவிதைகள் எழுதப்பட்டுள்ளன. பொதுவாக எல்லாவற்றிலும் அருகருகே அமைந்த அவற்றின் கறுப்பு வெள்ளைக் கோடுகளைப் பற்றிய மயக்கம் முன் வைக்கப்படுகிறது. ஒரே வரிக்குதிரை கறுப்பு வெள்ளையாகப் பிரிந்து சண்டை போடுகிறது. அதனுடைய வரிகள் இரவும் பகலுமாக காட்டப்படுகின்றன. செஸ் ஆட்டத்தின் கட்டங்களைப் போலிருப்பதாகவும் எழுதப்படுகிறது. இதே போல் மனிதனைப் பார்த்துக் கத்தும் எறும்புகளும், புத்தகத்திலிருந்து எழுத்துகளைப் போன்று உதிரும் எறும்புகளும் கூட கவிதைகளில் வருகின்றன.

இப்படி குழந்தைமைக்கு நகர காலத்தில் பின்னால் நடக்க வேண்டியிருக்கிறது. 4 வயதுக்கும், 8வயதுக்கும், 15 வயதுக்கும், 5வது படிக்கும் சிறுமி வயதுக்கும், 17 வயதில் வசித்த வீட்டுக்கும் திரும்பலைப் பற்றி கவிதைகள் புனைந்து பார்க்கின்றன. ஆனால், குழந்தைகள் பெரிய காலணிகள் அணிந்து பெரிய அடிகளால் முன்னோக்கி செல்லவே முயலுகின்றன என்று ஒரு கவிதையும் சொல்கிறது. காலத்தைப் பற்றிய பிரக்ஞை கவிதைகளில் தொடர்ந்து வருகிறது. காலம் மிகத் துல்லியமுடையதாக வரையறுக்கப்படுகிறது. 'திரு. பெலிக்ஸ்' மற்றும் 'வைஸ்ராய் மார்லின் டைரிக் குறிப்பு' , 'ஆய்வறிக்கை' 'அதே வீடு', 'செவி வழிக் கதைகள்' போன்ற கவிதைகள் வயது பற்றிய குறிப்புகளால் நிரம்பியிருக்கின்றன. 63 வயது பெலிக்ஸ், 7 வயது வங்கப் புலி, 4 வயது

குட்டிக் குழந்தை, 27 வயது பெண் குழந்தை, 72 வயது அச்சுதன், போன்றவை உதாரணங்கள். இப்படி காலத்தின் கணக்குகள் மிகவும் சரி வரக் குறிப்பிடப்படுவதால் பெரும் கால பரப்பில் இவை அபத்தமாக்கப்படுகின்றன. மேலும் காலத்தை ஊதி பிரம்மாண்டமாக்குகின்றன.

காலம் தவிர்த்து வேறு வகையாக ஐம் புலன்களால் அறிவதைப் பற்றிய ஐயங்களும் உண்டாகின்றன. 'குளியல் அறை' கவிதையில் வேளை குறித்த மயக்கம் ஏற்படுகிறது. 'நிழல் மரம்' கவிதையில் நிஜத்துக்கும் நிழலுக்குமான குழப்பம் உண்டாகிறது. 'நீர்' கவிதையில் திசைகள் பற்றிய சிக்கல் உள்ளது. 'மழை' கவிதையில் இடம் தொடர்பான வேறுபாடு நிகழ்கிறது. நனவும் நனவிலியும் ஒன்றான எண்ணம் 'தேயிலைத் தோட்டம்' கவிதையில் வருகிறது. 'நான்கு பேர்' கவிதையில் சுயம் பற்றிய சந்தேகமுண்டாகிறது.

இவையெல்லாம் ஒரு வகை குழந்தைத்தனமான விளையாட்டுதான். குழந்தைத்தனமான வியத்தல்தான் ஒரே வார்த்தையை அடுக்கடுக்கி உபயோகப்படுத்த வைக்கிறது. மேலும் சில கவிதைகள் வரி வடிவங்களாலும் கவிதையை சித்தரிக்க முயலுகின்றன. 'உலகை அணுகுதல்' கவிதையில் எழுத்துக்களால் அறிமுகமாகும் உலகத்தின் இயக்கங்கள் யாவும் ஆங்கில எழுத்துகளாக தென்படுகின்றன. குழந்தைகளுக்கு வழங்கப்படுகிற ஏட்டுக் கல்வியைப் பற்றிய பார்வையாகவும் வெளிப்படுகிறது.

இந்த வகையில் 'மலையுச்சி வீடு' மிகச் சிறந்த கவிதை. அதில் மலையுச்சி வீட்டிலிருந்து த்லை வாரிக் கொண்டிருக்கும் பெண்ணின் அழகிய படிமம் உருவாகிறது. தேவதைக் கதைகளில் வருவதைப் போல் அவளுடைய கூந்தல் நீண்ட சாலைகளாக இருக்கின்றன. அவள் மேல் காலம் தன் தடயங்களைப் பதித்திருக்கிறது. அவளுடைய தலை மயிரில் உள்ள நரைத்த முடிகள் சாலையின் வெண்ணிறக் கோடுகளைப் போலிருக்கின்றன. அடிவாரப் பசுமை அவளுடைய குழந்தைப் பருவமாகவும், அதற்கு அப்பாலுள்ள சிறு நீர் நிலை அவள் பிறந்த கருப்பையாகவும் தோன்றுகின்றன. (கர்ப்பகிரகம் என்று கருப்பையை உயர்த்தி எழுதுகிறார் கவிஞர்.)

'இரவில் பால் அருந்தினேன்' என்ற கவிதையில் இந்த கணத்தை அனுபவிப்பது ஞானத்தை அடைந்ததாக உள்ளது. 'விநோதப் பறவை' கவிதையில் சிறுமியை போலிருப்பது தியான நிலையாகக் காட்டப்படுகிறது. கடைசியில் பரிசாகக் கிடைப்பது அதி விநோதமாயிருக்கிறது. குழந்தைமையை எட்ட முடிகிற தன்மையை 'பேரமைதி' கவிதையில் உள்ள புத்தரின் நிர்வாண நிலைக்கு சமப்படுத்திக் கொள்ளலாம். அப்போது தடையாயிருப்பது காலத்தின் ஓட்டம்தான். அதைக் கடக்க முயன்றால் பேரமைதியை அடையலாம். அந்த பேரமைதியில் பெரும் சலனமும் இருக்குமென்கிற போதமும் கவிதைகளில் இருக்கின்றன.

நரனுடைய கவிதைகள் ஆற்றொழுக்கான நடையுடன் யாரோலோ செம்மைப்படுத்தப்பட்டது போல் தோன்றுகிறது. அதனால் சொற் பிழைகளற்ற குழப்பங்கள் ஏற்படுத்தாத முன்னுதாரணமான பதிப்பாக இது விளங்குகிறது. இப்போது வழக்கத்திலில்லாத முறையில் கவிஞரே வரைந்த நல்ல ஒவியங்களும் இடையிடையில் உள்ளன. இந்த தொகுப்பை சிறந்த வடிவமைப்புடன் 'காலச்சுவடு' பதிப்பகம் வெளியிட்டிருக்கிறது.

பாஸ்கர்

விடுதலை புலிகளுக்கு அப்பால் என்ற நூலின் மீதான புலி, இந்திய அரசாங்க, ஆதரவாளர்களின் எதிர்வினையை முன்வைத்து...

ராஜீவ் சர்மா ஆங்கிலத்தில் எழுதி ஆனந்த் தமிழில் மொழிபெயர்த்த '***விடுதலை புலிகளுக்கு அப்பால்***' என்ற நூல் சென்ற ஜூனில் வெளிவந்தது நாமனைவரும் அறிந்ததே. இந்த நூலை எழுதியதன் நோக்கம் பற்றி அதன் மூல ஆசிரியர் ராஜீவ் சர்மா குறிப்பிட்டு இருப்பார். அதே போல் அதை தமிழில் மொழிபெயர்த்த ஆனந்தும் குறிப்பிட்டு இருப்பார்.

ஆனால் சிலர் அந்த நோக்கத்தை (வேண்டுமென்றே) புரிந்துகொள்ளாமல் ஈழ மக்களின் அவலத்திற்கு காரணமானோரை காப்பாற்றுவதிலேயே இருக்கிறார்கள்.

அந்நூலில் உள்ள ஒரு சில தரவுகளில் உள்ள தவறுகள் factual errors என்பதாக இருக்கலாம். இருக்கலாம் என்பதுதான். இருக்கின்றன என்பது அல்ல. அவற்றில் மாறுபட்டு குறிப்பிடலாம். அதே போல் ராஜீவ் கொலையில் புலிகளுக்கு பங்கு உண்டு என மூலநூல் ஆசிரியர் குறிப்பிடுவதிலும் மாறுபடலாம். ஆனால் மூல நூலாசிரியரும் மொழிபெயர்ப்பாளரும் எந்த நோக்கத்திற்காக அந்த நூலை வெளிக்கொணர்ந்தார்கள் என்பதை பற்றித்தான் இன்றைக்கு பேச வேண்டிய அவசியம் இருக்கிறது. அதைச் செய்யாமல் இருப்பதில்தான் புலி (இந்திய) ஆதரவாளர்களின் உள்நோக்கம் வெளிப்படுகிறது.

நூலின் ஆறு அத்தியாயங்கள் மட்டுமே ராஜீவ் கொலையில் புலிகளின் பாத்திரத்தை பேசுகின்றன. இதர அத்தியாயங்கள் மற்றவர்களின் முக்கிய பாத்திரத்தைப் பற்றி பேசுகின்றன. அதைக்கூட கண்டுகொள்ளாதவாறு உள்நோக்கம் வெளிப்படுகிறது.

இந்த நூல் ராஜீவ் கொலையில் சதித்திட்டம் தீட்டி செயற்படுத்திய சிபிகி, ஆயுத வியாபாரிகள் சந்திராசுவாமி, அத்னான் கஷோகி மற்றும் காங்கிரஸ் தலைவர்களின பாத்திரத்தையும் அக்கொலையைப் பற்றி ஏற்கனவே தகவல் தெரிந்து வலைத்திருந்த சுப்பிரமணிய சுவாமி, ஜெயலலிதா ஆகியோர் பற்றியும் அம்பலப்படுத்துகிறது. மேலும் இதை விசாரிக்க வேண்டும் எனவும் கோருகிறது.

இதைச் செய்தால்தான் சில முக்கியமான உண்மைகள் வெளிவரும். அப்படிச் செய்தால்தான் ராஜீவ் கொலையை காரணம் காட்டி ஈழத் தமிழர்களிடம் இந்திய அரசாங்கம் மிருகத்தனமாக நடந்துகொண்டது என்பதையும் யாருக்காக எதற்காக இக்கொலை அரங்கேற்றப்பட்டது என்பதையும் வெளியே கொண்டுவர முடியும். மேலும் ராஜீவ் கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள மூவரையும் அதிலிருந்து காப்பாற்ற முடியும்.

ஆனால் ஈழ விடுதலையில் ஈழத் தமிழர்களைவிட தீவிரமாக இருப்பதாக காட்டிக்கொள்வோர் இதைப் பற்றி பேசுவதற்கு மாறாக மூல நூலின ஆசிரியரையும் மொழிபெயர்ப்பாளரையும் அவதூறு செய்யத் தொடங்கினர். இப்பொழுது தான் இந்நூலின் முக்கியத்துவத்தை புரிந்துகொண்டு அந்த எதிர்ப்பிலிருந்து 'ஜகா' வாங்க ஆரம்பிக்கிறார்கள்.

இவர்கள் ஏன் இவ்வாறு செய்கிறார்கள்?

ராஜீவ் கொலையை காரணம் காட்டி இந்தியாவிலும் ஈழத்திலும் ஈழத் தமிழர்களிடம் கொலைவெறியுடன் நடந்துகொண்டு முள்ளிவாய்க்கால் அவலத்தை அரங்கேற்றிய இந்திய அரசை மேலும் ஆத்திரமூட்டும் வகையில் அது அமையும் என்று அவர்கள் கருதுகிறார்கள்.

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் காந்தி பிரிட்டிஷ் ஆட்சியாளர்களை ஆத்திரமூட்டிவிடக் கூடாது என்ற வகையிலேயே அவருடைய ஒவ்வொரு போராட்டமும் அரசியல் நிலைப்பாடும் அமைந்திருந்ததைப் போலவே இது இருக்கிறது.

காந்தி பிரிட்டிஷ் ஆட்சியாளர்களிடம் மோதாமல் பெரிதும் முரண்படாமல் இந்திய ஆளும் வர்க்கத்திற்கு அதிகாரத்தை வாங்கிவிட வேண்டும்: வாங்க முடியும் என்று நம்பினார். மக்களை சார்ந்து பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுடன் முரண்பட்டால் தான் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற இந்திய ஆளும் வர்க்கத்தின் முதன்மை நலனுக்கே மோசம் வந்துவிடும் என்பதால் இவ்வாறு இருந்நார். அதில் வெற்றியும் அடைந்தார். மக்களுடைய போராட்டங்களை காட்டி பேரம் பேசி அதிகாரத்தை கைமாற்றிக் கொண்டார்.

இங்கு ஒன்றை நினைவில் கொள்ளவேண்டும். காந்தி இந்திய மக்களுடைய போராட்டங்களை காட்டித்தான் பிரிட்டிஷாரிடம் அதிகாரத்தை கைமாற்றிக்கொண்டார். மக்களுடைய போராட்டங்கள் நடக்காமல் இழுத்திருந்தால் தனது ஆளும் வர்க்க நலனுக்காக இந்தச் சுதந்திரத்தைக்கூட அடைந்திருக்க முடியாது.

ஆனால், இன்றோ நமது புலி பக்தர்கள் இந்திய ஆட்சியாளர்களை ஆத்திரமூட்டிவிடக்கூடாது எனவும் அவர்களின் மனது நோகக்கூடாது எனவும் அவர்களிடம் ஒப்பாரிவைத்தே, இறைஞ்சியே ஈழத்தை பெற்றுவிட முடியும் என மூ(ம)டத்தனமாக நம்புகிறார்கள்.

இந்திய ஆளும் வர்க்கம் ஈழப் போராளிகளை 1980களில் பிளவுபடுத்தியமை, ஒருவருக்கொருவர் மோதவிட்டு ரத்தம் குடித்தமை, இந்திய அமைதிப்படையை அனுப்பியமை, ராஜீவ் கொலையில் Master Mind போன்று செயற்பட்டவர்களையும் அதை முன்கூட்டியே தெரிந்து வைத்திருந்த சுப்பிரமணிய சுவாமி, ஜெயலலிதா ஆகியோரை தீர விசாரிக்காமல் தமிழ்நாட்டுத் தமிழர்களையும் ஈழத் தமிழர்களையும் மிருகத்தனமாக சித்திரவதை செய்து அவ்வழக்கில் தண்டனை கொடுத்தமை, இறுதியாக முள்ளிவாய்க்காலுக்கு காரணகர்த்தவாக இருந்தமை ஆகியனவற்றை செய்த பின்னரும் அது ஈழத்தை தட்டில் வைத்து கொடுக்கும் என்று இவர்கள் இன்னமும் நம்புகிறார்கள்.

புலி (இந்திய) ஆதரவாளர்களின் இந்தப் போக்கு இந்திய ஆட்சியாளர்களுக்கு பழம் நழுவி பாலில் விழுந்த கதையாகவும் கரும்பு தின்னக் கூலியாகவும் இருக்கிறது. சிமிகி, ஜெயலலிதா ஆகியோ விஷயத்திலும் அவ்வாறே நடந்துகொள்கிறார்கள்.

ஜெயலலிதா தமிழக முதலமைச்சராக ஆன பின்னர் இராஜபக்சேவின் போர்க்குற்றம் தொடர்பாகவும் இராஜீவ் கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள மூவர் தொடர்பாகவும் சட்டமன்றத்தில் தீர்மானத்தை இயற்றியதாலேயே அவரின் பழைய புலி / ஈழ விரோதச் செயற்பாடுகள் எல்லாம் இவர்களுக்கு Selective amnesia என்பதாக ஆகிவிட்டன. ஏன் 2G அலைக்கற்றை ஊழல் வழக்கில் சிக்கியுள்ள மலேசியாவைச் சேர்ந்த ஏகபோக பெருமுதலாளி அனந்தகிருஷ்ணன் என்ற ஈழத்தமிழர் விடுதலைப் புலிகளுக்கு நிதி வழங்குபவர் எனவும் அவரை கைது செய்யவேண்டும் எனவும் ஜெயலலிதா அண்மையில் ஒரு அறிக்கையை வெளியிட்டார். அவரின் இப்போதைய பாசாங்கின் மூலம் கிடைத்துள்ள Space—ஐ ஜெயலலிதாவின் திடீர் பக்தர்களாகிவிட்ட புலி (இந்திய) ஆதரவாளர்கள் இழக்கவிரும்பவில்லை. இவர்களின் பாசாங்குத்தனமான வீரம் எல்லாம் கருணாநிதியிடம் தான் காட்டுவார்கள். தாயுள்ளம் (!) கொண்ட ஜெயாவிடம் செல்லுபடியாகாது.

அமெரிக்காவிடமும் அதே போல் நடந்துகொள்கிறார்கள். புலிகள்

அமைப்பை பயங்கரவாத அமைப்பு என்று தடைவிதித்த அமெரிக்கா, முள்ளிவாய்க்கால் அவலத்திலிருந்து காப்பாற்றாமல் ஏமாற்றிவிட்ட அமெரிக்கா, அண்மையில் ராஜரத்தினத்திற்கு தண்டனை விதித்த அமெரிக்கா ஈழத்தை வாங்கி தந்துவிடும் என்று நம்புகிறார்கள். சதாம் ஹுசேன், கடாபி, மிலோசெவிக், ஓசாமா பின்லேடன் ஆகியோரின் இறப்பிற்குப் பின்னும் அவ்வாறு நினைக்கிறார்கள் என்பது எந்த அளவிற்கு அமெரிக்கக் கழுகை நம்பும் முட்டாளாக இருக்கிறார்கள் என்பதை பறைசாற்றுகிறது.

தெற்காசியாவில் எல்லாவகையிலும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இலங்கையில் இந்தியா மற்றும் சீனாவிற்கு மாற்றாக போட்டியாக தனக்கான தளம் ஒன்றை அமைக்கும் முகமாகவே அமெரிக்கக் கழுகின் இந்த திடீர் கரிசனை வெளிப்படுகிறது.

தெற்காசியாவானது இன்று இந்தியா, சீனா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் ஆடுகளமாகிவிட்டது. இவை இங்கு நடக்கும் எந்தவொரு தேசிய இனப் போராட்டத்தையும் புரட்சிகரப் போராட்டத்தையும் தமது நலனிலிருந்தே கையாளும். போராளி அமைப்புகள் தமது ஆளும்வர்க்கத்துடன் முரண்பாட்டை உடைய வேறு ஆளும்வர்க்கத்துடன் உறவை வைத்துக்கொண்டு தமது மக்களின் நலனை முன்னெடுக்கலாம். ஆனால் தமது இலட்சியத்திற்கு பின்னடைவை ஏற்படுத்தி மக்களின் அவலத்திற்கு காரணகர்த்தாவாக இருக்கும் அரசை இறைஞ்சி கேட்டுக்கொண்டு இருந்தால் ஏமாற்றம்தான் மிஞ்சும், மக்களின் அவலம்தான் அதிகரிக்கும்.

இதைத்தான் புலி (இந்திய) ஆதரவாளர்கள் இந்தியாவிலும் இலங்கையிலும் புலம்பெயர் நாடுகளிலும் செய்கிறார்கள். மேட்டுக்குடி ஈழத் தமிழர்களின் tutoring, instruction ஆகியவை இதில் ஆதிக்கம் செய்கின்றன. இப்போது மட்டும் அல்ல; 1980கள் முதற்கொண்டு இந்தியாவைச் சார்ந்தோ இந்தியாவை இறைஞ்சியோ ஈழத்தை பெற்றுவிட முடியும் என்றே ஈழத்தமிழர்கள் / போராளி அமைப்புகள் கருதி ஏமாந்து வருகின்றனர். பிரபாகரனும் இதற்கு விதிவிலக்கல்ல. அதனால்தான் இறுதிவரையும் நம்பி முள்ளிவாய்க்காலை உருவாக்கி கொண்டார்கள்.

முள்ளிவாய்க்கால் அவலம் நிகழ்ந்த பினனரும் மேட்டுக்குடி ஈழத்தமிழர்கள் இந்தியாவை புரிந்துகொள்ளாமல் தடுப்பது வேறு எது? விரிவாதிக்க இந்திய அரசை பகைத்துக் கொள்ளாமல் ஈழத்தை வாங்கிவிட முடியாதா என்பது மட்டும் அல்ல. தெற்காசிய விரிவாதிக்க இந்திய அரசின் இளைய பங்காளியாக இருக்க விழைவதுதான் அது.

ஈழத்தை இந்தியாவிடமிந்து தானமாக பெற்று அதை சிங்கப்பூர் போன்று தங்குதடையற்ற ஏகபோக பெருமூலதன மண்டலமாக மாற்றி மக்களைச் சுரண்டி கொழுப்பதற்கான எத்தனிப்பே இது. (பிரபாகரனின் கனவு / இலட்சியமும் சிங்கப்பூரைப் போன்று ஈழத்தை அமைப்பதுதான் ஆகும்). அதற்கு இடைத்தரகர் வேலை செய்வதற்காகவே இந்த நாடகத்தை அரங்கேற்றுகிறார்கள் புலி (இந்திய) ஆதரவாளர்கள்.

சிங்கப்பூர் வகையிலான ஈழத்தில் அதிகம் மூலதனம் இடப்போவது சந்தேகமில்லாமல் இந்திய பெரு முதலாளிகளே ஆவர். இந்த வகையில் தமிழகத்தை சேர்ந்த புலி பக்தர்கள் இந்த வகையில் நிச்சயமாக இந்திய விரிவாதிக்க ஆதரவாளர்களையே செய்றபடுகின்றனர் என உறுதியுடன் கூறலாம்.

சிங்கப்பூர் வகையிலான ஈழத்தில் இந்திய பெரு முதலாளிகளோடு சிங்கள முதலாளிகளின் முதலீடும் அனுமதிக்கப்படும் என்பது குறித்து ஐயம் கொள்ளத் தேவையில்லை.

பாரதி பரம்பரையும் பெரியார் பரம்பரையும்

மணிக்கொடி என்பது கம்பனின் 'செழுமணிக் கொடிகள்', பாரதியின் 'தாயின் மணிக்கொடி' எனும் வகைச் சொல்லாட்சிகளின் லயிப்பில் வாய்த்த பெயரே. பாரதியின் 'இந்தியா', வ.வே.சு. அய்யரின் 'பால பாரதி' போன்ற தீவிரவாத ஏடுகளின் தொடர் நீட்சியான புத்தொளியாகவும், லண்டன் 'சென்டே அப்சர்வர்' எனும் ஞாயிற்றுக்கிழமை செய்தி இதழின் புத்தொளியாகவும் மணிக்கொடியை 17.09.1933 அன்று வெளிக்கொணர்ந்தார் ஸ்டாலின் கு. சினிவாசன். 'இதழியல் முன்னோடி' தெ.ச. சொக்கலிங்கம். அண்ணாவால் 'அக்கிரகாரத்து அதிசயமனிதர்' எனப் போற்றப்பட்ட திருப்பழனம் வ. ராமஸ்வாமி அய்யங்கார் ஆகிய இவர் ஒப்பத்துடனும் முதலிதழ் வெளியானது.

மறுமலர்ச்சிக்கு தந்தையான பாரதிக்கே ஒரு மறுமலர்ச்சி தேவைப்பட்டது. அவருடைய பெருமையை நாடு உணர்வதற்கு பிரச்சாரமும் அவசியமாக இருந்தது. இந்த அருங்காரியத்தை முன்னின்று சாதித்தவர் வ. ரா. அவருக்கு இவ்விடயத்தில் பக்க பலமாக நின்றவர் டி.எஸ். சொக்கலிங்கம்' கு. அழகிரிசாமி. (நான் கண்ட எழுத்தாளர்கள் ப. 124)

இதன் பின்னர் ஏ. என். சிவராமனும் உறுதுணையானார். அப்புறம் பி. எஸ். ராமையாவொடும் ஐவரானோம் என்பார் சீனிவாசன். 'மணிக்கொடிக் காலம்' என்பது 1933 1939க்கு இடைப்பட்ட ஏழாண்டு காலப் பகுதியாகும். பாரதி பரம்பரை, காந்திய ஈர்ப்பு, காங்கிரஸ் சார்பு என்கிற ரீதியில் ஒருசேர இயங்க நேர்ந்த பாரதி பரம்பரையினரான காவிரிநதி தீரப் பார்ப்பன அறிவாண்மையரே மணிக்கொடியின் ஆதார சுருதி எனலாம்.

பாரதி பாடியது மணிக்கொடி; காந்தி ஏந்தியது மணிக்கொடி; காங்கிரஸ் உயர்த்தியது மணிக்கொடி. பரந்த ஆசையில் பிறந்தது மணிக்கொடி. இந்திய விடுதலை பாரதமாதாவின் விஸ்வரூபம். உலக வரலாற்றின் ஏடுத்திருப்பம், மானுடம் ஓங்கித் தெய்வீக எல்லையைக் காட்டும் பேரெழுச்சி, கலிமறைந்து கிருதயுகத் தோற்றம், வைகறை என்ற மனக்காட்சிகளின் மோகனக் கவர்ச்சியின் முளைத்தது. சுதந்திரப் போராட்டத்தில் பல்லாயிரம் வீரர்கள் ஈடுபடச் செய்தது மணிக்கொடி. பிரதமக் காண் மனத்திடை ஓங்கி வளரும் அரசியல் / லட்சியத்தின் நுனி, முனை, கொழுந்து' மணிக்கொடி சீனிவாசன். (மணிக்கொடி காலம் ப. 34)

'இந்திய விடுதலை இயக்கம் இந்நாட்டில் மண்டிப்போயுள்ள அரசியல், பொருளாதார, சமூகநீதிகள், சுரண்டல்கள், அநியாயங்களை ஒழிப்பதற்காக நடக்கும் ஒரு தனிப்பட்ட நாட்டின் அரசியல் போராட்டம் மட்டும் அன்று. உலக முழுவதிலும் மனிதரிடம் உள்ள தெய்வத்தன்மையை, மனிதனிலுள்ள விலங்குத்தனம் கொள்ளையடித்துக் கொழுக்கும் அவலத்தை வேரறுத்துக் கிடைக்கும் பேரியக்கம் இது. மனிதனின் ஆத்ம சக்தி வான் வலியை ஒடுக்கக் கொடுத்துள்ள பெரும்போர் என விடுதலைப் போரை நோக்கினாராவார்' ஜெயதேவ் சீனிவாசன். (மணிக்கொடி சீனிவாசன் எழுத்துக்கள் ப. 294 & 295).

இது சீனிவாசன் பற்றிய அவரது மகனின் பதிவு. பம்பாய் காங்கிரஸ் சட்டமன்றக் கட்சிச் செயலாளராக நியமிக்கப்பட்ட சீனிவாசன் கட்சி வேலைகளில் பெரும்பங்கு வகித்தார். காங்கிரஸ் சோசலிஸ்ட் அணித் தொடர்புடையவராய் அவர் காந்தியுடன் கருத்து முரண்பட்டதாகவும் ஜெயதேவ் பதிவு செய்துள்ளார். மட்டுமின்றி ஹிட்லரின் தேசபக்த சர்வாதிகாரத்தை நேசமனோபாவத்துடன் அணுகிய ஏனைப் பிறமணிக்கொடியாளர் மத்தியில் விமர்சன மனோபாவத்துடன் ஹிட்லரை எதிர்கொண்டவர்கள் புதுமைப்பித்தனும் சீனிவாசனும் மட்டுமே. ஆசிரியப் பொறுப்பின் சாராம்ச ரீதியாக மணிக்கொடியும் மூவகைப்படும்.

1. வ.ரா. மணிக்கொடி (செப். 1933 முதல் சன.1945 வரை) கிளர்ச்சி மதிப்பீடு, அரசியல் திளைப்புடன் பிரதானமாக ஒரு விமர்சன இதழாக வெளிவந்தது.

2. பி.எஸ். ராமையா மணிக்கொடி (மார்ச் 1935 முதல் பிப். 1938 வரை). 'நவயுகப் பிரசுராலய' வெளியீடு. அரசியல் ஒதுக்கற்பாட்டுடன் சிறுகதைச் சிறப்பிதழாகச் சாதனைகள் படைத்தது.

3. ப.ரா. மணிக்கொடி (1938 முதல் 1939 வரை). மொழியாக்கம், ரசனைக் கட்டுரைகள் சுயமரியாதை இயக்க எதிர்ப்பு என வெளியாயிற்று. காலகதியில் ரசனைக்குழு சமூக ஆதிக்கமுள்ள சக்தியாகப் பரிணமிக்க தொடங்கியபின் அக்குழுவை ஏற்றெழுதும் போக்கு உருவானது 'எழுத்து' இதழில் சுட்டப்பட்டது. 'கம்பன்மாண்பு' முதலான ரசனைக் கட்டுரைகளும் 'ராஜாஜிபோதம்' முதலான ராஜரிஷி அறவுரைகளும் இடம் பெறலாயிற்றென அ.மார்க்ஸ் குறிப்பிடுவார்.

அன்றைய காலத்தின் கோலங்களையும், உடனிகழ் காலச் சமூகப் பண்பாட்டுச் செல் நெறிகளையும், இயக்கப் போக்குகளையும் பற்றிய பதிவுகளை இனிக் காண்போம்.

'மணிக்கொடி காலத்து இந்தியச் சமூக அமைப்பைக் காலனிய அரை நிலப் பிரபுத்துவச் சமூக அமைப்பு என்பர். முதன்மையாக இங்கிலாந்தும் இதர அமெரிக்க ஜப்பான் போன்ற ஏகாதிபத்திய நாடுகளின் ஏகபோக முதலாளிகள் மற்றும் நிலப்பிரபுக்கோ அன்றைய ஆளும் வர்க்கமாக விளங்கினர். காலனிய அரை நிலப்பிரபுத்துவ அமைப்பின் மிகக் கொடுமையான சுரண்டலுக்கு எதிராக எழுந்த மக்கள் எழுச்சியின் வீழ்ச்சியிலிருந்து அன்றைய சுரண்டல் அமைப்பைக் காப்பதற்கான ஒரு பாதுகாப்பு வால்வாகவே (றீழிக்ஷ ஊளமிதீ ாழியிஸள) இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உருவாக்கப்பட்டது. அன்று முதல் இன்று வரை அது இந்தியத் தரகு முதலாளிகள் மற்றும் நிலப் பிரபுக்களின் நலன் காக்கும் கட்சியாகவே செயல்பட்டு வருகின்றது. வ.ரா., சொக்கலிங்கம், சீனிவாசன், ராமையா போன்ற மணிக்கொடிக்காரர்கள் காங்கிரஸ் இயக்கத்தில் உணர்வு பூர்வமாக ஈடுபட்டுச் சிறை சென்றோர். பாரதியாரால் உருவாக்கப்பட்ட வ.ரா. போன்றோரின் அந்நிய எதிர்ப்புணர்வைச் சந்தேகிக்க இயலாது' அ. மார்க்ஸ். (முனைவன் 12 மணிக்கொடி பொன்விழாவேர்')

ஒரு பக்கம் ஒட்டுமொத்த சமூக விடுதலைக்கான நவீனமார்க்கமெனத் தேசபக்தியை இனங்கண்டு விழிப்புணர்ச்சிக்கான வினையூக்கியாக மதவுணர்வைக் கையாண்ட பாரதி; மறுபக்கம் மதவாதத்தை முன்னெடுக்குமுகமாக தேசபக்தியைக் கையாண்ட திலகர் வ.வே.சு. அய்யர் வாஞ்சிநாதன் என்ற இருவேறு சக்திகள் காங்கிரஸ் விடுதலை

இயக்கத்திற்கூடாகத் தொழிற்பட்டன. இதன் தாக்கம் எந்த அளவிற்கு இருக்கிறதென்றால் காந்தியாரால் கூட பிராமண நலனையே முனைப்பாக்கிக் கொண்ட சனாதன அணியின் நிர்ப்பந்தங்களை மீறிட இயலவில்லை என்பது கவனங்கொள்ளத்தக்கது.

'தாராளவாத அரைப் பிராமண தேசியத்தினுள் இந்திய வெகுஜனங்களை அணிதிரட்டிக் கொண்டனர்.' 'இந்தியாவை ஒன்றுபடுத்தும் ஒரே சாதிய வர்க்கமாய் இருந்த பிராமண அணியே இந்திய தேசியத்திற்கு வடிவங் கொடுத்ததென்ற வகையில், அது பிராமணர் நலனையே எப்போதும் முனைப்பாக்கிக் கொண்டிருந்தது. ஏனைய சக்திகளை அணி திரட்டுவதில் வெற்றி பெற்ற காந்தியும் கூட நிர்ப்பந்தங்களுக்குப் பணிந்து பிராமண நலன்கள் பலவற்றை அனுமதிக்க வேண்டியவராக இருந்தார்' ந. இரவீந்திரன் (மதமும் மார்க்சீயமும் தமிழ்ப்பண்பாட்டுப் பார்வை)

'செப்டம்பர் 1927இல் கடலூருக்கு விஜயம் செய்த காந்தி பிராமணர்கள் அறிவின் கலன்கள், தியாகத்தின் உருவம் எனப் புகழ்ந்தார். பிராமணர்கள் தங்கள் பாரம்பரிய எளிமையைப் பேணி பிராமணர் அல்லாதோர் பிராமணரை வெறுப்பதன் மூலம் ஒரு புதிய தீண்டத்தகாத பிரிவினை உருவாக்கிவிடக் கூடாதென்றும் பிராமணர்கள் இந்துமதத்தின் காவலர்களென்றும் கூறினார். பிராமணர் மீதுள்ள கோபத்தின் காரணமாக இந்துமதத்தின் அஸ்திவாரமாக இருக்கும் வர்ணாசிரமதர்ம அமைப்பினைப் பிராமணர் அல்லாதார் தகர்த்துவிடக் கூடாது என்றும் வேண்டுகோள் விடுத்துள்ளார். இரா. விஜயசங்கர் (இந்துத்வச் சூழலில் பெரியாரின் தேவை')

'பாரதி பரம்பரை'யென மணிக்கொடிக் காரர்களைப் பற்றிக் குறிப்பிட்டாலும் இப்பதப்பிரயோகம் வ.ரா. மணிக்கொடி எனும் முதற் காலக்கட்டப் பகுதியினரை மட்டுமே குறிக்கும் இதுபற்றிய பிரேமிளின் பார்வை இங்கே எண்ணத்தக்கது.

'பாரதிபரம்பரை என்ற பிரயோகத்தின் தாத்பர்யம் பாரதியின் கவிதாசக்தி உபாசனையிலிருந்து சமூகதர்சன உபாசனை வரையில் காட்டும் ஈடுபாட்டையே குறிக்கும்'. 'வர்ணாஸ்ரம' நீதித்வம் என்ற கொள்கை நிலவி வந்த ஒரு சமூக மனோமண்டலத்தினைப் பாரதி நேர்முகமாக எதிர்த்தவன். பார்ப்பன எதிர்ப்பு, பெண்ணடிமை எதிர்ப்பு ஆகியவற்றில் பெரியாரும் பாரதியாரும் இரட்டையர்கள்' பிரேமிள் (பெரியார் பரம்பரையும் ஜெயமோகச் சுயமோகமும்)

சமூக மறுமலர்ச்சி என்கிற ஒரு குவிமையத்தில் வ.ரா.வை மைய அச்சாகக் கொண்டியங்கிய பாரதிபரம்பரையும்; சமூகநீதி, சுயமரியாதை எனும் ஆதாரங்களில் பெரியாரியத்தை மையமாகக் கொண்டியங்கும் திராவிட பரம்பரையும் ஒன்றுபடும் புள்ளிகளையும், முரண்படும் களங்களையும் காண்போம். பாரதியை மகாகவிஞராக இனம் காட்டியது மட்டுமல்லாமல் பாரதி தாசனையும் தொடர்ந்து வெளியிட்டுப் போற்றியது மணிக்கொடி. பாரதிதாசனை மறுதலித்த நவீனத்துவச் சூழலில் பாரதிதாசனை இனம்கண்டு புதுமைப்பித்தன் போற்றியதும் மணிக்கொடியில்தான். 1938இல் வ.ரா. கதைவசனம் இயக்கத்தில் பாரதிதாசன் பாடல்களுடன் வெளிவந்த 'ஸ்ரீராமானுஜர்' திரைப்படத்தில் ந. பிச்சமூர்த்தி நடித்தும் உள்ளார். மணிக்கொடி சீனிவாசன் திரைப்படத் தணிக்கை வாரியத்தின் தென்பிராந்திய

அதிகாரியாகப் பொறுப்பேற்றார். அத்தருணத்தில் சீர்திருத்தம், பகுத்தறிவு என்று சொல்லி எந்த ஒரு சாராரின் பண்டிகைகளையோ, பழக்க வழக்கங்களையோ, நம்பிக்கைகளையோ மனத்தைத் துன்புறுத்தும்படி கேலி, ஏளனம் செய்வதைத் தவிர்க்க வேண்டும் என்று இயங்கியதாக அவர் மைந்தர் ஜெயதேவ் சீனிவாசன் இன்று முன் வைத்த (மு.சு. நூல் . ப. 300) போதிலும், அப்போது ஜெமினி கதை இலாகாவில் பணிபுரிந்த அசோகமித்திரனே சுட்டிக்காட்டும் ஒரு தகவலாதாரம் இதனை மறுதலிக்கின்றது. திரை உலகின் திருப்பு முனையாய் அமைந்த பராசக்தி படம் தணிக்கைக் குழுவிற்குப் போனபோது அதன்மீது இத்தகைய கோரிக்கைகளும் குறுக்கீடுகளும் நேர்ந்த போதிலும் சீனிவாசன் தான் அவற்றையெல்லாம் பொருட்படுத்தாது பராசக்தியை அங்கீகரித்து அனுமதி வழங்கினாரென்பதே அத்தகவலாதாரம்.

'நாற்பதுகளில் தேசியம், விடுதலை, காந்தியம், திராவிடம் முதலிய சமூக அரசியல் செல்வாக்கிற்குப் பெரும்பான்மையோர் ஆட் பட்டிருந்தனர். தமிழ்க்கவிதையுலகில் பாரதிதாசன் செல்வாக்குப் பெற்றிருந்தார். உருவத்தாலும் உள்ளடக்கத்தாலும் பலர் அவரைப் பின்பற்றினர். பாரதிதாசனும் 'காதல் வாழ்வு' என்றொரு வசன கவிதையைப் படைத்துள்ளார் என்கிறார் மா. இராமலிங்கம் (இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம் . ப. 210 211).

'சி.என். அண்ணாதுரை 1937 முதலே வசன கவிதை முயற்சியில் ஈடுபட்டு வந்துள்ளார். எனினும் புதுக்கவிதை வரலாற்றில் இக்காலக் கட்டத்தில் திராவிட இயக்க முயற்சி பற்றிப் பெரும்பாலும் குறிப்பிடப்படுவதில்லை' சு. சொக்கலிங்கம் (தமிழன்பன் கவிதைளில் சமூகம். ப. 17 18)

'திராவிட இயக்கத்தில் உருவாகி இருந்த மேடைப்பேச்சும், வசன கவிதைப் போக்கும் புதுக்கவிதைத் தடங்களில் ('வானம்பாடி' மரபில்) கலந்துகொண்டன. திராவிட இயக்கத்தலைவரான அறிஞர் அண்ணா வெளிப்படாவிட்டாலும், பழைய யாப்பு முறையை மீறும் இயல்பான கருத்து மாற்றத்திற்கு ஆளாகியிருப்பது புதிய பண்பாட்டுப் பார்வையின் வெளிப்பாடு எனலாம்' து.சீனிச்சாமி ('இருபதின் கவிதைகளில் சமூகநீதிக் கோட்பாடு ப. 51) வால்ட்விட்மன் கவிதையினை அண்ணா தமிழாக்கம் செய்துள்ளதை, அண்ணாவின் 'ஒரேநிலவு' கவிதைத் தொகுதியில் இருந்து எடுத்துக்காட்டுகின்றார் து. சீனிச்சாமி. மேலும் அவர் சுட்டிச்செல்லும் கவிதைகள் நாட்டார் சந்தங்கள் ஊடாடிக் கிடப்பன.

'சுயமரியாதைக்காரர்களும் மணிக்கொடிக்காரர்களும் ஒருசில சமூக சீர்திருத்தக் கருத்து நிலைகளில் ஒற்றுமையை நிலை கொண்டவர்கள் எனக்கருத இடம் உண்டாகிறது'

'ஜஸ்டிஸ் கட்சியினர் மேல்மட்டம் சார்ந்த பிராமணர் அல்லாதாரின் இயக்கத்தைப் பரப்ப முனைந்தனர். ஏகாதிபத்தியதாசர்களாக இருந்தனர். இந்த இரண்டு கருத்துநிலைகளுக்கும் மாறுபட்டிருந்தார்கள் மணிக்கொடிக்காரர்கள் சி. கனகசபாபதி (மணிக்கொடி பொன்விழா மலர்' முனைவன்' 12)

'மணிக்கொடிப் பத்திரிகையின் சமூகக் கொள்கையும் எல்லோரும் ஓர்நிறை எல்லோரும் ஓர் விலை என்பது தான் தீவிரவாதிகளான அவ்விருவரும் (சொக்கலிங்கம் வ.ரா.) நடத்திய சமூக சீர்திருத்த இயக்கமும் ஈ.வே.ரா.வின் இயக்கமும் இணைய இயலா வெவ்வேறு எல்லைகளில் இருந்தன. அரசியலிலும் வ.ரா.வும் சொக்கலிங்கமும் ஓர் எல்லையிலும் ஈ.வே.ரா. இன்னோர் எல்லையிலும்

இருந்தது அவற்றில் முக்கியமானது - பி.எஸ். ராமையா 'மணிக்கொடி காலம்' தொடக்கத்தில் காங்கிரஸ்காரராக நின்று அதனை எதிர்க்க நீதிக் கட்சி சுயமரியாதை இயக்கத்தை டி.எஸ். சொக்கலிங்கம் கண்டித்து எழுதியபோதிலும் விடுதலைக்குப் பின்னர் பார்ப்பனர் அல்லாதார் இயக்க நியாயங்களை அவரே உணர்ந்து கொண்டு விளக்கினார் என்பதனை தமது குறிப்பிடத்தக்க முனைவர் பட்ட ஆய்வில் பா.மதிவாணன் முன்வைத்துள்ளார். (டி.எஸ். சொக்கலிங்கம்: ஆசிரியம் இதழியல் - நவ. 1998). இங்கே முதலில் சுயமரியாதை இயக்கம் பற்றிய அவரது கண்டனங்களைப் பற்றிக் காண்போம். (இக்கட்டுரையின் இறுதிப் பகுதியில் பார்ப்பனரல்லாதார் இயக்கங்களின் நியாயப்பாடுகள் குறித்த சொக்கலிங்கத்தின் விளக்கங்களைக் காண்போம்).

தொடர்ந்து காங்கிரஸை எதிர்த்த நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கம் ஆகியவற்றைக் கண்டித்து எழுதி வந்தார்; பெரியார் ஈ.வே.ரா. வின் சுயமரியாதை இயக்கம் ஆங்கில அரசுக்கு ஆதரவாகச் சென்றபோக்கை விளக்கிச் சொக்கலிங்கம் எழுதிய தினமணி தலையங்கத்திலிருந்து பா. மதிவாணன் எடுத்துக் காட்டுகின்றார் (முற்சுட்டிய நூல் - ப. 12)

'தமது இயக்கத்திற்குச் சுயமரியாதைச் சங்கம் என்று பெயர் கொடுத்திருப்பது சரியாயில்லை. அதை மாற்றிப் பரமரியாதைச் சங்கம் என்று நாமகரணம் சூட்டினால் பொருத்தமாயிருக்கும்'

டி.எஸ். சொக்கலிங்கம் ('தினமணி' தலையங்கம் 3.3.1935.)

ராஜாஜி அமைச்சரவை, பள்ளிக்கூடங்களில் இந்தியைக் கட்டாயப் பாடமாக்கியதை எதிர்த்து சுயமரியாதை இயக்கத்தார் கிளர்ச்சிகள் நடத்தியபோது அதற்கான கண்டனமாக அவர் எழுதிய ஆசியற் குறிப்புகளிலிருந்து எடுத்துக் காட்டுகின்றார். (மு.சு. நூல். ப. 14)

'சுயமரியாதைக் காலிகளிடம் பொறுமை காட்டுவது தான் தர்மர் ராஜ்யமென்றால் அந்த ராஜ்யம் நமக்கு வேண்டியதில்லை. துஷ்டர்களை அடக்கி ஒடுக்கி வைக்கும் வீர ராஜ்யமே தமிழருக்கு வேண்டும்'.

டி. எஸ். சொக்கலிங்கம் ('மணிக்கொடி' 19.1.89. ப. 14 - 16)

அந்நிய ஆதிக்கத்திற்கு ஆதரவாகச் சுயமரியாதை இயக்கத்தினர் இருந்தனர் எனும் குற்றச்சாட்டு காங்கிரஸ்காரர்கள், பொதுவுடைமை இயக்கத்தவர் மற்றும் 'நடிப்புச் சுதேசி' களால் வாஞ்சிநாதய்யர் கொண்டாடப்பட்டதும்; தலித் மக்களுக்கு நன்மைகள் புரிந்த ஆஷ் துரையைக் கொன்ற கொலைகாரன் என அயோத்திதாஸரால் குறிப்பிடப்படுவதும் இதன் மறுபக்கத்தில் காணக்கிடக்கும் மெய்ம்மையாகும்.

'பிரிட்டிஷ் அரசு இந்தியாவுக்குப் பல இன்னல்கள் இழைத்தாலும் நல்ல நோக்கத்துடன் சில சீர்திருத்தங்களை அறிவித்தது. அவற்றைக் கண்டிக்கக் கூடாது என்றார் - காந்தி. அவை மோசடி என்றார் திலகர்.'

ஜி. ஏ. வடிவேலு ('தினமணி' 31.07.1995)

'ஒரு காட்டு மிராண்டி உலகினுள் ஊடுருவிய பிரிட்டன் திட்டங்களும், காந்திய மனிதார்த்தமும் தான் கொண்டாடத்தக்கவை. இவற்றின் வளர்ச்சிதான் இன்று பேணப்பட வேண்டும்' பிரேமின் ('ஞானரதம்' ஏப்ரல் - ஜூன் 86)

1932 நடுவில் பிரிட்டிஷ் பிரதம மந்திரி ராம்ஸே மாக்டொனால் ஒடுக்கப்பட்ட தலித் மக்களுக்கு அரசியலில் தனித்தொகுதி அளித்து ஓர் அறிக்கையை வெளியிட்டார். இரட்டை வாக்குரிமையை எதிர்க்க ஒரே

ஆளாகத்தான் மட்டுமே இருக்க நேரிடினும் தம் உயிரைக் கொடுத்தேனும் எதிர்ப்பதாக அறிவித்து எரவாடா சிறையில் தமது உண்ணாநோன்புப் போராட்டத்தைத் தொடங்கினார் காந்தியார். தலித் மக்களுக்குக் கிடைக்கக்கூடிய மிகச் சிறிய பயனையும் தடுப்பதற்குக் காந்தி தமது உயிரையே பணயம் வைத்திருக்கிறார் எனப்பதிலடி கொடுத்தார் அம்பேத்கார். கொலை மட்டுமன்று தற்கொலை மிரட்டலும் வன்முறையே என்கிற புரிதலை முன்வைத்து காந்தியாரின் உண்ணா நோன்பை அகிம்சை எனவும் ஓஷோ விதந்தோதினார் ('கிருஷ்ணா' வரிசையில் நூல் 4) பிரித்தாளும் சூழ்ச்சி பிரித்தானியரிடமா இல்லை காந்தி காங்கிரஸிடமா எனப் பிரிட்டீஸ் பிரதமர் போட்டுடைப்பதை முன்வைத்துக் கேள்வி எழுப்புவார் கவிதாசரண்.

'நீங்கள் உண்ணாவிரதமிருந்து இறக்க விரும்புவதன் ஒரே நோக்கம் இன்று பயங்கரமான ஊனங்களை அனுபவித்து வருவதாக நீங்களே ஒப்புக் கொள்கிற அந்த தாழ்த்தப்பட்ட வகுப்பினர் தங்களது வருங்காலத்தின் மீது பெருந்தாக்கம் செலுத்தப்போகும் இச்சட்ட மன்றங்களில் தங்கள் சார்பில் பேசுவதற்குத் தாங்களே தேர்ந்தெடுக்கும் வரம்புக்குட்பட்ட எண்ணிக்கையிலான பிரதிநிதிகளை அனுப்பும் வாய்ப்பினைப் பெறவிடாமல் தடுக்க வேண்டும் என்பதற்காகவே' ராம்ஸே மாக்டொனால் ('கவிதாசரண் ஏப். சூன் 2004)

இங்கே பிரேமிள் சுட்டிக்காட்டும் 'காந்திய மனிதார்த்தம்' கேள்விக்குரித்தாவதனையும், 'இந்தியக் காட்டுமிராண்டி உலகினுள் ஊடுருவிய பிரிட்டீஸ் தீட்சண்யம்' அதனைக் கேள்விக்குள்ளாவதனையும் தெள்ளத் தெளிவாய் உணரலாம் மற்றொரு வரலாற்றுப் பின்னணியில் தந்தை பெரியாரும் நீதிக் கட்சியினரும் எதற்காகப் பிரிட்டீஸார் தரப்பொன்றை ஆதரிக்க நேர்ந்ததென் பது குறித்த இருட்டடிக்கப்படும் ஒருண்மை பற்றி எடுத்துக் காட்டுகின்றார் ஒரு திராவிட இயக்க 'மின்னம்பலமான' முன்னோடி.

'1989 இரண்டாம் உலகப் போரின்போது உலக நாடுகள் அச்சு நேச நாடுகள என இயங்கிய சூழலில் இந்தியாவில் பார்ப்பனரும் இந்தியக் காங்கிரசாரும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பிரிட்டீஸ் ஆட்சியை ஒழித்து, ஜப்பான் ஆட்சியையோ, ஜெர்மன் ஆட்சியையோ கொணர அல்லும்பகலும் முயன்றனர். நாசிக் கொள்கை வெற்றி பெறாமலிருக்க வேண்டுமானால் பிரிட்டீஸாரே வெற்றி பெற வேண்டியது அவசியம் என்பதனால் தான் தந்தை பெரியாரும் நீதிக்கட்சியினரும் பிரிட்டீஸ் அரசுக்கு ஆதரவளித்தனர்' வே. ஆனைமுத்து ('பெரியார் சிந்தனைகள் முன்னுரை)

பாரதி 11.9.1921 இல் இயற்கையெய்தினார். பாரதியாரின் பெரியார் இயக்கம் குறித்த புரிதல் எத்தகையதாக இருந்தது? 'பெரியாரின் சமூகப் புரட்சிகரம் பாரதியின் தளத்தைத் தொட்டு, அதனின்று வேறுபட்டு விரிந்த ஒன்று. இந்த வேறுபாட்டை உணர்ந்து பெரியாரின் இயக்கத்தைப் பாதகமாக விமர்சித்துப் பாரதி ஒரு கட்டுரை கூட எழுதியுள்ளார்.

பெரியாரைப் பாரதி விமர்சித்தது. ஒரு கலாச்சாரக் கோணத்திலிருந்து என்ற திட்டவட்டமாகக் கூறிவிடவும் முடியாது. ரஷ்யாவில் ஜாரிஸம் வீழ்ச்சியுற்று வந்தபோது, 'கிருதயுகம் எழுகமாதோ' என்று அதை வரவேற்ற பாரதிக்கு உள்ளூர் புரட்சியாளரான பெரியாரின் இயக்கம்' எங்கே எப்படிப் போய் முடியுமோ?' என்ற கிலேசம் தான் ஏறபட்டிருக்கிறது என்றே அவரது

பார்வை காட்டுகிறது' பிரேமின் ('பெரியார் பாரம்பரையும் ஜெயமோகச் சுயமோகமும்', பிரேமின் குறிப்பிடும் பெரியார் இயக்கத்தைப் பாதகமாக விமர்சித்து எழுதிய கட்டுரை எதுவென அவர் குறிப்பிடவில்லை. என்ற போதிலும் 11.1.1957 'குறள்முரசு' இதழில் வே. ஆனைமுத்து பாரதியார் கட்டுரைகளில் இருந்து எடுத்துக்காட்டும் 'திராவிடக் கஷியார்' பற்றிய பார்வை இத்தகைய பாதகமான விமர்சனமாகவே காணக் கிடக்கின்றது.'

'தேசபாஷையே பிரதானம் என்பது தேசியக் கல்வியின் ஆதாரக் கொள்கை. இதை மறந்து விடக் கூடாது. தேசபாஷையை விருத்திசெய்யும் நோக்கத்துடன் தொடங்கப்படுகிற இந்த முயற்சிக்கு நாம் தமிழ்நாட்டிலிருந்து பரிபூர்ண ஸகாயத்தை எதிர்பார்க்க வேண்டுமானால், இந்த முயற்சிக்குப் பாஷையே முதற்கருவியாக ஏற்படுத்தப்படும் என்பதைத் தம்பட்டம் அறைவிக்க வேண்டும். இங்ஙனம் தமிழ்ப்ரதானம் என்று நான் சொல்லுவதால், டாக்டர் நாயரைத் தலைமையாகக் கொண்ட திராவிடக் கஷியார் என்ற போலிப் பெயர் புனைந்த தேச விரோதிகளுக்கு நான் சார்பாகி ஆர்யபாஷா விரோதம் பூண்டு பேசுகிறேன் என்று நினைத்து விடலாகாது. தமிழ்நாட்டிலேயே தமிழ் சிறந்திடுக. பாரதத்தேச முழுதிலும் எப்போதும் போலவே வடமொழி வாழ்க' சி. சுப்பிரமணியபாரதி (பாரதியார் கட்டுரைகள் (சமூகம்) ப. 499)

'திராவிடக் கஷியாரைப் போலிப் பெயர் புனைந்த தேச விரோதிகளாகக் காணக்கூடியதாகவே பாரதியின் தவறான புரிதல் காணக் கிடக்கின்றது. அத்தகைய புரிதலுக்கு மாறாக' தமிழ் பாஷா விரோதம்' பூண்டு நின்றதெல்லாம் காங்கிரஸ் சனாதனிகளே என்பதுதான் பாரதிக்குத் தென்படாத அன்றைய வரலாறு. இதற்கு ஆதாரமான ஒரு தரவாதரம் சுப. வீரபாண்டியனின் தொலைக்காட்சி, நிகழ்வொன்றில் கிடைத்தது ('ஒன்றே சொல் நன்றே சொல்' கலைஞர் தொலைக்காட்சி 10.05.2011 சுப. வீ. உரை) சென்னைப் பல்கலைக் கழகப் பேரகராதி வெளிக் கொணர்வதற்குப் போதுமான நிதியாதாரமின்றி அப்பெருந்திட்டந்தேங்கிக் கிடந்தபோது, அன்று ஆட்சிப் பொறுப்பிலிருந்த நீதிக் கட்சிதான் அதற்கென அறுபதினாயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தது அன்றைய காலத்தில் அது மிகப் பெரிய தொகையே. இவ்வாறு ஒதுக்கக் கூடாதென 'மடிதற்று முந்துற்று நின்ற சத்தியவந்தர் யார் தெரியுமா? 'சுயமரியாதைக்காலி'கள் கொண்டு வந்த 'தேவதாசி ஒழிப்பிற்கு' முட்டுக்கட்டை போட்டு சனாதனக் குரல் எழுப்பிய அதே சத்தியமூர்த்தி அய்யரேதான். நடவடிக்கையாக பேரகராதிப்பணிக்கு நிதி ஒதுக்கீடு அளித்தது.

'இந்திய அரசியல் விடுதலைப் போர்க்காலத்தில், பார்ப்பனரல்லாதார இயக்கமான நீதிகட்சி முதலியவற்றைக் கடுமையாகத் தாக்கி வந்த சொக்கலிங்கம் விடுதலைக்குப்பின், காமராஜர் சென்னை மாகாணத் தலைவரானது பார்ப்பனரல்லாத் தலைமை மரபினதென்றும் ராஜாஜியிருந்தபோதிலும் தமிழகத்தைப் பொறுத்தவரை காங்கிரஸின் உண்மையான மக்கள் தலைவர்களாக பி. வரதராஜுலு நாயுடுவும் திரு.வி.க. வுமே விளங்கினாரென சொக்கலிங்கம் குறிப்பிட்ட தனை எடுத்துரைப்பார் பா. மதிவாணன்.

இந்திய விடுதலைக்குப் பின்பு சமூக , சாதிய முரண்பாடுகளும், மோதல்களும் அரசியலில் குறுக்கிட்டபோது. ஈ.வெ.ரா. பெரியாரின் நிலைப்பாட்டை வரவேற்க நேர்ந்தது பா. மதிவாணன் (மு.சு.நூல் ப. 27)

முப்பதுகளில் சுயமரியாதை இயக்கத்தை பரமரியாதைச் சங்கமெனவும் சுயமரியாதைக் காலிகள் எனவும் தேசிய விரோத வேலை எனவும் சர்க்காரை ஆதரிப்பதும், காங்கிரஸைத் திட்டுவதும் பிற மரபினரைத் தூஷிப்பதும் தான் ஸ்ரீ நாயக்கர் வேலை எனக் கடுமையாகச் சாடி நின்ற சொக்கலிங்கமே 20.01.1955இல் வெளியிட்ட தம் 'காமராஜ்' எனும் வாழ்க்கை வரலாற்று நூலில் நீதிக் கட்சியை நிறுவிய தியாகராயரும், டாக்டர் நாயரும் பெரிய தியாகிகள் எனவும்; தமிழகக் காங்கிரசிலும் வரதராஜீ நாயுடு, திரு.வி.க. முதலிய பார்ப்பனர் அல்லாத் தலைமை மரபே உண்மையான மக்கள் தலைமை என ஒப்புதல் வாக்குமூலங்கள் வழங்கிப் பெரியாரின் நிலைபாடுகளை நோக்கி வந்தடைய நேர்ந்தது.

சுவாதீனமென்ற பெயரிலும் சுதேசியம் என்ற போர்வையிலும் காங்கிரஸ்ற்குள் ஊடுருவிப் புரையோடிய சனாதனத்தின் ஆதிக்கத்தால் காங்கிரஸிற்குள் வியாபித்திருந்த பார்ப்பனியத்தேசியமே திராவிட தேசியத்தின் தோற்றத்திற்கென எதிர்த்தலைக் காரணியாயிற்று. மீள்பார்வையாகக் காங்கிரசிற்குள் ஊடுருவியிருந்த பார்ப்பனியம் பற்றிய சில குறிப்புகளைத் தொகுத்துக் காண்போம். 1916இல் பார்ப்பனர் அல்லாதார் அறிக்கை (ஹிலிஜ யஷ்டிழிஜ"துஷ்ஜ னிழிஜஷ்க்ஷ"ளவிமிள) வெளியிடப்பட்டது. அரசியல் அடையாளம் மத அடையாளம் எல்லாமுங்கூட பார்ப்பனர்களைப் பொறுத்தவரை அவர்களது சாதி அடையாளமாக மாற்றிக் கொள்ளப்பட்டது. சிறுபான்மையினரான பார்ப்பனரின் பேரால் பார்ப்பனர் மு பார்ப்பனர் அல்லாதார் எனும் இருமை எதிர்வு கட்டமைக்கப்பட்டது. அதன்பின் கலாச்சார முக்கியத்துவத்தை முன்னெடுக்குமுகமாக அது ஆரிய மு திராவிட இருமை எதிர்வாகப் பரிணமித்தது.

'பிராமணர்களுக்குள் பல உட்சாதிகள் இருந்தாலும் இந்திய தேசியம் என்ற அரசியல் அடையாளத்தையும் இந்து என்கிற மத அடையாளத்தையும் அவர்கள் தங்களுடைய சாதியடையாளமாக மாற்றிக் கொண்டனர். அதன் விளைவாகப் பிராமணர்க்கும் சாதியும் மதமும் ஒன்றாயிற்று. ஆனால் மற்ற எல்லோருக்கும் சாதி அடையாளமே முதன்மையாயிற்று' தொ. பரமசிவன்.

'தமிழ்நாட்டுத் தேசிய காங்கிரஸ் மிதவாதிகளான அய்யங்கார்களிடத்திலும், தீவிரவாதிகளான அய்யர்கள் இடத்திலும் இருந்துவந்தது. அன்னிபெசண்ட் அம்மையாரின் 'ஹோம்ரூல்' இயக்கம் பார்ப்பனரின் தனி உரிமைக் கழகமாக மாறி சாதி சமய அமைப்பினைக் காப்பாற்றும் நிறுவனமாக இருந்து வந்தது. பி. ஸ்பிரட் "(D.M.K. inpower" p.p. 16-17)

'ஏராளமான பணத்தை இலாபகரமாக ஈட்டித்தரும் தொழிலியல் பின்னணியில் இந்திய விடுதலை இயக்கம் நடத்திய காங்கிரஸ் இயக்கத்தில் மரபுவழிச் சாதீயம் கால்பதிக்கவே, சாதியத்திற்கு எதிராகக் காங்கிரஸ் இயக்கத்திலேயே எதிர்ப்புக் குழுக்கள் தோன்றலாயின. ஆனால் இவ்வெதிர்ப்பியக்கம் கட்சிப்போக்கில் எதுவும் செய்ய முடியாமற் போகவே அது திராவிட இயக்கம் என்ற பெயரில் வளர்ச்சி பெறலாயிற்று' து. சீனிச்சாமி (' இருபதின் கவிதைகளில் சமூக நீதிக் கோட்பாடு . ப. 33)

'தமிழகம் நகர்மயமான போது செல்வாக்குப் பெற்ற கருத்தியல்தான் பெரியாரியம்' எனும் தமிழவனின் நிலைபாடும்; 'இந்திய ஆன்மா கிராமங்களில்

தான வாழ்கிற' தெனும் காந்தியாரின் நிலைபாடும் மிகை எளிமைப்படுத்தப்பட்ட பகுதி உண்மையாக ஓரளவில் இருந்தபோதிலும் இந்திய தேசியம் மு திராவிட தேசியம் எனும் இருமை எதிர்வுக்கூடாக இந்தரு நிலைப்பாடுகள் எவ்வாறு தொழிற்பட்டன எனக் காண்போம்.

15.08.1943 அன்று கிராம ஊழியன் முதலிதழ் கு.ப.ரா.வைக் கௌரவ ஆசிரியராகவும் திருலோக சீதாராமை ஆசிரியராகவும் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. 9வது இதழ் கு.ப.ரா. வை ஆசிரியராகவும் திருலோகத்தை நிர்வாக ஆசிரியராகவும் கொண்டு வெளியானது து.ரா. திருமலைசாமி ஆசிரியப்பொறுப்பில் ஜஸ்டிஸ் கட்சிப் பிரச்சார ஏடான 'நகரதூதன்' தொடுத்த தாக்குதல்களை முறியடிக்குமுகமாகவே காங்கிரஸ் காரர்கள் 'கிராம ஊழியனை'த் தொடங்க நேர்ந்ததென வல்லிக்கண்ணன் பதிவு செய்துள்ளார் ('சரஸ்வதி காலம்') திராவிடக் கஷியார் என்ற போலிப் பெயர் புனைந்த தேசவிரோதிகள் என்னும் பாரதியின் தவறான புரிதல்களுக்கு மாறாக 'திராவிடக்கஷி'?யாரின் தாப்பு என்னவாக இருந்ததெனப் பெரியாரின் வாக்குமூலம் வழியாகவே இனம் காண்போம். அது பிரேமிள் சுட்டியதுபோல் 'ஒருகாட்டு மிராண்டி உலகினுள் ஊடுருவிய பிரிட்டிஷ் தீட்சண்யம்' என்பதாகவே காணக்கிடக்கின்றது.

'வெள்ளைக்காரன் வந்ததனாலே இந்த அளவாவது இருக்கிறோம். வெள்ளைக்காரன் வருவதற்கு முன்னே, அவன் வந்த அன்றைக்குக் கூட நமக்கு 10 வயது இல்லை 7 வயது இந்த நாட்டுக்குச் சராசரி. அவன் வந்ததற்கப்புறம், அவன் வைத்தியம், ஆஸ்பத்திரி, அவனுடைய முயற்சி சுகாதாரம் இவையெல்லாம் நமக்கு ஏற்றதற்கு அப்புறம் இப்போது நாம் சராசரி 50 வருஷம் இருக்கிறோம்'.

'அவ்வளவு வசதி எல்லாம் பண்ணியிருக்கிறான் நம் நாட்டுக்கு. இவ்வளவு அதிசயம் அற்புதங்களை எல்லாம் கண்டுபிடித்திருக்கிறான்'.

'நாங்கள் வராதிருந்தால் படிப்பு ஏது? சொல்லுங்கள் சுயமரியாதை இயக்கம் ஆரம்பிக்கிறபோது நாம் 100க்கு 10 பேர் கூடப் படிக்கலையே! அது வந்ததுக்கு அப்புறம் ஆரம்பித்தோம்.... அறிவைப்பற்றி, சுயமரியாதை இயக்கம் ஆரம்பித்தபோது அதற்கு என்ன கொள்கை தெரியுமா? அய்ந்து கொள்கைகள்; என்ன கொள்கைகள்? 1. கடவுள் ஒழியனும். 2. மதம் ஒழியனும் 3. காந்தி ஒழியனும் 4. காங்கிரசு ஒழியனும் 5. பார்ப்பான் ஒழியனும். அன்றைய முதற்கொண்டு இன்றைய வரைக்கும் இந்த அய்ந்து கொள்கைகள் தான் நடக்கின்றன' பெரியார் ('மரணசாசனம்' சிந்தனையாளர் 28.06.1980)

இந்தியரே இந்தியாவைப் பாராளுமன்ற முறையில் ஆண்டுகொள்ள வேண்டுமென வலியுறுத்தி அதற்கு அதிகாரிகள் தயவு செய்ய வேண்டும் எனப் பாரதி பிரார்த்தனை செய்யும் தொனி அவரது 'அந்நிய சம்பந்த விலக்' கெனும் எண்ணக் கருவிற்கு மாறான ஒன்றாய்க் காணக்கிடக்கின்றது. 'எது எப்படியாயினும் இந்த தினத்தில் நாம் எல்லோரும் பறையர் பார்ப்பார் எல்லோருமே ராஜாங்க விஷயத்தில் ஒரே ஜாதி. இப்போது எங்களுக்கு அதிகாரிகள் தயவு செய்ய வேண்டிய விஷயம் என்னவென்றால் எல்லா ஜாதியாரும் சீட்டுப்போட்டுப் பிரதிநிதிகள் குறிக்க வேண்டும். அந்தப் பிரதிநிதிகள் சேர்ந்ததொரு மகாசபை வேண்டும். ராஜ்யத்தில் வரவு செலவு உட்பட எல்லா விவகாரங்களும் மேற்படி மகாசபையார் இஷ்டப்படி நடக்க வேண்டும். அவ்வளவுதான். மற்றபடி ஆங்கிலேய சாம்ராஜ்யத்தை விட்டு விலகவேண்டும் என்ற யோஜனை எங்களுக்கில்லை. மேற்படி பிரார்த்தனை

பிராமணர் மாத்திரம் செய்வதாக அதிகாரிகள் நினைக்கலாகாது'
சி. சுப்பிரமணியபாரதி (பாரதியார் கட்டுரைகள் (சமூகம்) ப. 534 535
'குறள்முரசு' 18.01.1957).

பாரதியின் பிரார்த்தனை பலித்தது, ' பாதிக்கிணறு தாண்டிய கதை' யாய் எல்லா விவகாரங்களும் மேற்படி மகாசபையார் இஷ்டப்படி நடக்காமல் மேற்படி மகாசபையார் எவற்றின் நடமாடும் நிழல்களாகவோ ஆட்டுவிக்கப்படும் ஒரு பாவைக் கூத்தாடிகளாகுமாறு.... பாரதி பரம்பரையினரான காந்தியவாதியாயும் 'காந்தி' எனும் இதழாசிரியராகவும் இருந்தபோதிலும், காந்தியாரை அவர் கொண்டாடி நின்றபோதிலும் இடைஇடையே முரண்படும் தருணங்களில் காந்தியத்தை விமர்சித்து மீறி நின்றவர். இவ்வாறே பெரியாரையும், சுயமரியாதை இயக்கத்தையும் ஆரம்பத்தில் மிகமோசமாக அவமரியாதை புரிந்துணர்வுடன் அணுகத் தலைப்பட்டவர் என்பதனாலேயே இக்கட்டுரையின் பேசு பொருளுக்கான சரியான 'கட்டளைக்கல்' லாக அவரது பதிவுகளே ஆதியும் அந்தமும் இங்கே எடுத்தாளப்பட்டுள்ளன.

பாரதியைக் கொண்டாடி நின்ற பாரதிதாசனே பாரதி மரபையும் மீறி நின்றவர். பாரதிதாசனை நவீனத்துவ வாதிகள் மத்தியிலிருந்து இனங்காண முடிந்த புதுமைப்பித்தனே பாரதி, பாரதிதாசன் மரபுகளை மீறித் தம் மரபை முன் எடுத்தவர்.

'கவித்துவமாகப் பாரதியிடம் பிறந்த நவீனத்தொனியைப் புதுமைப்பித்தன் பின்னலான, சிந்தனைச் செறிவு கொண்ட உரைநடைத் தொடராகக் கண்டவர்'.

இது (பெரியார் பரம்பரை) ஒரு சமூகப் புரட்சித்தொடர் இயக்கம். இந்தப் புரட்சிகரம் ('வர்ணாஸ்ரமமே நீதித்துவம் என்ற கொள்கை நிலவிவந்த ஒரு சமூக மனோமண்டலத்தைப் பாரதி நேர்முகமாக எதிர்த்தது) மட்டுமே பாரதி பரம்பரை என்ற பிரயோகத்தின் நியாயமாகும். ஆயினும் கூட, புதுமைப்பித்தன் தம்மைப் பாரதி பரம்பரைக்காரராகக் கொண்டதில்லை. அவ்விதம் தாங்களே கொண்டாடியவர்களை அவரும், பி.எஸ் ராமையாவும்" வீரபாரதீயன்' என்று நக்கலடித்திருக்கிறார்கள் (தகவல் சி.சு. செல்லப்பா) பிரேமிள் (முற்சுட்டியநூல்) இருவரும் நக்கலடித்திருப்பினும் அதிலும்கூட இருவரின் உள்நோக்கமும் வெவ்வேறானவையே. புதுமைப்பித்தனைப் பொறுத்தவரையில் அது அவருக்கே உரித்தான எள்ளல் சுபாவத்தின் வெளிப்பாடு. ஆனால் ராமையாவைப் பொறுத்தவரை அவரது சனாதன மரபின் குறுக்கீடே.

பாரதி பரம்பரையிலும் பெரியார் பரம்பரையிலும் இறுதிவரை ஊன்றி நின்று இயங்கிய பாரதிதாசன் ஆளுமையின் சிறப்பியல்புகள் தனியே விதந்தோதிக் காணப்பட வேண்டியனவேயாகும்.

பி.கு.: அடைப்புக்குறிக்குள் சுட்டப்பட்டுள்ளவை உரிய பனுவற்சூழமைவை '(Textual Context)ப் புலப்படுத்துமுகமாக என்னால் பிரேமிளின் எண்ணக் கருக்களிலிருந்து எடுத்தாளப் பெற்றவை.

நிலாரசிகன்

சாவுக்குருவி

இரவைக் கிழித்து பாடிக்கொண்டிருக்கும்
பறவை என் தோள் மீது அமர்ந்திருக்கிறது.
அதன் நீண்ட பாடலை உனக்கு எப்படி
புரியவைப்பது என்பதை பற்றி நான் அறியவில்லை.
வட்ட வடிவ சிறு உலகை ஒத்த அதன் கண்கள்
மென்மையானவை.
இரவைக் கிழிக்கும் அதன் குரலின் பேரானந்தம்
உன்னால் உணர முடியாதது.
கருநீல நிறத்தில் தலை துவட்டும் உயர்ந்த
தென்னை மரத்தில் நாங்கள் இப்போதிருக்கிறோம்.
காற்றில் அசையும் மரத்தில்
இடம் வலமாக அசைந்து அசைந்து
இசையாகி வீழ்கிறோம்.
அதிகாலை எனைத் தேடி வந்த நீ
ஆந்தை அடித்து இறந்தவன் என்கிறாய்
என் இசையுடல் மீதேறி

2. தீரா பசி

உக்கிரமானதொரு யுத்தத்தை
முதல் முறையாக நிகழ்த்தினான்.
கிழிந்த மேகங்களாய் சிதறிக்கிடக்கும் குருதியின்மேல்
நடனமிடும் துறவிகளை பழித்து திரும்பிக்கொண்டான்.
இரவுமழையின் ஊடாக செவிக்குள் இறங்கும்
முனகல் சப்தத்தில் விழித்தவன்
மாலை புதைத்த பெண்ணுடல் அருகே செல்கையில்
உக்கிரமானதொரு யுத்தத்தை
இரண்டாம் முறையாக பார்க்கிறான்.
குருதி படர்ந்த துறவிகளின் ஆடையை
எரித்துவிட்டு தன் யுத்தததை மீண்டும்
துவங்குகிறான்.
மார்பில் அடித்துக்கொண்டு
அழுதுகொண்டிருந்தாள் அவ்வனத்தின்
உமை

3. உடலின் மொழி

யாரும் அறியா மூன்றாம் சாமத்தில்
என் பதினேழாவது வயதிற்கு
திரும்பினேன்.
நான்கு தெருக்கள் தள்ளியிருக்கும்
அவளது வீட்டிற்குள் நுழைந்தேன்.
உடல் பேசும் மொழியை அவள்
ஒருவனுக்கு கற்றுக்கொடுக்க
முயல்வதை கண்டேன்.
சிவந்த விழிகளுடன் அருகில் சென்று
எட்டி உதைத்தேன்.
வீறிட்டு விழுந்தவளை புறக்கணித்து
அவன் அருகே சென்றேன்.
அப்போது எனக்கு பதினேழாவது
வயது நடந்துகொண்டிருந்தது

4.நட்சத்திரா என்றொரு சிறுமி இருந்தாள்

விழுந்து பெருகும் துளிகளின் வழியே
வந்து விழுந்தவள் நட்சத்திரா.
அப்போது அவள் ஒரு வெண்ணிற ஆடை
அணிந்திருந்தாள்.
அணில்கள் விளையாடும் செம்பருத்திக்காட்டில்
தன் வெண்ணிற உடையை சிறகாக்கி
விளையாடும் அவளது வயது ஒன்பதை கடந்திருந்தது.
அவள் ஆடையிலாடும் சிறு நூலின் நுனியில்
அங்குமிங்கும் ஆடிக்கொண்டிருந்தேன்.
நகராத நாளொன்றில் தன் விளையாட்டை
நிறுத்திவிட்டு வேறோர் ஆடை அணிந்துகொண்டாள்.
இப்போது அவளது வயது இருபத்தி ஐந்தை
தாண்டியிருந்தது.
அவள் அணிந்த ஆடையின் பெயர்
மௌனம் என்பதும் அதன்
கா
ரணம்
என்னவென்பதை பற்றியும் நாங்கள் மட்டுமே
அறிவோம்.

கல்வெளியில் உலவும் கனவு

அதிகாலைக்கல் என்றொரு கல்லை
பரிசளித்தான் நண்பன்.
அதிகாலையில் உள்ளங்கையில் மறைத்துக்கொண்டு
வேண்டியதைக் கேள் கிடைக்கும் என்றான்.
பத்து வயதில் மரித்துப்போன நாய்க்குட்டியை
கேட்டேன்
அழுகையார்.
வாலாட்டிக்கொண்டு காலை சுற்றியது.
பதின் வயதில் ஒன்றாய் திரிந்த தோழியை
கேட்டேன்
அதே புன்னகையுடன் சன்னலோரம் நிற்கிறாள்.
அடுத்த நம்பிக்கையில்
கடைசியாக
நூறு நாட்களுக்கு முன்பு மரித்த
என்னைக் கேட்டேன்.

பல்சர் கவிதைகள்

ராஜகுல முறை ஒழிக்கப்பட்டுவிட்டதால்
மரணப்படுக்கையில் வீழ்ந்துவிட்ட
ராஜ தோரணைக்கு
உயிரூட்டும் முயற்சியாய்
பஜாஜ் நிறுவனம்
அறிமுகப்படுத்தி இருப்பதே
இந்த பஜாஜ் பல்சர்

2.
ஒரு கன்றுக்குட்டியை
ஏற்றிக் கொல்வதற்கு போதுமான
இரண்டு பெரிய சக்கரங்கள்
இதற்குண்டு

3.
அதிகாலை வெய்யிலில் மினுங்கும் பல்சரை
வெற்றித் திளைப்பில் பளீரிடும்
வீரனின் கை வாள் என்பேன்

4.
மரநிழலில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த
பல்சரின் மீது
ஒரு மலர் உதிர்ந்து கிடப்பதை பார்த்தேன்
பணிப்பெண்கள் பூ மாரி பொழிந்ததில்
ஒரு பூ
மகாராஜாவின் தலையிலேயே தங்கிவிட்டது
என்று நினைத்துக் கொண்டேன்

5.
சமீபகாலமாக
ஒரு கலகக்குரல் ஒலித்துவருகிறது எனக்குள்
வாயில் காப்போன் தேரில் போனால்
பாதைக்கும் தேருக்கும் ஒன்றும் நேராது.

6.
தன் பொக்கிஷத்தை வீதியில் வைத்துவிட்டு
அரைமணி நேரத்திற்கும் அதிகமாய்
எங்கோ பரதேசம் போபவன்
இன்னொன்று வாங்கிக் கொள்ளட்டும்.

குமாரநந்தன்

நகரப் பாடகன்

அந்த மத்தியான நேரத்தில் ரயிலில் கூட்டம் அச்சம் தருவதாய் இருந்தது. காற்று ஒலிப்பானின் கூரிய சத்தத்தோடு ரயில் கிளம்பியதும் பதிவு செய்யப்படாத பெட்டியில் நின்றுகொண்டிருந்தவர்களில் சிலர் புதைகுழிக்குள் இறங்கியவர்களைப் போல அப்படி அப்படியே உட்கார்ந்துகொண்டார்கள். இப்படி அப்படி அசைவதற்கு இல்லை. எல்லோரும் ஆணி அடித்த மாதிரி இருந்த வாக்கில் சபிக்கப்பட்ட பயணத்தைத் தொடர்ந்துகொண்டிருந்தனர். எதோ ஒரு நிறுத்தத்தில் நின்றபோது மேலும் திபுதிபுவென மக்கள் ஒவ்வொரு பெட்டியிலும் ஒரு படையெடுப்பைப் போல நுழைந்தனர். ஏற்கனவே நெருக்கமாக காற்றுக்கூட நுழைய முடியாத அளவுக்கு இருந்த பெட்டிகளில் எப்படி இவ்வளவு பேர் மீண்டும் ஏறினார்கள் என்பது யாருக்கும் புரியவில்லை.

ரயில் கிளம்புவதற்கான சிக்னல் விழுந்தவுடன் இன்னும் சில இளைஞர்கள் இந்தப் பெட்டியில் ஏற முயன்றனர். வாசலில் நின்றவர்கள் தங்களுக்குள் பின்னிக்கொண்டு "இங்க இடமில்ல வேற கம்பார்ட்மெண்ட் பாருங்க" என்று சொல்வதைப் பொருட்படுத்தாமல் அவர்களின் கைகள் பரபரவென்று கம்பியைத் துழாவின. அவர்கள் ஏற்கனவே எல்லாப் பெட்டிகளையும் ஒரு சுற்று பார்த்துவிட்டுத்தான் வந்திருந்தனர். இதில்தான் கூட்டம் கொஞ்சம் குறைவாக இருப்பதாகத் தங்களுக்குள் பேசிக்கொண்டு ரயில் நகரும் போது கூட்டமில்லாத பேருந்தில் தொற்றுவதைப் போல அநாயாசமாகத் தொற்றிக் கொண்டனர்.

ரயில் நகர ஆரம்பித்ததும் இனிமையான குழலோசை காற்றை நிறைத்தது. எல்லோரும் தங்கள் மன நெருக்கடியில் இருந்து கொஞ்சம் இயல்புக்கு வருவதைப்போன்ற ஆசுவாசத்தில் மூச்சின் சிக்கல்கள் பிரிந்தன. பார்வையற்றவர்கள் நான்குபேர் கழிப்பறை அருகே நின்றுகொண்டிருப்பதை அப்போதுதான் அந்தப் பக்கம் இருந்தவர்கள் கவனித்தனர். அவர்கள் நான்கு பேரும் முன்னோக்கி நகர முயற்சிப்பது மாதிரி தெரிந்தது. அந்த இடத்தில் நின்றுகொண்டிருந்த இருபது பேருக்கும் என்ன செய்வதென்றே தெரியவில்லை.

இருந்தாலும் இரக்கத்தின் காரணமாக உடலை சற்றே பின்புறமாக வளைத்து நெளிந்து இடத்தை உண்டாக்க முயன்றனர். வெற்றிடத்தில் அந்தப் பார்வையற்றவர்கள் முதலில் தங்கள் மார்பைத் திணித்துக் கொண்டனர். கூட்டத்தில் நசுக்கப்படும் மார்பு முன்னோக்கி நகரும்படியாக சக்தியை தங்களுக்கு முன்னால் திசையில் குவித்து வைத்துக் கொண்டார்கள். கொஞ்ச நேரம் கடையப்படுவதைப் போல உடல்கள் நசுங்கிக் கொண்டிருந்தாலும் அவர்களில் ஒருவன் குழல் வாசித்தான்.

இன்னொருவன் ஒளிமயமான எதிர்காலம் பாடலைப் பாடினான். இன்னொருவன் இறைவனிடம் கையேந்துவதைப் போல அத்தனை மனிதர்களிலும் ஒருவரைக் கூடக் குறிப்பிடாத திசையில் கையேந்தினான். இன்னொருவன் வெறுமனே அவர்களைப் பின் தொடர்ந்தான். அந்த நான்கு உடல்களும் கடையப்பட்டு முன்னோக்கி நகர்ந்துகொண்டிருந்தன. பின்னாலிருந்து வெறுப்பின் குரல்கள் மெல்லக் கிளம்ப ஆரம்பித்தன.

"இன்னிக்குக் கூட வசூல் பண்ணாம விடக்கூடாதா? அவனவன் இங்க மூச்சிவிடக்கூட முடியல இதுல இவனுங்க தொந்தரவு வேற" இவ்விதமாக ஆரம்பித்த விமர்சனம் பல்கிப் பலவாறாகப் பெருகி குரல்களின் அலையாகக் பெட்டி எங்கும் வீச ஆரம்பித்தபின் அவர்களால் நகர முடியவில்லை. அதே நேரத்தில் இன்னொரு நிறுத்தம் வந்துவிட அவர்கள் நால்வரும் பழத்திலிருந்து பிதுக்கித் தள்ளப்படும் கொட்டைகளைப் போல வெளியே வழிந்தனர்.

ரயில் இயல்பான வேகத்தை எட்டியதும் அந்தக் கணவான் தன்னுடைய இருக்கையிலிருந்து தொண்டையைச் செருமிக்கொண்டு ஏதோ சொல்வதற்காக எழுந்து நின்று, "இந்த மாதிரியான தொல்லைகளிலிருந்து உங்களைக் காப்பாற்றத்தான் நான் ஒரு திட்டம் வைத்திருக்கிறேன்" என்றார். அந்த இடத்துக்கு அவருடைய தோற்றம் சம்மந்த மில்லாததாய் இருந்தது. நல்ல உயரத்தில் சிவப்பாக வயதானாலும் இளைஞனை விட கம்பீரமாக உயர்தரமான ஷர்ட் போட்டு டை கட்டியிருந்தார். அவருடைய குரல் ஒலிபெருக்கியைப் போல ஒலித்தது. மொணமொணவென்ற பேச்சுகள் சட்டென அடங்கிவிட்டன. "நீங்கள் மிகக் குறைவான ஒரு தொகையைக் கொடுத்துப் பதிவு செய்து கொண்டால் உங்களுக்குத் தேவையான பாடல்கள் தினந்தோறும் உங்கள் எதிரில் பாடப்படும். பிச்சைக்காரர்களை எந்தக் குற்ற உணர்ச்சியும் இன்றி

விரட்டியடிக்கலாம். சிம்பனியைத் தேடிக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. இனிமையான பாடல்களை தினந்தோறும் கேட்டு மகிழலாம்" என்று விவரிக்க ஆரம்பித்தவுடன் கூட்டத்தில் நல்ல திட்டமாய் இருக்கிறதே என்று பேச்சுப் பரவ ஆரம்பித்தது. பெட்டியிலிருந்த பெரும்பாலானோர் அவர் குறிப்பிட்ட பணத்தைக் கொடுத்துத் தங்கள் பெயரை அங்கேயே பதிவு செய்து கொண்டனர்.

இப்படித்தான் அது ஆரம்பித்தது. இது எதிர்பாராமல் உருவானது என்று சொல்ல முடியாது. நீண்ட காலமாக மனதுக்குள் ஒத்திகை பார்க்கப்பட்டு அன்று எதேச்சைபோல் செயல் வடிவத்திற்கு வந்துவிட்டது. ஒரு மனோவேகத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்தால் ஒருவேளை நல்ல திட்டமாக இருந்தாலும் கூட எல்லோரும் அதைக் கேட்டு விழுந்து விழுந்து சிரித்திருக்கக் கூடும். நீண்ட காலத்திய மனோவலிமையால் அது ஒரு நடைமுறைக்குச் சாத்தியமான விசயமாக அங்கே வலிமையோடு வெளிப்பட்டுவிட்டது.

கோட் ஷீட் போட்ட அந்தக் கணவான் நகரமெங்கும் சுற்றித் திரிந்தான். தன்னிடம் பெயர் பதிவு செய்து கொண்டவர்கள் எதிர்ப்படும் போது அவர்களுக்காக ஒரு பாடலை சிறிது தூரம் பாடிக்கொண்டு அவர்களுடன் சென்றான். தேவதூதனைப் போல ஒருவன் திடீரென தங்களுடன் வருவதைப் பலபேர் நம்ப முடியாமல் கர்வத்தோடு சுற்றிலும் பார்த்துக் கொண்டனர். அவர்கள் கணவானின் தோழர்கள் என்பது மாதிரியான தோற்றம் ஆகாய மாளிகையில் குடியமர்த்தியதைப் போன்ற எல்லையில்லாத வெளிச்சத்தை அவர்களைச் சுற்றி வாரி இறைத்தது. அடுத்த நான்கைந்து நாட்களில் நகரத்தின் ஏராளமான பேர் தங்களைக் கணவானிடம் பாடல் கேட்பாளராகப் பதிவு செய்து கொண்டனர்.

கணவான் நகரில் எங்கெங்கும் திரிந்துகொண்டிருந்தான். தனக்கு எதிரே வருபவர்களுக்காகக் குதூகலமானப் பாடல்களைக் குஷியாகப் பாடினான். ஒரே சமயத்தில் நான்கைந்து பேர்கள் எதிர்ப்பட்டால் அவர்கள் எல்லோருக்கும் பொதுவாக ஒரு பாடலைப் பாடினான். பெயரைப் பதிவு செய்யாதவர்கள் பாடலைக் கேட்டு விடுவதைத் தவிர்க்கப் பதிவு செய்தவர்களின் காதருகே ரகசியம் போலக் கையைக் குவித்துப் பாடிச்சென்றான். இதனால் அவமானமடைந்தவர்கள் தங்களும் பாடல் கேட்பாளராகப் பெயரைப் பதிவு செய்து கொண்டனர். கணவானிடம் பாடல் கேட்பவன் என்கிற கர்வம் ஒவ்வொருவருக்கும் தேவைப்படுவதாய் இருந்தது. அது ஒரு நாகரீக அடையாளமாகிவிட்டது. கணவான் முன்னைவிட சிவப்பாகவும் அழகாகவும் ஆகிவிட்டான். தலைமுடிகள் பொன்னைப் போல ஒளிர்ந்தன. இதழ்கள் ஏதோ ஒரு பழத்தினுடையதைப் போல கவர்ச்சிகரமாக மாறிவிட்டது. உருவம் தேவனுடையதைப் போல ஒளிவீசியது.

நகரத்தில் இருக்கும் ஒவ்வொரு மனிதனைப் பற்றியும் அவனிடம் குறிப்புகள் இருந்தன. என்னதான் நவீன உலகின் அடையாளமாக அவனிடம் பாடல் கேட்பது இருந்தாலும் நகரில் பாதிப் பேர் அவனிடம் பாடல் கேட்கும் ஆர்வம் இல்லாதவர்களாய் இருப்பது ஒரு அதிர்ச்சிகரமான உண்மைதான். அது அவனுக்கு மட்டுமே

தெரியும். ஒவ்வொருவரும் நகரின் மற்ற மனிதர்கள் எல்லோருமே பாடல் கேட்பவர்கள் என்றுதான் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அப்படி அல்ல என்ற உண்மை தன்னைத் தவிர வேறு ஒரே ஒருவருக்குத் தெரிந்தாலும் தன்னுடைய நிலைமை சரிந்துவிடும் என்பதை உணர்ந்திருந்த கனவான் அடுத்து என்ன செய்வது என்று தீவிரமாக யோசித்தான். வரிசையாக அவனிடத்தில் திட்டங்கள் தோன்ற ஆரம்பித்துவிட்டன. தலையில் பெரிய வெள்ளை உருமால். நெற்றியில் துல்லியமான நாமம். பெரிய மீசை. பட்டுத்துணியால் தைக்கப்பட்ட கோட் இடுப்பில் பஞ்ச கச்சத்தின் மீது பெரிய பெல்ட். சற்றேறக்குறைய அவன் ஒரு குடுகுடுப்பைக்காரனைப் போல இருந்தான். பாடல் விரும்பாதவர்களிடம் சந்தடி மிக்க சாலைகளில் எதிர்ப்பட்டு உங்களுக்காக என்னிடம் ஒரு சேதி இருக்கிறது என்றான்.

வாகனங்கள் சீறிப் பாய்ந்துகொண்டு இருக்கும் அந்த இடத்தில் கோடங்கியின் தோற்றம் மிகச் செயற்கையாய் இருந்தது. அவனுடைய மல்டி மில்லியனர் தனத்தை ஒப்பனையால் மறைக்க முடியவில்லை. எல்லாம் விளக்கமாகவே தெரிந்தாலும் அவனை யாரும் தவறாக நினைக்கவில்லை. என்னதான் சொல்கிறான் கேட்போமே என்று நின்றபோது அவன் அவர்களுக்கான மிகவும் பொதுப்படையான நல் நிமித்தங்களைக் கூறினான். மேலும் ஒரு குறிப்பிட்ட தொகையை செலுத்திப் பெயரைப் பதிவு செய்து கொண்டால் எதிர்ப்படும் போதெல்லாம் அவர்களுக்கான வருங்காலங்கள் தெரிவிக்கப்படும் என்ற திட்டத்தை அறிவித்தான். இந்தத் திட்டமும் அளவில்லாத வெற்றி. பணம் கட்ட மக்கள் நாளெல்லாம் வரிசையில் காத்துக்கிடந்தார்கள். சிலர் பாடலுக்கும் ஜாதகத்துக்குமாகப் பணம் கட்டினார்கள்.

ரோல்ஸ் ராய்ஸ் காரில்தான் கனவான் சுற்றினான். மக்கள் கூட்டத்தில் இறங்கி அவர்களுக்கான பாடல் அவர்களுக்கான ஜோசியம் போன்றவற்றை சொல்லிக்கொண்டே சென்றான். அவனுக்குத் தன்னுடைய திட்டங்களின் மீது மிகுந்த நம்பிக்கை உண்டாகிவிட்டது. தினம் புதுப் புதுத் திட்டங்களை அறிவித்துக்கொண்டே இருந்தான். பணம் கட்டினால் தினம்தோறும் ஜோக் சொல்லப்படும். பணம் கட்டினால் தினம்தோறும் காதல் டிப்ஸ் தரப்படும். பணம் கட்டினால் சுய முன்னேற்ற சுலோகங்கள் தினம் தரப்படும். பணம் கட்டினால் உலகச் செய்திகள் தினம் ஒன்றாய்ச் சொல்லப்படும். பணம் கட்டினால் ஒரு பெண்ணைப் போல விரக தாபத்தோடு பேசி அவர்களைக் கிளர்ச்சி அடையச் செய்யப்படும். ஆருடம் சொல்வதற்காக மட்டுமே அவன் கோடங்கி வேடம் போட்டு ஒரு முறை சுற்றினான். மற்றவைகளுக்காக அவன் எந்த வேடமும் புனையவில்லை. எதையும் வேடமிட்டுச் சொல்வதை விட இயல்பான தோற்றத்தில் வந்து சொல்வதையே மக்கள் நின்று கேட்க விரும்புகிறார்கள் என்பதைக் கண்டு கொண்டான்.

கனவானின் ரோல்ஸ் ராயஸ் கார் அந்த நடுத்தர ஓட்டல் வாசலில் நின்றது. பொதுவாக இந்த மாதிரியான கார்கள் ஐந்து நட்சத்திர ஓட்டல்களின் வாசலில் நிற்பதுதானே வழக்கம் தங்களுடைய கடை எந்த ஒரு பண்டத்துக்கும் புகழ் பெற்றதும் அல்லவே என்று கடைக்காரர்

புரியாமல் விழித்துக்கொண்டு யோசித்தார். கனைவான் தன்னுடைய அரக்கு நிற கோட்டைச் சரி செய்து கொண்டு ஓட்டலுக்குள் நுழைந்து ஒரு டேபிளின் எதிரே உட்கார்ந்துகொண்டார். அவருக்கு முன்னால் யாரோ ஒரு நடுத்தர வர்க்கத்து சுரேஷோ ரமேஷோ நூடுல்ஸை சாப்பிட்டுக் கொண்டிருந்தான். ஒரு பிரைட் ரைஸுக்கு சொல்லிவிட்டு மாதத்திற்கு மொத்தமாகத் தன்னிடம் பணம் கட்டினால் தினம் அவன் விரும்பும் பாடல் பாடப்படும். அல்லது தினசரி செய்திகள் சொல்லப்படும் அல்லது காதல் டிப்ஸ்... அவன் காதில் எதுவும் விழுந்ததாகவே தெரியவில்லை அவன்பாட்டுக்கு நூடுல்ஸை சாப்பிட்டு முடித்து போர் என்று கூப்பிட்டவாறே டிஷ்யூ பேப்பரில் கைகளைத் துடைத்து அந்த அழுக்கான பேப்பரை டேபிளின் மீது விட்டெறிந்து டைனிங் டேபிளைக் கனைவானின் முகமாக அப்போது அவன் நினைத்திருக்கக் கூடும்தொகையை கிண்ணத்தில் அலட்சியமாகத் தூக்கிப் போட்டுவிட்டு அவன் பாட்டுக்குப் போய்க்கொண்டே இருந்தான். கனைவானுக்கு உச்சித் தலை மீது ஆணி அடித்த மாதிரி இருந்தாலும் தன்னுடைய உள்மன நிலையை அணு அளவிற்குக் கூட முகத்தில் பாவவிடாமல் மேற்கொண்டு பிரைட் ரைஸை சாப்பிடுவதில் கவனமானான்.

மக்கள் மெல்ல மெல்ல அவனிடம் ஆர்வமிழக்க ஆரம்பித்துவிட்டார்கள். மனிதர்கள் எங்காவது இழவுக்குப் போகும் போதும் கனைவான் எதிர்ப்பட்டுத் தன்னுடைய குதூகலமான பாடலைப் பாடினான். காலையில் வேலைக்குப் போகும் அவசரத்தில் பேருந்துக்காகக் காத்திருக்கும் வேளையில் ஆனந்தமாகப் பாடலைப் பாடிக்கொண்டு வந்தான். அப்போது எல்லோருக்குமே அந்தப் பாடல்கள் தங்களுக்கானதில்லை. அவனுக்கானப் பாடலைத் தங்களுக்காகப் பாடுவதுபோல் பாடுகிறானோ என்று யோசிக்க ஆரம்பித்தனர். எல்லோருமே ஏதோ ஒன்றிற்காக அவனிடம் பணம் கட்டியிருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. எந்த விசயத்திற்காகவும் பணம் கட்டாதவர்களும் அந்த நகரத்தில் இருக்கும் போதே இப்படி ஒரு சிந்தனை மக்களிடம் வந்துவிட்டது அவனுக்குக் கடுமையான அதிர்ச்சியாய் இருந்தது. அப்படிப் பணம் கட்டாதவர்களின் தகவல்களைத் திரட்டி எதேச்சையாக அவர்கள் முன்னால் வந்ததைப் போலக் காட்டிக்கொண்டு பணம் கட்டினால் இன்னின்ன வசதிகள் கிடைக்கும் என்று சொல்ல ஆரம்பித்த போதே இப்படி அவர்கள் பாட்டுக்குக் கிளம்பிப் போய்க் கொண்டிருந்தனர் என்ன அவமானம். ஆனால் கனைவான் எந்த அவமானத்திற்கும் அஞ்சியவனல்ல அவன் தன்னம்பிக்கை தரும் சுயமுன்னேற்ற நூல்கள் ஒரு ஆயிரத்தையாவது கரைத்துக் குடித்திருப்பான். மக்களிடம் எப்படி முகத்தை வைத்துக் கொண்டு அவர்கள் பணத்தைக் கறக்க வேண்டும். தன்னை எதிர்ப்பவர்களை எப்படி ஒரு புன்சிரிப்போடு விலக்க வேண்டும் என்பது அவனுக்குத் தெரியும். யாராவது அவன் தலை மீது மலத்தை அள்ளிக் கொட்டினாலும் ஆத்திரப்பட மாட்டான். ஏனென்றால் கொட்டியவனை தன்னுடைய வாடிக்கையாளன். இன்றில்லாவிட்டாலும் என்றாவது

ஒருநாள் ஒரு நூறு வருடம் கழித்துக் கூட அவன் ஒரு வாடிக்கையாளராக மாற சாத்தியம் உண்டு. அவமானங்கள் வெற்றியின் படிக்கட்டுகள். தலையில் சூட்டப்படும் மலர்க் கிரீடங்கள்.

கணவானுக்குச் மேலும் ஒரு சோதனை போல அவன் மீது மஞ்சள் நகர் காவல் நிலையத்தில் புகார் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது. சந்திர சூட் என்கிற பெங்களூர் காரர் அந்தப் புகாரை அளித்திருந்தார். கணவான் எதேதோ திட்டங்கள் என்று சொல்லி தன்னை ஏமாற்றி விட்டதாகவும் அவரைக் கைது செய்து விசாரிக்க வேண்டும் என்றும் அதில் குறிப்பிட்டிருந்தது. இந்த உப்பு சப்பற்ற புகாரை விசாரிக்க இன்ஸ்பெக்டர் ஆர்வமின்றி இருந்தார். ஏமாற்றி விட்டான் என்றால் என்ன ஏமாற்றிவிட்டான் சொத்துக்களை கைப்பற்றிக் கொண்டானா? இல்லை மோசடி செய்து பணத்தைக் கபளீகரம் செய்து கொண்டானா? எதுவுமில்லை ஒரு சேவிங்கிற்கு ஆகும் பணத்தை அவன் பெற்றுக் கொண்டு இவன் எதிரில் ஒரு அடிமை போல பார்க்கும் போதெல்லாம் பாடுகிறான் இதை மோசடி என்று மனசாட்சி இல்லாதவன் தான் சொல்வான் என்று அவரைத் திருப்பி அனுப்பினார். சந்திரசூட்டுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. தன்னுடைய வக்கீல் நண்பனை குழப்பத்துடன் அணுகினார். வக்கீல் இவரை அழைத்துக் கொண்டு மீண்டும் காவல் நிலையத்திற்கு வந்தார். வக்கீலைப் பார்த்ததும் இன்ஸ்பெக்டர் கடுப்புடன் சந்திரசூட்டைப் பார்த்து "ஏய்யா உனக்கு வேற வேலையே இல்லையா என்றார்?" சந்திரசூட் ஆமாம் என்பது போலத் தலையாட்டவும் போலீஸ் மேலும் கடுப்பானார். "சரி சொல்லுங்க உங்க புகார் என்ன?" "கணவான் ஒருவர் தினமும் எதிரில் வந்து பாடல் பாடுவதாகப் பணத்தைப் பெற்றுக் கொண்டார். இது ஏதோ மோசடி போலத் தெரிகிறது அவரை அழைத்து விசாரிக்க வேண்டும்." "ஆக இது மோசடி கூட இல்லை அப்படித் தெரிகிறது அப்படித் தானே?" "இல்லை மோசடிதான் அது என்ன மோசடி என்று நீங்கள் தான் கண்டுபிடிக்க வேண்டும்." "காலங்காத்தால எழவு மோளம் கொட்டறதுக்குன்னே சில பேர் கிளம்பிடறாங்க" என்று சத்தமாக முணுமுணுத்துவிட்டு புகாரைப் பெற்றுக் கொண்டு சரி போங்க என்று துரத்தினார்.

ஒரு வாரம் போய்விட்டது என்ன ஆனது என்றே தெரியவில்லை. சந்திரசூட் மஞ்சள் நகர் காவல் நிலையத்திற்கு மீண்டும் போன போது இன்ஸ்பெக்டர் பிரியாணி பொட்டலத்தில் மும்மரமாக இருந்தார். இவரைப் பார்த்ததும் அவருக்குப் பிரியாணி கசந்துவிட்டது. பொட்டணத்தைக் கோபத்தோடு வீசி எறிந்துவிட்டு "அந்த ஆளை எங்கியும் பாக்க முடியலையப்பா" என்றார். சந்திரசூட் அது ஒரு போலீஸ் ஸ்டேசன் என்பதையும் மறந்தவராய் வெடித்துச் சிரித்தார். போலீஸ் ஆவேசத்தோடு டேபிளில் லத்தியை டமீர் என்று தட்டவும் "ஏன் சார் வர்றப்ப கூட இதுக்கு பக்கத்துத் தெருவுல அவனைப் பார்த்தேன்." என்றதும் இன்ஸ்பெக்டர் ஆவேசமாக இருக்கையை விட்டுத் துள்ளி எழுந்தார். "பாத்தையின்னா புடிச்சிட்டு வரவேண்டியதுதானே என்ன ஒரு பொறுப்பில்லாத தனம் இதுக்கே உன்னப் புடிச்சி உள்ள தள்ளலாம்

தெரியுமா?" என்றார்.

கோபத்தில் அவர் கண்கள் சிவக்க ஆரம்பித்தன. சந்திரசூட் பயந்து மௌனமாய் சபையை விட்டு வெளியேறி விட்டார. இரண்டு நாள் கழித்து வக்கீலின் உதவியோடு ஆட்கொணர்வு மனு ஒன்றை கோர்ட்டில் தாக்கல் செய்தார். நீதிபதியின் உத்தரவுப்படி கணவானைக் கோர்ட்டில் கொண்டு வந்து நிறுத்தவேண்டிய கட்டாயம் காவல் துறைக்கு உண்டாகிவிட்டது. ஒரு வாரத்தில் கணவான் கோர்ட்டார் முன் ஆஜர் படுத்தப்பட்டார். நீதிபதியைச் சார்ந்தவர்களும் கூட நகரப் பாடகளின் இடத்தில இணைந்திருக்கக் கூடும். நீதிபதி அதிகமாக நீட்டி முழக்கி விசாரிக்காமல் கணவானுக்கு பதினைந்து நாள் நீதிமன்றக் காவல் என்று உத்தரவிட்டார்.

ஆனால் அடுத்த நாளே கணவானை நகரின் முக்கியமான வீதிகளில் அவரின் கம்பீரத்துக்கு இம்மியும் குறைவில்லாமல் பார்க்க முடிந்தது. மக்களுக்குக் குழப்பமாக இருந்தது. உண்மையில் கணவான் என்பது ஒருவரா அல்லது பலரா என்பது நகரின் மில்லியன் டாலர் கேள்வியாய் இருந்தது. இதைக் கண்டுபிடிக்க புலனாய்வுப் பத்திரிகைகள் தீவிரமாகக் களத்தில் குதித்தன. கணவானின் ரிமாண்டுக்குப் பிறகு வந்த இரண்டு பிரபலமான புலனாய்வு இதழ்களில் இரண்டு விதமான கட்டுரைகள் வந்தன. ஒன்றில் கணவான போலீசாருக்கு லஞ்சம் கொடுத்து சுதந்திரமாய் வெளியே சுற்றிக் கொண்டிருக்கிறார் என்றும் இன்னொன்றில் கணவான் உண்மையிலேயே சிறையில் தான் இருக்கிறார் நகரில் இருப்பது வேறு நபர் என்றும் உண்மையில் வேறு நபர் கூட ஒருவர் மட்டும் இருக்க முடியாது இன்னும் பலபேர் இருக்கக் கூடும் என்றும் புகைப்பட ஆதாரத்துடன் செய்தி வெளியிட்டது. இந்தச் செய்தி நகரையே ஒரு உலுக்கு உலுக்கிவிட்டது. கணவான் ஒருவர் அல்ல பலர். பலர் அல்ல ஒருவர் ஒருவரே பலராகித் திரிகிறார். பலரே ஒருவர் போல இருக்கிறார். கணவான் எங்கேயும் இல்லை மாயமான ஒரு இடத்தில் இருந்துகொண்டு தான் நினைக்கும் இடத்துக்கு தன்னுடைய பிம்பத்தை ஏவுகிறார். மக்கள் இன்னும் என்னென்னவோ விசயங்களைப் ஒரு இதிகாசத்தின் அளவுக்குப் புனைந்து அந்த நகரத்தையே புனைவில் மூழ்கடித்துவிட்டனர் கணவானின் மீது மாயாவி என்னும் சாகச பிம்பம் படிந்துவிட்டது. இனி அவரை நீதி மன்றத்தின் வழியாக அணுகுவது என்கிற சிந்தனையை மக்கள் அடியோடு மறந்துவிட்டனர். கணவானுக்கு ஒரு வகையில் இது நிம்மதியாய் இருந்தது என்றாலும் பதினைந்து நாள் காவலில் இருக்க நேர்ந்த துரதிருஷ்டத்தை நினைத்து நினைத்து அவர் வேதனைப்பட்டார். நடப்பதற்குச் சாத்தியமான விசயத்திற்காக தான் ஏன் இவ்வளவு தூரம் கவலைப்பட வேண்டும் என்று அதை மறக்க முயன்றவனாய் கணவான விரைவிலேயே ஒரு புதிய திட்டத்தை வடிவமைத்துவிட்டார். அது அபாயகரமானது என்று சொல்ல முடியாவிட்டாலும் துணிச்சலானது இதுவும் வெற்றிகரமாக நடந்தால் அவன் உலகப் பணக்காரர்கள் வரிசையில் ஒருவனாக நகர்ந்துவிடுவான்.

காலையிலேயே மழை வருவதைப் போல ஒரே மேகமூட்டமாய்

இருந்தாலும், ஏதோ ஒரு மேக இடுக்கு வழியே பாய்ந்து வரும் சூரியனின் முதல் கிரணமே சுள்ளெனப் பூமியின் மீது வந்தது. அந்த வெய்யிலின் ஒளியும் வெப்பமும் வழக்கமானதைப் போல இல்லாமல் வித்தியாசமாக இருந்தது. இது மழைக்கான அறிகுறி என்று பேருந்து நிலையத்தில் இருந்த ஒவ்வொருவருமே தங்களுக்குப் பக்கத்தில் இருப்பவரிடம் சொல்லிக் கொண்டனர். கூட யாரும் வராமல் தனியாக வந்திருப்பவர்கள் கூட பக்கத்தில் நிற்கும் யாரோ ஒருவரை உடனடி நண்பராகப் பாவித்து ""வெய்யிலப் பாத்தா மழ வரும் போல இருக்கு"" என்று சொல்லிச் சிரித்தார்கள். கணவான் கத்திரிப் பூ நிற கோட்டுடன் பேருந்து நிலையத்தில் வலம் வந்தான். யாருமின்றி தனியே நிற்கும் ஒரு நடுத்தர வயது நபருக்கு அருகில் நின்று கொண்டு ""வெய்யிலப் பாத்தா மழ வரும் போல இருக்கு"" என்று சொல்லிச் சிரித்தான். அந்த நபரும் இவனைப் பார்த்துச் சிரித்தார். இவனும் புன்னகையைக் கொஞ்சமும் குறைக்காமல் அவரிடம் நெருங்கி நின்றான. இருவரின் மூச்சும் மற்றவர் மேல் வெப்பமாய்ப் பட்டது. அந்த நபர் இப்போது வசியப்படுத்தப்பட்டதைப் போல அப்படியே நின்றார். கணவான் மெல்லத் தன் கையை எடுத்து அந்த நபரின் பாக்கெட்டில் விட்டான். கற்றையாகத் தட்டுப்பட்ட பணத்தை எடுத்து சாவகாசமாக எண்ண ஆரம்பித்தான். பின் தினசரி செய்திகளுக்காக தீர்மானிக்கப்பட்டிருந்த பணத்தை எடுத்துக்கொண்டு மீதியை அவர் பாக்கெட்டிலேயே வைத்துவிட்டு தினமும் உங்களுக்கு உலகச் செய்திகளைக் கொண்டு வந்து சொல்லுவேன என்று காதில் கிசுகிசுத்துவிட்டு விலகி நடக்க ஆரம்பித்தான்.

இந்தத் திட்டமும் வெற்றிதான் கணவான் போட்ட எந்தத் திட்டம்தான் தோல்வியில் முடிநதிருக்கிறது. இப்பொழுதெல்லாம் வசியப் பார்வைக்காக புன்னகைக்காகக் கூட அவன் மெனக்கெடுவதில்லை. எதிரில் நபர் வந்தால் ஒரே விநாடியில் தன்னுடைய குறிப்பில் அவர் பெயர் இருக்கிறதா இல்லையா என்பதைக் கணக்கிட்டு இல்லையென்றால் ஏதோ தன்னுடைய பாக்கெட்டிலிருந்து பணத்தை எடுப்பதைப் போல எடுத்துக்கொண்டு போய்க்கொண்டே இருந்தான். அவர்கள் என்னத் திட்டத்தின் கீழ் இணைக்கப் பட்டிருக்கிறார்கள் அவர்களுக்குப் பாடலா விளையாட்டுத் தகவலா பொது அறிவா என்று கூட சொல்வதில்லை. அடுத்த முறை எதிர்ப்படும் போது அவன் சொல்லுவதை வைத்துதான் தாம் எதற்காகப் பணம் கட்டியிருக்கிறோம் அல்லது எதற்காகத் தம்முடைய பணம் களவாடப்பட்டிருக்கிறது என்பதே அவர்களுக்குத் தெரியும். இன்னும் சிலரிடம் கூட்டத்தோடு கூட்டமாக நின்று கொண்டு ஜேப்படித் திருடன் போலக் கூடப் பணத்தை எடுத்துக் கொண்டான்.

கல்லூரி இளைஞன் ஒருவனிடம் அவனுக்கான ஜோக்கை கணவான் சொல்ல ஆரம்பித்தபோது அவன் கையைத் தூக்கி நிறுத்தச் சொன்னான். கணவானுக்கு ஒன்றும் புரியவில்லை. இனிப்பான குரலில் கேட்டான் "ஏன் நண்பரே?" "நான் எதுக்காகவும் உங்ககிட்டப் பணம் கட்டலியே நீங்க எதுக்காக எங்கிட்ட இப்ப ஜோக்

சொல்லிகிட்டிருக்கீங்க?" "பணம் கட்டியிருக்கீங்களே நண்பரே" "எப்போ?" "கடந்த ஜூன் மாதம் முதல் திங்கள் கிழமை நீங்கள் ரயிலில் சென்றீர்கள் அல்லவா! அப்போதுதான் தினசரி ஜோக் சொல்ல வேண்டி என்னிடம் பணம் கட்டினீர்கள்". "இல்லையே அப்போ நான் வண்டி ஏறியதிலிருந்து சென்னை வந்து சேருகிற வரைக்கும் மேல் பெர்த்தில் படுத்துத் தூங்கிகிட்டே தானே இருந்தேன்." "ஆமாம் நண்பரே மிகச் சரியாகச் சொன்னீர்கள். அப்போது தூக்கத்தில் என்ன பேசினீர்கள் என்று நினைவிருக்கிறதா?" "தூக்கத்தில் நான் பேசினேனா எனக்கு அப்படி எந்தப் பழக்கமும் இல்லையே?" "பிறகு எப்படி நண்பரே நான் உங்கள் கணக்கில் பணத்தை வரவு வைத்திருக்க முடியும்?" இளைஞன் என்ன சொல்வதென்றே தெரியாமல் ஸ்தம்பித்துப் போய்ப் பார்த்தான். கணவான் தன்னுடைய ஜோக்கை விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தான். இளைஞன் காதுக்குள் புண் உண்டானதைப் போன்ற பாவனையில் அந்த ஜோக்கைக் கேட்டுவிட்டு என்ன செய்வது கட்டிய பணம் வீணாய்ப் போகிறதே என்று சிரித்து வைத்தான்.

இந்தக் கணவானின் தொல்லை தாங்க முடியவில்லை என்று நகரில் பேசிக்கொள்ள ஆரம்பித்தார்கள். ஒவ்வொன்றுக்கும் பணம் கட்டியவர்கள் அடுத்த மாதம் பணம் கட்டுவதைத் தவிர்க்க ஆரம்பித்தார்கள். ஜோப்புகளில் ஜிப் பட்டன் போன்றவற்றை வைத்துக்கொண்டு அலைய ஆரம்பித்தார்கள். சில முன்னெச்சரிக்கையாளர்கள் கணவான் எந்த நேரத்தில் எங்கு வருவான் எங்கு இருப்பான் என்பதை ஒருவாராகக் கணக்கிட்டுக்கொண்டு (ஆனால் உண்மையில் அப்படி எந்தக் கணக்கும் இல்லை. அவன் எந்த நேரத்திலும் எங்கேயும் இருக்கத்தான் செய்தான்.)அவன் முன்னால் தோன்றுவதையே தவிர்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் தாங்கள் அந்தக் கணவானை செமத்தியாக ஏமாற்றிவிட்டதாய் குதூகலமடைந்து திரிந்தனர். கிட்டத்தட்ட இது ஒரு கண்ணாமூச்சி விளையாட்டு மாதிரி. ரயில்வே ஸ்டேசனலில் ஒரு ஐயாயிரம் பேர் ரயிலை விட்டு இறங்கினால் அதில் ஒரு ஐநூறு பேர் ரயில்வே டிராக்கிலும் சுவர் ஏறிக் குதித்தும் ஓடிக் கொண்டிருப்பார்கள் நகரில் ஒவ்வொரு ரயில் வருகையின் போதும் இது சகஜமான காட்சி. அவர்கள் கணவானிடமிருந்து தப்பி ஓடுகிறார்கள் என்பது எல்லோருக்குமே தெரியும். ஒரு முறை செக்கிங் இன்ஸ்பெக்டர் ஒருத்தரும் ரயிலின் டிரைவரும் கூட டிராக்கில் மூச்சிரைக்க ஓடத் துவங்கிவிட்டனர். அவர்கள் தங்களைத் தான் துரத்தி வருகிறார்கள் என பயணிகள் மேலும் பதறிக் கொண்டு ஓடியது ஒரு மறக்க முடியாத காட்சி.

உண்மையில் கணவான் அவர்களைத் துரத்த விரும்பவில்லை. இன்னும் சொல்வதென்றால் அத்தகையவர்களைக் கண்டு அவனே ஓடி ஒளிந்து கொள்ள நினைத்திருந்தான். ஏனென்றால் அவர்கள் அவனுக்கு முன்பாக வந்து கணக்கை முடித்துக் கொள்ளச் சொல்லிக் கேட்டால் வேறு வழியில்லை கணக்கை முடித்துத்தான் ஆகவேண்டும். ஆனால் எதிர்ப்படாமலேயே இருந்துவிட்டால் திரும்ப அந்த மாதத்திற்கானத் தொகையை அவர்கள் பெயரில் பற்று வைத்தக்

கொள்ளலாம். கணக்கை முடித்துக்கொள்வதாக சொன்னாலன்றி அவன் நிலுவைத் தொகையை மாதா மாதம் கூட்டிக்கொண்டே இருந்தான். எதிர்ப்படும் போது கணக்கை முடிப்பதைப் பற்றிப் பேசலாம் என்று நினைத்துக்கொண்டிருப்பவர்களின் முன்னால் அவன் அவ்வளவு சாதாரணமாக எதிர்ப்படுவதில்லை.

என்ன செய்தாலும் கொடாக் கண்டர்களாகப் பணம் கட்டாதவர்கள் இன்னும் ஏராளமான பேர் இருந்தார்கள். இவர்களையெல்லாம் என்னதான் செய்வது நினைத்துப் பார்க்கவே அவனுக்கு எரிச்சலாய் இருந்தது. எல்லோரையும் ஒரே தொட்டியில் போட்டு சூப் வைத்து தினம் கொஞ்சமாகக் குடித்துவிடலாமா என்று யோசித்துக் கொண்டிருந்தான்.

திடீரென நகரமெங்கும் ஜொலிக்கும் வண்ணத்தில் பிரம்மாண்டமாக ஒட்டி வைக்கப்பட்டிருந்த போஸ்டர்கள் மக்களின் கவனத்தை வெகுவாக ஈர்த்தன. பாடல் இன்ன பிற வசதிகளுக்காகப் பணம் கட்டிவிட்டு அதற்கான காலம் காலாவதியான பின் தொடர்ந்து அந்த சேவையில் இருந்தபடி பணம் கட்டாதவர்களின் பட்டியல் அதில் இடம் பெற்றிருந்தது. அந்த அந்த பகுதியில் வசிக்கும் நபர்களின் புகைப்படங்களுடனான இப்படியான தகவல் பகுதியின் எல்லா நுழைவாயில்களிலும் பிரம்மாண்டமான போஸ்டர்களாக நின்றுகொண்டிருந்தன. அது கிட்டத்தட்ட பேருந்து நிலையங்களிலும் ரயில்வே சந்திப்புகளிலும் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் திருடர்களின் பட்டியலுக்கு ஒப்பாக இருந்தது. போஸ்டர்களில் இடம் பெற்றுவிட்ட துர்ப்பாக்கியசாலிகள் அவமானத்தினால் குறுகிப் போய் இரவிரவாகக் கணவானைத் தேடி அலைந்தனர். அவன் கண்ணில் தென்பட்டால் நிலுவைப் பணத்தைத் தலையைச் சுற்றி வீசி விடலாம். அவர்களின் நல்ல நேரம் இப்போது கணவான் எங்கெங்கு பார்த்தாலும் எந்த நேரத்திலும் தென்படுகிறான். கடவுளுக்கு நன்றி. அவர்கள் தங்களுடைய நிலுவைத் தொகையை ஒரு வித குற்ற உணர்வோடு கட்டிக் கொண்டே

இருந்தனர். பணம் அவர்கள் பெயரில் வரவு வைக்கப்பட்டதும் ஒவ்வொருவரும் தவறாமல் வைத்த வேண்டுகோள் தங்களுடைய பெயரை அந்தப் பட்டியலிலிருந்து உடனே நீக்க வேண்டும். கணவான் அவர்கள் முதுகை ஆதரவாகத் தட்டிக் கொடுத்து உடனடியாகச் செய்து விடுகிறேன் என்றான். ஆனால் பல நாட்களாக அந்தப் பேனர்கள் அப்படியேதான் இருந்தன. கணவான் அவர்களிடம் பாட வரும் போது சிலர் அழுதனர். சிலர் கையெடுத்துக் கும்பிட்டனர். பெண்களில் சிலர் அவனைக் கட்டிப் பிடித்துக்கொண்டு ஒப்பாரி வைக்க முயற்சித்தனர். ஆனால் கணவான் "நான் என்ன செய்வது பட்டியல் போஸ்டர் தயாரிக்க எக்கச்சக்கமாய் செலவாகிவிட்டது. இப்போது அதை நீக்கினால் திரும்ப அடுத்த மாதம் இதே போல நீங்கள் பணம் கட்டாமல் போனால் மீண்டும் போஸ்டர் தயாரிக்க வேண்டும். எனவே அது அப்படியே இருந்துவிட்டுப் போகட்டுமே" என்றான். அவர்களுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. பட்டியலில் இடம் பெற்றவர்களில் சிலர் வீட்டுக்குள்ளேயே என்றென்றுமாக முடங்கிவிட்டனர்.

சிலர் இரவு வேளைகளில் மட்டும் வெளியே வந்தனர். சிலர் மாறுவேடமிட்டுக் கொண்டு நடமாடினர். சிலர் பெண் வேடம் பூண்டு திரிந்தனர். சிலர் முகத்தில் சின்னதாக பிளாஸ்டிக் சர்ஜரி செய்து கொண்டு விதியை வென்றுவிட்ட பூரிப்போடு வலம் வந்தனர்.

சாலைகளில் மக்கள் நடமாட்டம் பாதியாகக் குறைந்துவிட்டது. போக்குவரத்து நெரிசலின்றி அழகாக இருந்தது. இதற்காக கணவானுக்கு சில அமைப்பினர் கூட்டம் போட்டுப் பாராட்டுத் தெரிவித்துக் கொண்டிருந்தனர். ஆனாலும் கணவானின் செயல்பாடுகள் மீதான எதிர்ப்பு மக்கள் மத்தியில் புயலைப் போல வலுவடைந்து கொண்டிருப்பதை உணர்ந்து கொண்டாலும் தன்னுடைய செயல்பாடுகளில் ஓர் அடியைக் கூட அவன் குறைவாக எடுத்துவைக்கவில்லை. அப்படிக் குறைத்துக் கொண்டால் எதிர்ப்பலை ஒரு சூறாவளியைப் போலச் சுழன்று அவனைக் கவிழ்த்துவிடும். இப்படியே தொடரவும் முடியாது என்பதையும் அவன் உணர்ந்துதான் இருந்தான். சில வாரத்தில் நகரெங்கும் ராணுவப் பச்சை வண்ணத்தில் திடும்மென கஸ்டமர் கேர் நிலையங்களைத் துவக்கி வைத்தான். இனி மக்கள் இது சம்மந்தமாக ஏதாவது புகார் இருந்தால் இங்கே தெரிவிக்கலாம் என்று அறிவித்தபின் கஸ்டமர் கேர் நிலையங்களில் கூட்டம் நெரிய ஆரம்பித்தது. நாளெல்லாம் வரிசையில் நின்றிருந்தால கூடப் புகார் பெறுபவரைப் பார்க்க முடியவில்லை. அடேங்கப்பா பெரிய கம்பெனிதான் என்று பார்த்தவர்களெல்லாம் வாயைப் பிளந்தனர். கணவானைத் தாங்கள் தவறாகப் புரிந்து கொண்டதாகவும் அவர் மிகுந்த நியாய உணர்வு உள்ளவர் என்றும இல்லாவிட்டால் இப்படி ஒரு கஸ்டமர் கேர் சென்டர் திறக்கப்பட்டிருக்குமா என்றும் தங்களுக்குள்ளாகப் பேசிக்கொண்டு பக்கம் பக்கமாக மனு எழுதி புகார் பெறுபவரிடம் புன்னகையோடு நீட்டிவிட்டு வெற்றிபெற்றுவிட்ட இறுமாப்போடு திரும்பிக் கொண்டிருந்தனர்.

றியாஸ் குரானா

இது ஒரு கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்

டுபுடுப்...டுபுடுப்... ம்ம்ம்ம்ம்.. இர்இர்இர்..
புட்டுப் புடுப் புட்டுப் புட்டுப் புட்டு..
புட்டுப் புடுப் புட்டுப் புட்டுப் புட்டு..
ம்..... ம்.... ம்... ருர்ர்ர் ருர்ர்ர்...
நான் மோட்டார் சைக்கிளில் பயணித்துக கொண்டிருக்கிறேன்
தலைக்கவசம் அணியவில்லை. எனினும் மிக வேகமாகச்
செலுத்துகிறேன். பாதையோர இருமருங்கு மரங்களும்
மனிதர்களும் மிக வேகமாக என்னைக் கடந்து செல்கின்றனர்
பாலத்தில் நின்றபடி சிலர் தூண்டில் போடுகின்றனர்
திரும்பி வருமபோது மீன் வாங்கலாம் என்று நினைக்கிறேன்
டுர்ர்ர்ர்ர்... டுர்ர்ர்ர்ர் இன்னும் வேகமாக செலுத்துகிறேன்
எதிரே ஒரு பேருந்து என்னை நோக்கி பறந்து வருகிறது
நானும் பேருந்தை நோக்கி விரைவாகச் செலுத்துகிறேன்.
பேருந்தில் முட்டிவிட மனம் ஆசைப்படுகிறது
இன்னும் விரைவாகச் செலுத்துகிறேன்
மோதிவிட இன்னும் சில வினாடிகள்தான் இருக்கிறது.
கண் இமைக்கும் நேரத்திற்குள் முட்டிவிடலாம்
நீங்கள் இந்த வரியை வாசிக்கும் போது நான் முட்டியிருப்பேன்
ஆனால், அது நடக்கவில்லை
ஒருவாறாய் தப்பிய நான் இன்னும் வேகமாக செலுத்துகிறேன்
காற்று விலகி இடம் தருகிறது
கிறீச் கிறீச் கிறீறீச்.. கிறீய்ய்ய்ய்ய்ய்ச் பிறேக் பிடிக்கும்
சப்தம் என்பதை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள்
நீங்கள் உணர்ந்தமாதிரி பிரேக் போட்டு நிறுத்தினேன்
சரி நான் பிரேக் போட்டு நிறுத்திய இடம்
எது தெரியுமா, அது பாப்லோ நெருடாவின் ஒரு
கவிதைப் புத்தகத்துக்குள்தான். அந்தக் கவிதைப் புத்தகத்தின்
பக்கங்களை ஒவ்வொன்றாக புரட்டுகிறேன்
மரம் முளைத்திருக்கும் கவிதையிருக்கின்ற பக்கத்தில்
அந்த மரநிழலில் சைக்கிளை சாத்திவிட்டு
ஒவ்வொரு பக்கமாக எட்டிக் கடந்து நடக்கிறேன்
அந்தப் புத்தகத்தில்
126வது பக்கத்தில் மாத்திரம்தான் கவிதையில் இருக்கும்
சில சொற்கள் திறந்தபடி இருக்கின்றன.
அந்தச் சொற்களுக்குள் பாய்ந்து குதிக்கிறேன்.
அடித்தளமற்ற சமுத்திரத்தில் வீழ்ந்த கல்லைப்போல
இறங்கிக் கொண்டேயிருக்கிறேன். நான் இறங்கியது தான்
உங்களுக்கு தெரியும். கரையேறியது தெரியவாய்ப்பில்லை

அதனால்தான் கரையேறியது பற்றியும் சொல்கிறேன்
நான் களைத்து கரையேறிப் பார்க்கும்போது
ரமேஷ்-பிரேமின் கவிதைக்குள் நிற்கிறேன்
இப்போது வெளியேறிவிட்டேன்
எனது மோட்டார் சைக்கிளை கண்டெடுத்து தருபவர்களுக்கு
தகுந்த சன்மானம் வழங்கப்படும். இந்த விளம்பரத்தை
உங்கள் பத்திரிக்கை, வலைத்தளம் போன்றவற்றில் பிரசுரிக்கவும்
அதற்கான கட்டணம் நிச்சயமாக வழங்கப்படும்
நானும் கட்டணம் வாங்கியபின்னரே இந்தச் செய்தியை
கவிதையில் விளம்பரப்படுத்துவேன்.

உண்மையில் அவனுடைய தூக்கத்தைப் பறித்தேன்
கடைசியாக உறங்கிய அன்றிரவு அவன்
கனவு கண்டு கொண்டிருந்தான்
தூக்கமற்று கிடந்த நான், புரண்டு படுக்கும்போது
கண்டேன்.
காட்சிகளாக ஒருவருடைய கனவை நேரில் காணும்
சந்தர்ப்பத்தை இழக்க விரும்பவில்லை
சிறு சம்பவத்தால் மிக நீளமான கனவு அது.
அந்தக் கனவுக்குள் சில பூமரங்கள் மாத்திரமே
வளர்ந்தபடி இருந்தன.
ஒரு மர நிழலில் இசையொன்றை ரசித்தபடி
உட்கார்ந்திருந்தான்
அவனுடைய கனவுக்குள் நான் தற்கொலை
செய்வதாக காட்சி அமைந்திருந்தது.
அவன் ரசிக்கும் எனது தற்கொலையை
இந்த இரவின் பதற்றத்தில் காட்சிகளாக
என்னால் காண நேர்ந்தபோது
சுதாகரித்துக்கொண்டு எழுந்தேன்.
என்னையும் அருகில் உறங்கும் அவனையும்
தொட்டுப்பார்த்தேன்.
கனவுக்குள் மரத்தில் தொங்கிய நான்
சாவதற்கு நெடுநேரமெடுத்துக் கொண்டிருந்தது
கனவு எனினும் தூக்கில் தொங்கும் நான் படும்
வேதனை, பார்த்துக கொண்டிருக்கும் என்னை
பற்றிக்கொண்டது.
என்னைக் கொல்ல வேண்டும் அல்லது
கனவை நிறுத்துவதற்கு அவனை எழுப்ப வேண்டும்.
அவசர அவசரமாக அவனை எழுப்பினேன்
தூக்கத்திலிருந்து விழித்தவன்
நான் சாகவில்லை என்று சொன்னான்
மீண்டும் கனவுக்குள் சென்று என்னை காப்பாற்ற

வேண்டும் என்று முயற்சிக்கத் தொடங்கினான்
கனவுக்குள் அவன் திரும்பிச் சென்றால்
செத்துவிடுவான் என்று
நான் அஞ்சினேன்
அவனை உறங்கவிடாது தடுக்க
அவனோடு இருக்கவே சபிக்கப்பட்டிருக்கிறேன்
அவன் உறங்கினால் எதுவும் நடக்கக்கூடும்
நான் காப்பாற்றப்படலாம்
அல்லது செத்துவிடலாம்
ஆம். இதற்காகத்தான் நான் அவனை உறங்கவிடுவதில்லை
உறக்கத்தை பறித்ததற்கு
அவன் சொல்லும் காரணங்கள் பொய்

எனது அறையில் பேயாகி அலைகிறது பாரதியின் கவிதைகள்

வீட்டில் எவருமில்லாத நேரத்தில் பழைய
நினைவுகளை பதுக்கிவைத்திருக்கும்
பொருட்களையெல்லாம் அகற்றிக்கொண்டிருந்தேன்
சில தற்காலிக சொற்களும், சில பொருட்களும்
மேசையிலிருந்து ஜன்னல்வழியே பறந்துகொண்டிருந்தன.
அரவணைத்துக்கொண்டு புகைப்படத்திலிருந்த அவளும்
அவனும் கண்ணீர் மல்க பிரித்துக்கொண்டிருந்தனர் வீட்டை
துப்புரவு செய்வதில் நான் கரிசனமுள்ளவனுமில்லை
சோம்பேறியைவிட அசட்டையானவன். வீடெங்கும் ஒரே
பிணநெடி. பல நாள் செத்துககிடந்த உடல்களினதைப்போன்ற
நாத்தம். இனிமேலும சகிக்க முடியாது என்றுதான் சுத்தம்
செய்ய இன்று தொடங்கினேன். பாரதியின் கவிதைகள்தான்
இதற்குக் காரணமென்று கண்டுபிடித்துவிட்டேன்.
அவனுடைய புத்தகத்தை எரிப்பதா புதைப்பதா
ஒருவாறாய் எரித்து சாம்பலைப் புதைத்துவிட்டு
வந்ததோடு எனது வேலை முடிந்துவிட்டது.
இறப்பற்று நெடுங்காலம் வாழக்கூடிய கவிதைகளை
அவன் பெற்று வளர்க்காதது எனக்கும் வருத்தம்தான்.
மேசையில் புத்தகம் இருந்த இடத்தில் ஒருமுறை
அவனைக் கண்டேன். ஆவியாகிய அப்புத்தகம் எனது
வீடெங்கும் அப்போதெல்லாம் அலைகிறது. புத்தகத்தின்
பக்கங்களைப் புரட்டுவது மாதிரி சப்தங்கள் அறையெங்கும்
கலவரப்படுத்துகிறது. நேரங்கெட்ட நேரமெல்லாம் யாரோ
உரத்தகுரலில் கவிதைகளை படித்துக்கொண்டிருக்கிறார்கள்
எனினும் எனக்கு அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே

எழுத்துக்களுக்கு பைத்தியம் பிடித்துவிட்டன

சுற்றிலும் ஏதுமற்ற பரந்து விரிந்த வெட்டவெளி
அதன் நடுவில்தான் என் வீடு இருக்கிறது.
இப்போதைக்கு வீட்டில் நான் மட்டும்தான்
வெட்டவெளியில் காற்று அலையவில்லை
அது எங்கோ போயிருக்க வேண்டும்
அல்லது அதன் ஓய்வு நாளாக இருக்கலாம்.
இந்த வெறுமையை துயர் மிகுந்ததாக
நான் எழுதப்போகிறேன் என்று நீங்கள்
நினைக்கக்கூடும். அல்லது வெறுமையின்
துயரை மாற்றியமைக்கும்படி எழுத்துக்களை
பணிக்கப்போகிறேன் என்று நினைக்கக்கூடும்
இது தவிர வேறு ஏதும் நினைத்தால் நிச்சயம்
என்னிடம் சொல்வீர்கள் என்று
நம்புகிறேன். வீட்டுக்குள் வருகிறேன்.
வீட்டின் ஒரு அறையிலிருந்து மறு அறைகளுக்குள்
மெல்லிய காற்று நுழைந்து திரும்பிவந்து
என்னைத் தடவிச் செல்கிறது
சா... என்ன இனிமை, ஜன்னலைத் திறக்கிறேன்
சிறகுலர்த்தியபடி சில பறவைகள் மரத்தில் நிற்கின்றன.
எப்போதோ மரத்திலிருந்து உதிர்ந்த இலைகள்
அப்படியே அந்தரத்தில் இன்னும் நிற்கின்றன.
இந்த இடத்தில், காற்று இல்லாத வெட்டவெளி
என்பதை மீண்டும் நினைவு படுத்த வேண்டுமா
உங்களுக்கு? தமது இறக்கைகளினால்
பிறப்பிக்கும் காற்றில் தலையசைக்கும் மரம்,
இலைகளால் இசையமைக்கிறது
வெளியில் வந்து பார்க்கிறேன். மரமுமில்லை
சிறகுலர்த்திய பறவைகளுமில்லை
விரிந்து பரந்த அதே வெட்டவெளி
வீட்டு ஜன்னலினூடாக மாத்திரம் தெரியும் மரம் அது.
உண்மைதான் இந்தப் பிரதியை நீங்கள்
வாசிக்கும் போது நான் எழுதியவைகள்
எதுவும் இருக்கலாது. உங்களை ஏமாற்றுவதற்கோ
அல்லது பொய் சொல்லவோ நான் இப்படிச்
சொல்லவில்லை. எழுதி முடித்த பிறகு
நான் வைத்த இடங்களில் எனது எழுத்துக்கள்
இருப்பதில்லை. அவை விரும்பிய இடங்களில்
போய் அமர்ந்துவிடுகின்றன.

ஒருநாள் மட்டும் நிறைவேற்ற விரும்பும் வன்முறை

எனது முகத்தை அழகாக இருப்பதாய்ச் சொல்லுபவர்கள் அதில் காறி உமிழ்பவர்கள் இப்படி நான் சந்திக்கும் எவரையும் உசுப்பிக்கொண்டுதானிக்கிறது. அதிலிருக்கும் கண்கள் அவர்களுக்குள் தற்காலிகமாக இறங்கி எதையாவது திருடிக்கொண்டுதான் வருகிறது. எனக்கு முகமிருப்பதிலுள்ள அசவ்கரியங்களை ஒருபோதும் அவர்களுக்குச் சொன்னதில்லை. முகத்திலுள்ள செய்திகளை முடிவளர்ந்து மறைந்துவிடுகிறது. கறுத்த எனது உதடுகளிலுள்ள ஆவணங்களை ஆய்வுக்குட்படுத்த விரும்பியிருந்ததுமில்லை. மிக நுணுக்கமானதும் திறமையானதுமான எனது கண்களுக்காகத்தான் நானின்னும முகத்தை சுமந்து திரிகிறேன். இன்று அதிகாலை கண்ணாடியில் ஒரு தரம் எனது முகத்தை பார்வையிட்டேன். கண்ணாடிக்குள் துள்ளிச்சென்ற எனது முகம் திரும்பிவராமல் அங்கேயே அமர்ந்துவிட்டது. கண்ணாடிக் குகைக்குள் தலைமறைவாகிற்று. சவ்கரிகமாய் பதுங்கிக்கொண்டு எனது அறையை கண்காணித்துக்கொண்டிருக்கிறது. யாரும் அதைக்கண்டு மிரண்டுவிடக்கூடாது என்பதற்காகவும் வேறு எவரும் தவறி உடைத்துவிடக்கூடாது என்பதற்காகவும் நானே கண்ணாடியை உடைத்துவிட்டேன். சிதைந்து கிடக்கும் கண்ணாடிச் சில்லுகளிலிருந்து துள்ளித்துள்ளி முகமின்றி துடித்த கண்கள் தரையெங்கும் பெருகத் தொடங்கின.

கடலைக்குடித்த பூனையின் கதை

இன்று பிற்பகல் நக்கியதுதான் கடைசித்துளி கடல் வற்றிவிட்டது. சித்திரத்தில் பசித்திருந்த பூனை கடலை வயிற்றுக்குள் இடம்மாற்றியதிலிருந்து கறுப்பு வெள்ளையில் கண்ட சித்திரம் நீலமாகிற்று. ஒரு கிளையிலிருந்து மறு கிளைக்கு கடல் தாவுகிறது. அடுப்பங்கரையில் மெல்லிய சூட்டில் அலை எழுப்பியபடி கடல் உறங்குகிறது. சிறுவனொருவன் கடலைத் துரத்தித் துரத்தி அடிக்கிறான். வாலைக் கிழப்பியபடி பாய்ந்து சென்ற கடல் பேருந்தில் அடிப்பட்டு தெருவில் கிடக்கிறது. அலைகள் மெதுமெதுவாக முனகி தளம்பியபடி தெருவில் நெளிகிறது கடல். சித்திரத்தில் பூனையை மீண்டும் வரைகிறேன். கோடுகள் அலைகளாகி சுவரெங்கும் பாய்கிறது.

முருகபூபதியின் சூர்ப்பணங்கு நாடகக் காட்சிகள்



படங்கள் கார்க்கி

புது எழுத்து

தனிச்சுற்றுக்கு மட்டும்

pudhuezuthu@gmail.com